
# தமிழ்ச்சிட்டு



சிறுவர் கலை
இலக்கியத் திங்களிதழ்

தென்மொழி
இணைப்பு
சுறவம் [ சனவரி- 2001 ]

குரல் 24
இசை 1

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# பாவாணர் தாத்தா தெரியுமா?

பன்மொழி கற்றவர்
பைந்தமிழ்க் குழைப்பவர்
பாவாணர் தாத்தா தெரியுமா? — தம்பி
பாவாணர் தாத்தா தெரியுமா? — அவர்
தென்மொழி ஆய்விலும்
தனித்தமிழ் வாழ்விலும்
திகழ்கின்ற ஞாயிறு புரியுமா?

அறிவினில் சிறந்தவர்!
அன்பினில் மிகுந்தவர்!
அருந்தமிழ் இலக்கணக் கடலவர் — ஒளி
அழகுசேர் கருநிற உடலவர்! — அற
நெறிபிற ழாதவர்!
நிலைகுலை யாதவர்!
நெடுவாடைக் காற்றுக்குப் படலவர்!

பலநூல்கள் யாத்தவர்!
பண்பாடு காத்தவர்!
பதவியைத் தூசென மதிப்பவர் — பொய்ப்
பாராட்டைக் காலினில் மிதிப்பவர்! — இந்த
உலகினில் முதன்மொழி
ஒண்டமிழ் மொழியென
உரைத்தவர்; தீங்கெனில் கொதிப்பவர்!

துன்புற்ற போதிலும்
துவளாத உளத்தவர்!
தொடங்கிய கொள்கையை முடித்தவர்! — திறந்
தோய்கின்ற நூல்பல வடித்தவர்! — நாம்
இன்புற்று வாழ்ந்திட
இராப்பகல் உழைப்பவர்!
என்றுமே நமக்கெலாம் பிடித்தவர்!

— பாவலரேறு பெருஞ்சித்திரனார் -1969



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ் —
சிறுவர் கலை இதழ்

"இன்றைய பயனோ
நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர்
நாளைய உலகம்!
நன்று செய்வதே
நமக்குநல் வாழ்க்கை
என்றும் அழியாது
இருப்பது புகழே!

பாவலரேறு

குரல் : 24, இசை : 1

தென்மொழி சுறவம் 2032 (சனவரி 2001) இதழின் இணைப்பு

நிறுவனர்:
**பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

ஆசிரியர்:
**தாமரை பெருஞ்சித்திரனார்**

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
**'தென்மொழி'**
செந்தமிழ் அடுககம்,
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
சென்னை- 601 302.
தொலைபேசி எண் : 227 0231

## பொழுதுபோக்கிகள்

**சோம்**பேறிகளாய்த் தூங்கித் திரிபவர்கள் மட்டும் இல்லை, சுறுசுறுப்பாய் இயங்குகின்றவர்கள் கூட பொழுதை வீணாகக் கழிக்கிறவர்களாகவே இருக்கின்றனர்.

வெளியே சுற்றிவிட்டு வருகிற தம்பியைப் பார்த்து, எங்கே போனாய் என்றால்.

"சும்மா அப்படியே போய்விட்டு வந்தேன்" — என்கிறான்.

எதைப் படித்துக் கொண்டிருக்கிறாய் என்றால் —"சும்மா படித்துக் கொண்டிருக்கிறேன்" என்பதே அவன் விடையாக உள்ளது.

அவனுக்குப் பொழுது போகவில்லையே என்கிற வருத்தம்.

எனவேதான் அப்படிப் பொழுதைப் போக்குவதற்கு எதையாவது செய்து கொண்டிருக்கிறான்.

நம் ஒவ்வொருவருடைய உழைப்பும் மிகவும் பொருளுடையது.

நம் முன்னோர்கள் கடுமையாக உழைத்ததால்தான் நாம் இன்றைக்கு எளிதாக வாழ முடிகின்றது.

பேருந்து தொடர்வண்டி என்றெல்லாம் ஒன்று இல்லாத காலங்களில் வெகு தொலைவு நடந்தே செல்ல வேண்டியிருந்தது. அந்தக் கடின வாழ்க்கையை எளிதாக்கித் தந்தது பேருந்து தொடர்வண்டி வரவுகள்.

மின்சாரமும், விளக்குகளும் கண்டுபிடிப்பதற்கு முன்பு இருளில் அஞ்சி அஞ்சி வாழ வேண்டி இருந்தது. அந்த இருள் வாழ்க்கையை ஒளியாக்கியது மின்சாரம்.

ஆனால் இவையெல்லாம் திடுமென வானத்திலிருந்து குதித்தவை இல்லை.

மாந்த உழைப்பே இவற்றைக் கண்டுபிடித்தது. ஓயாத மாந்த உழைப்பால் மிக எளிதாய் நம் வாழ்க்கை நகரத் தொடங்கிவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால் இந்த ஏந்துகள்(வசதிகள்) எல்லாம் நம்மை சோம்பேறிகளாக்கி விடக் கூடாதல்லவா?

மாந்த உழைப்பு விலங்குகளின் உழைப்பைப் போன்றதன்றுதானே.

விலங்குகளின் பொருளற்ற இயக்கம் போல், நாமும் பொருளற்று திரிந்தால் நாம் மாந்தர்களாக இருக்க முடியாது அல்லவா?


எனவே, மாந்தப் பண்புக்கேற்ப நம் வாழ்க்கையை மட்டுமன்று, வாழ்க்கையின் நேரத்தையும் பயனுள்ள வகையில் செயலாக்குவோம்.

பொழுதுபோக்கு எனும் பொருளற்ற தன்மையை நம்மிலிருந்து களைவோம்!

*


---

# செய்திகள்



* முந்திரிக் கொட்டையின் மேல்ஓட்டுக்கு அடியில் சிறுசிறு அறைகள் போன்ற அடுக்குகள் இருக்கும். அதில் எண்ணெய் போன்று பால் இருக்கும். அது நம் உடலில் பட்டால் அந்த இடம் வெந்துபோகும். மெருகு எண்ணெய்(வார்னிசு), தளவரிசை ஓடுகள், நீரில் நனையாத தாள்கள், பசை, மை, மெழுகுத் துணி முதலியன செய்ய இந்த எண்ணெய் பயன்படுகின்றது.

* ஊர்வனவற்றுள் பல்லியின் முட்டைதான் மிகவும் மெல்லிய ஓடு உடையது. முதலையின் முட்டை ஓடு தடிப்பாக இருக்கும். முதலை, முட்டைகளை மணலில் புதைத்து வைத்துவிடும். மணல் வெப்பத்தில் முட்டை பொரிந்துவிடும். பாம்பு தன் முட்டைகளின் மீது படுத்துக் கொள்ளும். பாலூட்டிகளுள் இரண்டு விலங்குகள் மட்டுமே முட்டையிடுகின்றன. அவை, எறும்புத் தின்னிகளுள் ஒருவகையும், பிளாட்சுபசு என்கிற விலங்கும் ஆகும்.





படிப்பகம்

www.padippakam.com

# மாறாத உள்ளங்கள்

— வெங்காலூர் அருள்மணி —

“நல்லாளன் ஓய்வு பெற்ற பள்ளி ஆசிரியன். பழையனூரைச் சேர்ந்த நண்பர்கள் சிலர் வேண்டுகோளை ஏற்று அந்த ஊர் சென்றான். அவ்வூர் ‘மக்களிடையே பேசினார் இப்படி!

அன்பு நிறைந்த தமிழ் நெஞ்சங்களே உங்கள் ஊரில் உள்ள மக்களில் — பிள்ளைகளில் ஒருசிலர்தான் பக்கத்து ஊரிலுள்ள பள்ளிக்குச் செல்கின்றனர்.



மற்ற பிள்ளைகள் - சோம்பல் தனமாகவே உள்ளனர். அறிவற்றுப் பேசுகின்றனர். உங்கள் ஊரில் ஓர் அறையை ஒதுக்கித் தந்து அப் பிள்ளைகளுக்குக் கல்விக் கண்ணைக் கொடுங்கள் என்று நண்பர்கள் சிலர் அவரை வேண்டினர். தம்மால் இயன்ற தமிழ்த் தொண்டு செய்கிறேன். நாளை முதல் பிள்ளைகளை அனுப்பி வையுங்கள் என்றான். சில நாள்கள் கழிந்தன. தொடக்கத்தில் வந்த பிள்ளைகள் எண்ணிக்கை குறையத் தொடங்கியது. இல்லங்கள் தோறும் தானே சென்று கல்வியின் மேம்பாட்டினைச் சொன்னார் நல்லாளன்.

இன்னின்ன காலத்தில் இதனைச் செய்தல் வேண்டும். “பருவத்தே பயிர் செய்” என்றும் ‘இளமையிற் கல்’’ என்றும் ஆன்றோர்கள் சொன்னதை



படிப்பகம்

www.padippakam.com

விளக்கி பயிரின் பக்கத்தே முளைக்கும் களையை நாம் களையவில்லை என்றால் தீங்கு பயிருக்குத்தான் – பிறந்து வளர்ந்து – வாழ்வது மறைந்து போவதற்கு இல்லை. பெருமை யுடன் – சிறப்புடன் வாழ – வழிகாட்டத் தான் நம்முடைய முன்னோர்கள் ஒரு காலக் கட்டத்தில் காட்டு விலங்காண்டித் தனமாக இருந்ததிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மாறி நாகரிக மாக முன்னேற்றம் கண்டுள்ளதற்கு கல்வி அறிவுதான் காரணம்.

பல்லாயிரக் கணக்கான அறிவியல் கண்டுபிடிப்புகளினால் நோய்களினின்று மீள்கிறோம். விரைந்து பணிகளை முடிக்கிறோம். ஓர் ஊரினின்று மற்றொரு ஊருக்குப் பேருந்தின் வழி தொடர்வண்டியின்வழி, செல்லவும் தொலைத் தொடர்புகளின்வழி செய்திகளை பரிமாறிக் கொள்ளவும் ஒரு நாட்டினின்று மற்றொரு நாட்டிற்கு வானூர்திவழி விரைந்து செல்லவு மான வாய்ப்புகளை எல்லாம் நாம் இன்று பெற்றிருப்பதற்குக் காரணம் நம் முன்னோர்களின் பொதுநல நோக்கம்தான்.

நாமும் நம்மால் முடிந்தவற்றை நமக்காக – நம் பிறங்கடைக ளுக்காகச் செய்வோம்.

உலகில் இனியவை – இன்னாதவை –நல்லவை–தீயவை என இரண்டும் என்றென்றும் இருக்கத்தான் செய்யும். இனியவை காண்போம்.

இன்னொன்றையும் நாம் மறக்கக் கூடாது. பெறுதற்கரிய நல்ல அறிஞர்களைப் போல நம்மால் ஆக முடியாமற் போயினும் அப் பேரறிஞர்களின் வாழ்க்கை வரலாற்றின் சில பக்கங்களை யாவது புரட்டிப் பார்க்க வேண்டாமா? நன்றி வேண்டாமா? தீமை புகட்டும் தொலைக் காட்சிகளைக் கண்டுகளிப்பதை விட நன்மை தரும் கல்வியை – வரலாறுகளை படிப்பது – கேட்பது அன்புள்ள – அறிவுள்ள – பண்புள்ள செயல் என்றெல்லாம் கூறினார்.

❑

## பொங்கல் பெருவிழா.

*தமிழர்களின் உழவுச் சிறப்பு விழாவாகவும் தமிழ்த் தேசிய விழாவாகவும் பொங்கல் விழா அமைகின்றது. வாழ்த்து அனுப்புதல் — புத்தாடை அணிந்து கொள்ளுதல், கூடி மகிழ்தல் எனும் ஆரவாரமில்லாத பெருவிழா நம் பொங்கல் திருவிழா.*

*சிறுவர்களே, உங்கள் நண்பர்களுக்கும் பொங்கல் வாழ்த்து! சொல்லுங்கள். தமிழர் பெருவிழா என்று பறைசாற்றி மகிழுங்கள்.*



படிப்பகம்

www.padippakam.com

# முத்து

ஒன்பது மணிகளில் ஒன்று முத்து. முத்து எப்படிக் கிடைக்கிறது தெரியுமா? கடலிலுள்ள முத்துச் சிப்பி என்னும் ஒருவகை ஆளியின் சிப்பியினுள் சிறு மணலோ நுண்ணிய புழுவோ புகுந்துவிடலாம். அதனால் ஆளிக்கு உறுத்தல் ஏற்படும் அந்தப் பொருளால் தீங்கு உண்டாகாதவாறு தடுப்பதற்காக ஆளி தன் திசுக்களிலிருந்து வெண்மையான ஒருவகைப் பொருளைச் சுரக்கின்றது. இச் சுரப்பு நீர் அப்பொருளைச் சுற்றி அடுக்கடுக்காகப் படிகின்றது.

முத்து பொதுவாக மென்மையானது; காழம்(வைரம்) போன்ற மற்ற மணிகளைப் போல் அவ்வளவு உறுதிவாய்ந்தது இல்லை. அது ஒளியைப் புகவிடும் அல்லது எதிரொலிக்கும். அதனால் முத்து அழகாக ஒளிர்கின்றது. வெள்ளை, இளஞ்சிவப்பு, நீலம், கருப்பு ஆகிய நிறங்களில் முத்து காணப்படும். வெண்மையாகவும் முற்றிலும் உருண்டையாகவும் உள்ள முத்துகளே சிறந்தவை. உருவம் ஒழுங்காக இல்லாத முத்துகள் தரம் குறைந்தவை. கறுப்பு நிறமான முத்து கிடைப்பது அரிது. அதனால் இதன் விலை மிகவும் அதிகம்.

சப்பானியர் முத்துச் சிப்பிகளை வளர்த்து அவற்றிலே முத்து உண்டாக்குவதில் ஒரு புதிய முறையைக் கடைப்பிடித்து அதில் வெற்றி கண்டுள்ளனர். முத்துச் சிப்பியைத் திறந்து திசுவுக்கும், சிப்பிக்குமிடையே நுண்ணிய உறுத்தல் பொருளை மிகவும் பக்குவமாகப் புகுத்திவிடுவார்கள். இதனால் உறுத்தல் ஏற்படுகிறது. பின்பு இந்தச் சிப்பிகளை இரும்புக் கம்பி வலைக்குள் வைத்து மூங்கில் கம்பிகளில் கட்டிக் கடலில் தொங்க விடுவார்கள். ஏறத்தாழ 4 முதல் 5 ஆண்டுகள் சென்றபின் பெரும்பாலான சிப்பிகளுள் முத்துகள் காணப்படும். இவ்வாறு முத்து வளர்க்கும் கலையில் சப்பானியர் சிறப்புற்று விளங்குகின்றனர்.

தூத்துக்குடியை அடுத்த கடலிலும், பாரசீக வளைகுடாவிலும் கிடைக்கும் முத்துகள் புகழ் பெற்றவை. இலங்கையிலுள்ள மன்னார் வளைகுடாவிலும், சப்பானில் தோக்கியோ கடலிலும், கலிபோர்னியா கடற்கரைப் பகுதியிலும் முத்துகள் கிடைக்கின்றன.

கடலுக்குள் மூழ்கி முத்துச் சிப்பிகளை எடுப்பதை 'முத்துக் குளித்தல்' என்று சொல்வார்கள். தூத்துக்குடியை அடுத்த கடலில் குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்கு ஒருமுறை முத்துக் குளித்து முத்துச் சிப்பிகளைத் தொகுக்கிறார்கள். அரசாங்கத்திற்குமட்டுமே இந்த உரிமை உண்டு. பின்னர் அந்த முத்துச் சிப்பிகளை ஏலம் விடுவார்கள். சிலவற்றில் சிறந்த முத்துகள் கிடைக்கின்றன. பல சிப்பிகளுள் முத்து இருப்பதில்லை.

*



படிப்பகம்

www.padippakam.com

# அலெக்சாந்தரின் அறிவு.

— புதுவை தமிழ்நெஞ்சன் —

கிரேக்க நாட்டை பிலிப் என்னும் மாமன்னன் ஒருவன் ஆண்டு வந்தான். ஒருநாள் குதிரை வணிகன் ஒருவன் அரசருக்கு கருப்பான — மிக வலிமையான குதிரை ஒன்றை அன்பளிப்பாகக் கொடுத்தான்.

அந்தக் குதிரை மிகவும் இடக்குடையதாக இருந்ததால் அதன் மீது யாரும் ஏறமுடியவில்லை. அப்படியே ஏறினாலும் கீழே தள்ளிவிடுகிறது. குதிரை இப்படி முரண்டடிப்பதை தன் தந்தையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் சிறுவனாக இருந்த அலெக்சாந்தர்.



“தந்தையே! நான் இந்தக் குதிரைமீது ஏறியோட்ட விரும்புகிறேன். அதற்குத் தாங்கள் எனக்கு இசைவளிக்க வேண்டும்'' என்றான் அலெக்சாந்தர்.

“மகனே! அந்த முரட்டுக் குதிரை அனைவரையும் கீழே தள்ளி விடுவதை நேரிலேயே பார்த்திருந்துமா அதன்மீது ஏற விரும்புகிறாய்? பெரியோரெல்லாம் தோல்வியடைந்து விட்டார்களே நீயோ சிறுவன் தானே?” — என்றார் அவர்.

''தந்தையே! நான் உறுதியாக வெல்வேன். எனக்கு' அந்த மன வலிமையுண்டு, தாங்கள் எனக்கு இசைவளித்தால் அதனை தங்களுக்கு மெய்ப்பித்துக் காட்டுவேன்” என்றான் அலெக்சாந்தர். மகனின் துணிவை எண்ணி இசைவளித்தார் அரசர்.

குதிரையின் அருகில் மெல்ல மெல்ல சென்றான். அதன் கடிவாளத்தைப் பிடித்து குதிரையை கதிரொளி பக்கம் திருப்பி நிறுத்தினான். அதனை தடவிக் கொடுத்து அதன்மீது பழக்கப்பட்ட குதிரையின்மீது ஏறி அமர்வதைப் போல அமர்ந்தான். இருகால்களையும் அதன் விலா பக்கம் தட்டினான். துள்ளிக் கொண்டு விரைந்தோடியது. அவனின் விருப்பப்படியெல்லாம் அது ஓடியது. வெகுதூரம் கடந்தபின் திரும்பினான்.

நம்மை கீழே தள்ளிய குதிரை சிறுவனான அலெக்சாந்தரை மட்டும் எப்படி சுமந்து சென்றது என்பதை பெரியவர்கள் எல்லாம் அறிய விரும்பினர்.

“அரசே! தங்களின் மகனை மட்டும் எப்படி சுமந்து சென்றது என்பதை அறிய விரும்புகிறோம்” என்றனர்.

“மகனே! நீ அந்த குதிரையை எப்படி உன் வழிப்படுத்தினாய் என்பதை அவர்களுக்கும் விளக்கிச் சொல்லேன்” என்றார் அரசர்.

''அப்படியே ஆகட்டும் தந்தையே...” என்றான் அலெக்சாந்தர்.



படிப்பகம்

www.padippakam.com

"பெரியோர்களே! அந்தக் குதிரை தன் நிழலைக் கண்டு அஞ்சுவதை நீங்கள் யாரும் அறியவில்லை. நீங்கள் அதன்மீது ஏற முயன்றபோது அது எதனால் அஞ்சுகிறது என்பதை கண்டேன். அதனால்தான் குதிரையை கதிரவனை நோக்கி நிறுத்தினேன். அப்படி நிறுத்தும்போது அதனின் நிழல் பின்புறமாய் விழுந்ததால் அதன் நிழலை அதனால் பார்க்க முடியவில்லை. எனவே, அது மிரளாமல் என்னை சுமந்து என் விருப்பப்படி எல்லாம் சென்றது" என்றான் அலெக்சாந்தர்.

அலெக்சாந்தரின் மதிநுட்பத்தை எண்ணி பெரியவர்கள் அனைவரும் வியந்தனர். இப்படி அடங்காத 'பூசிபாலசு' என்ற குதிரை மீது சென்றே அலெக்சாந்தர் என்ற கிரேக்க வீரன் பல நாடுகளை வென்றான். வரலாற்றில் அழியா புகழோடு நின்றான்.

அகவையில் இல்லை அறிவு.

# மீன்குத்தி

**மீன்குத்தி** ஓர் அழகிய சிறு பறவை. இதன் பெயரிலிருந்து இதனுடைய உணவு என்ன என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளலாம். மீன்கள்தாம் இதற்கு முதன்மை உணவு.

ஏரி, குளம் போன்ற நீர்நிலைகளின் அருகிலும் ஆற்றோரங்களிலும் இப்பறவையைக் காணலாம். நீர்நிலையின் அருகிலுள்ள மரக் கிளையில் இது உட்கார்ந்திருக்கும். நீரில் மீனைக் கண்டதும் சட்டெனப் பாய்ந்து அதைக் கவ்விச் சென்றுவிடும். அதற்கேற்ப இப்பறவையின் அலகு தடித்து நீண்டு கூராக இருக்கும். தவளை, பல்லி, புழு, பூச்சிகளையும் இது தின்னும்.

மீன்குத்தி ஏறத்தாழ 8 விரற்கடை நீளமுள்ளது. இதன் அலகு சிவப்பாக இருக்கும். தலை, கழுத்து ஆகியவை செம்பழுப்பு நிறமாகவும், சிறகுகள் நீல நிறத்திலும் இருக்கும். மார்பு வெண்மையாக இருக்கும். கால்கள் இளஞ்சிவப்பு நிறம். ஆண் பறவைக்கும் பெண் பறவைக்கும் தோற்றத்தில் வேறுபாடு இல்லை.

நீர்நிலைகளின் செங்குத்தான கரைகளில் நீளமான வளை தோண்டி அதனுள் ஆண் பறவை, பெண் பறவை இரண்டு சேர்ந்தே கூடு அமைக்கும். இந்தக் கூட்டில் பெண் பறவை முட்டையிடும். முட்டை வெண்மையானது; உருண்டை வடிவிலிருக்கும். ஆண் பெண் இரண்டுமே அடை காத்துக் குஞ்சு பொரிக்கும்.

மற்றொரு வகை மீன்குத்தி உருவில் சிறியது. இது ஏறத்தாழ 5 விரற்கடை நீளமே இருக்கும். இதன் தலை, கழுத்து ஆகியவற்றில் கருப்பும் பச்சை நிறமும் கலந்த பட்டைகளிருக்கும். வால் இறகுகள் நீலநிறமானவை. சிறகுள் பச்சை நிறத்திலிருக்கும். அலகு கருப்பு. இவை தவிர வேறு சிலவகை மீன் குத்திகளும் உண்டு.



படிப்பகம்

www.padippakam.com

# வெயில்

நிலத்தில் வாழும் உயிர்கள் எல்லாவற்றின் உயிர் வாழ்க்கைக்கும் வெயில் இன்றியமையாதது. பசுமையான நிலைத் திணைகள் (தாவரங்கள்) ஒளிச் சேர்க்கை மூலம் வெயிலை வேதியல் ஆற்றலாக மாற்றி, உணவை உருவாக்கிக் கொள்கின்றன. இவ் வகையில் நிலைத் திணைகளில் சேமித்து வைக்கப்படும் வேதியல் ஆற்றல்களிலிருந்து மற்ற உயிர்கள் அனைத்தும் தங்கள் உணவைப் பெறுகின்றன.

பண்டைக் காலங்களில் நிலைத்திணைகளில் சேமித்து வைக்கப்பட்ட வெயிலின் ஆற்றல்தான் நிலக்கரி, எண்ணெய், வளி முதலிய எரிபொருள்களாக இன்று கிடைக்கின்றன.

கடல்நீரை வெயில் ஆவியாக மாற்றி முகிலாக்குகிறது. முகிலிலிருந்து நீர் மழையாகப் பொழிகிறது. மழைநீர் அருவியாக விழும்போது பொறிகளை இயக்கி மின் ஆற்றலைத் தருகிறது. காற்றுக்கு ஆற்றல் அளிப்பதும் வெயிலேயாகும்.

இவ்வாறு, நம்முடைய பணிகளுக்குத் தேவையான ஆற்றல் முழுவதற்கும் வெயிலே அடிப்படையாக உள்ளது.

வெயிலால் நிலைத் திணைகளிடமும், விலங்குகளிடமும் பலவகை விளைவுகள் உண்டாகின்றன. வெயில் படும் பொருள்கள் சூடேறுகின்றன அல்லவா? இதற்கு வெயிலுள்ள அகச் சிவப்புக் கதிர்களே காரணம். வெயிலில் புற ஊதாக் கதிர்களும் நிரம்பியிருக்கின்றன. இக்கதிர்கள் பெருமளவில் தாக்கினால் நம் உடலுக்குத் தீங்கு உண்டாகும். இக் கதிர்களின் பெரும்பகுதியை உலகைச் சுற்றியுள்ள வளி மண்டலம் உறிஞ்சிக் கொள்வதால், நமக்குத் தீங்கு நேராதவாறு பாதுகாப்பு ஏற்படுகிறது.

எனினும், வெப்ப நாடுகளில் வெயிலில் வேலை செய்பவர்களின் நிறம் மஞ்சள் அல்லது கறுப்பு நிறமாக மாறிவிடுகின்றது.

இமயமலைகளிலும், ஆல்ப்சு மலைகளிலும் தென் சரிவுகளில் மட்டுமே வெயில் விழும். ஆதலால், அப்பகுதிகளில் மக்கள் விரும்பி வாழ்கிறார்கள். நிழல் மிக்க வட சரிவுகளில் குடியேற யாரும் விரும்புவதில்லை.

## தமிழ்ச்சிட்டு

### தனி இதழாக விரைந்து வரும்.

இந்த சுறவத் திங்கள் முதலே தனி இதழாக வெளியிடப்பெற இருந்த தமிழ்ச்சிட்டு, அஞ்சல் துறைப் பதிவுவழி ஏற்பட்டுள்ள நடை முறைச் சிக்கல்கள் கரணியமாக ஓரிரு மாதங்கள் கழித்துத் தனி இதழாக வெளிவரும் என்பதை அன்புள்ளங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். அதுவரை குறைந்த பக்கங்களோடுவரினும் பொலிவுடன் இதழ் வர ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளது.

தமிழ்ச்சிட்டு மட்டும் தனியே படிகள் கூடுதலாகத் தேவைப் படுவோர் ஓரிதழுக்கு உரூ. 2 வெள்ளி அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.



படிப்பகம்

www.padippakam.com

## உலகம் பார்க்கப் பார்க்க அழகு.


—பாவலர் இளஞ்சித்திரன்—

பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும்!
பார்க்கப் பார்க்க அழகு! உலகம்
பார்க்கப் பார்க்க அழகு!
கூர்த்த பார்வை அதன்மேல் வேண்டும்!
கோட்டம் இன்றிப் பழகு! உலகில்
கோட்டம் இன்றிப் பழகு!

படித்துக் கொண்டே இருக்க வேண்டும்!
படிக்கப் படிக்க அழகு! உலகம்
படிக்கப் படிக்க அழகு!
நடித்துக் கொண்டே இருக்க வேண்டும்!
நடிக்க நடிக்கப் பழகு! உலகில்
நடிக்க நடிக்கப் பழகு!

பழகிக் கொண்டே இருக்க வேண்டும்!
பழகப் பழக அழகு! உலகம்
பழகப் பழக அழகு!
அழவும் வைக்கும் உலகம் கொஞ்சம்!
அதிலும் இன்பம் பழகு! உலகில்
அதிலும் இன்பம் பழகு!

விரும்பிக் கொண்டே இருக்க வேண்டும்!
வெறுத்தால் தெரியா தழகு! உலகை
வெறுத்தால் தெரியா தழகு!
கரும்பைப் போல இனிக்கும் உலகம்!
கடித்துக் கொஞ்சம் பழகு! உலகைக்
கடித்துக் கொஞ்சம் பழகு!





## விரும்பு கரும்பு

—புதுவை. தமிழ்நெஞ்சன்—

கால்முளைத்த இருட்டாக
கதவிடுக்கில் எலிகள் அவை
நாள்முழுதும் திருடுவதில்
நள்ளிரவில் புலிகள்

இரவுவந்தால் விழித்துக் கொண்டு
இங்குமங்கும் தாவும் தன்
உறவுகொண்ட எலிகளோடு
கீச்கீச் என்று கூவும்

மறைத்து வைத்தப் பொருளையெல்லாம்
வேவு பார்த்து திருடும் — நாம்
உறங்குகின்ற போதில் வந்து
கால்களையும் வருடும்.

விளக்கைப் போட்டால் விரைந்தோடி
சந்துபொந்தில் பதுங்கும் அறிவு
விளக்கை யேற்றி வைத்தாலிங்கே
அறியாமை ஒதுங்கும்

திருடி வாழும் வாழ்க்கை எதற்கு?
திருந்தி வாழ விரும்பு மனம்
திருந்தி விட்டால் வாழ்வதற்கு
நிறைய உண்டு கரும்பு.



படிப்பகம்

www.padippakam.com

த.நா. தலைமை அஞ்சலகத் தலைவர் 655/2000 செ.ப. (ஆர்.என்.) எண். 8119/63 தென்மொழி.
டி.என்.சீப். பி.எம்.சி. 655/2000 செ.ப. (ஆர்.என்.) எண்: 8119/63 தென்மொழி

# சொல்லடை - போட்டி . . . !

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | 3 | |
| | 4 | | 5 | | | |
| | | | | 6 | | |
| 7 | | | | | | 8 |
| | | | | 9 | | |

*இடமிருந்து வலம்:*

1. தமிழக முதல்வரின் வடமொழிப் பெயருக்கேற்ற தமிழ்ப் பெயர்.
4. உடலில் இது ஓடுகிறது (3)
5. விளையாடுவதற்கு இது தேவை (3)
6. மரத்தால் செய்யப் பெற்ற இது கடலில் ஓடும் (3)
7. இதில் புடைக்கலாம் (3)

*வலமிருந்து வலம்:*

8. நிலக்கரி இதலிருந்துதான் வெட்டப்படுகிறது. (5)
9. உயரம் குறைந்தவரை இப்படி இருப்பதாகச் சொல்வர். (4)

*மேலிருந்து கீழ்:*

4. இதைக் கடிய வேண்டும் என்கிறார் திருவள்ளுவர் (4)
2. மீனிற்கு இவை உண்டு. (5)
6. நெருப்பில் இது அணைய நெடுநேரம் ஆகும். (3)
8. ‘சைபர்’ — தமிழில் எழுதுங்களேன் (2)

*கீழிருந்து மேல்.*

4. ஆசிரியரை இப்படிச் சொல்லலாம் (2)
5. எல்லா நீரும் இங்குதான் சென்றடையும். (3)

## சொல்லடை - விடை.


சொல்லடைக்கான விடையைத் தமிழ்ச்சிட்டு முகவரிக்கு சுறவம் 18 (31.1.2001)க்குள் அனுப்பி வையுங்கள்.

சரியான விடையை முதலில் எழுதி அனுப்பிடும் இருவருக்குத் தமிழ்ச்சிட்டு ஓராண்டு இலவயமாக அனுப்பப் பெறும்.



படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com

# க.நா.சுப்ரமண்யம்




... புது எழுத்து

படிப்பகம்

www.padippakam.com

இதழ் 3 மே 2001

# புது எழுத்து

காலாண்டிதழ்



எஸ்.சங்கர்பாபு

டொள்ள காது (துளை காது) அருவி
தருமபுரி.

தவிர்க்க இயலாத காரணத்தால் இதழ் தாமதமாக வெளிவருகிறது. இனி புதிய முகவரியில் தொடர்ந்து புதுஎழுத்து வெளிவரும்.

**மனோன்மணி**
ஆசிரியர்

ஒளிஅச்சுக்கோவை
**கே.ஜி.பண்டரிநாதன்**

அச்சு
**மாணிக்கம் பிரிண்டர்ஸ், தருமபுரி**

**தனி இதழ் ரூ. 25/-**
**ஆண்டுச் சந்தா ரூ. 100/-**
**சந்தாவை பணவிடையாக (எம்.ஓ) மட்டுமே அனுப்புக**

அனைத்து தொடர்புகளுக்கும்
**மனோன்மணி**
**புது எழுத்து**
**20, ஜே.கே.சி.தெரு,**
**காவேரிப்பட்டணம் 635 112,**
**தருமபுரி மாவட்டம்.**
**தொலைபேசி : 04343 52665**

## புது எழுத்து கிடைக்குமிடங்கள்

**இலக்கிய வட்டம் வெ.நாராயணன்**
39சி, காமாட்சியம்மன் சன்னதி தெரு
காஞ்சிபுரம் 2.

**திரு. பூபதி**
ஆர்த்தி பீடா ஸ்டால்
புது பஸ் நிலையம்
சேலம்.

**பாரதி புக் ஹவுஸ்**
டி 28, மாநகராட்சி ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்
பெரியார் பஸ் நிலையம்
மதுரை 1.

**சிலிக்குயில்**
20 ப, கோதண்டபாணி தெரு,
கும்பகோணம் 1.

**NCBH**
தஞ்சை.

**சீனு தமிழ்மணி**
50 ஈ, நிலையத்தெரு
சண்முகாபுரம், பாண்டிச்சேரி 9.

**திரு. பாவண்ணன்**
பெங்களூர்.

**திரு. டி.திலீப்குமார்**
புத்தக விற்பனையாளர்
ராமகிருஷ்ண மடம் எதிரில்
மைலாப்பூர், சென்னை.

**நியூ புக்லேண்ட்ஸ்**
தி.நகர், சென்னை 17.

**வேர்கள் இலக்கிய இயக்கம்**
நெய்வேலி.

**தமிழோசை பதிப்பகம்**
கோவை.

நான்காம் இதழ் கூடுதல் பக்கங்களோடு சிறப்பு இதழாக செப்டம்பர் முதல் வாரத்தில் வெளிவரும். புத்தக விமர்சனத்திற்கு இரண்டு பிரதிகள் அனுப்புக.

படிப்பகம்

www.padippakam.com

# பழகிய அறை

● எதுவும் வெளிச்சப்படாததொரு சூன்ய வேளை
திடீரென
ஓசையாய் கடிகாரத்தின் இதயம்
துடிக்க மோதுகிறது அறை சுவர்களில்
கனவு போன்று நிழலொன்று கலைந்து வெளியேறுகிறது
எனக்கு முன்னால் நாங்கள் அமர்ந்திருக்கிறோம்
எங்கள் பேச்சு எங்கள் மௌனம் எங்கள் பார்வை
எல்லாம் எங்களுடையதாகவே இருந்தது
எங்கள் வேட்கை எங்கள் ஸ்பரிசம் எங்கள் மூச்சு
இதுவெல்லாமும் எங்களுடையதாகவே இருக்கிறது
புதிய பொருள்களாலும் நபர்களாலும் நிரப்பப்பட்டு
மாறி இடம் போன அறையுள்
காலம் இறந்தும் இன்னும் உயிர்ப்போடிருக்கிறது
துயரமும் காமமும் ஒன்றுள் ஒன்று முயங்கி
அறையின் ஞாபக சீசாவில்
கண்ணீரும் விந்துமாய்ச் சேகரிக்கப்பட்டிருக்கிறது
எடுத்துச்சென்று பாதுகாக்கும் எத்தனிப்போ
நாற்றத்தைப் பெருக்குகிறது
போட்டுடைக்க வீசும் விருப்பமோ
காற்றில் காற்றென கரைகிறது
எதிர்காலத்திற்குக் கொண்டு வர முடியாது
அந்த சீசா
இறந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்குமிடையே
சீழ்க்கை எழுப்பிச் சுழன்றுக் கொண்டிருக்கிறது.
●


ஸ்ரீநேசன்





படிப்பகம்

www.padippakam.com



ஒப்பத்தவாடி (தருமபுரி) இசை ஓவியம்

# யாத்ரீகன்

● எல்லாவற்றையும் உதாசீனம் செய்து
யாத்ரீகன் ஒருவன் கிளம்பினான்
என்னுள் சிலநாள் தங்கியிருந்து
பழுதடைந்த சொற்களையும் பாடல்களையும்
உடனெடுத்து செல்கிறான்
அருகிய பூச்சிகளையும் பட்சிகளையும்
சிதைந்தச் சொற்களால் உயிர்ப்பிக்கிறான்
தரிசுகளெல்லாம் வனங்களாக
பாழ்ப்பட்ட பாடலை இசைக்கிறான்
தாகித்த தருணங்களில் அவனருகாமை
எங்கும் நீரூற்று பீறிடுகிறது
பசியுணர்ந்த பொழுதோ
கனிமரங்கள் எதிர்படுகின்றன
சோர்வடையும் சமயங்களிலோ
பறவைகள் காற்றில் பாடுகின்றன
இருந்தும்
நீரருந்தி பசியாறி உறங்காமல்
காலத்தைக் கடந்து தொடர்கின்றான்
லட்சியம் என்பதோ குறிக்கோள் என்பதோ
ஏதும் அவனிடம் இல்லை
வியாதி நிரம்பிய ஊர் வழியாக
களிம்பாய் மருந்தாய் நடக்கின்றான்
வன்மம் கொண்ட மானுடருடே
அன்பைப் பெருக்கிச் செல்கின்றான்
செல்வது எங்கே அடைவது எதைதான்
நமக்கு மட்டுமே ஐயம்
அவனுக்கோ
பயணம் மாத்திரம் உண்டு
பயனென்றெதுவும் இல்லை ●

ஸ்ரீநேசன்



படிப்பகம்

www.padippakam.com

# தொடர்வினை

**மூன்று எதிர்வினைகள் : என் பதில் - தமிழவன்**

● புது எழுத்து இரண்டாம் இதழ் மூன்று வித எதிர்வினைகளைப் பிரசுரித்துள்ளது. முதல் இதழில் பிரசுரமான எனது **சிந்தனை வரலாறும், வியாக்கியானமும்** கட்டுரைத் தொடர்பாக ஒவ்வொன்றும் முக்கியமான எதிர்வினைகள்.

'மொழி வழிச்சட்டகம்' என்பது சமூக, சரித்திர, அரசியல் பண்புகளை உள்ளேற்ற அளவை முறை. அப்படிப் பார்த்து 2000 ஆண்டு தமிழிலக்கிய வரலாற்றை சமஸ்கிருத-பாலி-பிராகிருத சட்டகமும், அதேபோல் ஆங்கில, பிரஞ்சு, ஜெர்மன், அராபிக் போன்ற சட்டகமும் ஆக இரண்டு சட்டகங்கள் பாதித்தன என்று விளக்கியுள்ளேன்.

இலக்கிய வரலாற்றை ஒரு புது சட்டகம் வழி அணுகுவதே என் நோக்கம் - அதாவது மொழிமுறை வழி. அப்படிப் பார்க்கும்போது பல சிக்கல்கள் தீரும். புது தெளிவு கிடைக்கும் என்று விவாதிப்பதே என் கட்டுரையின் நோக்கம்.

எந்தக் கலாச்சாரமும் 100% தூயதாக இருக்க முடியாது. ஒவ்வொன்றும் இன்னொன்றுடன் ஊடாட்டத்தில் இருக்கும். இதுதான் இன்றைய ஜனநாயகப் பார்வை. எனவே தான் என் நோக்கம், ஊடாட்ட அம்சங்கள் எவை - சமஸ்கிருதமும் தமிழும் எவ்வாறு இணைந்தன, இணைய மறுத்தன என பார்ப்பதில் நிலைத்தது. தமிழ் - சமஸ்கிருதம் என்ற எதிர்வுப் பார்வை, இது காலம் வரை இருந்தது. அந்த எதிர்வு அப்படியே திரு. வேல்சாமியிடம் மீண்டும் தலைகாட்டுகிறது என நினைக்கிறேன். நண்பர் பேரா. பஞ்சாங்கத்திடம் புதிய எதிர்வு ஒன்றைத் தேடும் (தெலுங்கு) போக்கு பிரதானப்படுகிறதென்று கருதுகின்றேன். என் நோக்கம் இரு கலாச்சாரங்கள் இணையும்போது எதிர்த்து நிற்கும் அம்சங்கள் சில மட்டுமே என்று சுட்டுவதும், இரு கலாச்சாரங்களுக்குள் இருக்கும் வீரியம் ஒன்றாய் சேர்கையில் ஏற்படும் புதுத்தன்மை பற்றியும் நாம் இனி யோசிக்க வேண்டும் என்று வாதிடுவதுமே. 'பெரியாரியத்தினை' ஒரு எதிர்வு / ஆய்வு முறையியலாய் மட்டுமே இன்னும் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்குத் தமிழ் வரலாறு, அதே கண்ணாடியால் மட்டுமே பார்க்கப்படத்தக்கதாய்த்தான் தெரியும்.

நண்பர் திரு. வேல்சாமி, வைதீகம், அவைதீகம் என்ற எதிர்வை வலியுறுத்துகிறார். 'எதிர்வின் ஒத்திடைவைக்கூட (கொஞ்சம் பாருங்கள் பார்க்கத் தவறுவது சார்) என்று கேட்டுக் கொள்வது என் நோக்கு. சமஸ்கிருதமும் பிராகிதம், பாலியும் இணையும் ஆயிரமாயிரம் பிரதிகள் இந்தியாவில் உண்டு. பெருங்கதைக்கும், சீவகசிந்தாமணிக்கும் சமஸ்கிருத கதைப் பிரதிகளும் உண்டு. பிராகிருத பிரதிகளும் உண்டு. கண்ணட இலக்கியத்தில் இந்த இரண்டு மொழிகளுக்கும் உள்ள ஊடாட்டம் மிக அதிகம். மேலும் வேல்சாமி நினைப்பதுபோல் ஓரிரண்டு சங்கப் பாடல்களில் மட்டுமே தானா பிறமொழி பாதிப்பு என்ற கேள்வி. **மகாராஷ்டிரா பிராகிருதத்தில்** சங்க அகப்பாடல்களுக்கு இணையான **காதாசப்தசதி*** பாடல்கள் காணப்படுவதிலிருந்து உருவாகும் கேள்வியாகும். இந்திய இலக்கியம் பற்றிப் பேசும்போது ஐஜாஸ் அகம்மது போன்றவர்கள் பிற்காலத்தில் இருந்ததாகக் கருதும் (19 நூ. டெல்லி பகுதியில் இந்தி, பார்ஷியன், அராபிக்) பன்மொழி அறிவு பல முற்கால படைப்பாளிகளிடம் இருந்திருக்கலாம். தொல்காப்பியருக்கும், சமஸ்கிருதமும், தமிழும் நன்கு தெரிந்துள்ளது. பல உரையாசிரியர்கள் இரண்டு, மூன்று மொழிகளில் பண்டிதர்கள் ஒன்றைத் தாய்மொழி என்ற கருத்தாக்கமே மேற்கிலிருந்து வந்த கடன்களுக்கு என்ற விவாதமும் கருதத் தக்கது தான். ஒற்றை முரண்பாடு மேற்கத்தியர்கள் அறிமுகப்படுத்தியது. பன்முக முரண்பாடு நம் கருத்தாக்கம். இங்குத் திராவிட பாரம்பரியத்தினர் எந்தளவு தமிழின் உயிரை கும்பல் கலாச்சார மாயைக்கு அடிமைப் படுத்தினார்கள் என்று கேட்கும் பஞ்சாங்கத்தின் கோபம் நியாயம் தான். ஆனால் நாம், திராவிட அறிவுக் கோட்பாட்டில் நின்று கோபப்பட்டால் அவர்களுக்கு அது வெற்றி. கட்டுரையின் நோக்கம். இந்த திராவிட அறிவுக் கோட்பாட்டையே (எதிர்வை) கேள்விக்குட்படுத்துவது.



படிப்பகம்

www.padippakam.com

தெலுங்கு இலக்கியம் நம் எழுத்து இலக்கிய பாரம்பரியத்தில் பெரிதாய் செல்வாக்கு செலுத்தியதா?

'நாயக்கர் காலம்' என்று இலக்கியத்தை ஆட்சி செய்தவர்களின் பின்னணியில் பார்க்கும் பிற்போக்குப்பார்வை இலக்கியச் சரித்திரத்திலிருந்து நீக்குவதற்குத் தான் 'மொழிச் சட்டகப்பார்வை ஒன்றை நான் என் கட்டுரையில் சிபாரிசு செய்தது. பொ.வேல்சாமியும் காலகட்டத்துக்கு - அதாவது மொழிவழி உருவான இலக்கியத்திற்குப் புறம்பான காலசரித்திரத்துக்கு வருகிறார். எனவே - என் கட்டுரையின் அடிப்படையை (கவனிக்கவும் 'அடிப்படையை')க் கவனிக்காது, சரித்திர ஆசிரியர்கள் என்ன சொல்கிறார்கள் என்று மேற்கோள்கள் காட்டுகிறார். இது அவசியம் இல்லை. ஏனெனில் நான் மொழிச் சட்டகத்தை மட்டுமே எடுத்துக் கொண்டிருக்கிறேன். கால கட்ட சரித்திர முறை மேற்கத்திய முறை நம் சரித்திரம் அப்படிப்பட்டது அல்ல. எனவே 1000 ஆண்டைத் தாண்டியும் வரலாம். இன்னும் அதிகமான ஆண்டையும் தாண்டி வரலாம். வரலாற்றைக்கூட இன்று மொழிச் சட்டகத்தின் வழி புரிந்து கொள்ளலாம் என்று ஹைடன் வைட் போன்றோர் சொல்கிறார்கள்.

திரு. சங்கரன் அவர்களும் என் கட்டுரையின் முறையியல் பற்றி அக்கறை காட்டவில்லை போலுள்ளது. நான் சமஸ்கிருதத்தை ஆதரிக்கிறேனா, எதிர்க்கிறேனா என்று எதிர்வு நோக்கிப் பார்த்தால் நான் அகப்பட மாட்டேன். ஏனெனில் என் நிலைபாடு வேறு. சமஸ்கிருதமும், தமிழும் இணையும் போது என்ன நேர்ந்தது? அந்த இணைவு சிருஷ்டித் தன்மை கொண்டதா ? அல்லது வறட்சித்தன்மை கொண்டதா ? தமிழ், சமஸ்கிருதத்தைத் தன் சுயத்துவத்தைத் தங்க வைத்தபடியே தான் இணைத்தது என்பதே மெய்ப்பாட்டியலையும் ரசக் கோட்பாட்டையும், உள்ளுறையையும் தொனிக் கோட்பாட்டையும் ஒப்பிட்டு ஆய்பவர்கள் கண்டுகொள்ளும் உண்மை. சங்கரன் அவர்களை நான் ஏற்கிறேன். பிரச்சினை அது அல்ல. புதிதாய் எழுப்பப்படும் என் கட்டுரையின் பிரச்சினைகளைப் பழைய விவாத மட்டத்துக்கு கீழ் இறக்கித்தான் புரிந்து கொள்வது என்றால் அது தர்க்கப்பிழையாகும். மறைமலை அல்ல என் பிரச்சினை மறைமலை ஏற்ற மொழிச்சட்டகம்; அது சிறு தெய்வத்தை ஏற்காது.

தமிழ், தனியாக இயங்கமுடியும் என்ற வாதம் குமரகுருபரர் மற்றும் வள்ளலார் வழியாக வருவது இயலாது. ஏனெனில் மேற்கத்திய ஒற்றை முகச்சிந்தனை மரபைச் சார்ந்தவர்கள் அல்ல. குமரகுருபரரும், வள்ளலாரும். இவ்விருவரும் மேற்கை உள்வாங்கி, கிழக்கின் பரப்பைக் காட்டியவர்கள். ஒரு வகையில் கால்டுவெல்லைவிட வளமான மரபைச் சார்ந்தவர்கள். கால்டுவெல் இவர்களைச் சரியாக அறிந்திருந்தால் - சரியாக அறிதல் என்பது இவர்களை உற்பத்தி செய்த மண்ணை அறிந்திருத்தல், ஏகமுரண் தன்மை கொண்ட எதிர்வாக சமஸ்கிருதத்தையும், தமிழையும் முட்டி மோத வைத்திருக்க மாட்டார்கள். பள்ளு இலக்கியம் எப்படி வந்தது என்று கேட்கப்படுகிறது. தமிழுக்கு ஒரு சுய மரபு தொடர்ந்து இருந்து வருகிறதென்பதை என் கட்டுரை நெடுக ஏற்று என் விவாதத்தை முன் வைப்பதை உணர்கிறவர்கள் இப்படிக் கேள்வி கேட்பதற்கு இடமில்லை என அறியலாம்.

இன்னொரு முக்கிய விசயத்தை க.பஞ்சாங்கம் முன் வைக்கிறார். அதாவது "திராவிட இயக்கச் சிந்தனை மரபினால் ஓரங்கட்டப்பட்ட கொடுமை" யின் தொடர்ச்சியே ஈழத் தமிழர்கள் பற்றிக் காட்டப்படும் மெத்தனம் என்ற பார்வை. ஆங்கிலம் சார்ந்த மொழிவழிச் சட்டகத்தின் உள்தள வழிவமைப்பே மறுமலர்ச்சிக்கான போலி முற்போக்குச் சிந்தனைகளான வரட்டு நாத்திகம், போலி சாதி எதிர்ப்பு, போலி பெண் கல்வி போன்றவை. ஆங்கில வடிவமைப்புகள், தமிழ் போன்ற முற்றிலும் மாறுபட்ட மொழியுடன் **இயல்பான** நீட்சி பெறவில்லை. அதன் விளைவே சினிமாவில் நல்லவனாக நடிப்பவர்களையும் அவர்களின் கதாநாயகிகளையும் தலைவராகவும், தலைவியாகவும் ஏற்கும் போக்கு இந்தத் தற்காலத் தமிழக பிற்போக்குத்தனத்தை நான் சுட்டும் ஆங்கில வழிமொழிச் சட்டகத்தின் வழியே விளக்கமுடியும் என்று நம்புகிறேன். திரு. பஞ்சாங்கம் கூறும் சிறுபிரபந்தக்கால மொழிச் சட்டகம், வேறு வகை செயல்பாடு கொண்டது என்று அவர் இன்னும் கருதுவாராயின் இவ்விஷயம் பற்றிய அவருடைய நீண்ட கட்டுரை ஒன்றை (அதற்குரிய தகுதி உடையவர் அவர்)ப் படித்த பிறகுதான் என் நிலைபாட்டை நான் மாற்றவேண்டுமா இல்லையா என்று முடிவெடுப்பேன். ●



படிப்பகம்

www.padippakam.com

# அன்னா அக்மதோவாவின் காதல் கவிதைகள்



**முதல் பகுதி** - **குட்டி ரேவதி**

● கவிதையின் பாதை தீக்குழி மாதிரியானது. வீரியம் குறைந்த நடையும், மெத்தனமும், பாசாங்கும் பொசுங்கிப் போகின்றன. கால நீட்சியில், எல்லைகள் வரையறுக்க முடியாத உள்ளடங்கள் கொண்டது. கவிதை என்றாலும் கவிதானுபவமே வடிவத்தை - மொழியை - படிமத்தை தீர்மானிக்கிறது. மொழியிலும், வடிவத்திலும் எதிர்கொண்ட பரிசோதனைகளை யெல்லாம் உன்னதமான கவிதானுபவம் தன்னியல்புக்கே உரிய சாதுரியத்தால் வென்றுகொண்டே வந்திருக்கிறது. மரபுக்கவிதைகள், புதுக்கவிதைகள், ஹைக்கூ கவிதைகள் என்று வடிவங்கள் மாறினாலும் கவிதானுபவமே மொழி ஊறும் வனமாக இருக்கிறது. அனுபவமெனும் ஸ்பரிசம் இல்லாத கவிதையில்தான் 'எழுதப்படும்' தொனி கேட்கிறது. மற்றெல்லாம் பாடல்களாகின்றன. இவ்வனுபவம் கொண்டு உருப்பெறும் கவிதைகளே மின்னலின் பிரகாசத்தெறிப்பை நல்குகின்றன. இக்கவிதானுபவம் பெற புலன்கள் எல்லாமும் விழித்துக்கொண்டே மனப்பதிவுகள் முற்றிலும் அழிந்த ஒரு மிதப்புநிலையும், விட்டுவிடுதலையாதலுமே (Liberation) கச்சாப் பொருட்கள்.

காதலை கவிதையாக எழுதுவது சாதாரண விஷயமன்று. கூண்டுக்குள் மோட்டார் சைக்கிள் ஓட்டும் சர்க்கஸ் வீரனின் பிரயத்தனங்களும், சாகசங்களும், காதல் கவிதைகளுக்கும் உரித்தானவை. காதலையே மையமாகக் கொண்டு சுழலும் அன்னா அக்மதோவாவின் கவிதை உலகம், வெறும் காதலின் மலினங்களால் ஆனதன்று. உணர்ச்சிகளோடு விளையாடும் காதலன்று அக்மதோவாவினுடையது. காதலுக்குள் அமர்ந்துகொண்டு அதன் வழியாகவே நட்சத்திர ஈர்ப்பை அளந்தெடுக்கும் திராணி உண்டு.

இளமை அலைக்கழிக்கும் பருவத்தில் 'நாட்குறிப்பு' என்பதை எப்படி எழுதுவது? அதற்கு இணையாகவே அக்மதோவாவின் காதல் கவிதைகள் உருவாயின. அந்நாட்குறிப்பில் அவ்வயதுக்குரிய அனைத்து முக்கியத்துவங்களும் பிரதிபலிக்கவில்லையென்றாலும் மொத்தத்தில் ஒரு குழப்பமான வயதில் மேன்மையான நடத்தையும், சிந்திக்கும், உணர்ந்தும் வாழ்ந்த ஒருவரின் கவித்துவ நாட்குறிப்பாகவே இருக்கிறது. எப்பொழுதும் சுவர்களில் குத்திட்டு நிற்கும் கொடுங்கோல்தரும் பீதியுணர்வு நிறைந்த வாழ்வில் சாத்தியமான ஒன்றாய் 'எழுத்து' மட்டுமே இருந்தது. இவை இதய சஞ்சலித்திலிருந்தோ, நுரைத்து அடங்கும் உணர்வுப்பிரவாகங்களிலிருந்தோ உருவானவை அன்று 'இன்பநுகர்ச்சி' காதலின் முக்கிய குணாம்சம் என்றாலும் சல்லித்தனமான கலக்கங்கள், மனதாபங்கள், காழ்ப்புணர்வு மற்றும் ஆன்ம அகந்தைகளிலிருந்தெல்லாம் விடுதலை பெற்றிருந்தன; அற்ப விஷயங்களின் நிழல்படராத கவிதைகள் அவருடையவை.

பெண்ணிய கவிதைகள், பெண் கவிஞர் என சலித்துவிட முடியாத அளவுக்கு ரஷ்ய கவிதைப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகவும், எப்பொழுதும் அரசியல், சமூக, தனி மனித ஈரம்படர்ந்த துவமாகவும் உள்ளன. தன் வாழ்க்கையின் இருபது வருடங்கள் புஷ்கின் கவிதைகள் பற்றிய ஆய்விலேயே அக்மதோவா மூழ்கிப்போயிருந்தார். மூர்க்கமான முத்தங்களையும், ஈரத்தழுவல்களையும் மீறி நேசத்தின் ஊற்றுக்கள். காதல் பற்றிய விசாரணைகள், காதலின் நினைவுகள், மீட்டெடுக்க முடியாத அதன் இழப்பு, கழிவிரக்கம், சத்தியங்கள் எல்லாவற்றையும்



படிப்பகம்

www.padippakam.com

உள்ளடக்கி எழுந்த பெருங்கோபுரங்களாயிருக்கின்றன. இதில் எதுவுமே அக்மதோவாவின் பெயரில் எழுதக்கூடிய காதலின் மீதான கண்டுபிடிப்பு அன்று.

'நான் எப்பொழுதுமே கவிதை எழுதுவதை நிறுத்தியதில்லை. காலங்களோடும், என் மக்களின் புதிய வாழ்க்கையோடும் என்னை பிணைப்பது என் கவிதைகள்தாம். அவற்றை எழுதும்போது நான் கூர்மையாக உணர்ந்த என் தாய்நாட்டின் துணிச்சலான வரலாற்றின் துடிப்பை மீண்டும் வாழ்கிறேன். அந்த வருடங்களில் வாழ்ந்ததற்கும், எந்தக் காலத்திற்கும் இணையில்லாத நிகழ்வுகளைப் பார்த்ததற்கும் சந்தோஷப்படுகிறேன்' என்று கூறினார்.

'ஆன்மதூண்டுதல்கள் வழியாக வெளிப்படும் தடுக்கவியலாத உளவியல் நுட்பமும், முழுமையாக நம்பக்கூடிய தொனியும், எதிர்க்கமுடியாத அரூபமான நட்புறவும், காதலுக்கே உரியன. காதல் பற்றிய கவிதைகள் உலக நிகழ்வுகளின் சூழலில் மூழ்கிப்போய்விடும் என்று நம்பலாம். ஆனால் அவ்வளவு நீர்த்துப் போனதாகிவிடாது' என்பதே அக்மதோவா நிருபிக்கவிரும்பிய காதலின் தன்மை.

# காதல்

**'உன் இதயத்தில் சீறிக்கொண்டு நுழைந்து**
**சுருண்டு கொள்கிறது; பின்**
**நஞ்சென பரவுகிறது துல்லியமான வேகத்துடன்**

**அல்லது முழுநாளும் கூவுகிறது**
**உன் ஜன்னல் பிறைகளில் ரொட்டித்துண்டுகளைக் கொத்தும்**
**புறாவைப் போல்**

**உறங்கும் மலரிலிருந்து எட்டிப்பார்க்கிறது**
**மெல்ல.**
**கண்ணைக்குருடாக்கும் வெண்பனியாய்**
**எதிர்பாராமல் மின்னிமறைகிறது**

**ஆனால் சின்னஞ்சிறு சந்தோஷங்களிலிருந்தும்**
**மன அமைதியிலிருந்தும் ரகசியமான**
**உன்னை வெகுதூரத்திற்கு கவர்ந்திழுக்கிறது**
**உறுதியாக.**

**வயலினின் வேதனையான பிரார்த்தனையிலும்**
**தனிமையில் நிறையும் மனதின் நொய்மையிலும்**
**அதைக் கேட்கலாம்.**

**இன்னும் நம்பத் தயங்கும்**
**ஒருவரின் புன்னகையில் அது இருக்கிறது.**
**என்று யூகிக்கக்கூட அச்சப்படுகிறாய்.** ●



கட்டுரைக்கு உதவிய நூல்
Anna Akhmatova
Poems (1988)
Raduga Publishers,
Moscow.



படிப்பகம்

www.padippakam.com




# ஆயிரம் சாரதா

பா. வெங்கடேசன்

● 1802 குளிர்பருவத்தில் ரயத்வாரி முறை வரி விதிப்புக்கெதிராக கலகம் செய்து கைதான முப்பது தலைவர்களில் ஒருவரான அனுமந்தப்பா வழிவழியாகப் பயின்ற தனது வசிய சக்தியால் வெள்ளைக்காரர்களின் மனதை மாற்றி விடுவார் என்றுதான் ஒசூர், டெங்கணிக்கோட்டை வட்டாரங்களிலிருந்து தலைவர்களை விடுவிக்கக் கோரி ராயக்கோட்டை ஆட்சியர் அலுவலகத்தின் முன் திரண்ட ஆயிரக்கணக்கான விவசாயிகளும் நம்பினர். அவர்கள் நம்பியது போல அப்படி எதுவும் நடக்கவில்லையென்ற போதும் கூட அனுமந்தப்பா மீது அவர்கள் வைத்திருந்த அன்பு குறைந்து போய் விடவில்லை. கலெக்டர் காக்பர்ன் கோட்டைக்கு எழுதிய அதிகாரபூர்வமற்ற தனிப்பட்ட கடிதமொன்றில் அவர்கள் (விவசாயிகள்) பொதுவாகவே தங்கள் தலைவர்களை மனிதப்பிறவியாகப் பார்க்கப் பிரியப் படுவதில்லை, மாறாக அரசாங்கம் ஏதோ தங்கள் கலப்பைகளைப் பிடுங்கிக் கொண்டு வயிற்றில் அடித்துவிட்டதைப் போல துடித்துக் கொண்டிருந்தார்கள், தலைவரை மீண்டும் பார்க்கும் வெறியொன்றே அவர்களுக்கு உயிர் வாழும் நியாயத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. அந்த அன்பு வெறியில் கலகத்தின் காரணம் கூடப் பின்தங்கிவிட்டது. விடுவிக்கப்பட்ட தலைவர்களுடன் அவர்கள் திரும்பிச் சென்ற வழியில் அவர்கள் முன்வைத்த கோரிக்கைகள் பிணமாகக் கிடந்ததைப் பார்த்தேன் என்று எழுதுகிறார். கலகம் அற்பாயுளில் முடிந்து விட்டதென்றாலுங்கூட அனுமந்தப்பா பரம்பரைக்கு அவர்கள் அதுவரையில் சேர்த்து வைத்திருந்த நிலபுலன்களோடு கூட கணிசமான அளவு செல்வாக்கையும் பெற்றுத் தந்தது. வருடங்களுக்குப் பிறகு கர்நாடகத்தைப் பூர்வீகமாகக் கொண்டிருந்த அவர்கள் குடும்ப விருட்சம் மாநிலப் பிரிவினைப் பிரச்சினைகளையும் தாண்டி பதட்டமின்றி தமிழ்மண்ணிலேயே வேரூன்றிக் கொள்ளவும் தளம் அமைத்துக் கொடுத்தது. அனுமந்தப்பாவிற்குப் பிறகு குறிப்பிடத்தக்கப் போராட்டங்கள் எதையும் அவரது வழித் தோன்றல்கள் செய்து விடவில்லை யென்றாலும் கலக ரத்தம் அனுமந்தப்பாவின் பிதுரார்ஜிதச் சொத்துக்களில் ஒன்று என்பதான அபிப்பிராயம் நான்கு தலைமுறைகள் வரை பாலக்காட் பாரமகால் வட்டாரங்களில் நிலவி வந்தது. சுதந்திரத்திற்குப் பிறகு தமிழ்ச்



படிப்பகம்

www.padippakam.com

சமுதாயத்தின் அறிவுத் தளத்திலும் அரசியல் மேடையிலும் நிகழ்ந்த தீவிர மாற்றங்களால் கருப்புத் துண்டணிந்த இளைஞர்களும் சிவப்புச் சட்டைக்காரர்களும் அதிகமாகத் தென்படத்துவங்கியபோது அனுமந்தப்பாவின் வாரிசுகள் - பொருளாதார ரீதியாகப் பின்தங்கி போய்விட வில்லையாயினும் - மெல்ல மெல்லத் தங்கள் செல்வாக்கை இழந்து தனிப்பட்ட ஒரு குடும்பமாக உள்ளொடுங்கத் துவங்கினார்கள். அனுமந்தப்பா வம்சாவளியின் நான்காம் தலைமுறையான இரண்டாம் அனுமந்தப்பா தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு கொலைக் குற்றத்திற்காகவோ அல்லது கொலை முயற்சிக் குற்றத்திற்காகவோ கைது செய்யப்பட்டு ஒசூர் கிளைச் சிறையில் அடைக்கப்பட்ட போது அவனுடைய பெரும்பூட்டனார் பொருட்டுத் திரண்டது போல ஜனக்கூட்டமொன்றும் அவனை விடுவிக்கக் கோரி ஆர்த்தெழுந்து காவல் துறைக்கு தலைவலி ஏற்படுத்தி விடவில்லை. அனுமந்தப்பா தன் தண்டனைக் காலம் முழுவதையும் அனுபவித்து விட்டுத் தான் சிறையைவிட்டு வெளியே வந்தான். மனம் என்கிற வஸ்து உருவாவதன் முன்னேயே தாய் தந்தையரைப் பறி கொடுத்து விட்ட அனுமந்தப்பா உறவினர்களால் வளர்க்கப்பட்டான். அவனுக்கிருந்த பெரும் சொத்துக்களை முன்னிறுத்தி அவர்களால் சிறப்பாக வளர்க்கப்பட்டான் என்று சொல்ல முடியாவிட்டாலும் கூடக் கல்லூரி வரை அவனால் செல்ல முடிந்தது. கல்லூரியை முடித்து விட்டு வெளியே வந்த தினத்தில் ஒசூர் - மத்திகிரி சாலையிலிருந்த ஒரு நிலப்பரப்பும், கூட்டுறவு வங்கியின் சேமிப்புக் கணக்கிலிருந்த சிறுதொகையும் (மொத்தச் சொத்தையும் ஒப்பிடும்போது) மட்டுமே அவனுடைய பூர்வீக சொத்தாக அடையாளம் காட்டப்பட்ட போது அவன் ஆச்சரியமோ பெரிய அளவில் ஏமாற்றமோ அடையவில்லை. ஆகவே, உறவினர்களின் போக்கு பற்றி மனதளவில் பெரிதாக புகாரும் இல்லை. அவனுக்கு முந்தைய தலைமுறைகளைப் போலன்றி அவன் விவசாயத்தில் ஈடுபாடு இல்லாதவனாக இருந்தான். சேலம் உருக்காலையை நம்பி தர்மபுரி வட்டாரத்தில் வளர்ந்த ஏராளமான சிறு தொழிற்சாலைகளில் ஒன்றின் ஒசூர் கிளை அலுவலகத்தில் சரக்குக் கண்காணிப்பாளனாகச் சேர்ந்த பிறகு ஒசூரை விட்டுச் சற்றுத் தள்ளி ஒதுக்குப் புறமாக இருந்த தன் நிலத்தில் பாதியை விற்று விட்டு அந்தப் பணத்தில் மீதி நிலத்தின் மீது ஒரு வீட்டைக் கட்டிக் கொண்டான். பிரம்மாண்டமான வீடுதான் அது. சக்திக்கு மீறிய செயல் என்றாலும் அனுமந்தப்பா உடலில் ஓடிக் கொண்டிருந்த பரம்பரை ரத்தமும், அழகியல் உணர்வும் அவனை அதில் ஈடுபட வைத்தது. அதே ரத்தமும் உணர்வும் தான் அவனை ஆந்திர எல்லையின் வழியாக தமிழகத்தின் வடக்கு, வடகிழக்கு மாவட்டங்களில் அப்போது ஊடுருவத் தொடங்கியிருந்த தீவிரவாத அமைப்புகளின் பால் அவன் ஈர்க்கப்படவும், நிலப்பிரபுத்துவத் பிரச்சினைகளை முன்னிறுத்தி வடிவமைக்கப்பட்ட அவற்றின் கொள்கைகளை முதலாளித்துவப் போராட்டத்திற்கேற்றபடி முன்னெடுத்துச் செல்ல அவன் பரீட்சார்த்தமாக முயன்று இரண்டு தரப்பினராலும் கைவிடப்படவும் காரணமாக அமைந்தது. அனுமந்தப்பா தான் கைதானது பற்றியும் அதிகம் கவலைப்படவில்லை. கூட்டுக் கலகங்களும், அமைப்புகளும் அவன் மனதில் மனித ஒற்றுமை பற்றிய புதிய சிந்தனைகளை ஏற்படுத்தி வைத்தன. ஒற்றுமை, அன்பு, பரஸ்பர ஈர்ப்பு, காதல் என்பதெல்லாம் இரத்தம், வியர்வை, எச்சில், அழுக்கு, கண்ணீர் போன்ற புறக் கழிவுகளின் மணத்தில் உண்டாகும் போதையினாலன்றி மனதின் வேதிமாற்றத்தால் உண்டாகிறதில்லை. உடலின் மணத்தை நுகராமல் காதல் மலர்வதென்பது அசாத்தியம். மேல் மற்றும் நடுத்தர வர்க்க வெள்ளைச் சட்டை அலுவலர்களிடையே இல்லாத பிணைப்பை ஆலைகளில் உழைக்கும் வர்க்கத்தினிடையேயும், விவசாயி களினிடையேயும் ஏற்படுத்துவது சக



படிப்பகம்

www.padippakam.com

தொழிலாளியின் வியர்வை மணத்தை நுகரும் வேளைகளும், அடுத்தவன் காயங்களை ஸ்பரிசிக்கும் சந்தர்ப்பங்களுமன்றி வேறில்லை என்று இதுபோன்ற சிந்தனைகளை அவன் தன் மனதில் வளர்த்துக் கொண்டான். இவ்விதச் சிந்தனைதான் சாரதாவைப் பாதித்து - கொள்கை அளவில் இச்சிந்தனையை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் - அவளை இவன் பால் ஈர்த்து வைத்தது. இந்தப் பெண் சாரதா தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த பிராமண போலீஸ் அதிகாரி ஒருவருடைய பெண். கர்நாடகா - தமிழ்நாடு எல்லைப் பகுதியில் அப்போது நடைபெற்று வந்த இனக் கலவரங்களை கட்டுக்குள் வைப்பதற்காக இங்கே அனுப்பப்பட்ட அந்த கெட்டிக்கார அதிகாரி வனப்பகுதிகளில் அதிகமாகியிருந்த கடத்தல் மற்றும் கள்ளச் சாராய குற்றங்களின் நிமித்தமாகப் பிறகு நிரந்தர மாற்றல் உத்திரவை வாங்கிக் கொள்ளும் படியாகி விட்டது. சாரதா அவருடைய ஒரே பெண். உளவியல் படித்துக் கொண்டிருந்தாள். வாரம் ஒரு முறை சனி, ஞாயிறுகளில் ஒசூர் வருவது, அப்பாவோடு காவல் நிலையத்துக்கும், மலைக் கோவிலுக்கும், ராமநாயக்கன் ஏரிப்பகுதிக்கும் செல்வது ஆகிய நிகழ்வுகளில் அவளுக்கு நிரம்ப ஈடுபாடு இருந்தது எனலாம். அதிலும் சிறப்பாக தாலுகா அலுவலகத்தின் பின்புறமிருக்கும் சிறைச்சாலைக்குச் செல்வதும் கைதிகளுடன் பேசுவதும் அவளுக்கு ஒருவிதமான சாகஸச் செயலைச் செய்யும் சந்தோஷத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தன. கைதிகளை இறந்தவர்களாகத் தான் இந்தச் சமூகம் கருதுகிறது என்று ஒருமுறை பகிரங்கமாக அவள் தன் தந்தையிடம் காவல் நிலையத்திலேயே வைத்து உரத்துச் சொன்னாள். துவைக்கும் கல்லின் மீது துணிகளை அடித்து அழுக்கைப் பிழிவது போல கைதிகளின் மீதான வன்முறையின் மூலம் போலீசும் சமூகமும் தங்கள் குற்ற உணர்வையும் இயலாமையையும் பிழிந்து அப்புறப்படுத்திக் கொள்கிறார்கள் என்று ஒரு வாசகம். எங்கே படித்தாளோ, சாரதா அனுமந்தப்பாவைச் சிறைக் கைதிகளில் ஒருவனாகச் சந்தித்தபோது அவன் தண்டனைக் காலம் கிட்டத்தட்ட முடியும் தறுவாயிலிருந்தது. விடுதலையாகச் சில மாதங்களே இருந்தன. உளவியல் படித்துக் கொண்டிருந்த துடிப்பு மிக்க யுவதிக்கு இம்மாதிரி புரட்சி, துப்பாக்கி என்று பேசும் ஆணிடம் ஈர்ப்பு ஏற்படுவதென்பது எதிர்பார்க்கக் கூடிய ஒன்றுதான். அனுமந்தப்பாவின் தைரியம் ஊகத்திற்கு அப்பாற்பட்டதும் உச்சாடனங்களால் உருவேற்றப்பட்டதுமான பரம்பரை மாந்தரீகத் தன்மையை அடிப்படையாகக் கொண்டது என்றும் தர்க்க நிலையிலியங்கும் மேல்மனம் அவன் சிந்தனை செல்லும் போக்கை கிரகிக்கச் சக்தியற்றது என்றும் அவன் பூர்வீகத்தைப் பற்றி தெரிந்த வயதான பூர்வகுடிகள் சிலர் அவளை எச்சரித்த போது கூட அவள் அதைப் பொருட்படுத்தவில்லை. தன் பிரேமையை பயன்படுத்திக் கொண்டு அனுமந்தப்பா தன்னை சீண்டிப் பார்க்கிறான் என்பது தெரிந்த போதும் அதையும் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. சிறையைச் சுற்றிப்பார்க்க வந்த ஒரு சமயம் அவள் தகப்பனைப் பக்கத்தில் வைத்துக்கொண்டே தன்னை முத்தமிடும்படி சாரதாவைக் கேட்டான் அனுமந்தப்பா. உடன் வந்த உதவியாளரும் சாரதாவும் அதிர்ந்து போய் நிற்க சாரதாவின் தகப்பனோ அனுமந்தப்பா தனக்கு வயிற்றை வலிக்கிறது என்ற சொல்லக் கேட்டவர் போல துளி சலனம் கூட முகத்தில் தோன்றாமல் நின்று கொண்டிருந்தார். அனுமந்தப்பா பேசியதை அவரால் மட்டும் கேட்க முடியவில்லை என்று அவர்களால் அப்போது நம்ப முடியவில்லை. ஆனால் நிஜம் அதுதான். அவன் பேசுவதை அவன் விரும்பினாலொழிய மற்றவர்களால் கேட்க முடியாமலிருந்தது. அனுமந்தப்பா மேலும் சொல்கிறான்: என் மீது உனக்கு உண்மையாகவே காதல் இருக்கும் பட்சத்தில் இவ்வளவு பேர் கண்களையும் கட்டிவிட்டு இந்தச் சிறையறையை படுக்கை யறையாக்குவது நமக்குச் சாத்தியம்தான்.



படிப்பகம்

www.padippakam.com

இதைக் கேட்டவுடன் உதவியாளர் அவனைத் தாக்கினார். தாக்கியதற்குக் காரணம் அவன் சொன்ன வார்த்தைகளல்ல. மாறாக சாரதாவின் தகப்பனுக்குக் கொடுத்த மரியாதையை அவன் அவருக்குக் கொடுக்கவில்லை என்பதால். ஒரு பெண்ணிடம் பேசப்படும் தரக்குறைவான வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு நிற்க அந்தப் பெண்ணின் தகப்பன் வயதுடைய தன்னையும் சிறைச் சுவர்களில் ஒன்று என அனுமந்தப்பா நினைத்துவிட்டானேயென்கிற ஆத்திரத்தால். சாரதா, உடலை முன்னிருத்தி உருவாக்கப்படும் காதலை நம்பும் வர்க்கமில்லை. அதை பரிசோதிக்கும் சந்தர்ப்பமும் அனுமந்தப்பா சிறையிலிருந்ததால் வாய்க்கவில்லை. எனினும் துவக்கத்தில் சாரதா தன் மேல் கொண்டுள்ள அன்பை பருவக் கோளாறென்றும், பார்க்கும் எதையும் திருத்த முன்னும் மேல்தட்டு மனோபாவம் என்றும் பழித்துத் தன் அதீதமான வார்த்தைப் பிரயோகங்களால் அவளைச் சீண்டியும் அவமானப்படுத்தியும் வந்த அனுமந்தப்பா நாளாவட்டத்தில் தானும் அவள்பால் ஈர்க்கப்படத் தன்னை அனுமதித்துக் கொண்டான். அப்போது அவனுக்கும் வயது முப்பதைக் கடக்கவில்லை. இங்கே கோடைப் பருவங்களில் மலை மீதிருக்கும் சூடேஸ்வரருக்கு திருவிழா நடப்பது வழக்கம். பெரிய நிகழ்வு. அக்கம்பக்கத்திலிருந்து பத்து பதினைந்து கிராமங்கள் மூன்று நாட்கள் கலந்துகொள்ளும் வைபவம். இந்த வைபவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்புதான் அனுமந்தப்பா விடுதலையானான். உற்சவத்தின் இரண்டாம் நாளன்று தோழிகளுடன் வந்திருந்த சாரதாவை சிறைக்கு வெளியில் முதன்முதலாக மலையடிவாரத் தெப்பக்குளத்தின் கரையிலிருக்கும் கல் மண்டபங்களுள் ஒன்றில் வைத்து அவன் சந்தித்தான். சாரதா சம்மதித்தால் தோழிகளுடைய கண்களை தற்காலிகமாக குருடாக்க தன்னால் முடியும் என்றும் பேசினான். அனுமந்தப்பாவைப் பற்றி ஏற்கனவே சாரதா சொல்லியிருந்தும் அவனுடைய அணுகுமுறையைப் பார்த்து விட்டுத் தோழிகள் கலவரமடைந்துதான் போனார்கள். சாரதா தான் அனுமதிக்கும் வரையில் அனுமந்தப்பாவால் எந்த ஆபத்தும் இல்லையென்று கூறியுங்கூடக் கேட்காமல் தோழிகள் விஷயத்தை சாரதாவின் தகப்பன் காதில் போட்டு விட்டுப் போய் விட்டார்கள். பிறகென்ன, எல்லா காதல் கதைகளின் இரண்டாம் பகுதியையும் போலவே பயமுறுத்தல்களும் கெஞ்சல்களும் கண்ணீரும் தான். அனுமந்தப்பா இரண்டு முறை காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு தாக்கப்பட்டான். சாரதாவின் தகப்பனார் அனுமந்தப்பாவின் பரம்பரை பெருமையின் பேராலும், செல்வாக்கின் பேராலும் அவருடைய நலம் விரும்பிகளால் சமாதானப் படுத்தப்பட்ட பிறகு அவனைக் கண்டிக்கும் நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டு பெண்ணிடம் அதைச் செயல்படுத்தத் துவங்கினார். கோடை விடுமுறைக் காலமாதலால் சாரதாவை கல்லூரி விடுதிக்கும் அனுப்ப முடியவில்லை. எனவே வீட்டோடு அவள் சிறை வைக்கப்பட்டாள். கனத்த காவல்தான். முகம் நிறமிழந்தும், கண்கள் வெறிச்சிட்டபடியும், உடல் தளர்வடைந்தும் அந்தச் சின்னப்பெண் அடைக்கப்பட்டிருந்த விதம் விதியின் இரக்கமின்மையை பறையடித்துச் சொல்லுவதாக இருந்ததாம். எனினும் அந்தி வேளைகளிலும் இரவு பிரியாத அதிகாலைப் பொழுதிலும் அனுமந்தப்பாவின் உருவம் தெருவில் தோன்றுவதாக தகவல்கள் வந்தவண்ணமிருந்தன. சாரதாவிடம் மாற்றம் தெரியத் துவங்கியதை அவள் வீட்டுக்குச் சென்று பார்த்தவர்கள் உணர்ந்தார்கள். இந்த நாடகத்தின் உச்சகட்டமாக சாரதாவின் தகப்பனார் அனுமந்தப்பாவைக் கொன்று விடப் போவதாக தன் உதவியாளரிடம் சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்த தினத்திற்குப் பின் பல வாரங்களுக்கு அனுமந்தப்பாவைப் பற்றின செய்தி எதுவும் யார் காதையும் வந்தடையவில்லை. அனுமந்தப்பா திடீரென்று காணாமல்



படிப்பகம்

www.padippakam.com

போய்விட்டான். ஆம். அப்படித்தான் சொல்லவேண்டும். அவன் ஓடிப் போக கூடிய கோழையல்லனென்பது அவனையறிந்த ஒவ்வொருவருக்கும் தெரியும். ஆனால் அவன் உறவினர் இருப்பிடங்களிலோ, பழைய தொழிற்சங்க நண்பர்களுடனோ, ஒரூர் வீட்டிலோ இல்லை. தற்கொலை செய்து கொண்டானா அல்லது சாரதாவின் தகப்பனார் தான் சொன்னதைச் செய்து விட்டாரா, இரண்டுமில்லாமல் தன் இருப்பை சாரதாவைத் தவிர மற்றவர்களுக்குக் காட்ட விருப்பமில்லாமல் அனுமந்தப்பாவே தன்னை மறைத்துக் கொண்டு விட்டானா தெரியவில்லை. ஆனால் அனுமந்தப்பாவின் மறைவு ஊருக்கு உறைத்து அவர்கள் அதைப் பற்றி பேசத் துவங்கிய சில தினங்களுக்குள்ளாகவே சாரதாவின் தந்தை மேலதிகாரிகளிடம் கெஞ்சிக் கூத்தாடி கோயமுத்தூருக்கு மாற்றல் வாங்கிக் கொண்டு போய்விட்டார். மிக நெருக்கமான ஓரிரு உதவியாளர்களைத் தவிர வேறு யாருக்கும் அவர் போகுமிடம் பற்றின விபரம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இரவோடிரவாக அவர் குடும்பம் ஊரைக் காலி செய்துவிட்டு காணாமல் மறைந்துவிட்டது. முதல் நாளிரவு அவரை வீட்டில் பார்த்தவர்கள் மறுநாள் காலையில் பூட்டப்பட்ட வீட்டைத்தான் பார்த்தார்கள். மிக ஜாக்கிரதையாகவும், திட்டமிட்டும், ரகசியமாகவும், தொழில் திறமையுடனும் சிறிதுகாலம் ஊரின் கவனத்தை ஈர்த்துக் கொண்டிருந்த சாரதாவின் கதைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது.

அறுபதிகளின் துவக்கத்தில் சார்நிலைப் பதிவாளராக மதுரையிலிருந்து மாற்றம் பெற்று ஒரூருக்கு நான் வந்து சேர்ந்தபோது அனுமந்தப்பா - சாரதா காதல் கதை முடிந்து சில வருடங்களாகியிருந்தன. இங்கே என்னைப் போல வந்தேறிகள் விரல்விட்டு எண்ணக் கூடிய அளவிலேதான் இருந்தார்கள். சில அடிகள் வித்தியாசத்தில் மலைப்பிரதேசமாகும் தகுதியை இழந்து இன்று தொழிற்சாலைப் புகையால் கருகிக் கொண்டிருக்கும் இவ்வூரின் நிலவெளியெங்கும் அப்போது வருடம் பூராவும் மூடுபனி தங்கியிருக்கும். உலராது அழுகிக் கொண்டிருக்கும் கழிவுகள் பரப்பும் விஷக்காய்ச்சலுக்கும் மனப்பிறழ்வுகளுக்கும் பயந்து நானும் மற்ற வெளியூர்காரர்களைப் போலவே கண்களை மட்டும் விட்டுவிட்டு மற்ற எல்லா உறுப்புகள் மீதும் கம்பளிச்சட்டை, கம்பளிக் கையுறை, கம்பளிக் காலுறை, கம்பளி முகமூடி என்று சாத்தியப்படும் துணிகளையெல்லாம் அள்ளிப் போட்டபடி நடந்து கொண்டிருந்தேன். உள்ளூர்காரர்களோ தலையிலிருந்து கால்வரை ஒற்றைக் கம்பளியை மட்டும் போர்த்துக் கொண்டு ஆள் வித்தியாசம் கண்டுபிடிக்கு முடியாதபடி இருட்டுப் பறவைகளைப் போல அலைந்து கொண்டிருப்பார்கள். பெரும்பாலும் எல்லோரும் நிலச் சொந்தக்காரர்கள். பூர்வகுடிகள். தெற்குப்பகுதியின் பாறை வெய்யிலுக்கு பயந்து நிழல்தேடி வந்த துரைமார்களுக்கு உல்லாச வீடுகள் கட்டிக் கொள்ள ஆதியில் தங்கள் நிலங்களில் ஒரு பாகத்தை தானமாக ஈந்தது பற்றி இன்னும் பீற்றிக் கொண்டு திரிபவர்கள். தொழிற்பேட்டையாக இப்பகுதி அறிவிக்கப்பட்டு தனியார் தொழிற்சாலைகள் சார்ந்த வரவுகள் அதிகமாகி இந்தப் பழம்பெருச்சாளிகளின் மேலாதிக்கம் சரியத் துவங்க இன்னும் பத்து வருடங்கள் இருப்பதால் இக்கதை நடக்கும் காலத்தில் வெளியாட்கள் என்பவர்கள் பெரும்பாலும் அரசாங்க ஊழியர்களாகவே இருந்தார்கள். சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எல்லோருமே போலீஸ்காரர்கள் என்கிற அடிமைக் காலத்து மனோபாவம் இன்னும் ஊர்க்காரர்களை விட்டு முழுவதும் அகன்றிராமலிருந்தது. அதே போல் உள்ளூர்க்காரர்கள் எல்லோருமே கடைத்தேற்றப்பட வேண்டிய அல்லது தண்டிக்கப்பட வேண்டிய திருடர்கள் என்கிற உபதேசம் வந்தவர்களின் கைகளிலும் பெட்டி படுக்கைகளோடு திணிக்கப்பட்டிருந்தது. ஆகவே இருதரப்பினரும் அதிகம் பேசிக் கொள்வது கிடையாது. ஒன்றை



படிப்பகம்

www.padippakam.com

இன்னொன்றாக மாற்றும் மந்திர வித்தையில் இவர்கள் கைதேர்ந்தவர்கள் என்கிற நம்பிக்கை கைதொட்டுக் கையாக புதியவர்களிடையே பரவியிருக்கும் அவர்கள் தரப்பு தயக்கத்திற்கு இன்னொரு காரணம். எனக்கு இதில் நம்பிக்கை உண்டா இல்லையா என்கிற விவாதத்துக்குள் நாம் நுழைய வேண்டாம். ஏனென்றால் என்னிடமே இந்தக் கேள்விக்கான திட்டவட்டமான பதில் கிடையாது. என்னைப் பொறுத்தவரை வலியச் சென்று யாருடனும் நட்பு ஏற்படுத்திக் கொள்ளும் சுபாவம் எனக்குக் கிடையாது. அவ்வளவுதான். தவிரவும் அவர்கள் பேசிய தமிழும் கன்னடமும் மற்றும் தமிழும் தெலுங்கும் கலந்த மணிப்பிரவாளப் பேச்சும் அதில் புடைத்துக் கொண்டெழும் கலைச் சொற்களும் எப்போதாவது வில்லங்கச் சான்றிதழுக்காக வரும் உள்ளூர்க்காரர்களிடம் சம்பாஷிக்கும் விருப்பத்தை கெட்டகனவாக மாற்றிவிட வல்லனவாகவும் இருந்தன. அவர்களுக்கு ஒரு வகை மனோபாவம் என்றால் இவர்களுக்கு இன்னோர் வகை மனோபாவம். மல்துணிச் சட்டையும் கால் சராயும் அணிந்து போர்வை போர்த்திய, இன்னுங்குளிக்காத, அரைக் காற்சட்டையுடனும், வெறுங்காலுடனும், வெற்றிலை உமிழும் வாயுடனும் உழலும் பூர்வகுடிகளின் நடுவே அகம்பாவத்துடன் நடந்துபோகும் ஒரு வந்தேறி தன்னைப் போலவே சட்டையும் கையுறை மற்றும் குளிர்த் தொப்பியணிந்த இன்னொரு வந்தேறி எதிர்படக் கண்டால் அசூயையும் தாழ்வுணர்ச்சியும் கொண்டவனாக மாறி விடுபவனாய் இருந்தான். இருவரும் ஒருறையில் இரு வாள்கள் போலத் தங்களை உணர்ந்தார்கள். தான் தோற்கடிக்கப்பட்டு விட்டதாய் பரஸ்பரம் இருவருமே உள்ளுக்குள் புகைந்து கொண்டார்கள். கற்பித்துக் கொள்ளும் இந்த முழு மனக்கசப்பையும் அவர்கள் தங்கள் சிரிப்பில் வெளிப்படுத்துவார்கள். காற்சட்டை அணிந்த இரண்டு மனிதர்கள் இப்படி ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொள்ளும் போது சிரிப்பின் மோதலில் பொறி பறக்கும். தாள முடியாத துர்கந்தமும், பேரோசையும் வெடிக்கும். இரு புறமும் அவர்களைக் கடந்து போய்க் கொண்டிருக்கும் உள்ளூர் வாசிகள் இந்த திடீர், சூழல் மாற்றத்தின் காரணம் புரியாமல் திகைத்துப் போய் நிற்பார்கள். அல்லது பாதுகாப்பான இடம் தேடி ஓடுவார்கள். சிரிப்பின் வகைமை பற்றின அவர்களின் அறியாமை அப்போது அவர்களிடமிருந்து பூரணமாக வெளிப்படும். இந்தச் சிரிப்புக்காகவே அவர்களும் வெளியாட்களிடம் ஒட்டிப் பழக பயந்தார்களாயிருக்கும். ஆக நான் சொல்ல வருவது நான் தனிமையில் இருந்தேன் என்பதை. ஆஸ்துமா உபத்திரவம் உள்ளவளாதலால் மனைவியும், பள்ளிப் படிப்பின் இறுதிக் கட்டமென்பதால் இரு பிள்ளைகளும், வயதான உடம்பு பனி தாங்காதென்பதால் என் தாயாரும் இவ்வூருக்கு வரச் சம்மதிக்காமல் மதுரையிலேயே தங்கி விட்டார்கள். நான் வசித்த அறையில் மயில்வாகனன் வந்து சேர்ந்த தினத்திற்கு முன்தினம் வரை எனக்காக காத்துக் கொண்டிருந்தவர்கள் என்று யாரும் கிடையாதாகையால் அலுவலகத்திலிருந்து நான் தாமதமாகத்தான் கிளம்புவேன். பத்து நிமிட நடைக்குள் அகப்பட்டு விடக் கூடிய என் இருப்பிடத்தை அடைய குறைந்தபட்சம் நாற்பது நிமிட நேர அவகாசம் எடுத்துக் கொள்வேன். பணியிடத்திலிருந்து என் இருப்பிடத்தை இரண்டு வழிகள் மூலமாக அடையலாம். அப்போதைய மனோநிலைக்கேற்ப இரண்டிலொன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது வழக்கம். எப்போதாவது அசம்பாவிதமாக நிகழ்ந்துவிடும் உள்ளூர் நிலத் தகராறுகள் அல்லது மாவட்ட ஆட்சியாளரின் திடீர் வருகை நிமித்தமாக தலை மேல் சரியும் கோப்புகளின் சுமை உடல் சோர்வையும், மனத் திருப்தியையும் ஏற்படுத்தும் நாட்களில் சாராட்சியர் கட்டிடத்தின் நேரெதிரிலிருந்து நீளும் பிரதான சாலையில் இறங்கி அது



படிப்பகம்

www.padippakam.com

முடியுமிடத்தைக் கத்தரிக்கும் நெடுஞ்சாலை எண் ஏழின் இடப்புறமாகத் திரும்பி ஐந்து நிமிட நடையில் அதிலிருந்து மீண்டும் இடப்புறமாக கிளை பிரியும் சிறிய தெருவுக்குள் நுழைந்து எனதறையான கதவிலக்கம் பதினைந்தை அடைவது ஒரு வழி. இன்னொரு வழி, ஊரிலிருந்து வாரமொரு முறை வரும் கடிதங்கள் - இவை பெரும்பாலும் என்னவளின் ஆஸ்துமா இரைப்பு அதிகமாகி அவளைப் பாடாய்ப் படுத்தின விவரணைகளையோ அல்லது மூத்தவனின் பாட மதிப்பெண்கள் அபாயக் கோட்டிற்குக் கீழே இறங்குவது குறித்த அவளுடைய முறையீடுகளையோ பிரதானமாய்க் கொண்டிருக்கும். - பிரிவாற்றாமையையும், பதில் எழுதியாக வேண்டியதன் அவசியத்தையும் நிர்பந்திக்கும் தினங்களில் - மன உளைச்சலுக்கு ஆட்படுவதாகத் தோன்றும் போதுகளில் - அலுவலக வாயிலிருந்து இடது புறமாக ராமநாயக்கன் ஏரியை நோக்கிச் செங்குத்தாக இறங்கும் சாலையில் உருண்டு வலப்புறமாகத் திரும்பி பெரும் நீர்ப்பரப்பை ஒட்டி அதன் மறுகரையில் அமைந்திருக்கும் உள்ளூர் மாரியம்மன் கோயில் வரை கால்களை நனைத்தபடியே நடந்து கோயில் பாதையின் உள்புறமாக வலப்பக்கம் திரும்பி நாற்பத்து மூன்றாம் கதவிலிருந்து இறங்கு முகமாகச் சென்று கதவிலக்கம் பதினைந்தை அடைவது. தெரு மிக அமைதியானது. இரு மருங்கிலும் சேர்ந்து அறுபது வீடுகளைக் கொண்டதாக இருந்தது. அதில் பாதிக்கு மேல் வீட்டுச் சொந்தக்காரர்களால் கைவிடப்பட்டுப் பாழடைந்தவை. ஒரு சாரியில் நாற்பத்து மூன்று வீடுகளும், மிகுதி வீடுகள் மறு சாரியிலுமாக, நடுவே ஒரு நல்ல விளையாட்டு வீரனின் தூரத்தாண்டும் இலக்குக்குள் அகப்பட்டு விடக் கூடிய மண் சாலை. நான் வரும் நேரத்தில் தெரு அடங்கிவிடும் என்பது அதை நான் அமைதியாக உணர்ந்ததற்கு ஒரு காரணமாக இருந்தது. நெடுஞ்சாலை வழியாக நடந்து அறையை அடையும் நாட்களில் மனதுக்கு மிகுந்த ஆசுவாசத்தைக் கொடுக்கும் இந்த மௌனம் ஏரிக்கரை வழியாக நடந்து வர நேரிடும் நாட்களில் பெருத்த தனிமையை என் மீது வேண்டுமென்றே ஏற்றுவதைப் போலத் தோற்றங்கொள்ளும். என் அறையின் நேரெதிரே - சாரதாவின் குடும்பம் முன்பு குடியிருந்த - பூட்டின வீடு திரும்பத் திரும்ப ஊர் நினைவுகளைக் கொண்டு வந்து என் மேல் வாரி இறைக்கும். அப்போதெல்லாம் அந்த வீட்டை நோக்கியதாக இருக்குமாறு அமைக்கப்பட்டிருந்த என் அறைச் சன்னலைப் படாரென்று - தொலைவில் எங்கோ இருக்கும் எதிர்வீட்டின் சொந்தக் காரர்களுக்குக் கேட்குமென்ற நம்பிக்கையில் - அடித்துச் சார்த்திவிட்டு வாங்கி வந்திருந்த மாலைச் சிற்றுண்டியை வேண்டாவெறுப்பாக கொட்டிக் கொண்டு படுத்துவிடுவது வழக்கம். மயில்வாகனன் வரும்வரை இப்படியாகத் தனிமை என்னைக் கொன்று கொண்டிருந்தது. ஒரு காலத்தில் போர்த் தளவாடங்களைக் கொண்டு செல்வதற்கென்றே ஆங்கிலேயர்களால் பிரத்யேகமாகக் கட்டப்பட்டு சுதந்திரத்திற்குப் பின் அந்தப் பரபரப்பையும், முக்கியத்துவத்தையும் இழந்து போன இவ்வூரின் சின்னஞ்சிறிய புகை வண்டி நிலையத்தில் மயில்வாகனன் கிழித்துப்போடும் காகிதக் குப்பைகளைப் பொறுக்கிப் போடவும், சுடுபானம் வாங்கி வரவும் நாளைக்கு இரண்டே தடவைகள் கடந்து போகும் புகை வண்டியை நெறிப்படுத்தவும் ஒரே ஒரு உள்ளூர் உதவியாளனைக் கொண்ட தலைமை அலுவலகனாக நியமனம் பெற்று வந்திருந்தான். சொந்த ஊர் திருநெல்வேலி. அலுவலக வாயிலிலிருந்து ஏரியை நோக்கி இறங்கும் பாதையில் உருண்டு வலப்பக்கம் திரும்பாமல் இடப்பக்கம் திரும்பி ஒசூர் - மத்திகிரி சாலையில் ஒரு ஒன்றரை பர்லாங் நடந்தால் மிகவும் தனிமைப்படுத்தப்பட்ட இடத்தில் புகைவண்டி நிலையம். எப்போதாவது நிலையத்தின் சிமெண்ட் இருக்கைகளிலும் புங்கை மரக்காற்றிலும் ஆசுவாசம் தேடி அங்கு நான் வருவதுண்டு. ஒரு வெளியூர்க்காரனுக்குரிய சகல விதமான அடையாளங்களுடன் நான்



படிப்பகம்

www.padippakam.com

மயில்வாகனனையும், மயில்வாகனன் என்னையும் பரஸ்பரம் பார்த்துச் சிரித்துக் கொண்டபோது நடுவே பொறி எதுவும் பறக்கவில்லை. அதற்கு வயது ஒரு காரணம். ஒளிரும் நீல நிற விழிகளைப் பெற்றிருந்த மயில்வாகனன் சின்னப் பையன். நானோ நடுத்தர வயதைக் கடந்து கொண்டிருந்தேன். துவைத்து நாட்களான, சற்றே இற்றுப் போன என் உடையலங்காரம் இன்னொரு காரணம். ஆக எதிராளியின், முக்கியமாக ஒரு இளைஞனைச் – சவாலுக்குத் தூண்டும் அழகியல் கூறுகள் எதுவுமற்ற என் பணிவான தோற்றம் முதல் பார்வையிலேயே இவன் நமக்குப் போட்டியல்ல என்கிற மாதிரியான நிம்மதி உணர்வை மயில்வாகனன் மனதில் உண்டாக்கியிருக்க வேண்டும். அன்று நாங்கள் மனத்தடைகள் ஏதுமற்று எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டோம். அந்த இளைஞன் மிகச் சமீபத்தில்தான் பொறுப்பை ஏற்றுக் கொண்டு வந்திருந்தான். இங்கே வருவதற்கு முன் தமிழ்நாட்டின் தெற்குக் கோடியில் பிறந்து வளர்ந்த தனக்கு இவ்வூரின் பெயர் கூடத் தெரியாது என்று என்னிடம் கூறி அலுத்துக் கொண்டான். தங்குவதற்கு நம்பகமான, வசதியான அறை எதுவும் அகப்படாமல் தற்காலிகமாக அலுவலக அறையையே தங்கும் விடுதியாக அவன் மாற்றிக் கொண்டிருந்தான். வேலை சம்மந்தப்பட்ட கோப்புகள், கருவிகளும், தனிப்பட்ட உடுப்புகள், உபயோகப் பொருள்களும் கலந்து பணியிடம் என்று அவனால் வர்ணிக்கப்பட்ட அந்த அறை வினோதமான தோற்றம் கொண்டிருந்ததை நானும் கவனித்தேன். மேலும் இரண்டு தடவைகள் ஒரு வார இடைவெளியில் நாங்கள் சந்தித்துக் கொண்டோம். மூன்றாவது சந்திப்பில் என் அறையில் தங்க விருப்பமா என்று நான் கேட்டபோது மயில்வாகனன் உடனே சம்மதித்தான். முதல் சந்திப்பிலேயே இந்த யோசனை எங்கள் இருவரின் மனதிலும் முடிவு செய்யப்பட்டு விட்ட ஒன்றாக அப்போது எனக்குத் தோன்றியது. வார இறுதியில் மயில்வாகனன் என் இடத்துக்குக் குடிவந்து விட்டான். அவன் வரவுக்குப் பிறகு என் பொழுதுகளுங்கூட சுவாரஸ்யமும், புதிய அர்த்தமும் கொண்டவைகளாக மாறத் தொடங்கின என்று தயக்கமில்லாமல் சொல்லலாம். என் வயது அதற்குரிய முழு மரியாதையையும் பெற்று திருப்திப்பட்டுக் கொண்டது. வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்வதையும், வீதிக் குழாயிலிருந்து தினமும் புதிய தண்ணீரை பானையில் நிரப்பி வைப்பதையும் மயில்வாகனனே விடாமல் செய்தான். வீட்டினுள் இருக்கும்போது கதவை உள்புறம் தாளிட்டுக் கொள்ளும் ஜாக்கிரதை உணர்வு மட்டும் – தெற்கத்திக்காரனாதலால் – கைவரவில்லை என்பதைத் தவிர ஒடிசலான அவன் உருவம் வேலைகளில் சலைக்காத சுறுசுறுப்பை அவனுள் புகுத்தியிருந்தது. வயது புதிய செய்திகளைத் தெரிந்து கொள்வதிலும், அவற்றைப் பகிர்ந்து கொள்வதிலும் தணியாத ஆர்வத்தைக் கொடுத்திருந்தது. புகை வண்டி நிலையம் பற்றிச் சற்று முன்னால் நான் தெரிவித்திருந்த தகவல் மயில்வாகனன் மூலமாக நான் பின்பு தெரிந்து கொண்டதுதான். ராமநாயக்கன் ஏரியின் விஸ்தீரணம், அதன் கரையிலமைக்கப்பட்டிருந்த – மழை வீடென்று அழைக்கப்பட்ட – பழைய பிரம்மாண்டமான வீடொன்றின் கதை, மாரியம்மன் கோயிலின் தலபுராணம், உள்ளூர் திருவிழாக்களின் நிகழ்த்து முறைகள், திப்புசுல்தானின் குதிரை லாயம், கண்டத்தின் மிகப் பெரிய கால்நடைப் பண்ணை, வெள்ளைக்காரர்களின் ஓய்வு வீடுகள் சொல்லும் பிசாசுக் கதைகள் ஊரினை முற்றிலுமாக போர்த்திய நிலையிலேயே உறைந்து போன காலநிலை, ஊருக்கே உரித்தான பிரத்யேக நோய்கள், அணில்கள் கண்ணில் படாத அந்திவாடி காட்டின் வினோதம், பூர்வகுடிகளின் தொல்கதைகள், முன்போர் முறை நடந்த உழவர் எழுச்சி, உணவுப் பழக்கங்கள், பேச்சுப் பழக்கம் மற்றும் ஒன்றைப் பிரிதொன்றாய் மாற்றுவதாய்ச் சொல்லப்படும் அவர்களின் மாந்திரீக சக்தி என்று இன்னும் பல விஷயங்களும் தகவல்களும்



படிப்பகம்

www.padippakam.com


மயில்வாகனன் வந்த சில நாட்களுக்குள்ளாகவே அறையை நிரப்பிவிட்டன. பற்றாக்குறைக்கு அவன் தன்னில் பாதி உயரக் கள்ளிப்பெட்டி ஒன்றில் அடைத்துக் கொண்டு வந்திருந்த புத்தகங்கள். எல்லாப் புத்தகப் பிரியர்களையும் போலவே அவற்றை வாசிப்பதற்கு அவன் பின்னிரவு வரை விழித்துக் கொண்டிருந்தான். ஆனால் அந்தப் புத்தகங்கள் கடவுளே. அவற்றைப் படிக்க ஆரம்பித்தவுடனேயே எப்படி அவனைத் தூக்கம் தாக்கமலிருக்கிறதென்று எனக்கு ஆச்சரியமாக இருக்கும். அவை பெரும்பாலும் தர்க்கம் மற்றும் தத்துவம் சார்ந்த புத்தகங்கள். பள்ளிப்பாட நூல்களில் சேர்க்கப்பெறுமளவுக்கு அவற்றில் அயர்ச்சியை உண்டாக்கும் வார்த்தைச் சேர்க்கைகளும், நடையில் மந்த கதியும் இருந்தன. அவனோ அவற்றை அவ்வளவு சுவாரஸ்யமாகப் படித்துக் கொண்டிருந்தான். நான் என் வியப்பை அவனிடம் தெரிவிக்கும்போது அது ஒன்றும் நீங்கள் நினைப்பதுபோல அல்ல என்று என்னிடம் சிரித்தபடி சொல்வான். சொன்ன கையோடு புத்தரின் வாசகமொன்றையோ, அப்போது உச்சரிப்பு மோஸ்தராகிக் கொண்டிருந்த ரஸ்ஸல் அல்லது இங்கர்சாலின் ஏதாவதொரு வாசகத்தையோ சொல்லித் தன் கூற்றை மெய்ப்பிக்க முயலுவான். திரைப்படக் கதை ஒன்றைச் சொல்லும் லாவகத்தோடு அவன் அவற்றைப் பிரித்து வைக்கும்போது இதை ஏன் இவ்வளவு சிக்கலாக இந்தப் புத்தகம் காண்பிக்கிறது என்று எனக்குத் தோன்றும். மயில்வாகனன் தான் கொண்டுவரும் தகவல்களைத் தான் படிக்கும் புத்தகங்கள் சொல்லும் தேற்றங்களோடு ஒப்பிட்டுப் பார்த்துத் தன் வழியில் நிகழ்வுகளுக்கு ஏதாவதொரு புதிய தோற்றத்தைக் கொடுத்துக் கொண்டிருப்பான். சில விஷயங்களைக் கேலி செய்வான். சில விஷயங்களுக்கு கண்டனம் சொல்வான். தொன்மங்களையும் நம்பிக்கைகளையும் தர்க்கப்படுத்தவும் அவனுக்குத் தெரிந்திருந்தது. முன்னால் அமர்ந்திருப்பவன் பற்றின பிரக்ஞையின்றி அவன் தன் பேச்சில் லயித்துவிடும் போது அவன் கண்ணெதிரிலேயே அவன் சட்டைப் பையிலிருக்கும் சம்பளப் பணத்தை சிறிதும் தயக்கமின்றி கைவிட்டு நீங்கள் எடுத்துக் கொண்டு விட முடியும். அவன் பேசும்போது கூடவே பேசும் அவனுடைய நீலக் கண்கள் உரையாடலின் நடுவே விழும் இடைவெளிகளை இட்டு நிரப்பும் வகையில் தங்களைத் தகவமைத்துக் கொள்ளும் நெகிழ்வுத் தன்மை கொண்டிருந்தன. மயில்வாகனின் தேடலுக்கு அந்தச் சிறிய ஊரில் கிடைக்கும் தகவல்கள் போதாதனவாக இருந்தது வாஸ்தவம். அந்த முனைக்கு அவன் விரைவிலேயே வந்து சேர்ந்து விடுவானென்பதை அவனை விட சில வருஷங்கள் அதிகமாக யதார்த்த உலகின் பரிச்சயம் பெற்றவன் என்கிற பெருமிதத்துடன் நான் முன்பே அவதானித்து வைத்திருந்தேன். செவிக்கும் விழிக்குமான பெரிய பெரிய விருந்துகளையெல்லாம் விழுங்கித் தீர்த்தபிறகு மயில்வாகனனுடைய தேடல் வேறு வழியின்றி கைக்குக் கிடைக்கும் விஷயங்களில் – அது எவ்வளவு சிறியதாக, பொருட்படுத்த வேண்டாததாக இருந்தாலும் – ஈடுபாடு கொள்ளத் துவங்கியது. வரவேற்பறையின் கண்காணா மூலையொன்றில் தோண்டப்பட்டிருந்த எலி வளையொன்றின் மறுமுனை எங்கே சென்று முடியக் கூடுமென்று அவன் ஒருநாள் என்னிடம் கேட்டான். அதைப்பற்றி அதுவரையில் நான் யோசித்ததேயில்லையாதலால் அவனுக்குச் சொல்லவென்று எனக்குக் கிடைத்த ஒரே ஒரு வாய்ப்பையும் நான் தவற விட்டு விட்டேன். பிறிதொரு நாள் மண்பானை ஓட்டையை பழைய செருப்பின் தோலால் அடைக்க ஏதோ ஒரு பசைக் கலவையுடன் முயற்சித்துக் கொண்டிருந்தான். இவ்விதமான அபாயமற்ற சிறுபிள்ளைத் தனங்களில் அவன் ஈடுபாடு கொள்வதற்கான தர்க்கங்களையும் புத்தகங்களிலிருந்து மேற்கோள் காட்டி அவனால் விளக்க முடிந்தது. அது என்னைத் திருப்திப்படுத்துவதாகவும் இருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

மயில்வாகனனின் குழந்தைத்தனத்தையும் மேதமையையும் இணைத்து மொத்த குணாம்சமாக்கும் உள்ச் சரடை - அதைப் பற்றி வெளிப்படையாக நாங்கள் பேசிக் கொள்ளவில்லையானாலும் - என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது.



இந்தக் கதை துவங்கிய அன்று மாலை நெடுஞ்சாலைப் பாதையின் இடப்பக்கத் திறப்பு வழியைக் கடந்து அறையை நான் அடைந்தபோது எப்போதும் போலவே மயில்வாகனன் எனக்கு முன்பே வந்து விட்டிருந்தானானாலும் வழக்கத்திற்கு மாறாக அவன் கைவசமிருந்த மாற்றுச் சாவியால் கதவைத் திறக்காமல் அறை வாசற்படியிலேயே தெருவில் நின்று கொண்டிருந்தான். அவன் பார்வை எதிர்சாரியிலிருந்த பூட்டிய வீட்டின் முன்பாக அதைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்த ஒரு ஆறு, ஏழு வயது மதிக்கத்தக்க சிறுமியின் மேல் பதிந்திருந்தது. வீட்டைப் பார்த்தபடி அவள் நின்றிருந்ததால் அவன் பார்வைக்குத் தன் முதுகைத் தான் காட்டிக் கொண்டிருந்தாளென்றாலும் அவள் முகத்தைப் படிக்கும் பாவனையை மயில்வாகனன் முகம் கொண்டிருந்தது. நான் அருகே சென்று அவனுடன் பேச எத்தனித்த போது சற்றுப் பொறுக்கும்படி சைகை காட்டி என்னை அடக்கினான். எனக்கோ அங்கே நிற்க சுவாரஸ்யப் படவில்லையாதலால் அறைக் கதவை என்னுடைய சாவியால் திறந்து கொண்டு உள்ளே போய் விட்டேன். பல நிமிடங்கள் கழித்து மயில்வாகனனும் உள்ளே வந்தான். வந்தவன் நான் கேட்காமலேயே தெருவில் நின்றிருந்த சிறுமி பூட்டப்பட்ட வீட்டின் முன் நின்று எதையோ பேசிக் கொண்டிருந்ததாகச் சொன்னான். ஆறு வயதுக் குழந்தைகள் கண்ணில் பார்க்கும் பொருள்கள் யாவற்றுடனும், தன்னுடனேயும் தன் மனப்போக்கில் பேசிக் கொண்டிருப்பது வியப்புக்குரிய விஷயமல்லவே என்று நான் மூத்தவனை மனதில் நினைத்தபடி பதிலிறுத்தேன். வியப்புக்குரிய விஷயமல்லதான், ஆனால் இந்தப் பெண் தொடர்ந்து நாலைந்து நாட்களாக அந்தக் கதவின் முன்பாக அதேவிதமான முகபாவத்துடன் நின்று கொண்டிருக்கிறாற் போலப் படுகிறது. ஒருவேளை அதற்கும் முன்பிருந்தே கூட அவள் அந்தச் செயலை செய்து கொண்டிருந்திருக்கக் கூடும். இதைச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே நடுவே ஓரிரு நாட்கள் அவளை இந்த பிரதேசத்தில் இதே சூழ்நிலையில் பார்த்த ஞாபகம் பொறி தட்டுகிறது. நான் கவனித்ததில்லை என்று நான் மயில்வாகனனுக்குச் சொன்னேன். ஒருவேளை மனநிலை பிறழ்ந்த குழந்தையாகக் கூட அவள் இருக்கலாம். எதுவாக இருந்தாலும் இது பொருட்படுத்த வேண்டிய அளவுக்கு பெரிய விஷயமல்ல என்றேன். மேலும் மயில்வாகனனின் குணாதிசயம் பற்றின பயத்துடன். அவனும் அன்று அதைப் பற்றி மேற்கொண்டு எதுவும் பேசாமல் விட்டுவிட்டான். ஆனால் சரியாக நாற்பத்தெட்டு மணிநேரங்களுக்குப் பிறகு மேலும் ஒரு புதிய தகவலுடன் அந்த விஷயத்தைக் கிளறத் துவங்கி விட்டான். அந்தச் சிறுமி வயதுக்குரிய குழந்தைமையோடல்ல, மாறாக பிரக்ஞை பூர்வமாகவே எதிர்வீட்டின் பூட்டப்பட்ட கதவுகளுக்கு எதையோ சொல்லிக் கொண்டிருக்கிறாள். நாளுக்கொரு



படிப்பகம்

www.padippakam.com

விஷயமுமல்ல. மாறாக அது ஒரு வார்த்தை அல்லது ஒரு சொல் அல்லது ஒரு சிறு செய்திக் கூறு. ஒற்றை வாக்கியம். திரும்பத் திரும்ப விடாமல் தினமும் ஒரே விதமான ஒலி அதிர்வுகளுடனும், சப்த அடங்கலுடனும், மாத்திரை பிறழ்வு ஏற்பட்டு விடாதபடி அத்தனை கவனமாகவும், ஒரு உச்சாடனம்போல. அவனை நான் அலட்சியப் படுத்துவதாக நினைத்துக் கொண்டு விடப் போகிறானோயென்கிற பயத்துடன் வினோதம் தான் என்று பொத்தாம் பொதுவாகச் சொல்லி வைத்தேன். மயில்வாகனனின் உபரிப்புலன் வேலை செய்யத் துவங்கி விட்டது என்று எனக்குப் புரிந்தது. நடக்கவிருப்பவற்றை நான் ஊகிக்கவும் துவங்கினேன். ஆச்சரியப்படும் வகையில் அது மிகச் சரியாகவும் இருந்தது. ஆறாம் நாள் மாலையில் ஏரிக்கரை வழியாக நடந்து சட்டைப்பையிலும் மனதிலும் ஊரிலிருந்து வந்த கடிதம் கனக்க நான் நுழைந்தபோது அறையின் மத்தியில் அந்தச் சிறுமி நின்று கொண்டிருந்தாள். அவளுக்கு எதிரே முக்காலியில் மயில்வாகனன். நான் அறைக்குள் நுழைவதைப் பார்த்ததும் அவன் தன் பேச்சைத் துவக்க தயாரானான். தர்க்கம் பற்றியும் ஸ்தூலப் பொருள்களின் தத்துவம் பற்றியும் வாசிக்கும் புத்திசாலி அதோடு கூட சகமனிதனின் மனோநிலையைத் தெரிந்து கொள்ளும் பாலபாடங்களையும் சற்றே படித்துப் புரிந்து கொள்வது நல்லது என்று நான் அவனுக்குக் கூற நினைத்தேன். ஆனால் மூன்றாவது நபரின் இருப்பு - அது சிறு பெண்ணே என்றாலுங்கூட - அறையின் பொதுச்சூழலைக் குலைக்கும் அந்த யோசனையை நான் கைவிடும்படி செய்திருந்தது. ஏற்கனவே பின்னந்திப் பொழுதின் ரெண்டுங்கெட்டான் வெளிச்சம் அறையை ரத்தசோகை பீடித்த பெண் போல மாற்றி வைத்திருந்தது. மயில்வாகனனின் நீலப்பார்வை என்னை தொடர்ந்து உடை மாற்றும் அறைக்கும், தண்ணீர் பானைக்கும், முகங்கழுவும் மூலைக்குமாக அலை பாய்வதை என்னால் அவதானிக்க முடிந்தது. வரவேற்பறையை பார்வை மறைக்கும் சமையலறையின் உள்புறம் வரை சென்று காய்ச்சப்பட்ட பாலைத் தேடும் பாவனையில் நான் பதுங்கிக் கொண்ட போதும் என் கழுத்தின் பின்புறம் நீலநிறப் புள்ளிகள் சூழன்று கொண்டிருப்பதைக் கண்டவுன் நான் பேசாமல் முன்னறைக்கு வந்து மயில்வாகனன் அருகே இன்னொரு முக்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தேன். பேச்சு என்பது தன்னைப் பொருத்தவரை பார்வையின் தொடர்ச்சியே என்பதில் உறுதியாயிருக்கும் மயில்வாகனன் பீடிகை எதுவும் போடாமலும், அந்தப் பெண்ணை எனக்கு அறிமுகம் செய்து வைக்காமலும் விட்ட இடத்திலிருந்து துவங்கும் உபன்யாசகனைப் போல கனைத்துக் கொண்டு இப்போது பிரபலமாகிக் கொண்டு வரும் ஒருவகை கவிதைப் பாணியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களோ என்று பேசத் துவங்கினான். எனக்குக் கல்யாணசுந்தரம், கண்ணதாசன் ஆகியோரின் திரை இசைப் பாடல்களைத் தாண்டி புதிய பாணியில் வேறெதும் கவிதை என்று இருக்கக் கூடிய சாத்தியங்களில் அறிவும் நம்பிக்கையும் கிடையாது. ஆனால் மனதை நடுங்கச் செய்யும் சில கோர்வையான சொற்பட்டியல்கள் கவிதைகளென்ற பெயருடன் உருவாகி வளர்ச்சி பெற்றுக் கொண்டிருப்பதாகவும் அவற்றின்இருப்பை நாம் உதாசீனம் செய்துவிட முடியாதென்றும் நான் கேள்விப் பட்டிருந்தேன். மயில்வாகனனும் அதையே என்னிடம் சொன்னான். ஒரு சிறுமியை நடுவே வைத்துக் கொண்டு அவன் என்ன மாதிரியான விவாதத்தில் இறங்க என்னையும் தயாரிக்கிறான் என்பது மீதான கிலி என்னைத் தொற்றிக் கொண்டது. சற்றுத் தள்ளி தொங்கிக் கொண்டிருந்த என் சட்டைப்பையிலிருந்து துருத்திக் கொண்டிருந்த புதிய கடிதம் வேறு என்னை இம்சித்துக் கொண்டிருந்ததால் நான் குளிர்காய்ச்சல் கண்டவனைப் போல நடுங்கத் துவங்கினேன். மயில்வாகனன் அந்த நடுக்கத்தைக் கண்டுபிடித்து என்னை உசாவினால் ஒத்துக் கொண்டு பேசாமல்



படிப்பகம்

www.padippakam.com

படுக்கையில் சாய்ந்து விடுவதென்றும் காத்திருந்தேன். ஆனால் கவிதை பற்றின பேச்சை அவன் மேற்கொண்டு தொடரவில்லை. பதிலாக அறையின் மத்தியில் வெளியேறும் பரிதவிப்புடன் நின்றிருந்த சிறுமி நான் அறைக்குள் நுழைவதற்கு முன் அவனிடம் சொல்லிக்கொண்டிருந்த வாசகங்களை என் முன்னே திரும்பச் சொல்லும்படி அவளிடம் கூறினான். அவளோ அதற்கு சற்றும் விருப்பமில்லாத வளாயிருந்தாள். அவள் எதனாலோ மிகவும் பயந்து போயிருந்தாள். அப்பகுதியின் பூர்வீக கன்னட வகுப்பைச் சேர்ந்த பெண் என்பது அவளைப் பார்த்த மாத்திரத்தில் தெரிந்தது. புலம் பெயர்ந்தவர்களிலோ, அப்பகுதியைச் சேர்ந்த தமிழ், தெலுங்கு குடும்பங்களிலோ மார்பு வரையிலும் பாவாடையும் மிகமிகக் குட்டையான மேற்சட்டையும் அணியும் வழக்கம் கிடையாது. மேலும் அவள் பற்கள் வெற்றிலைக் காவியால் பழுப்பேறியிருந்தன. நான் அவளை விட்டு விடும்படி மயில்வாகனனுக்குச் சொன்னேன். நான் அப்படிச் சொன்ன மாத்திரத்தில் அதை அவனே அவளுக்குச் சொல்லிவிட்டதைப் போல அந்தச் சிறுமி வாசலை நோக்கி விரைவாக நகரத் தலைப்பட்டாள். மயில்வாகனன் அவளைத் தடுத்து நிறுத்தாமல் ஆனால் உரத்த குரலில் கல்மழை பொழியும் செவ்வரளித் தோட்டத்தில் யார் வருகைக்காகவோ யாரோ காத்திருப்பதாக அறிவிக்கும் சிக்கலான ஒரு சொற்றொடரை முழங்கி அவன் சொன்னது சரிதானா என்று அவளிடம் கேட்டான். அவள் பதில் சொல்லவில்லை. ஆனால் திரும்பி அவனைப் பார்த்து சிரித்தாள். வாசலுக்குச் சென்று தெருவின் பனியில் கரைந்துவிட்டாள். அதற்குப் பிறகு அவள் என் கண்களில் என்றுமே தட்டுப் படவில்லை. அவள் தலை மறையும் வரை கவனித்துக் கொண்டிருந்த பின் மயில்வாகனன் என்னைப் பார்த்து திரும்பினான். அவன் சற்று முன் சொன்ன குழப்பமான செய்தி அனுமந்தப்பா என்பவன் சாரதா என்கிற பெண்ணுக்கு சொல்லி விடும் தகவலாம். யார் சாரதா? யார் அனுமந்தப்பா? அனுமந்தப்பா யாரென்று எனக்கும் தெரியாது. ஆனால் சாரதா என்கிற பெண் கொஞ்ச நாட்களுக்கு முன்பு வரை எதிர்சாரியிலிருக்கும் பூட்டிய வீட்டில் குடியிருந்த ஒரு தமிழ் பிராமணக் குடும்பத்துப் பெண். இப்போது அவர்கள் எங்கே? அதுவும் தெரியாது. ஆனால் இந்த சாரதாவுக்குத்தான் அனுமந்தப்பா விடாமல் தினமும் இந்தச் சிறுமியை தூது விட்டுக் கொண்டிருக்கிறான். அவள் தான் இல்லையே. இல்லைதான். ஆனால் செவ்வரளிக் காட்டில் தினமும் தான் காத்திருக்கும் செய்தியை சாரதா வீட்டுக் கதவுடம் சொல்லி விட்டு வரும்படி அனுமந்தப்பா இந்தச் சிறுமியைப் பணித்திருக்கிறானாம். பைத்தியக்காரத்தனமாய் இருக்கிறதே என்றேன் நான். கதவு எப்படி முறையீடுகளைக் கேட்கும். இதற்கு மயில்வாகனன் உடனே பதில் சொல்லவில்லை. அனுமந்தப்பா என்பவன் ஒரு பைத்தியக்காரன் என்று நான் சொன்னதை அவனும் தன் மௌனத்தின் மூலமாக அங்கீகரிக்கிறான் என்று நான் நம்பத் துவங்கிய போது கல் நம் குறைகளைக் கேட்டுத் தீர்த்து வைப்பதாக நாம் நம்பவில்லையா என்று அவன் திடீர் கேள்வியொன்றை எழுப்பினான். நான் பதில் பேசவில்லை. மயில்வாகனன் பிறகு முற்றிலும் வினோதமான முறையில் மௌனமாகி விட்டான். மறுநாள் காலையிலும் அவன் யோசனையிலேயே தான் இருந்தான் என்பது தெரிந்தது. உடனே பதில் சொல்லி விட்டானானாலும் என் கேள்வி அவனை அலைக்கழிக்கத் துவங்கியிருக்க வேண்டும். எங்கள் அலுவலகங்களை நோக்கி ஏரியின் பனி விலகாத பாதையினூடு நடந்தபோது கூட அவன் எதையாவது பேசுவான் என்று எதிர்பார்த்து ஏமாந்தேன். நாங்கள் பிரியும் முனைக்கு வந்தவுடன் என்னிடம் அவன் பார்ப்போம் என்று வழக்கம்போலச் சொல்லிவிட்டு திரும்பிப் பார்க்காமல் நடந்து போனான். மயில்வாகனனின் இந்த மௌனம் எதிர்வீட்டு சாரதா பற்றின விஷயங்களைத்



படிப்பகம்

www.padippakam.com

தெரிந்துகொள்ளும் பொறுப்பு என் தலை மேல் சுமத்தப்பட்டு விட்டதாக அவன் பிரகடனப் படுத்துவது போல எனக்குத் தோன்றத் துவங்கி விட்டது. அன்று நான் வழக்கமாகப் பார்க்கும், பழகும் ஆட்களிடம் சாரதா என்கிற பெண்ணைப் பற்றி விசாரிக்கத் துவங்கியபோது அதைக் கண்டு நானே ஆச்சரியப்பட்டேன். அனுமந்தப்பா என்கிற வெறும் பெயரை மட்டும் வைத்துக் கொண்டு ஒரு ஆளை அடையாளப்படுத்தி விசாரிப்பது துர்பலமாகத் தோன்றியது. அவனைப் பற்றிய மேல் விபரம் எதுவும் எனக்குத் தெரியாத நிலையில் ஆயிரம் அனுமந்தப்பாக்கள் (ஆனால் அது ஒன்றும் அசாத்தியமான காரியமல்ல என்று மயில்வாகனன் நிருபித்த போது என் சுணக்கம் தகவல் பற்றாக்குறையால் அல்ல, மாறாக வயதுக்குரிய மெத்தனத்தால் என்று உணர்ந்து வெட்கப்பட்டேன்) சாரதா என்கிற பெண்ணுக்கு ஏகதேசமாக சில அடையாளங்கள் - தமிழ்க்குடும்பம், பிராமணப்பெண், இன்ன தெருவில் இன்ன எண்ணுள்ள வீட்டில் குடியிருந்தவள், இப்போது இல்லாதவள் என்பது போல - இருந்ததால் சாரதாவின் திசையில் முன்னேறுவது எனக்கு எளிதாக இருந்தது. முதல் இரண்டு தினங்கள் தகவல் எதுவும் கிடைக்கவில்லை. சாரதாவின் குடும்பமும் வந்தேறிகளாக இருந்ததும் ஒரு காரணம் என்று நான் பின்பு ஊகித்தேன். இரண்டு நாட்களும் மயில்வாகனனும் நானும் சரியாகப் பேசிக் கொள்ளவில்லை. காரணம், அவன் வழக்கத்திற்கு மாறாக அறைக்குத் தாமதமாக வந்து கொண்டிருந்தான். முதல் நாள் முகத்தில் இருந்த அழுத்தம் மறைந்து விட்டதென்றாலும் அவனுடைய இயல்பான தேடல் அவனை மற்ற அன்றாடங்களிலிருந்து பிரித்திருப்பதை என்னால் உணர முடிந்தது. மூன்றாம் நாள் என் விசாரிப்புகளில் எனக்குச் சலிப்பு ஏற்படத் துவங்கின தருணத்தில் சாரதாவைப் பற்றின விவரங்கள் நம்ப முடியாத வகையில், நிலவிபரக் கோப்புகளுக்கு எண்களிட்டு பாதுகாக்கும் என் அலுவலகத்தின் - அதிகம் என்னோடு பேசத் தயங்கும் - கடைநிலை ஊழியன் ஒருவன் மூலமாக எனக்குக் கிடைத்து விட்டன. அவனும் ஒசூரின் பூர்வ குடிகளின் வழி வந்தவன் தான். (சாரதாவின் கதையை அவன் சொன்ன முறை என்னை இதை ஊகிக்க வைத்தது. கதை முடிந்ததும் நான் என் சந்தேகத்தைக் கேட்டு ஊர்ஜிதப்படுத்திக் கொண்டேன். அவர்களுக்கு எந்தத் தகவலையும் தங்கள் நிலப்பகுதியின் வழிவழி நம்பிக்கைகளை முன்னிறுத்தியே புரிந்து கொள்ளும் பழக்கமிருந்தது) நிலப் பத்திரம் பதிய வந்த ஒரு உள்ளூர்காரரிடம் நான் சாரதாவைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்ததை கவனித்துக் கொண்டிருந்த அப்பண்ணா எனும் பெயருடைய அந்த ஊழியன் அவர் கையை விரித்து விட்டுப் போன பிறகு என்னருகே வந்து தயக்கத்துடன் நான் குடியிருக்கும் அறைக்கு எதிரேயுள்ள பூட்டப்பட்ட வீட்டில் முன்பு குடியிருந்த பெண் பற்றியா நான் விசாரித்துக் கொண்டிருப்பது என்று கேட்டான். அதை ஆமோதித்த நான் அவனுக்கு அவளைத் தெரியுமா என்று திருப்பிக் கேட்டேன். அவ்வளவு நீண்ட வாக்கியத்தை நான் அவனிடம் பேசுவது அதுவே முதல் தடவையாக இருந்தது. அப்பண்ணா பிரகாசமாகி விட்டான். ஓ, நன்றாகத் தெரியும். ஒளிரும் நீலநிற விழிகளைப் பெற்றிருந்த பிராமணப் பெண். தமிழ் குடும்பம். கும்பகோணம் சொந்த ஊர். நன்றாகத் தெரியும். இரண்டு முறை அந்தப் பெண்ணோடு பேசக்கூட செய்திருக்கிறேன். ஆனால் ரொம்ப பரிதாபகரமானதாயிற்றே அவள் கதை. அவள் அப்பா ஒரு போலீஸ்காரர். லஞ்சம் வாங்கியதாலோ, அல்லது ரொம்ப நேர்மையாக இருந்து விட்டதாலோ மாற்றம் பெற்று சபிக்கப்பட்ட இந்த ஊருக்கு வந்தவர். அந்தப் பெண் சாரதா பெங்களூரில் தங்கி படித்துக் கொண்டிருந்தது பள்ளி இறுதிப் படிப்போ, கல்லூரியிலோ ஏதோ ஒன்று. வாரம் ஒரு முறை இரண்டு நாட்கள் இங்கே வந்து அம்மா அப்பாவுடன் தங்கி விட்டுப் போகும் ஒரே பெண். படு புத்திசாலி. நான் சின்ன



படிப்பகம்

www.padippakam.com

தெருச்சண்டை ஒன்றில் சம்பந்தப்பட்டு அவள் அப்பாவால் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் அருகே அந்தப் பெண்ணும் இருந்தாள். என்னை அவர் விசாரிக்கும் முறையைக் கண்டித்தாள். அது அவளுக்கு சம்பந்தம் இல்லாத விஷயம் என்று அவள் அப்பா எச்சரித்தும் கூடக் கேட்கவில்லை. காவல் நிலையத்தில் என் பொருட்டாக எனக்காகப் பேசும் பெண் மன வருத்தப்படுவானேனென்று நானும் கூட அவளை அமைதியாய் இருக்கச் சொன்னேன். நான் வெளியேறும் சமயத்தில் என் குடும்பத்தைப் பற்றி அக்கறையுடன் விசாரித்து குடிக்கக் கூடாதென்று சிறு குழந்தை போல என்னிடம் சத்தியம் செய்து தரச் சொன்னாள். வயதுக்குரிய வேகம். அனைத்தையும் உடனே மாற்றி விட தன்னால் முடியுமென்னும் அசட்டு நம்பிக்கை. நானும் அவள் திருப்திக்காகச் சத்தியம் செய்து கொடுத்துவிட்டு வந்தேன். என்னால் அதைக் காப்பாற்ற முடியவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். நானும் காப்பாற்றும் நோக்கத்துடன் சத்தியம் செய்து தரவில்லையே. ஆனால் பிறர் நன்றாக இருக்க வேண்டுமென்பதில் உண்மையாகவே விருப்பமுள்ள தங்கமான பெண் அவள் இப்படியாக வேண்டுமென்று எழுதியிருக்கும்போது அதை எப்படி மாற்ற முடியும். விதிக்கு நல்லவர் ஏது, பொல்லாதவர் ஏது சூடேஸ்வரர் சுவாமி பிரம்மோத்ஸவ காலத்தில் அவளுக்கும் கோடை விடுமுறை துவங்கியிருந்தது. திருவிழா பார்க்க பெங்களூரிலிருந்து சில தோழிகளையும் கூட்டிக் கொண்டு வந்திருந்தாள். விழா பத்து நாள் நடக்கும். ஊரே களை கட்டியிருக்கும். மலைக் கோயிலைச் சுற்றி மலை பூராவும் அக்கம்பக்கத்து கிராமத்திலிருந்து வந்த சனங்கள் ராப்பகலாக தங்கியிருப்பார்கள். அங்கேயே சமைத்துச் சாப்பிடுவார்கள். நேர்த்திக் கடன் கழிக்கப்பட்ட செப்பு ஆயுதங்களும், கண்களும், பாதங்களும் மூலையில் அம்பாரமாக குவிந்திருக்கும். பூசாரிகளுக்கு ஓய்வே இருக்காது. வெடிகளென்ன, வாண வேடிக்கைகள் என்ன, இங்கே அப்போதிருந்த ஒரேயொரு கூரைக் கொட்டகையில் தினம் ஒரு திரைப்படம் என்ன, தட்சண் யாகக் கூத்து என்ன என்று பத்து நாட்களும் ஊர் அமர்க்களப்படும். நீங்கள் அவசியம் ஒரு முறை இருந்து பார்க்க வேண்டும். போன முறை திருவிழாச் சமயத்தில் ஊருக்குப் போயிருந்தீர்கள். உங்கள் ஊரிலும் கோடைப்பருவம் உற்சவ காலம் இல்லையா. இருந்தாலும் இங்கே திருவிழா முடிந்து பத்து நாட்கள் தெருக்கூட்டுபவர்களுக்கு இடுப்பை நிமிர்த்தும் வேலையிருக்கும். ஊர் பழைய நிலைக்குத் திரும்ப வாரக்கணக்காகும். அந்தப் பெண் சாரதா இரண்டாவது தடவையாக என்னிடம் பேசியது அந்த சந்தர்ப்பத்தில் தான். தேர்பேட்டை துவக்கத்தில் தோழிகளோடு தேர் பார்க்க வந்து கொண்டிருந்தவள் பார்த்துவிட்டு திரும்பிக்கொண்டிருந்த என்னைப் பார்த்ததும் மறக்காமல் நின்று உடல் நலம் பற்றி விசாரித்தாள். நான் இப்போது குடிப்பதில்லையென்று மறுபடி பொய் சொன்னேன். அவளுக்கு ரொம்ப சந்தோஷம் கால் ரூபாய் நாணயம் ஒன்றை எடுத்து என் கையில் திணித்தாள். நானும் அவளிடம் அக்கரையுள்ளவனாக என்னைக் காட்டிக் கொள்ள வேண்டுமென்கிற எண்ணத்துடன் பலதரப்பட்ட மக்கள் புழங்கும் இம்மாதிரியான வைபவ நேரங்களில் அம்மா அப்பா துணையில்லாமல் இப்படி தனியாக வரக்கூடாதென்று அவளைக் கண்டிப்பது போல பாவனை செய்தேன். தனியாக வரும் இளம்பெண்களை கவர்ந்து அவர்களின் ரத்தத்தைக் குடிக்கும் காட்டேரிகளும் இவ்வுற்சவத்திற்கு வருவதுண்டா என்று அவள் என்னைத் திருப்பிக் கேட்டாள். எந்த நேரத்தில் அப்படிக் கேட்டாளோ, அவள் வாக்கு அப்படியே பலித்துவிட்டது. சிரிப்பும் சிங்காரிப்புமாக திருவிழா பார்க்கச் சென்ற பெண்ணை இரண்டு நாட்கள் கழித்து அரைமயக்க நிலையில் டெங்கணிக்கோட்டை ராமர் கோயில் வாசலில் உட்கார்ந்திருக்கக் கண்டதாகச் சொல்லி வீடு கொண்டு வந்து



படிப்பகம்

www.padippakam.com

சேர்த்தார்கள். உடம்பில் ஒரு கீறல் சிராய்ப்பு இல்லையாம். புடவையின் தலைப்பு நுனியில் கூட கசங்கலோ அழுக்கோ பார்க்க முடியவில்லை என்றார்கள். அந்திவேளை துர்தேவதைகளின் பொழுதாகையால் அந்தப் பெண் எதையோ கண்டு பயந்திருக்கிறாள் என்று விபூதி மந்திரித்து இட்டு விட்டுப் போனார் கோவில் பூசாரி. பித்துப் பிடித்த வேகத்தில் தன் தோழிகளிடமிருந்து அறுத்துக் கொண்டு கால் போன போக்கிலெல்லாம் இரண்டு நாட்கள் ஊனுறக்கமின்றி அலைந்து திரிந்து விட்டுக் களைத்துப் போய்க் கோவில் வாசலுக்கு வந்த போது கண்ணில் பட்டிருக்கிறாள். பூசாரி வந்து விட்டுப் போனதற்கு மறுநாள் காலையில் சரியாகிவிடும் என்று நம்பினார்கள். சரியாகவில்லை. சாரதா முதல் நாள் வீடு வந்து சேர்ந்த ஸ்திதியிலேயேதான் இருந்தாள். சாப்பிடுவதில்லை. சிரிப்பதில்லை. பேசுவதில்லை. எப்போதும் கூரை முகட்டை வெறித்தபடியே அந்தப் பளபளக்கும் விழிகளால் ஒரு பார்வை. நானும் போய்ப் பார்த்தேன். அன்று திருவிழாவின் போது மலையடிவாரத்திலிருக்கும் ஈஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான அரளி மண்டபத்தின் பக்கம் சாரதா போனதை விசாரித்து தெரிந்து வைத்திருப்பதாக அவள் அப்பா சொன்னார். வேறென்ன ருசு வேண்டும் அவளை துர்தேவதைகள் பீடித்திருக்கின்றன என்பதை தெரிந்து கொள்வதற்கு. அரளி மண்டபம் ஒரு கைவிடப்பட்ட இடம். மாயச் சித்திரங்கள் உலாவும் இடம். அந்தி வேளைகளில் என்ன கூட்டம், என்ன துணையிருந்தாலும் யாரும் அங்கே போக மாட்டார்கள். சாரதாவுக்கு இதெல்லாம் தெரியாதோ அல்லது அசட்டு தைரியமோ. பட்டணத்தில் படிக்கிற பெண்பிள்ளைக்கு தைரியக்குறைச்சல் இருக்குமா, அந்த மட்டிலும் இது மனிதப் பிறவியின் கைவரிசையல்ல என்பது குறித்து அவள் குடும்பத்தினருக்கு ஓரளவு ஆறுதல் ஏற்பட்டிருந்தது உண்மைதான். ஆனாலும் சாரதா பிறகு - சாபமோ, துர்தேவதைகளின் பிடியோ - இரண்டில் எதால் பாதிக்கப்பட்டிருந்தாலும் அதிலிருந்து மீண்டு வரவேயில்லை. அதிலும் பாருங்கள், பிற பேய் பிடித்த பெண்களைப் போல கத்தி ஆர்ப்பாட்டம் செய்வதோ தலையை விரித்துப் போட்டுக் கொண்டு கிடப்பதோ கிடையாது. பிராமணப் பெண்ணில்லையா. அவள் அம்மா பின்னிவிட்ட அழகும், உடுத்தி விட்ட நேர்த்தியும் துளியும் குலையாமல் உட்கார்த்தி வைக்கப்பட்ட இடத்தில் உட்கார்ந்திருப்பாளாம் பதுமை போல. சாரதாவின் அப்பா ஆங்கில வைத்தியம், சித்த வைத்தியம், மாந்திரீக பிரயோகம் என்று எதையும் விட்டு வைக்காமல் முயன்று பார்த்தார். பிரயோசனமில்லை. கடைசியில் இடமாற்றம் பலனளிக்கும் என்று யாரோ சொன்னதன் பேரில் கெஞ்சிக் கூத்தாடி தெற்கே எங்கேயோ மாற்றல் வாங்கிக் கொண்டு குடும்பத்தையும் அழைத்துக் கொண்டு போய்விட்டார். யாரிடமும் சொல்லிக் கொள்ளவில்லை. தெருவாசிகளுக்கே கூட அவர் போய்விட்ட விஷயம் ரொம்பச் சுற்றி வாய்வார்த்தையாகக் கேட்டுத்தான் தெரிந்தது.

அப்பண்ணா சொன்ன சாரதாவின் கதை என்னை சஞ்சலப்படுத்தத்தான் செய்தது. அன்றும்) பிரமாத வேலைகள் எதுவும் செய்ய வாய்க்காததால் சாரதா பற்றின கற்பனைகளுக்குள் நான் அலுவலக நாற்காலியில் அமர்ந்தபடியே மூழ்கி எழுவதை யாரும் தடை செய்யவில்லை. மனதளவில் மயில்வாகனனின் பொருட்டாகத் தான் சாரதா பற்றிய தகவல்களைத் தேட நான் முனைந்தேன் என்றாலும் என் அலுவலக ஊழியன் எனக்குச் சொன்ன சாரதாவின் கதையை மயில்வாகனனிடம் சொல்ல எனக்குத் தயக்கமாக இருந்தது. இம்மாதிரிக் கதைகளை அவன் எவ்விதமாக எதிர்கொள்ளுவான் என்பது நான் அறிந்த ஒன்றாகையால் அவன் என்னைக் கேலி செய்யும் நிலையில் என்னை இருத்திக் கொள்ள கூடாதென்று முடிவு செய்து பேசாதிருந்து விட்டேன். அது ஒரு சரியான முடிவு தானென்பதையும், இரண்டு நாட்கள்



படிப்பகம்

www.padippakam.com

கழித்து மயில்வாகனன் விசாரித்துத் திரட்டிக் கொண்டு வந்திருந்த சாரதா – அனுமந்தப்பா காதல் கதையைக் கேட்டபோது தெரிந்து கொண்டேன். நிகழ்வுகளையும் நிகழ்வுகளுக்கான காரணங்களையும் கொண்டு கோர்வையாக – மயில்வாகனனுக்கு சாரதாவின் தகப்பனாருடைய அன்றைய உதவியாளரால் – சொல்லப்பட்ட கதை யதார்த்தத்திற்கு அருகில் உள்ளதாக எனக்குப் பட்டது. உண்மைதான். என்றாலும் நான் கேள்விப்பட்ட கதையையும் ஏனோ என்னால் என் மனதிலிருந்து ஒதுக்க முடியவில்லை. மயில்வாகனன் சொன்ன கதைக்குள்ளிருந்து தொலைந்து போன இரண்டு நாட்கள் என் மனதை உறுத்தத்தான் செய்தன. இரண்டு கதைகளுக்கும் நடுவில் இரண்டையும் இணைக்கும் வேறோர் கதை இருக்கலாமென்றே எனக்குத் தோன்றியது. ஆனால் மேற்கொண்டு யோசிப்பதை நான் விரும்பவில்லை. சாரதாவின் கதைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கவே பிரியப்பட்டேன். மயில்வாகனனும் சாரதாவைப் பற்றியோ அனுமந்தப்பா என்பவனைப் பற்றியோ பிறகு பிரஸ்தாபிக்கவில்லை. இம்மாதிரி தேவையற்ற தேடல்களில் என் வீட்டிலிருந்து வந்த இரண்டு கடிதங்கள் பதில் பெறாமல் தேங்கிக் கிடக்கின்றன என்பதுவும் என்னை உறுத்திக் கொண்டிருந்தது. வேலை இருக்கிறதோ இல்லையோ அலுவலகத்தில் புத்தகங்கள் படிப்பது, வீட்டுக்கு கடிதம் எழுதுவது போன்ற தனிப்பட்ட வேலைகளைச் செய்து கொள்வதை நான் எப்போதும் தவிர்த்து வந்தேன். அடுத்து வரும் வார விடுமுறை தினத்தன்று ஒரு அஞ்சலட்டையிலாவது நான் உயிருடன் இருக்கும் விஷயத்தை ஊருக்குத் தெரிவித்து விட வேண்டுமென்று முடிவு செய்து காத்திருந்தேன். மயில்வாகனனைப் பொறுத்த வரையில் அவனும் மறுபடி தன் புத்தகங்களுக்குத் திரும்பி விட்டான் என்றும் நம்பினேன். பணியிலிருந்து அவன் (எப்போதும் எனக்கு முன்னதாக) வீடு திரும்பும் நேரமும் பழையபடி சீர்பட்டு விட்டிருந்தது. அவனுடைய பின்னிரவு படிப்பு என்னை வழக்கம் போல ஆச்சரியப்பட வைத்துக் கொண்டிருந்தது. அவன் நடவடிக்கைகளிலிருந்த ஒரே ஒரு மாற்றம் படிக்கும் நேரங்களில் அறையின் உள் பகுதிக்குள் பனி தாக்கா வண்ணம் தன் இருக்கையை இழுத்துப் போட்டு உட்கார்ந்து கொள்ளும் பழக்கமுள்ளவன் இப்போது அறை விளிம்பில் தெருவைப் பார்த்திருந்த சன்னலை ஒட்டி தன் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டதும் பற்றாக்குறைக்கு சன்னலை அகலத் திறந்து வைத்துக் கொண்டதும்தான். இதனால் நடந்தது என்னவென்றால் அதிகாலை மூன்று நான்கு மணியளவில் உள்ளே பனி இறங்கி அறை குளிர் சாதனப் பெட்டியின் உள்புறம் போல உறைந்து போகத் துவங்கி விட்டது. உறைபனி அறைக்குள் அசையாமல் வீற்றிருக்க நான் பிணமோ காய்கறியோ அல்லவே. என் அசௌகர்யத்தைப் பற்றி நான் மயில்வாகனனிடம் முணுமுணுத்து போது அவன் அதைப் பரிசீலிப்பதாகச் சொன்னானேயன்றி நடைமுறைப் படுத்தவில்லை. குளிர் தாங்க முடியாமல் எனக்கு விழிப்பு வரும் இரவுகளில் சுவர்ப்புறத்திலிருந்து புரண்டு படுத்து நான் மயில்வாகனனை நோக்கித் திரும்பும் போதெல்லாம் அவன் கண்கள் புத்தகத்தினுள் புதைந்து போயிருப்பதையும், அவனிருக்கும் திசையிலேயே என் படுத்த நிலையிருக்க அரவமில்லாமல் என் விழிப்பு நேரும் சந்தர்ப்பங்களில் மயில்வாகனனுடைய கண்கள் சன்னலுக்கு வெளியே தெருவெளியை உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதையும் பிறகு நான் கண்டு பிடித்தேன். அதிகாலைத் தூக்கத்தின் சுழல் வெளியில் ஒரு கனவுப் பழத்தைப் போல பழுத்துத் தொங்கிக் கொண்டிருந்த அந்தக் காட்சி விடிந்ததும் நல்ல வெளிச்சத்தில் தன் அடர்த்தியையும் மர்மத்தையும் இழந்து கொண்டிருந்த படியால் காலை வேளைகளில் நான் அதுபற்றிக் கேட்பது தன்னுடைய தனிப்பட்ட விஷயங்களுக்குள் நான் அளவுக்கதிகமாக பிரவேசிக்கிறேனென்பதான



படிப்பகம்

www.padippakam.com

எரிச்சலை மயில்வாகனனுக்குக் கொடுத்து விடக் கூடுமென்று எனக்குத் தோன்றியது. பின்னரவு படிப்பையும் உடல் நலத்தையும் இணைத்து பரஸ்பரம் நாங்களிருவரும் அதற்கு முன்பே பல தடவைகள் பேசிவிட்ட படியால் அதை முன்னிருத்தியும் நான் அவனை எதுவும் சொல்ல முடியாமலிருந்தது. ஆக தூக்கம் கெடுகிறது என்கிற ஒற்றைக் காரணம் மட்டுமே மயில்வாகனனின் பழக்கத்தை நிறுத்த என் கையிலிருந்த ஒரே ஆயுதமாக இருந்தது. அதை அவன் அலட்சியப்படுத்தி வந்தான். என் அதிகாலைத் தூக்கமோ நானே ஆச்சரியப்படும்படி எலும்புக் குருத்து உறையும் சில்லிப்புக்கிடையிலும் என் மீது தன் ஆளுமையைச் செலுத்திக் கொண்டிருந்தது. விழிப்புனூடே நான் மயில்வாகனனிடம் பேச வேண்டும் என்கிற நினைப்பு எழும் வேகத்திலேயே காலம் புலர்வை நோக்கி நகர்ந்து விட்டிருந்தது. மயில்வாகனன் என் பார்வைக்கு நேரே அமர்ந்திருக்கும் வரை அவன் என் கனவுகளின் ஒரு பகுதியாக மட்டுமே நீடித்திருப்பான் என்றும் நான் நினைத்துக் கொண்டேன். இதையொட்டி என் நினைவுக்கு வரும் ஒரு சம்பவத்தையும் சொல்ல வேண்டும். மயில்வாகனன் போக்கில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களைச் சிந்தித்தபடி நான் ஏரிக்கரை வழியே நடந்து வந்து கொண்டிருந்த ஒரு மாலையில் உடலைத் துளைக்கும் விஷப்பனிக்குக் காப்பாகக் குளிருடைகளைப் போட்டுக் கொள்ளாமலே பெரும் பகுதி தூரத்தைக் கடந்து வந்து விட்டதை உணர்ந்து நான் திடுக்கிட்டுப் போனபோது எனக்கு முன்னே ஒரு முப்பதடி தொலைவில் மயில்வாகனன் நடந்து போய்க் கொண்டிருப்பது என் கண்களில் பட்டது. முதலில் கூப்பிட வேண்டுமென்ற எத்தனிப்புடன் வாயைத் திறந்த நான் பிறகு வேண்டாமென்று வாளாவிருந்து விட்டேன். என்னுடைய யோசனைகள் தடைப்படாதிருக்கட்டும் என்று நான் விரும்பினேன். அவனுடைய மெல்லிய உடல் கருக்கலிலும் பனியிலும் மூழ்கி தெரிந்தும் மறைந்தும் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. குளிருடைகள் எதையும் அவனும் அணிந்து கொள்ளவில்லையென்பதையும் என்னால் அவதானிக்க முடிந்தது. பனியோடு அவனுடல் இழைந்த விதம் பனியின் ஒரு துகளென அவனைக் காட்டியது. முப்பதடி இடைவெளிக்கு அந்த உடல் தேவைக்கதிகமாகவே சுருங்கிய தோற்றத்தைக் கொண்டிருப்பதாக எனக்குப் பட்டது. நான் என் நடையை இன்னும் குறைத்து அந்த இடைவெளியை அதிகப்படுத்திக் கொண்டேன். என்னைப் போலவே மயில்வாகனன் எனக்குப்பின்னாலிருந்து என்னைப் பார்த்திருந்தானேயானாலும் என்னை அழைப்பதை அவனும் தவிர்த்துத் தன் நடையின் வேகத்தையும் குறைத்துக் கொண்டிருப்பானென்றும் நினைத்துக் கொண்டேன். சில நிமிடங்களுக்குப் பிறகு மயில்வாகனனின் உடல் வலது புறமாகத் திரும்பி அறைக்குச் செல்லும் வளைவில் மறைந்து போனது. நான் சற்று நின்று ஏரியைப் பார்க்கத் தாமதித்தேன். ஆனால் ஏரி கண்களுக்குத் தெரியவில்லை. வானத்தையும், பூமியையும் தொட்டு பெரிய திரைபோல பனிதான் கண்களுக்குத் தெரிந்தது. நான் அறைக்குள் நுழைந்தபோது மயில்வாகனன் உடைகளை மாற்றிக் கொண்டு வழக்கம்போல கையில் ஒரு புத்தகத்துடன் உட்கார்ந்திருந்தான். அறைவாயிலிலிருந்து நீர்ச்சொட்டுகள் நீர்ப்பானை வரை சென்றிருந்ததைப் பார்த்தேன். இப்போதுதான் வாசற்குழாயிலிருந்து தண்ணீர் பிடித்து வைத்தேன். காலையில் மறந்துவிட்டது என்று என் பார்வையைத் தொடர்ந்தவன் நான் அது பற்றி வினவியதைப் போலப் பேசினான். நான் உடைகளை மாற்றிக் கொண்டு அடுக்களைப் பக்கம் நடந்தபோது பால் ஆறியிருக்கும். இன்னொரு முறை சுட வைத்துக் கொள்ள வேண்டும் என்று அவன் குரல் கேட்டது. உள்ளே சமையலடுப்பின் பக்கத்தில் காலையில் புழங்கிய பாத்திரங்களும் அவனுடைய சாப்பாட்டுப் பாத்திரமும் கழுவி வைக்கப் பட்டிருந்தன. நான் பாலை



படிப்பகம்

www.padippakam.com

அருந்தாமல் அதை எஞ்சியிருந்த மோரிலேயே விட்டுவிட்டு சமையலறையை விட்டு வெளியே வந்து மயில்வாகனனிடமிருந்து அதிக பட்ச தொலைவை ஏற்படுத்துமென்ற நம்பிக்கையுடன் அறை மூலையிலிருந்த கட்டிலில் அமர்ந்து கொண்டேன். ஏரிக்கரைப் பாதையில் மயில்வாகனனைத் தவிர்க்க நான் எடுத்துக் கொண்ட கால இடைவெளி நிமிடக்கணக்கிலா மணிக்கணக்கிலா என்று எனக்குக் குழப்பமேற்பட்டு விட்டது. அங்கே நான் பார்த்தது அவனைத்தானா என்றும் என்னை நானே கேட்டுக் கொண்டேன். மேலும் அறையில் எங்களிருவரைத் தவிர வேறுஒரு நபரின் இருப்பையும் நான் கற்பனை செய்து கொண்டு அவதிப்பட்டேன். அன்று என் தூக்கம் சிந்தனைகளால் தடைப்பட்டுக் கொண்டிருந்தது. பற்றாக்குறைக்கு அன்று அதிகாலை விழிப்பினூடு பார்த்த போது சன்னலருகே மயில்வாகனனைக் காணவில்லை. நான் எழுந்து அடுக்களையிலும் கழிப்பறையிலும் அவனைத் தேடினேன். ஏற்கனெவே குழப்பத்திலிருந்த என் புத்தியில் அவனைக் காணவில்லையென்ற செய்தி உறைத்த கணத்தில் தீப்பெட்டி அளவேயான அந்த வீடு எல்லை காணவியலாத பெரிய கோட்டையாக மாறிப் போனது. காணமல் போகவும், தேடிக்களைக்கவும் ஏராளமான ஒளிவிடங்களும் புதிர் வழிகளும் என் முன்னே திடீரென முளைத்தன. சுவர்கள் நான் நெருங்க நெருங்க விலகிப் போய்க் கொண்டிருந்தன. அறைகள் அறைகளுக்குள் சொருகப் பட்டிருந்தன. நான் புறப்பட்ட இடத்துக்கே திரும்பத் திரும்ப வந்து சேர்ந்து கொண்டிருந்தேன். புதிய கதவுகளைத் திறக்கும் தருணங்கள் என்னை அச்சுறுத்தின. தவறான கதவுகளின் பின்னே என் தோல்வியின் மேல் பாயத் தயாராக உறுமிக் கொண்டிருந்த மிருகங்கள். ஒரு தப்படி பிசகலில் என் மேல் ஊர்ந்து என்னை உறிஞ்சக் காத்திருக்கும் விஷப்பூச்சிகள், பாம்புகள். மயில்வாகனன் என் கண்களில் தெரிந்தும் மறைந்தும் நிரந்தரப்படுத்தப்பட்ட தொலைவில் விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தான். அவனுடைய புத்தகங்கள் எனக்கும் அவனுக்குமிடையே பெரிய சுவராக உயர்ந்து நின்றன. எங்கும் கரையான் மயம். ஒரே துருப்புச் சீட்டாக தெருவெளியை நோக்கித் திறந்திருந்த ஒற்றைச் சன்னல். தெரு ஆளரவமற்றிருந்தது. வீடோ தெருவிலிருந்து புல காத தூரம் விலகியிருந்தது. எதிர்வீட்டின் பூட்டிய கதவு அனுமந்தப்பா சாரதாவுக்குச் சொன்ன செய்தியை பனியும் இருளும் அதிர்ந்து உதிரும் வண்ணம் திரும்ப முழங்கிக் கொண்டிருந்தது. நான் வாசற்கதவைத் திறக்கும் தைரியத்தை இழந்து தவித்தேன். காலம் தன் போக்கில் கொண்டு வரும் சம்பவங்களுக்குக் காத்திருப்பதைத் தவிர வேறு மார்க்கம் புலப்படவில்லை. காதகாதங்களுக்கு அலைந்து திரிந்ததைப் போல என் கால்கள் அயர்ந்து போய்விட்டிருந்தன. படுக்கை ஒன்று மட்டுமே என் பாதுகாப்பை உத்திரவாதம் செய்யும் இடமென்று நான் அதில் விழுந்தேன். இந்த பிரமை ஒரு சில நிமிடங்கள்தான் நீடித்திருந்ததாக ஞாபகம். பிறகு என்னருகே மயில்வாகனன் படுத்திருந்தான். மெல்லிய குறட்டையுடன் அயர்ந்து உறங்கிக் கொண்டுமிருந்தான். வீடு முழுக்கத் தேடியவன் எப்படிக் கையருகே பார்க்காமல் விட்டேன் என்று நான் ஆச்சரியப்பட்டேன். பயமும் சந்தேகமும் என் கண்களைக் கட்டிவிட்டதாக எனக்குத் தோன்றியது. மயில்வாகனன் இப்படித்தான் நடந்து கொள்ளப் போகிறான் என்று நானே என் மனதுக்குள் வளர்த்துக் கொண்ட கற்பிதங்களின் விளைவே இந்தக் குழப்பம் என்று என்னைச் சமாதானப் படுத்திக் கொள்வதைத் தவிர வேறு மார்க்கம் எனக்குப் புலப்படவில்லை. அன்று காலை விடிந்தபோது மயில்வாகனன் வழக்கத்திற்கு மாறாக நெடுநேரம் தூங்கிக் கொண்டிருந்தான். வேறொன்றையும் கவனித்தேன். ஒருக்களித்துப் படுத்திருந்த அவனுடைய கழுத்தின் பின்புறம் காய்ந்து உறைந்து போயிருந்த இரண்டு ரத்தப்



படிப்பகம்

www.padippakam.com

பொட்டுக்களிருந்தன. காயத்தின் வாய் கனிசமான ஆழம் கண்டிருந்த அந்த இடம் லேசாக நீலம் பாரித்திருந்ததுடன் மெலிதாக வீங்கியுமிருந்தது. நெடுநேரத்திற்குப் பிறகு எழுந்தபோது தன்னுள் காய்ச்சலை உணர்வதாகவும் அன்று வேலைக்குப் போகப் போவதில்லை எனவும் மயில்வாகனன் அறிவித்தான். நான் அந்தக் கணத்திலேயே எனக்கும் உடல்நிலை சரியில்லை என்றும் நானும் அலுவலகம் செல்லவியலாதவனாக இருப்பதாகவும் அறிவித்தேன். இந்த பதில் மயில்வாகனன் முகத்தில் சலனமெதையும் ஏற்படுத்தவில்லை. நாங்களிருவரும் குளித்துவிட்டு சந்தைக்குப் போய்வந்தோம். அன்று நான் தான் சமைத்தேன். மயில்வாகனன் கொஞ்சமாக சாப்பிட்டான். கழுத்தின் பின்புறமிருந்த காயப் பொட்டுக்களைப் பற்றி நான் கேட்ட போது தன் கையால் அங்கே தடவிப் பார்த்தவன் வலியையோ, புண்ணையோ தன்னால் உணர முடியவில்லையே என்றான். கண்ணாடியில் பார்க்கவியலாத அளவு அது மிகப் பின்னாலுமிருந்தது. அவன் அதை ஒத்துக் கொள்ள மறுக்கிறான் என்று எனக்குப் பட்டது. அசிரத்தையாகச் சற்று முயற்சி செய்த பிறகு ஏதாவது பூச்சி பொட்டு கடித்திருக்கும் என்று சொல்லி பேச்சைக் கத்தரித்து விட்டான். என்னுடைய அதீதக் கற்பனைகள் மீது எனக்குமே சந்தேகமிருந்ததால் அவன் சொல்வதை நம்ப வேண்டுமென்றே நானும் விரும்பினேன். இப்படியே பயத்தாலோ, ஒதுக்கும் மனோபாவத்தாலோ மயில்வாகனன் சொல்வதையெல்லாம் நம்ப வேண்டுமென நான் விரும்பியதால் அனுமந்தப்பா சொல்லச் சொன்ன சேதிகளை சாரதா வீட்டின் பூட்டிய கதவுகளிடம் சொல்லிக் கொண்டிருந்த சிறுமியுடன் அவன் தொடர்ந்து தொடர்பு வைத்துக் கொண்டிருந்த விஷயமும் அவன் சொல்லும் நாள் வரை எனக்குத் தெரியாமலே போய்விட்டது. அவள் மூலமாக அனுமந்தப்பா எனும் இறந்த மனிதனுடன் அளவளாவ மயில்வாகனனின் தேடல் இயல்பு அவனைத் தூண்டியிருக்கிறது. இந்த விஷயங்களை என்னிடம் சொல்லியழுத தருணத்தில் அவன் தன் பாதுகாப்பு எல்லையைத் தாண்டி வெகுதூரம் போய் விட்டிருந்தான். மீள முடியாத குற்றச் சூழலுக்குள்ளிருந்து பாவமன்னிப்பு ஒன்றே தன்னைக் கை தூக்கி விட்டு விடுமென்று நம்பும் பாவாத்மாவை ஒத்திருந்தது அப்போது அவன் மனநிலை. அனுமந்தப்பாவைப் பற்றிச் சொல்லும்படி அவன் அந்தச் சிறுமியை வற்புறுத்திய போதெல்லாம் சாரதாவைத்தவிர வேறு யாரும் அனுமந்தப்பாவை அறிய முடியாது என்று கூறி அவளும் தொடர்ந்து மறுத்து வந்திருக்கிறாள். இந்த மறுப்பு மயில்வாகனனை வேறொரு துணிச்சலான காரியத்தையும் செய்யத் தூண்டியிருக்கிறது. சாரதா திரும்பி வந்து விட்டதாக அனுமந்தப்பாவிடம் போயச் சொல்லும்படி சிறுமியை அவன் வற்புறுத்தியிருக்கிறான். அவள் அனுமந்தப்பாவிடம் போய் அதைச் சொன்னாளோ இல்லையோ தெரியாது. ஆனால் அதற்கப்புறம் ஒரு வார காலத்திற்கு மயில்வாகனன் கண்களில் தென்படவில்லை. தடயத்தை அழித்துவிட்டதாக அவன் கலவரப்படத் துவங்கிய தருணத்தில் அனுமந்தப்பா கொடுத்தனுப்பியதாக ஒரு துண்டு காகிதத்துடன் அவள் அவனை மீண்டும் சந்தித்தாள். அது சாரதாவுக்கு அனுமந்தப்பாவால் எழுதப்பட்ட காதல் கடிதம். மோகலஹரியின் உச்சத்திலும், அதன் காரணமாக மிக விரசமாகவும் எழுதப்பட்டிருந்த அந்தக் கடிதத்தை பலநாட்கள் கழித்து மயில் வாகனனின் கைப்பெட்டிக்குள்ளிருந்து மிக எதிர்பாராத விதமாக நான் கண்டெடுத்தேன். சாரதா என்கிற பெண்ணின் குறியில் கச்சிதமாகப் பொருந்தத் தானொரு தலைகீழாகத் தொங்கும் வௌவாலாகப் பிறப்பெடுத்திருப்பதாக அக்கடிதம் புலம்பியிருந்தது. எனக்கு அந்த வாசகங்கள் மிகுந்த அதிர்ச்சியையும் அருவருப்பையும் கொடுத்தன. இந்தக் கடிதத்தைகண்ட அன்று நான் மயில்வாகனனுடன் இதுபற்றிப் பேச வேண்டுமென்று நினைத்தேன். வீடு அதற்கு



படிப்பகம்

www.padippakam.com

சரிப்பட்டு வராதென்று தோன்றியதால் வெகுநாட்கள் கழித்து மயில்வாகனனைப் பார்க்க புகைவண்டி நிலையத்திற்கு சென்றேன். அங்கும் கூட அவன் கோப்புகளில் சுறுசுறுப்பாயிருந்த காரணத்தால் பேச முடியவில்லை. அவன் என்னைச் சற்று காத்திருக்கச் சொன்னான். தண்டவாளங்களையும், தூரத் தெரிந்த மலைக் கோயிலையும் வெறிக்கப் பார்த்தபடி நான் அப்படிக் காத்திருந்த தருணத்தில் அவனுடைய உதவியாளனிடமிருந்து மயில்வாகனன் சரியாக வேலைக்கு வருவதில்லையென்கிற புதிய தகவலையும் கவலையளிக்கும் விதத்தில் தெரிந்து கொண்டேன்.

புகைவண்டி நிலையத்திலிருந்து திரும்ப நாங்கள் வீடு நோக்கி நடக்கத் துவங்கிய போது நான் மிகத் தயக்கத்துடன் அவன் கைப் பெட்டியிலிருந்து நான் கண்டெடுத்த கடிதத்தைப் பற்றிச் சொல்லி சாரதா பற்றின துப்பறிதலை அவன் இன்னும் கைவிடவில்லையா எனக் கேட்டேன். அவன் உடைமையை அனுமதியின்றித் திறந்தது பற்றி அவன் கண்டனம் தெரிவிக்கும் பட்சத்தில் நான் சமாதானத்திற்காகத் தயாரித்து வைத்திருந்த பதிலை உபயோகிக்க சந்தர்ப்பம் தராமல் மயில்வாகனன் நேரடியாக என் இரண்டாவது சந்தேகத்துக்கான பதிலுக்கு வந்து விட்டான். உண்மைதான். ஆனால் என் கரிசனம் சாரதா பற்றியதல்ல. மாறாக அனுமந்தப்பா பற்றியது. சாரதா போனபிறகும் அவள் மீதான காதலும் அவள் இல்லை எனும் யதார்த்தின் மீதான தீர்மானமான மறுப்பும் அவளை தன்னிடும் மீட்டுத் தந்துவிடும் என்று நம்பும் வெறித்தனமான காதல். தர்க்கங்களின் இறுக்கப்பட்ட பாதைகளை ஆட்டங்காணச் செய்வதாக இருந்தது. கல்லின்மேல் தொடர்ந்து பொழியும் பாலும், உச்சாடனமும் கல்லுக்குள் உயிரைக் கொண்டு வந்து விடுமெனச் சொல்லும் கீழை நம்பிக்கை கதவிடம் காதலைச்: சொல்லும் அனுமந்தப்பாவுக்குச் சாரதாவை எப்படி மீட்டுத் தரப் போகிறது என்பதை நான் பார்க்க வேண்டும் என்றான் மயில்வாகனன். ஆனால் அனுமந்தப்பா என்பவன் இப்போது உயிரோடு இருக்கிறானா என்பதே சந்தேகமாக இருக்கும் போது ஒரு இரண்டுங்கெட்டான் சிறுமியை நம்பித் தேடலில் இறங்குவது வியர்த்த முயற்சி என்று நான் அவனுக்குச் சொன்னேன். அவன் பதில் பேசவில்லை. நாங்களிருவரும் ஏரிக்கரைப் பாதைக்குச் செல்லும் முனைக்கு வந்தவுடன் மயில்வாகனன் வலது புறமாகத் திரும்பி என் அலுவலகம் போகும் சாலையில் ஏறத்துவங்கினான். என் அலுவலகத்தைத் தாண்டி அதன் வலப்புறமாக நீளும் பாதையில் தொடர்ந்து சென்று தேர்ப்பேட்டையுள் நாங்கள் நுழைந்தோம். நன்றாக இருட்டி விட்டிருந்தது. தேர்ப்பேட்டைத் தெருவின் கடைசியில் விரியும் மலையடிவார வெளியில் கோவில் தெப்பக்குளத்தின் பின்னணியில் அரளி மண்டபங்கள் எழுப்பப்பட்டிருந்தன. அவற்றின் பின்னே கன்னங்கரேலென்று வானைப் பிரதிபலித்துக் கொண்டிருந்தது தடாகம். மேற்பரப்பிலிருந்து ஆயிரக்கணக்கான பாம்புகளின் படமெடுப்பைப் போல பனிப்புகை நெளிந்து மேலெழும்பிக் கொண்டிருந்தது. ஆட்களற்ற பிரதேசம் மண்டபங்களின் இருப்பை அச்சுறுத்தும் விதத்தில் முக்கியப்படுத்திக் கொண்டிருந்தது. பிரதேசத்தின் அமைதி என் வயிற்றில் புளியைக் கரைக்க நான் மண்டபத்தை உற்றுப்பார்த்துவிட்டு ஏற்கனெவே உள்ளே யாரோ நிற்கிறார்கள் போலிருந்ததை சொன்னேன். ஆனால் மயில்வாகனன் மௌனமாகவும், சற்றும் தயங்காமலும் தொடர்ந்து உள்ளே செல்லத் தலைப்பட்டு விட்டான். நான் வேறு வழியின்றி அவனைப் பின் தொடர்ந்தேன். உண்மையில் அரளி மண்டபத்தில் யாருமில்லை. அதன் விசாலமான உள்பகுதியில் ஆளுயரத்திற்கு கோரை வளர்ந்திருந்தது. இடுக்குகளிலிருந்து நிறைய செடிகள் தலையை நீட்டிக் கொண்டிருந்தன. அவை செவ்வரளிச் செடிகள் என்பதைப் பூக்களை வைத்துத் தெரிந்து கொள்ள முடிந்தது. மயில்வாகனன் என்னைப் போல மண்டபத்தைச் சுற்றிப் பார்த்துக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டிராமல் அதன் இடப்பக்க விளிம்பிலிருந்து தொலைவை மறித்து நிற்கும் பனியையும் இருட்டையும் உற்றுப்பார்த்தபடி நின்று கொண்டிருந்தான். அவன் இந்த இடத்திற்கு வருவது இது முதல் முறையல்ல என்பதை நான் ஊகித்துக் கொண்டேன். மண்டபத்திலும் மண்டபத்தைச் சுற்றியும் பார்க்கும் காட்சிகள் மயில்வாகனன் என்னுடன் பேசும் உணர்வை எனக்குத் தந்தால் அவன் என்னை அங்கே கூட்டிக் கொண்டு வந்ததன் காரணம் பற்றி நான் அவனைத் தனியாகக் கேட்க அவசியப்படவில்லை. அதன் உட்புறம் இன்னும் இருட்டாயிருந்தது தான். ஆனால் அதன் சிற்பங்கள் தங்களை மறைத்துக் கொள்ளாமல் மங்கலான சுயவெளிச்சத்தில் தம் இருப்பைப் புலப்படுத்திக் கொண்டிருந்தன. மீனாட்சியம்மையின் சிற்பம் ஒன்று, மகாபாரத போர்க் காட்சி, இரண்டு பிரம்ம ராட்சசர்கள், சில அடையாளங் காணவியலாத தெய்வ உருவங்கள் பிறகு பெயரறியாத புராணகாலப் பறவைகள் மற்றும் விலங்குகள். விதானத்தில் மிகப் பெரியதாக கோவர்த்தன மலையைச் சுண்டு விரலால் உயரப்பிடித்தபடி இந்திரனின் தந்திர மழையிலிருந்து ஆயர்களையும், கால்நடைகளையும் காத்து நிற்கும் கிருஷ்ணனின் சிற்பம் ஒன்று வடிக்கப் பட்டிருந்தது. கிட்டத்தட்ட அந்தச் சிற்பமே விதானமாக இருந்தது. அனுமந்தப்பாவும் சாரதாவும் சந்தித்துக் கொண்ட அந்த இடத்தை மயில்வாகனனின் பேதைப் பருவம் பெரிய காதல் சின்னமாக மனதுக்குள் உருவகப்படுத்திக் கொண்டிருந்ததை நினைத்து நான் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டேன். அவன் பேச்சைக் கேட்டுக் கொண்டு இந்த மாதிரி இடங்களுக்கு இந்த மாதிரி வேளைகளில் அலையவும் என்புத்தி இடங்கொடுத்ததே என்று எண்ணி வெட்கமும் அடைந்தேன். உண்மையில் அவன் நிலைக்கு நான் இரக்கப்பட விரும்பினேன். ஆனால் ஏனோ கோபம் தான் வந்தது. நாங்கள் அன்று மிகத் தாமதமாகத்தான் அறைக்குத் திரும்பினோம். வழியிலேயே சாப்பிட்டு விட்டோம். எனவே அறையில் வேலை ஏதும் இருக்கவில்லை. நான் வீட்டுக்குக் கடிதம் எழுதும் மனோநிலையில் இல்லை என்று முடிவு செய்தபடி படுக்கையில் விழுந்து விட்டேன். ஆனால் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக மயில்வாகனனிடம் ஏறிக் கொண்டிருந்த மாற்றங்கள் என் கவனத்தில் படாமல் போய் விடவில்லை. ஏற்கனவே ஒடிசலான அவன் உடல் மேலும் மோசமாக இளைக்கத் துவங்கியது. கண்களுக்குக் கீழே சுழன்ற கருவளையங்கள் கண்களை முகத்தின் வெகு ஆழத்துக்குள் தள்ளிக் கொண்டு சென்று விட்டன. உடலைப் போலவே மயில்வாகனின் பேச்சும் மெலித்து போனது. மூடியிட்ட சிறிய உணவுப் பாத்திரத்தில் அவன் கொண்டு செல்லும் மதிய உணவு உண்ணப்படாமலே திரும்பி வந்தது. இரவு உணவை எலி கொறிப்பது போலக் கொறித்தான். இத்தனைக்கும் நடுவில் அன்றாட அலுவல்களையோ வீட்டு வேலைகளையோ செய்வதில் அவனிடம் ஆச்சரியப்படும்படி சுணக்கம் ஏற்படவேயில்லை. நான் கலவரப்படுவேனென்று அந்தப் பையன் தன்னை எப்போதும் போலக் காட்டிக் கொள்ள அதிகப் பிரயத்தனப் பட்டு நடித்துக் கொண்டிருந்திருக்கிறான். அவனாகச் சொன்னாலொழிய நாம் தலையீடுவது அநாகரீகமாகப் பட்டு விடுமோ என்கிற தயக்கத்தின் விளிம்பில் நான் தத்தளித்துக் கொண்டிருந்தேன். அதே சமயத்தில் நான் பார்த்துக் கேட்டு விட்டால் கொட்டிவிடக் கூடிய ஏக்கத்துடன் தான் மயில்வாகனனும் வளைய வந்துகொண்டிருந்தானென்பதை பிறகொரு நாள் தெரிந்துக் கொண்டேன். நான் முன்பே சொன்னபடி அப்போது காலங் கடந்துவிட்டிருந்தது. அந்த நாள், நான் கேட்கவும் மயில்வாகனன் சொல்லவுமான அவசியத்தைக் களைந்து நாங்களிருவருமே திடுக்கிட்டுப் போகும் படியான உண்மையின் முன் எங்களை எங்கள் அனுமதியின்றியே கூட்டிப் போய் நிறுத்திவிட்டது. அன்று நான்



படிப்பகம்

www.padippakam.com

நெடுஞ்சாலை வழியே நடந்து அறையை அடைந்த போது வழக்கம் போல எனக்கு முன்பே மயில்வாகனன் வந்து விட்டானென்பதை வெறுமே சார்த்தப்பட்டு காற்றினால் ஒரு கீற்றாகத் திறந்திருந்த கதவு எனக்குச் சொன்னது. திறந்திருக்கும் கதவுகள் அஜாக்கிரதை உணர்வை எழுப்பி விடுகின்றன. நான் கதவைத் தட்டாமலேயே திறந்து விட்டேன். அறையின் மத்திய பகுதியில் மயில்வாகனன் இருக்கையில் அமர்ந்திருந்தான். நான் கதவைத் திறந்ததும் உள்ளே பாய்ந்த வெளிச்சம் நான் அவன் மீது கல்லெறிந்தது போல அவனைப் பதறி எழச் செய்தது. எழுந்த வேகத்தில் இடுப்பிலிருந்து நழுவி விழுந்த வேட்டியை அவன் கை பதற்றத்துடனும் அதிக விரைவுடனும் பற்ற முயன்றது. கிட்டத்தட்ட பற்றியும் விட்டது. ஆனால் அதற்குள் உச்சக்கட்டப் பிதுக்கலுக்கு ஆட்பட்டு விட்ட அவனுடைய குறி மிகவிகாரமான முறையில் வெண்ணிற திரவத்தை தரையிலும் வேட்டியிலும் அவன் தொடையிலுமாக பீய்ச்சியடித்தது. என்னையும், கட்டுப்படுத்த முடியாது விரைத்துக் கொண்டிருந்த தன் குறியையும் திகிலுடன் மாறிமாறிப் பார்த்தபடி ஒழுக்கு மட்டுப்படும் வரை செய்வதறியாது நின்று கொண்டிருந்த மயில்வாகனன் இருக்கைக்கு கீழே அவிழ்த்துப் போட்டிருந்த தன் உள்ளாடைகளைப் பொறுக்கிக் கொண்டு அறைகுறையாக இடுப்பில் தவித்துக் கொண்டிருந்த வேட்டியை இன்னொரு கையில் பற்றிக் கொண்டு நூலாய் வடிந்து கொண்டிருந்த ஸ்கலிதம் வழிநெடுக ஈரப்படுத்த சமையலறையை நோக்கி ஓடினான். நான் நான்தான் ஏதோ பெரிய தவறைச் செய்துவிட்டவன் போல உள்ளே நுழையவும் இயலாமல் வெளியே பாயவும் தோன்றாமல் நுழைவாயிலிலேயே நின்று விட்டேன். என் முன்னே ஆடிக் கொண்டிருந்த மயில்வாகனனின் ஒழுகும் ஆண்குறி முற்றிலுமாக கண்களை விட்டு அகல பல நிமிடங்கள் பிடித்தன. என்னால் நான் கண்ட காட்சியை ஜீரணிக்க இயலவில்லை. மயில்வாகனன் சமையலறையை விட்டு வெளியே வரவில்லை என்னும் ஞாபகம் என்னை மீண்டும் பிரக்ஞை உலகிற்குக் கொண்டு வந்து சேர்த்தது. கண்களைத் தவிர, உணர்வற்றுப் போயிருந்த என் பிற புலன்கள் யாவும் தங்கள் பழைய கதியையும், நிதானத்தையும் மெதுமெதுவாக திரும்பப் பெற்றன. நான் முதலில் எனக்குப் பின்னே விரியத் திறந்து கிடந்த கதவை சார்த்தி உட்புறம் தாளிட்டேன். அறையெங்கும் தூய விந்தின் கிளர்ச்சியூட்டும் இளநீர் மணமும் உப்புச் சுவையும் பரவி நிறைந்திருந்தது. அதன் வழவழப்பு அறையின் இருள் முழுவதிலும் அப்பிக் கொண்டதைப் போல என் நடையை நிதானமிழக்கச் செய்தது. என்னுள் கனன்று கொண்டிருந்த உணர்வு கோபமா, அருவருப்பா, இரக்கமா, துக்கமா என்று என்னால் சரியாக ஊகிக்க முடியவில்லை. நான் சமையலறைக்குள் சென்றுபோது பால் பாத்திரத்தின் கீழே எரிந்து கொண்டிருந்த அடுப்பினுள் மயில்வாகனன் தன் தலையை நுழைத்துக் கொண்டிருந்தான். நெருப்பின் கதகதக்கும் வெளிச்சத்தில் அவன் முகம் ததும்பிக் கொண்டிருந்தது. அவமானத்தில் அவன் உடல் கூசிப் போயிருந்தது. நான் அவன் பின்னே போய் நின்றேன். என் அருகாமை அவனுடலை இன்னும் உள்ளொடுங்கச் செய்தது. சில வினாடிகளுக்குப்பிறகு நான் அவன் தோளை மெதுவாகத் தொட்டபோது மயில்வானனின் உடல் என் பக்கமாகத் திரும்பியது. தலை என் தோளில் சரிந்தது. அவன் முழுவதுமாக உடைந்து போய்ப் பெருங்குரலெடுத்து அழத் தொடங்கினான். என் கைகள் அவனை அணைத்துக் கொண்டன. அவன் அழுகை அதிகமாகிக் கொண்டிருந்தது. சில நிமிடங்கள் அழ விட்டுவிட்டு நிமிர்த்தினேன். விந்தின் நிறமொத்த சளியும் கண்ணீரும் வியர்வையும் அவன் முகம் முழுவதையும் ஈரப்படுத்தியிருந்தன. நெருப்பில் அவன் முகம் பளபளத்தது. அவன் கேவினான். கேவல்களுக்கிடையே எனக்குப் பயமாயிருக்கிறது என்று சொன்னான்.



படிப்பகம்

www.padippakam.com

எனக்குப் பயமாயிருக்கிறது நான் சாரதாவாகிக் கொண்டிருக்கிறேன். நான் அவனை சமையலறையிலிருந்து வெளியே கூட்டி வந்து வசிப்பறை இருக்கையில் உட்கார வைத்தேன். அடுப்பை அணைத்துவிட்டு பாலை இரண்டு கோப்பைகளில் விட்டுக் கொண்டு நான் மீண்டும் வசிப்பறைக்குத் திரும்பியபோது மயில்வாகனன் தன் கைப் பெட்டியிலிருந்து ஒரு கற்றைக் காகிதங்களை வெளியே உருவிக் கொண்டிருந்தான். அறை விளக்கு போடப்பட்டிருந்தது. அவன் சுவாசம் இன்னும் விசும்பிக் கொண்டிருந்தது. நான் கொடுத்த பாலைக் குடிக்காமல் அருகில் வைத்தான். மீண்டும், எனக்குப் பயமாயிருக்கிறது என்ற பல்லவியைத் துவக்கினான். எனக்குப் பயமாயிருக்கிறது. நான் சாரதாவாக மாறிக் கொண்டிருக்கிறேன். அனுமந்தப்பாவின் அன்பு என்னை அவன் காதலியாக மாற்றிக் கொண்டிருக்கிறது. நான் சாரதா இல்லை என்பதை அவன் நம்ப மறுக்கிறான். சாரதாவைத் தவிர வேறு யாராலும் அவனை அறிய முடியாது. சாரதாவால் அனுமந்தப்பாவின் அன்பு வலையிலிருந்து தப்பிக்கவும் முடியாது. மயில்வாகனன் தன் கையிலிருந்த காகிதக் கற்றையை என் கைகளில் எறிந்தான். அனுமந்தப்பாவைப் பற்றி எச்சரிக்கப்பட்ட போது அவள் அதை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை. அன்பின் அசாதாரண வன்முறையை குறைவாக எடை போட்டு விட்டாள். அனுமந்தப்பாவை அவள் பார்த்தபோது அவன் ஒரு பிணம். வதைகளுக்கும் வசவுகளுக்கும், இரக்கப்படவும், ஒதுக்கப்படவும், மற்றும் கதைகளுக்கும் மட்டுமே உபயோகப்பட்ட பிணம். சாரதா மீண்டும் அவனுக்கு உயிர் கொடுக்க நினைத்தாள். பேய்களின் உலகில் அல்ல. மாறாக அவனை மீண்டும் சமூகத்தின் ஏதாவதொரு கண்ணியுடன் இணைத்துவிட அவள் முயன்றாள். சமூகம் என்பது அவளைப் பொறுத்தவரையில் ஒரு அரண். வாழ்வுக்கு ஒரு பாதுகாப்பு. அதன் அழகியலுக்குள் உயிர்ப்பிக்கப்பட்ட ஒரு பிணம் உயிருள்ள சக மனுஷியின் சிபாரிசிருக்குமானால் அங்கீகரிக்கப் பட்டு விடுமென்று நினைத்தாள். அன்பு அனைத்தையும் சாதிக்குமென்று திடமாக நம்பினாள். அதில் தவறொன்றும் இல்லை. அவள் அறிந்த அன்பு தூய்மையை, புனிதத்தை, மென்மையை, ரகசியத்தை, மனதை அடிப்படையாகக் கொண்டது. காதல், தாய்மை, பாசம், பற்று, பக்தி, ஆண், பெண் என்று பலவாகச் சிதறி பலவீனப்பட்டுக் கிடப்பது. அவள் இந்த அன்பை முன்னிருத்தித்தான் அனுமந்தப்பா எனும் இன்மையை மீண்டும் இருப்பாக படைக்க முயன்றாள். ஆனால் படைப்பைக் கருக்கொள்ளும் வலியை முன்னூகிக்கத் தவறி விட்டாள். பிணங்களின் அன்பு உயிருள்ள மனிதர்களின் அன்பிலிருந்து வேறுபட்ட அர்த்தமும், வலியும் கொண்டது என்பதை அவள் எதிர்பார்க்கவில்லை. அந்த அன்போ வலியாலும், நிணத்தாலும், அழுக்காலும், ரத்தத்தாலும், கண்ணீராலும், வடுக்களாலும் உருப்பெறுவது. யதார்த்தத்திலிருந்து தொலைந்து போன அனுமந்தப்பாவைப் படைக்க முனைந்த சாரதாவை அன்பின் வலி கட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறது. அனுமந்தப்பா சாரதாவை அவன் உலகிற்குள் அழைத்துச் செல்கிறான். அதன் அழகுகளை அவள் முன் விரிக்கிறான். அந்தப் பரவசம் தாங்கவொண்ணாதது. கைவிடப்பட்ட கல் மண்டபங்கள் காலத்தின் அன்பை அவளுக்குச் சொல்கின்றன. கல்லறைகளின் உள்புறம் சிலந்திகளின் மகோன்னதமான பின்னல்களை அவள் தன் வாழ்க்கையில் முதன் முதலாகப் பார்த்து வியக்கிறாள். நிலவறைகள் விகாசித்து அவளை இவ்வுலகின் குறுகிய வசிப்பறைகளிலிருந்து விடுவிக்கின்றன. கால்கள் தொய்வுறும் வரை நடக்கவும் ஓடவும் புரளவும் அனுமந்தப்பா சாரதாவை அனுமதிக்கிறான். புழுதியும் தூசியுமான பெரும் சரித்திரம் தன்னை முற்றிலும் சுற்றி வளைக்கும்வரை அவள் புரள்கிறாள். கல்லறையின் உத்திரத்தில் கால்களைப் பற்றிக்கொண்டு தலைகீழாகத்



படிப்பகம்

www.padippakam.com

தொங்குகிறாள். சில்லிடும் அறைகளினுள்ளே மூச்சையடக்கிப் பிணம் போலிருந்து பார்க்கிறாள். வெண்ணிற ரத்தம் கொண்ட விநோதப் பூச்சி வர்க்கங்கள் அவளை ஆசையோடு நக்கிப் பார்க்க அனுமதிக்கிறாள். புல்லரிப்பை ஏற்படுத்தும் அந்த ஸ்பரிசம் சாரதாவுக்கு வெளி உலகம் காட்டித் தராத ஒன்று. சுவர்களின் விரிசலில் முளைத்திருக்கும் உயிர்கள் அவளுக்கு விசிறுகின்றன. அவள் விரிசல்களை ஆசையோடு தடவுகிறாள். உயிர்களைப் பிறப்பிக்கும் பிளவுகளை முத்தமிடுகின்றாள். அவற்றில் கசியும் வலியை இப்போது அவளால் அனுமந்தப்பாவுக்கு நன்றியுடன் உணர முடிகிறது. அவள் உருவத்தை பிரதிபலிக்கும் பிரம்மாண்டமான ஆளுயரக் கண்ணாடியை சந்தோஷ வெறியுடன் தன் கைகளால் குத்தி ரத்தம் தெறிக்க அவள் உடைப்பதை அனுமந்தப்பா தடுக்கவில்லை. வலி அன்பின் வலி, அதன் குரூரம் அனுமந்தப்பா சாரதாவை பின்புறமிருந்து அணைத்துக் கொள்கிறான். அவளுடைய பின் கழுத்தில் தன் முன் பற்களைப் பதித்துச் சுவைக்கிறான். அவள் முலைகளை அவன் கரங்கள் சிறைப்படுத்துகின்றன. உடலல்லவா மனம் என்கிறான். சிதறிப்போன கண்ணாடித் தரை முழுக்கச் சிரிக்கும் ஆயிரம் சாரதா அதை ஆமோதிக்கிறாள். உலகம் முழுவதும் சாரதா. பிரபஞ்சம் முழுவதும் ஒற்றைச் சாரதா. தர்க்கங்களின் உலகிலிருந்து கதறும் மயில்வாகனனின் கூக்குரல் அவளுக்குக் கேட்கவேயில்லை. அனுமந்தப்பாவின் கையைப் பிடித்துக் கொண்டு மயில்வாகனன் வேண்டாம் வேண்டாமென்று கதறக்கதற சாரதா அலைகிறாள். மயில்வாகனனின் கையலாகத்தனம் அவளின் கழுத்தை நெறித்துக் கொல்ல முயலுகிறது. துப்புத்துலக்கும் புத்தி அவளை மீண்டும் புத்தகங்களின் செல்லரித்த பக்கங்களுக்குள் பாடம் பண்ண முன்னுகிறது. சாரதாவை மீட்கும் போர் அனுமந்தப்பாவையும் மயில்வாகனனையும் அலைக்கழிக்கிறது. பிணங்களின் வலிமை, உடல் சார்ந்த உக்கிரத்தின் முன் மயில்வாகனன் தன்னை நிருபித்துக் கொள்ள பரிதாபகரமாக தன் குறியைப் பிதுக்கிக் கொண்டு தேம்புகிறான். மயில்வாகனன் தோற்றுக் கொண்டிருக்கிறான். இதைச் சொல்லி விட்டு மயில்வாகனன் மீண்டும் என் கைகளில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு கதறி அழுதான். நான் தோற்றுக் கொண்டிருக்கிறேன். என்னால் திரும்பி வர இயலவில்லை. நான் இங்கே இருந்தாக வேண்டும். நானாக, மயில்வாகனனாக. சாரதாவின் காதல் மயில்வாகனனின் அழிவில்தான் சாத்தியப்படுமென்றால் சாரதா செத்துப் போகட்டும். சாரதாவைக் கொல்லுங்கள். சாரதாவை தயவுசெய்து கொன்று விடுங்கள். அவனைத் தேற்றி ஒரு நிலைக்குக் கொண்டு வர நான் மிகப்பிரயத்தனப்பட வேண்டியதாயிருந்தது. அவனுடல் வலிப்புக் கண்டதைப் போல வெகு நேரம் துடித்துக் கொண்டிருந்தது. கடைசியில் ஒரு வழியாக அழுகையும் புலம்பலும் வடிந்து அவன் தூங்கத் துவங்கும் போது பின்னிரவும் கடந்து போய் விட்டிருந்தது. தூக்கத்திலும் கூட அவன் விசும்பல் நிற்கவில்லை. குழந்தையைப் போலச் சுருண்டு படுத்துக் கிடந்தான். அவன் உதடுகள் தடித்தும் சிவந்தும் கன்றிப் போயிருப்பதையும் என்னால் பார்க்க முடிந்தது. முன்னங்கைகளிலும் கழுத்திலும் தென்பட்ட பற்குறிகள் உடைகளால் மறைக்கப்பட்ட பகுதிகளிலும் அவற்றின் வியாபகத்தை ஊகிக்க வைத்தன. என் கண்களில் ஒரு கணம் நீர் திரையிட்டது. தூக்கம் வரவில்லை. மயில்வாகனன் என் கைகளில் எறிந்த காகிதக் கற்றையை ஒவ்வொன்றாக எடுத்துப் படிக்கத் துவங்கினேன். கனமான வலப்புறம் சாய்ந்த எழுத்துக்கள். பச்சை நிற மசியால் எழுதப்பட்டிருந்தன. எனக்குத் தெரிந்தவர்களில் பச்சை நிற மசியால் எழுதும் பழக்கமுடையவர்கள் யாரும் கிடையாது. எனினும் அந்த நிற எழுத்துக்களை எங்கோ பார்த்த ஞாபகம் வருவதைத் தவிர்க்க இயலவில்லை. கவிதையென்று




படிப்பகம்

www.padippakam.com

ஒரு முறை மயில்வாகனன் சிலாகித்த வடிவில் அக்காகிதங்கள் முழுவதும் பிதற்றல்களும் உளறல்களும் விரவிக் கிடந்தன. அப்பட்டமான பாலியல் விவரணைகள் மனதைக் கூசிப் போகும்படி செய்தன. நிஜத்தே பார்த்திராத உடல் சேர்க்கைகள் பற்றின கற்பனை என்னைப் பெரும் அதிர்வுகளுக்குள்ளாக்கியது. எல்லாக் கற்பனைகளிலும் பீய்ச்சியடிக்கும் பெண் குருதி. மூச்சையடைக்கும் கலவி நாற்றம். நான் சகித்துக் கொள்ள முடியாமல் அந்தப் பிதற்றல்களை மீண்டும் மயில்வாகனனின் கைப்பெட்டிக்குள்ளேயே எறிந்து மூடிவிட்டு விளக்கை அணைத்துப் படுத்தேன். எப்போது தூங்கினேனோ, கண் விழித்தபோது வெய்யில் ஏறி விட்டிருந்தது. அறை முழுக்க பினாயிலின் மணம் கமழ்ந்து கொண்டிருந்தது. மயில்வாகனன் குளித்து முடித்து அலுவலகம் செல்லத் தயாராகக் கண்ணாடியின் முன் நின்று தலை சீவிக் கொண்டிருந்தான். நான் எழுந்ததும் என்னைப் பார்த்துச் சிரித்தான். இரவு அழுகையாலும் தூக்கமின்மையாலும் முகம் அதைத்திருந்தது. ஆயினும் துக்கம் பயத்தைக் கரைத்து விட்டிருந்ததென்று சொல்லும்படி பிரகாசமாயிருந்தது. அவன் சிரிப்பு நிறைந்த சிரிப்பாக இருந்ததைக் கண்டு நானும் நிம்மதியாக மூச்சு விட்டேன். ஏற்கனவே தாமதமாகி விட்டதால் தான் முன்னால் கிளம்புவதாகச் சொல்லிவிட்டு அவன் கிளம்பினான். நான் அனைத்தையும் சரி செய்து விடுவதாகவும் அவன் எதற்கும் பயப்படத் தேவையில்லையென்றும் கூறி அவனை அனுப்பி வைத்தேன். அன்று நான் அலுவலகம் செல்லவில்லை. காலை உணவை முடித்துக் கொண்டபின் நேராக காவல் நிலையத்திற்கு சென்றேன்.

காவல் அதிகாரி இளைஞராயிருந்தார். வடக்கத்திக்காரர் போலத் தோற்றம். பெயர் இளம்வழுதி என்றார். இந்தக் கதை நடக்கும் காலக்கட்டத்தில் இம்மாதிரிப் பெயர்களுக்கென்று தனிக்கவர்ச்சி இருந்தது. ஓரளவு பெயருக்குரியவரது குடும்பப் பின்புலத்தை மற்றும் அவர் சார்ந்து நிற்கும் கொள்கை அடிப்படைகளை எதிராளி ஊகித்துக் கொள்ள ஓர் அடையாளமாகவும் பயன்பட்டது. அந்த இளைஞர் நான் சொல்வதைப் பொறுமையாய்க் கேட்டது எனக்கு மிக திருப்தியளிப்பதாயிருந்தது. என்னுடன் அறையில் தங்கியிருக்கும் என் நண்பரை யாரோ தொந்தரவு செய்கிறார்கள். அவர் புத்தி பேதலித்துப் போகும் அபாயத்திலிருக்கிறார் என்று இந்த ரீதியில் என் புகாரை பதிவு செய்ய எத்தனித்தேன். ஆனால் எனது கூற்றைப் பதிவு செய்து கொள்ளும் முன் இளம் வழுதியின் சந்தேகங்கள் சிலவற்றை நான் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. முக்கியமாக மயில்வாகனன் எந்த முறையில் தொந்தரவுக்குள்ளாகிறான் என்று அவர் என்னைக் கேட்டபோது என்னால் தெளிவாக பதில் சொல்ல முடியவில்லை. எனக்கே குழப்பமாக இருக்கும் சாரதாவின் முரண்பட்ட கதைகளை துவக்கத்திலிருந்து அந்த இளைஞனுக்குப் புரியும் வண்ணம் மீண்டும் சொல்ல முடியுமா



என்கிற சந்தேகமும் என்னை அலைக்கழித்தது. நான் அன்று மாலை மயில்வாகனனுடனேயே அவரை மீண்டும் சந்திப்பதாகக் கூறி விடை பெற்றுக் கொண்டேன். ஆனால் சொன்னபடி என்னால்



படிப்பகம்

www.padippakam.com

காவல் நிலையத்துக்குப் போக முடியவில்லை. ஏனெனில் மயில்வாகனன் அன்று இரவு அறைக்கு வரவில்லை. மறுநாளும் வரவில்லை. நான் அவன் உதவியாளனிடம் விசாரித்தபோது அலுவலகத்துக்கும் அவன் வரவில்லையென்பது தெரியவந்தது. கலங்கும் மனதோடு மேலும் ஒரு நாள் காத்திருந்தபின் மூன்றாம் நாள் பிற்பகலில் மீண்டும் நான் இளம்வழுதியைச் சரணடைந்தேன். இம்முறை என் அறை நண்பரை மூன்று நாட்களாகக் காணவில்லை என்பதாக புகார் பதிவு செய்ய வேண்டியிருந்தது. மயில்வாகனனின் கைப்பெட்டிக்குள் அவனுக்கு வந்த கவிதைக் குப்பைக் கற்றையும் அவனுடன் கூடவே காணாமல் போயிருந்தது. மயில்வாகனனைத் தவிர வேறு யாருடைய ஊகத்தின் பேரிலும் அவன் தொந்தரவு செய்யப்படுவதாக நடவடிக்கை எடுக்க முடியாது. ஆனால் அவன் காணமல் போனானென்கிற புகாரின் பேரில் செயல்பட முடியும். என் அறையிலிருந்து காவலர்களால் மயில்வாகனனின் உடைகளையும், புத்தகங்களையும் தவிர வேறெதையும் உபயோகமாய் கண்டுபிடிக்க முடியவில்லை. அவன் படிக்கும் புத்தகங்களை கையிலெடுத்த இளம்வழுதி உயர்த்திய புருவங்களுடன் அவற்றின் தலைப்பைப் படித்தபடியே அடிக்கடி தயங்கி நின்று கொண்டிருந்தார். புகைவண்டி நிலையத்திலும் எங்கள் தெருவுக்குள்ளும் மைய மண்டபத்திலும் ஓரிரு தினங்கள் அலைந்து களைத்த பிறகு நான் வேண்டிக் கொண்டதன் பேரில் ஒசூர்-மத்திகிரி சாலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட அனுமந்தப்பாவின் வீட்டை அணுகிப் பார்த்து விட காவலர் தரப்பில் சம்மதம் தெரிவிக்கப்பட்டது. அந்த வீடு ஊரிலிருந்து இடரீதியாக வெகு தொலைவு தள்ளியிருக்கவில்லையென்பது உண்மை தானென்றாலும் காலரீதியாக பலப்பல காதங்களுக்கு அப்பால்தான் இருந்தது. அது ஒரு ஈரடுக்கு மாடிக் கட்டிடம். ஓட்டு முகப்பும் உயர்ந்த வீட்டுக்குரிய சகல லட்சணங்களுடனும் திகழ்ந்தது. ஆனால் கூரையில் அநேக இடங்கள் பொக்கை விழுந்திருந்தன. சுவர்களின் மேல் விளிம்புகளும் கூரையும் சந்திக்குமிடங்கள் இடிந்தும் சுவர்கள் விரிசல் கண்டும் விகாரப்பட்டிருந்தன. வீட்டைச் சுற்றிலும் செவ்வரளிச் செடிகள் காடாய் மண்டிக் கிடந்தன. தொழுவக் கட்டுகள் குலைந்து போய் விட்டிருந்தன. வீட்டின் வாயிற்கதவு பூட்டப் பட்டிருந்ததைப் பார்த்து விட்டு இளம்வழுதியும் உதவியாளர்களும் பரஸ்பரம் சிரித்துக் கொண்டனர். எனினும் பூட்டை உடைத்துவிட்டு நாங்கள் வாயிற்பக்கமிருந்து தான் வீட்டினுள் நுழைந்தோம். நுழைந்ததும் எங்களைத் தாக்கியது வெளியிலிருந்து பார்த்தபோது தன்னைச் சற்றும் மிகைப்படுத்திக் காட்டிக் கொள்ளாத அந்த வீட்டின் உட்புறம் எங்கள் முன் விரித்த அதன் ஆழமும் விரிவும் அவ்வளவு பெரிய வீடாக அதை நான் எதிர்பார்க்கவில்லை. எதிரெதிர் சுவர்கள் நம்பமுடியாத அளவுக்கு ஒன்றை ஒன்று விலக்கியிருந்தன. முகப்பிலிருந்தும் சுவர் விரிசல்களிலிருந்தும் பீறியடித்த வெளிச்சம் வீட்டின் பரப்பளவுக்கு ஈடு கொடுக்க முடியாமல் விழுந்த இடத்திலேயே உறைந்து போய்க் கிடந்தது. எனவே வீடு முழுவதும் இருள் கோலோச்சிக் கொண்டிருந்தது. ஏராளமான மர இருக்கைகளும் மேசைகளும் வரவேற்பறை முழுவதும் சிதறிக் கிடந்தன. ஆனால் அனைத்துமே உதிர்ந்தும் தூசியடைந்தும் மேல் துணி விரிப்புகள் உபயோகிக்க முடியாத அளவுக்கு கிழிந்தும் சிதைந்து போயிருந்தன. சுவர்களில் மிரட்டும் மீசைகளுடன் இறந்தவர்களின் படங்கள் பெரிய அளவில் சட்டமிடப்பட்டுத் தொங்கிக் கொண்டிருந்தன. நாங்கள் நுழைந்ததும் தலைக்கு மேலே படபடத்தபடி நூற்றுக்கணக்கான வெளவ்வால்கள் வெளிக்கிளம்பிக் பறக்கத் துவங்கின. வீட்டின் பிற அறைகளுக்குள் நுழைந்து பதுங்கிக் கொண்டிருந்த நாய்களின் குரைப்பு எங்களைச் சற்று நிதானமிழக்கச் செய்து விட்டது. அவற்றை நாங்களோ எங்களை அவைகளோ அறைகளின் கதவுகள்



படிப்பகம்

www.padippakam.com

தாழிடப்பட்டிருந்ததால் பார்க்க முடியவில்லை. அறைகளின் உள்புறம் விரிசல் விட்ட சுவர்களின் வழியே வெளியிலிருந்து அவை உள்ளே புகுந்திருக்க வேண்டும். ஆனால் எங்கள் காலடியோசைகளுக்கு எதிராக, மூடியிருந்த கதவுகளுக்குப் பின்புறமிருந்து அந்தச் சூழலில் தங்களுக்குள்ள முக்கியத்துவத்தையும் உரிமையையும் அவைத் தொடர்ந்து முழங்கிக் கொண்டிருந்தன. வௌவ்வால்களின் தாக்குதலாலும், நாய்களின் திடீர்க் குரைப்பாலும் சமனிலை குலைந்து போய் விட்ட இளம்வழுதி அதன் பிரதிபலிப்பாக தன்னருகே நின்ற காவலர்களைப் பிரிந்து சென்று தேடும்படி உறுமினார். நாங்களிருவரும் தரை முழுக்கச் சிதறிக் கிடந்த குப்பைக் கூளங்கள், புழுதி, காய்ந்த நரகல்கள் கரப்பான் பூச்சிகளுக்கு நடுவே வெகுநேரம் நடந்து அறையின் மறுகோடியில் மேல் தளத்தை நோக்கி உயர்ந்திருந்த படிகளை அடைந்து மேலேறினோம். புழுதியின் மூச்சடைக்கும் அடர்த்தியும் துர்கந்தமும் வேர்வை கொப்பளிக்கும் புழுக்கத்தை எங்கள் மேல் வாரியிறைத்தன. வெளிச்சத்தைப் போலவே வீட்டுக்குள் பனியும் பலவீனப் பட்டுப் போயிருந்தது. புழுதியில் நிறைய காலடித்தடங்கள் பதிந்திருப்பதை இளம்வழுதி எனக்குச் சுட்டிக் காட்டினார். மாடியில் கீழே இருந்த அறைகளுக்குக் கூரையாக ஒரு நீண்ட வராந்தாவையும் பக்கவாட்டில் கீழே இருந்த அறைகளுக்குச் சமமாக மேலும் அறைகளையும் காண முடிந்தது. தட்டுமுட்டுச் சாமான்கள் ஒரு அறையில் சிதறிக் கிடந்தன. அவை பெரும்பாலும் உழவுக் கருவிகளாகவேயிருந்தன. இரண்டு மூன்று வகை கலப்பைகள், நுகத்தடி, உரமருந்துப்புட்டிகள், சாக்குப்பை இப்படி. மற்றொரு அறை இரண்டு மூன்று பொடியாகிப் போன நாற்காலிகளுடன் அங்கும் மரத்தூசியும் கரையான் நடமாட்டமும் நீங்கலாக வெறுமையாய்க் கிடந்தது. எஞ்சியிருந்த இரண்டு அறைகளில் ஒன்று வாசிப்பறை. உள்ளே அலமாரிகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த - மக்குதலின் வேதனையும் உதிர்தலின் அவமானமும் தாளாமல் முனகிக் கொண்டிருந்த - புத்தகங்களின் எண்ணிக்கை என்னை மூச்சடைத்துப் போகச் செய்தது. மார்க்ஸின் அத்தனைப் படைப்புகளும் வெளியே பார்த்ததும் தெரியும்படி அடர்த்தியான வண்ணக் கலிகோ துணியில் தைக்கப்பட்டு அடுக்கப்பட்டிருந்தன. உலக நாடுகளின் வரலாறுகளும் கண்டுபிடிப்புகளின் சரித்திரமும் பல புத்தகங்களாக நிரம்பி வழிந்தன. தொழிலாளர் நலச் சட்டங்கள் அடங்கிய தொகுதிகள் இன்னோர் அலமாரியை நிரப்பிக் கொண்டிருந்தன. இதிகாசங்களில் கூறப்படும் உபகதைகளின் தொகுதிகள் பலவற்றைப் பார்க்க முடிந்தது. ஆனால் இரண்டு இதிகாசங்களுமே முழுவதுமாக எங்கேயும் என் கண்களுக்குக் காணக் கிடைக்கவில்லை. ஆங்கிலம் மற்றும் கன்னட மொழி நூல்கள் தமிழ் நூல்களை விட அதிகமான அளவில் வாங்கிச் சேர்க்கப்பட்டிருந்ததாக எனக்குத் தோன்றியது. ஆங்கில நூல்கள் பெரும்பாலும் இலக்கியம், குறிப்பாக கவிதை சம்பந்தப்பட்டவையாக இருந்ததாகவும் தோன்றியது. ஆண்டாள் பாசுரங்களை பல பிரசுரங்களின் வெளியீடுகளில் பார்க்க முடிந்தது. அறை நடுவே இடப்பட்டிருந்த மேசை மேல் ஆங்கில கவிதைத் தொகுதியொன்று படிக்கப்பட்ட பக்கம் அடையாளமாகக் கவிழ்ந்த நிலையில் குப்புறக் கிடந்தது. அதனுள் தன் ஒற்றை விரலைச் செலுத்திக் கையிலெடுத்த இளம்வழுதி அந்தப் பக்கத்தில் தன் கண்களை ஓடவிட்டபின் சிரித்ததைப் பார்த்துவிட்ட நான் அவரருகில் வந்தபோது அவர் ஒரு சில வரிகளை உரக்க வாசித்தார். கோடைக்காக ஏற்கனவே பொறுமையிழந்த நான் அதன் மலர்ச்சிக்காக அழுகிறேன். அவை நிறமிழக்க நேருமென்று தெரிந்தும். இவ்வரிகளை வாசித்த இளம்வழுதி நான் கேளாமலேயே அவற்றை எழுதிய கவிஞனை எனக்கு அறிமுகப்படுத்தினார். இவன் பெயர்



படிப்பகம்

www.padippakam.com

ரிகார்டோ ரெயிஸ். முப்பது வருடங்களுக்கு முன் வாழ்ந்த போர்ச்சுக்கீசிய கவிஞன். புரட்சிகளுக்குப் பயந்து பிரேசிலுக்கும் போர்ச்சுக்கீசிலிருந்த தன் சொந்த ஊருக்குமாக மாறி மாறி அலைந்து கொண்டிருந்த கோழை. பக்கவாதம் பீடித்த பெண்ணின் காதலைப் பெறக்கூட அருகதையற்றவனாக வாழ்ந்து மறைந்த பைத்தியக்காரன். பிறகு சற்றுப்பொருள் பொதிந்த மௌனத்தைச் சிதறி விட்டு ஆவிகளுடன் பேசுபவனாகவும் அறியப்பட்டவன் என்றார் கேலியில் குரல் குளற. உடனே தான் நிற்கும் சூழல் நினைவுக்கு வந்தவராக, கைவிடப்பட்ட வீடில்லை இது, ஆட்கள் புழங்குகிறார்கள் என்றார். சுத்தமும், அழகுணர்ச்சியும், சூழல் பிரக்ஞையும் அற்ற அபாயகரமான ஆட்கள். மற்றொரு அறையை நாங்கள் திறந்ததும் அறையின் மத்தியில் போடப்பட்டிருந்த பெரிய மிகப்பழைய இரட்டைக் கட்டில் என் கண்களைத் தாக்கியது. அதன் கீழே தரையில் சிதறிக் கிடந்த உள்ளுடை மற்றும் மேலுடைத் தொகுதியைப் பார்த்ததும் அது மயில்வாகனனுடையது என்பது உடனே எனக்கு அடையாளம் தெரிந்து விட்டது. கடைசியாக அவன் என்னிடம் விடை பெற்றுக் கொண்டபோது அணிந்திருந்த உடை அது. என் மனம் துணுக்குற்றது. தரையிலேயே கட்டிலுக்குச் சற்றுத் தொலைவில் மயில்வாகனனின் காலணிகளும் சிதறிக் கிடந்தன. கட்டிலின் மேல் இற்று நைந்து பஞ்சு துருத்திக் கொண்டிருந்த படுக்கையில் மேலும் ஒரு உள்ளுடை மற்றும் மேலுடைத் தொகுதிகள் கிடந்தன. அவையும் ஆணுக்கானவை. இளம்வழுதி கட்டிலின் தலைப்பகுதிச் சுவரில் தொங்கவிடப்பட்டிருந்த சிற்றின்பக் காட்சியைச் சித்தரிக்கும் ராஜஸ்தானிய படமொன்றை பார்த்தபடி தயங்கிய போது நான் படுக்கையறையுடன் இணைக்கப் பட்டிருந்த கழிப்பறைக்குள் ஓடினேன். அங்கே நான் மயில்வாகனன் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டிருக்க வேண்டும். அறையில் நின்று கொண்டிருந்த இளம்வழுதி ஆள் இருக்கிறானா என்று கேட்டபடி என்னை விரைந்து நெருங்கி வந்தார். ஆனால் கழிப்பறையில் யாருமில்லை. படுக்கையறையைச் சுற்றிலும் அதன் வெளிப்புறம் பார்த்த உப்பரிகைக்கும், பக்கத்து அறைக்கும் மற்றும் உடைமாற்றும் உள்ளுக்கும் போக என்று நான்கு சுவர்களும் கதவுகளாலேயே கட்டப்பட்டிருந்தன. எந்தக் கதவின் பின்னாலும் யாருமில்லை. கட்டிலின் கால் பகுதிக்கு எதிரே சுவற்றில் கட்டிலையும் எதிர்ச் சுவற்று ஓவியத்தையும் பிரதிபலிக்கும்படி பதிக்கப் பட்டிருந்த ஆளுயர நிலைக்கண்ணாடி (அதன் பின்னே ரகசிய அறை மறைந்திருக்கிறதா என்று இளம்வழுதி அசட்டுத்தனமாக அதன் விளிம்புகளைச் சுரண்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்). அதன் மத்திய பாகம் வலுவான ஆயுதத்தால் தாக்கப்பட்டதைப்போல வெடித்துப் பள்ளங்கண்டிருந்தது. குழந்தைகள் வரைந்த சூரியனைப் போல விரிசல்கள் அந்த வெடிப்பிலிருந்து கிளம்பி கண்ணாடியின் விளிம்பு வரை நீண்டிருந்தன. ஒரு விரிசல் கூட பாதியில் நின்று விடாதபடி அத்தனை பலமான வெறித்தனமான - கோபமோ சந்தோஷமோ அந்த உணர்வின் உச்சக் கட்ட போதையில் செலுத்தப்பட்ட - தாக்குதல். பெயர்ந்து தெறித்த கண்ணாடிச் சில்லுகள் அறையெங்கும் பீறிட்டுக் கிடந்தன. மிகுதிச் சில்லுகள் பாளம் பாளமாக ஒட்டிக்கொண்டு கண்ணாடியை விகாரப் படுத்திக் கொண்டிருந்தன. மேற்கொண்டு பார்ப்பதற்கு அறையில் எதுவுமில்லை. இளம்வழுதி எதையும் தொடவில்லை. நாங்கள் வெளியே வந்து கதவைச் சாத்தும்போது ரகசியமான நம்பிக்கையுடன் நான் மீண்டும் ஒரு தடவை கட்டிலை நோக்கினேன். ஆனால் கட்டில் மேல் மயில்வாகனனைப் பார்க்க முடியவில்லை. வீட்டின் பிற பகுதிகளை நோக்கிச் சென்றிருந்த உதவியாளர்களும் வெறுங்கையோடுதான் திரும்பி வந்தனர். சூதாடிகளுக்கும் குடிகாரர்களுக்கும் ஸ்திரிலோலர்களுக்கும் சொர்க்கமாக அந்த வீடு உபயோகப்பட்டுக் கொண்டிருப்பதைச்



படிப்பகம்

www.padippakam.com

சொல்லும் பொருட்களை அவர்கள் இளம்வழுதியின் முன் இறைத்தார்கள். இளம்வழுதி அவர்களில் ஒருவனைத் தேர்ந்தெடுத்து அங்கேயே இருக்கும்படி சொன்னார் போலிருக்கிறது. பிற உதவியாளர்களிடமும் ஏதோ உத்திரவிட்டுக் கொண்டிருந்தார். என்னிடம் கூட என்னவோ கேட்டது போல இருந்தது. என் காதில் எதுவும் விழவில்லை. நான் யாரையும் எதிர்பார்க்காமல் கட்டிடத்தின் வாயிற்புறத்தைப் பார்க்க நகர்ந்து வந்து விட்டேன். நாங்கள் காவல் நிலையத்திற்குத் திரும்பிய பிறகு என்னிடம் மேலும் கேள்விகள் கேட்கப்பட்டன. நான் முன்பு குறிப்பிட்டிருந்த சிறுமியைப் பற்றியும் கேட்கப்பட்டதாகவும் நான் இளம்வழுதியின் முகத்தின் அவநம்பிக்கையும் எரிச்சலும் தோன்றும் படிக்கு எதவும் தெரியாதென்று சொன்னதாகவும் ஞாபகமிருக்கிறது. அன்று நான் ஏரிக்கரை வழியே நடந்து என் அறைக்குத் திரும்பிய போது இரவு நெடுநேரமாகி விட்டிருந்தது என்பதோடு இந்தக் கதை இதன் முடிவுக்கு வருகிறது. இதற்குப் பின் நடந்த நோய்க்கூறு பீடித்த விசாரணைகள் சோதனைகள் சந்தேகங்கள் அலைச்சல்கள் பற்றின விவரணைகள் வாசகனுக்கு அனாவசியம். ஏனெனில் அவற்றில் ஒன்று கூட மயில்வாகனனையோ அவன் இருக்குமிடம் பற்றின குறைந்த பட்ச தகவலையோ திரும்பக் கொண்டு வரவில்லை. ஆனால் நான் மயில்வாகனன் இல்லாத வெறுமையிலிருந்தும் காவல்துறை தொந்தரவிலிருந்தும் மீண்டு வர பல நாட்கள் பிடித்தன. நடுவே வாரக்கணக்காக ஊருக்குக் கடிதம் போடாமலிருந்தது நினைவுக்கு வந்து செய்தியே இல்லாமல் அட்டை ஒன்றை மசியால் நிரப்பி அஞ்சல் செய்து வைத்தேன். மயில்வாகனனின் உடைகள் புத்தகங்கள் சான்றிதழ்களுக்காக அவன் என்றாவது ஒருநாள் திரும்பி வரக்கூடுமென்று எனக்கு நம்பிக்கையிருக்கிறது. இளம்வழுதியால் கலைத்துப் போடப்பட்ட அவன் உடமைகள் எதையும் நான் அறையைச் சுத்தம் செய்த போது கூடத் தொட்டு விடவில்லை. அவனுடைய புத்தகங்களின் மேல் தூசியும், பனிஈரப்பதமும், புழுதியும் படிந்து அவை பூச்சிகளின் வாசஸ்தலமாகிக் கொண்டிருக்கின்றன. முன்னர் பார்த்திராத விநோதமான ஜந்துக்கள் அறைக்குள் மெதுமெதுவாகத் தென்படத் துவங்குவதையும் என்னால் காண முடிகிறது. புத்தக வரிசைகளின் அடர்த்தி ஒரு முழுப்பாம்பை உள்ளே பதுக்கிக் கொள்ள சாத்தியமுடையதாய்த் தானிருக்கிறது. ஆனால் நான் அவற்றைப் பற்றிக் கவலைப்படவில்லை. பல மாதங்கள் கடந்த பின்னும் மயில்வாகனனின் செல்லரிக்கும் உடமைகளை வெளியே வீச மனம் வரவில்லை. அவை மயில்வாகனனை நினைவுபடுத்தும் குறியீட்டுத் தன்மையிலிருந்து கொஞ்சங்கொஞ்சமாக விலகி தங்கள் ஜடத்தன்மைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றன. அறைச் சுவர்களின் ஒரு பகுதியாகி விட்டன. இனி அவற்றை அப்புறப்படுத்துவது என்பது வீட்டை இடிப்பது போலத்தான். நாளை எனக்கு மாற்றல் வந்து இந்த ஊரைவிட்டுப் போகும்போதும் மயில்வாகனனின் உடமைகளை என் முதுகைப்போலச் சுமந்து கொண்டே அலைவேனென்றுதான் தோன்றுகிறது. மயில்வாகனன் தன் இருப்பை நான் பிரித்து உணர்ந்து கொள்ள முடியாதபடி என்னில் ஒரு பகுதியாகிவிட்டான். நடுவே இரண்டு தடவைகள் தனியாக அவனை மீண்டும் ஞாபகப்படுத்திய சம்பவங்கள் நடந்தன. ஒன்று : சாரதா வீட்டையும் சோதனையிட இளம்வழுதி வந்தபோது, நான் விரும்பினால் அப்போது தன்னுடன் கூட இருக்கலாம் என்று அவர் தன் உதவியாளர் ஒருவரிடம் சொல்லியனுப்பியிருந்தார். நான் போகவில்லை. அவர்களாலும் அங்கே தூசியையும், புழுதியையும், பூச்சிகளையும் தவிர வேறெதையும் கண்டு பிடிக்க முடியவில்லை என்று பின்னர் கேள்விப்பட்டேன். இரண்டு : மயில்வாகனனின் புத்தகம் ஒன்றில் பதுங்கிக் கொண்டிருந்த - பச்சை நிற மசியால்



படிப்பகம்

www.padippakam.com

எழுதப்பட்ட - விடுபட்டுப்போன கடிதம் ஒன்றைத் தற்செயலாகக் கண்டெடுத்தது. அந்தக் கடிதமும் அவன் என் முன்னே விட்டெறிந்த கடிதக் கற்றைகளிலிருந்து உள்ளடக்க ரீதியாக வேறுபடவில்லை. சாரதாவின் உடல் வனப்பு பற்றிய வழக்கமான விரசத்துடன் கூடிய முழு நீள வர்ணனையைக் கொண்டிருந்த அந்தக் கடிதத்தை பார்த்ததும் முதலில் எனக்கேற்பட்ட பரபரப்பை வார்த்தைகளில் சொல்லி உணர வைக்க முடியாது. இளம் வழுதி என்னைக் கேட்ட கேள்விகளில் ஒன்றுக்காவது பதில்கண்டு விடும் வெறியுடன் அன்று நான் அறை முழுவதையும் தலைகீழாகப் புரட்டிப் போட்டேன். மயில்வாகனன் தன் கைப்பட எழுதிய ஒரு துண்டுக் காகிதம் கூட நான் காணக் கிடைக்கவில்லை. அன்று இரவு படுக்கப்போகும் போது விடிந்ததும் அந்த கடிதத்தை இளம்வழுதியிடம் சேர்க்க வேண்டும் அல்லது முடிந்தால் புகைவண்டி நிலையத்திற்கு நானே செல்வது என்று முடிவு செய்து கொண்டேன். ஆனால் மறுநாள் பொழுது புலர்ந்தபோது அந்த முடிவு ஏனோ அபத்தமானதாகவும் பொக்கையாகவும் தோன்றி விட்டது. எதை நிரூபிக்க இத்தனை பரபரக்கிறோம் என்று தோன்ற அந்தக் கடிதத்தைக் கிழித்து நெருப்பில் போட்டேன்.●



ஆயிரம் சாரதா


பா.வெங்கடேசன்



படிப்பகம்

www.padippakam.com

# சிதிலங்களுடனான வாழ்வு




சிதிலங்களின்
கருவறையிலிருந்து
ஜனிக்கிறதுன் முழுமை

எனது தகவமைக்கப்பட்ட
ஒழுங்குகளை
கலைத்தெறிவதில்
தொடங்குகிறது அதன் பயணம்

காற்றலைகளில் சீராய் பரவும்
எனது பாடலினிடையே
ஸ்ருதி பேதத்தை சேர்க்க வல்லது
அதன் ஊழிக்காற்று

எனது விதிகளை மீறுவதில்
விருப்பமுற்றிருக்கும் அதன்
கால்களுக்கான சங்கிலியை
வார்த்தெடுக்கும்
வல்லமையறியவில்லை
எனது உலைக்களன்.

மானசீகமாகவேனும்
மழையில் நனையும்
எனது ஆவலை
மறுதலித்தபடியுள்ளது
எப்போதும் வீசிக் கொண்டிருக்கும்
ஊமை வெய்யில்.

சிதிலங்களுடனான
எனதிந்த வாழ்வு
சிதையிலேற்ற
சித்திக்கும் ஓர் தருணத்தில்
இன்றைய புறாக்களுக்கான
இருப்பிடங்களை
நூற்றாண்டுகளுக்கு முன்பே
கோபுர உச்சிகளில்
வடிவமைத்தவனின்
கைகளுக்குண்டான நேர்த்தி
எனது விரல்களுக்கும்
வாய்க்கக்கூடும்.

கே. ஸ்டாலின்



படிப்பகம்

www.padippakam.com

1

**ராணிதிலக்** எழுதிய

# வாசகன் சொன்ன கட்டுக்கதைகள்

● எல்லோர் முன்பாகவும் தாம் தண்டிக்கப்பட்டது வெட்கக்கேடான விஷயமாகக் கருதினார் லூயி. அந்தபுரத்தில், தான் விரும்பிய பெண்ணை அவர் கடத்திக்கொண்டு போக எத்தனித்தபோது, கையும் களவுமாகப் பிடிபட்டார். இன்னும் கன்னி கழியாமல், தூசு தும்புடன் அழுக்கேறிய அவள், அவரிடமிருந்து பிரிக்கப்பட்டு, அந்தப்புரத்தில் எல்லாப் பெண்களுடன் மீண்டும் சேர்க்கப்பட்டாள். அங்கிருந்த காவலாளிகள், அவரை மண்டியிடச் செய்தனர். மண்டி போட்ட லூயி, தலையை வெகுவாகச் சாய்த்துக் கொண்டார். அவர்கள் அவரை அதிகாரி முன்பாக நிறுத்தினர். எப்போதும் அந்தபுரத்திற்கு வரலாம் என்றும், எவளையும் தவணை முறையிலேயே கொண்டு போக முடியும் என்றும், அதை மீறினால் தண்டனை தரப்படும் என்றும், இந்தத் தடவை மட்டும் மன்னித்து விடுவதாகவும் அந்த அதிகாரியான நூலகர் அவரிடம் கூறினார். தான் நிரபராதி என்ற மனோதைரியத்திலேயே, லூயி அவ்வப்போது நூலகத்திற்கு வந்து போய்க்கொண்டிருந்தார். அவருடைய தீராத கோபமும், தாகமும் எல்லா அலமாரிகளிலும் தீர்ந்துகொண்டு இருந்தது.

இது நடந்து பல வருடங்களுக்குப்பின், நூலகரின் மேஜைமேல், புகார்கள் கத்தை கத்தையாகக் குவியத் தொடங்கின. எல்லாவற்றையும் வாசித்த நூலகர் திகிலடைந்து போனார்.

எந்த புத்தகத்தையும் – அது மிக எளிதான பாஷையில் எழுதப்பட்டு இருப்பதைப் படிக்க முடியவில்லை என்றும், எந்தக் காட்சியும் மங்கலாகக் கனவு போன்று தோன்றுகிறது என்றும், யோசிப்பதற்குள் அர்த்தமானது மின்னலாக மறைந்தவிடுகிறது என்றும், வெவ்வேறான காட்சியும், அர்த்தமுமே நிலவுகிறது என்றும் புகார்கள் எழுதியிருப்பதைக் கண்டு அதிசயித்தார். அவை யாவும் நிஜந்தானா என்பதை அறிய, அவரும் கையில் சிக்கிய புத்தகத்தை எடுத்துப் புரட்டினார். அவர்களுக்கு நிகழ்ந்ததே தனக்கும் நிகழ்ந்ததை அறிந்து அதிர்ந்தார். தானொரு மரமண்டை ஆகிவிடுவதை ஏற்றுக் கொள்ள விரும்பாத அவர், புத்தகத்தை திறந்து, 'நீ' என்ற வார்த்தையை வாசிக்கத் தொடங்கினார். 'நீ' என்ற பதத்தைப் படிக்கும்போது கிட்டும் அனலும், நளினமும், வர்ணமும் கிட்டாததையும், அருவி வழிவதையும், அதுவும் மறைந்து, தெரியாத பாஷையின் எழுத்தைப் போய், 'நீ' என்ற எழுத்து முட்டி நின்று கொண்டிருப்பதையும் கண்டு விக்கித்தார். திடீரென, எல்லா புத்தகங்களையும் அவர் புரட்ட, அதே கதி யாவற்றிற்கும் நிகழ்ந்ததை நினைத்து வியப்படைந்தார். புலி என்று படிக்கும்போது, இருளின் கருப்பையையும், பகலின் மஞ்சளையும் போர்த்திக் கொண்ட விலங்குக்குப் பதிலாக, எலும்புக்கூடொன்றே ஓடுவதாகவும், அதன் கர்ஜனை கழுதை போன்று இருந்ததாகவும், அதுவும் காணாமல் போய் இரண்டு எழுத்துக்கள், எந்த பொருளையும் தராமல் அருகருகே சும்மா உட்கார்ந்துகொண்டு பெண்ட் செய்யப்பட்ட வெற்றுத்தாள்களாக உருமாறியதை அறிந்தார். இச்செய்தி சிலமணி நேரங்களில் நகரம்



படிப்பகம்

www.padippakam.com

முழுக்கப் பரவிவிட்டது. தத்தம் வீட்டில் உள்ள நூலகப் புத்தகங்களை வாசித்தவர்கள், ஒன்றும் புரியாமல் இருப்பதை நினைத்து, நூலகத்தின் முன் புகார்களுடன் நின்றனர். நகர மேயரை ஆலோசித்து, இதற்கான சிக்கலைத் தீர்ப்பதாக, நூலகர் அவர்களுக்குச் சமாதானம் செய்து அனுப்பினார். தகவல் தெரிந்த மேயரும் நூலகத்திற்கு வந்து சேர்ந்தார். எல்லா புத்தகங்களையும் புரட்டினார். புகார்கள் அனைத்தும் உண்மை என்பதைத் தன் வாசிப்பில் அறிந்தார். பிறகு, நூல்களுடன் தன்னந் தனியாகப் பேசினார்.

சில நாட்களில் நகரம் எங்கும் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இப்பிரச்சினையை தீர்ப்பவருக்குக் கேட்பது கொடுக்கப்படும் என்று எழுதப்பட்டு இருந்தது.

அறிவிப்பு செய்யப்பட்டு இரண்டு வாரம் கழிந்தும் யாரும் வராதது நூலகருக்கு கசப்பை ஏற்படுத்தியது. அவர் மிகவும் கோபமடைந்த பொழுதில், அவருக்கு எதிராக அந்த மனிதன் எதிரே நின்றான். தனக்கு முன்பாக நின்றிருப்பவர் லூயி என்பதை அறிந்தவர், சற்றும் எதிர்பாராதத் தன்மையை அடைந்தார். என்னவேண்டும் என்று கேட்டார் இச்சிக்கலைத் தீர்க்கத் தான் வந்து இருப்பதாகவும் ஒரு ராத்திரி இந்த நூலகத்தில் தான் மட்டுமே தனியாகக் கழிக்கவேண்டும் என்றும், பிரச்சினை தீர்ந்தால், தான் விரும்பும் புத்தகத்தைத் தனக்குத் தரவேண்டும் என்றும் லூயி கூறியதை நம்பமுடியாமல் கேட்டுக் கொண்டு இருந்தார் நூலகர். மேயரை ஆலோசித்த பிறகே, இதற்கான முடிவைத் தெரிவிக்க முடியும் என்று லூயியிடம் கூறினார்.

மேயரால் அனுமதிக்கப்பட்ட அன்றைய இரவே, லூயி தன்னந்தனியாக நூலகத்தில் விடப்பட்டார். விடியற்காலை வரை அவர் எல்லாப் புத்தகங்களையும் தீண்டிக் கொண்டே சென்றார். எல்லா புத்தகங்களிடமும் ஓரிரு வார்த்தைகள் பேசினார். கண் இமைக்காமல் அன்றைய இரவைக் கழித்தார். காலையில் சோர்வடையாத கண்களுடன் நூலகரை வரவேற்றார்.

நூலகத்தில் நுழைந்த வாசகர்கள் தத்தம் விருப்பமான புத்தகங்களை வாசிக்கத் தொடங்கினர். அது திருவிழா போலவே இருந்தது. சில மணி நேரத்தில், எல்லா நூல்களும் சரியான அர்த்தத்தைக் கொண்டு இருப்பது உறுதி செய்யப்பட்டது. நூலகர் லூயின் கையைக் குலுக்கினார். வேண்டுவது யாதெனக் கேட்க, லூயி தனக்கான நூலை பல வருடங்களுக்கு முன்பு எந்த நூலுக்காகத் தண்டிக்கப்பட்டாரோ, அதே நூலை வேண்டினார். அறிவிப்பின்படி, லூயிக்கு அந்த நூல் அளிக்கப்பட்டது. பிறகு லூயி எல்லார் முன்பாகப் பேசத் தொடங்கினார்.

"பல வருஷங்களுக்குமுன் நானொரு குற்றவாளி என்று தெரிந்தும் வரவேற்றதற்கு நன்றி. சிக்கலைத் தீர்த்ததற்கு, நான் விரும்பிய நூலை எனக்கு அளித்ததற்கு எப்போதும் கடமைப்பட்டவனாகிறேன். எப்போது என்னை மதித்து வெகுமதி அளித்தீரோ, அப்போதே நீங்கள் குழந்தைகள் ஆகிவிட்டீர். ஆமாம் ...... மன்னிப்பவர் எவரும் குழந்தைகள்தாம். ..... இந்த நகரைவிட்டு சந்தோஷமாகவே பிரிகிறேன். ..... மிகவும் சந்தோஷமாகவே .....



படிப்பகம்

www.padippakam.com

லூயி அந்நகரை விட்டுபோய் இரண்டு நாட்கள் ஆகிவிட்டன. தன்மீது குழந்தைமை எனும் புனிதத் தன்மைப் பரவியதை அறிந்த நூலகர் சந்தோஷத்தில் இருக்கும்போது, அவர் எதிரில் சிப்பந்தி நின்றார்.

"ஐயா, எல்லா உறுப்பினர்களும் உங்கள் அறை முன்பாக நின்றுகொண்டு இருக்கிறார்கள். அவர்கள் ஒரேயொரு புகாருடன் வந்திருக்கிறார்கள். வாசிக்க எடுத்துச் சென்றவை எல்லாம், குழந்தைகள் வாசிக்கக் கூடியவையாக இருக்கிறதாம் ... " ●

# 2

● மூன்று பக்கங்களே உள்ள வினோதப் புத்தகத்துடன் வந்திருப்பதாக, யாத்ரீகன் அரசனிடம் சொன்னான். உலகத்தின் எல்லா நூல்களையும் வாசித்திருந்த அரசனோ, இந்நூலை திருப்தியளிக்குமென நினைத்து, வாங்கி புரட்டினார். முதல் பக்கத்தில் எழுதப்பட்டும், இரண்டாம் பக்கத்தில் எழுதப்படாமலும், மூன்றாம் பக்கத்தில் எழுதப்பட்டிருந்ததுமான அந்தப் புத்தகத்தை வாசிக்க முற்பட்டார். அவரால் கிரகித்துக் கொள்ள முடியவில்லை. தன்னை கோமாளியாக்கவே யாத்ரீகன் வந்திருப்பதாக நினைத்த அரசர், பக்கங்கள் புரியும்வரை யாத்ரீகனைச் சிறையில் அடைக்கச் சொன்னார். சூரியஸ்தமனத்தைக் கண்டு திரும்பிய அரசர், தன் மஞ்சத்தில் சாய்ந்து கொண்டு, யாத்ரீகன் தந்த புத்தகத்தைப் புரட்டத் தொடங்கினார். அப்போதுதான் முதல் பக்கத்தை வாசிக்க அவரால் முடிந்தது.

வற்றாத ஜீவநதி ஓடிக் கொண்டிருக்க, அதன் சருமத்தைத் தொட்டபடி அரண்மனைகள் கொண்ட மலையொன்று உயர்ந்திருக்க, அதன் பின்புறம் காடொன்று விரிகிறது. அக்காட்டினிலிருந்து வெளிப்படும் ஒருவன், மலையையும், நதியையும் கடந்து, பழங்காலக் கட்டிடக் கலையில் உருவாக்கப்பட்ட நகர நுழைவாயிலைக் கடந்து, தெருக்களைத் தாண்டி, அரண்மனை தர்பாரை அடைந்து, சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் மன்னனிடம் புத்தகத்தை நீட்டுகிறான். புத்தகத்தைப் புரட்டும் மன்னனோ, அதை நம்பாமல் அவனைச் சிறையில் அடைக்க உத்திரவு இடுவது வரை அரசனால் வர்ணனையுடன் படிக்க முடிந்தது. மேலும் அந்த நகரமும், அரண்மனையும், தன் தாத்தாவின் தாத்தா காலத்தில் இருந்தவை என்பதையும் அரசன் நினைவு கூர்ந்தார். மிகப் பெரும் சந்தோஷத்தில் சிக்கிக் கொண்ட அரசன், நாளை காலை யாத்ரீகனை விடுதலை செய்திடவேண்டும் என்றும், வெகுமதி அளித்து, மீதமுள்ள பக்கங்களையும் கேட்டிட வேண்டும் என்றும் முடிவு செய்தார். படுக்கையில் சாய்ந்தவாறே, கனவு காணத் துவங்கினார். குதிரைமேல் யாத்ரீகன் ஒரு வீரனைப் போல் பறந்துகொண்டு இருக்கிறான். அவன் குதிரையானது, தேசத்து எல்லையான நதியை அடைகிறது. குதிரையை விட்டுக் கீழே இறங்கிய யாத்ரீகன், தனக்கு வெகுமதியாக அளிக்கப்பட்ட பொன் ஆபரணங்களைக் குதிரைக்குச் சூட்டுகிறான். தன் பாதத்தின் கீழே ஆலிலைகளைப் பொருத்திக் கொண்டு நதிமேல் நடந்து நடக்கிறான். வெகுமதி பெற்ற குதிரை நதியைக் கடந்து கொண்டிருப்பவனைக் கண்டு கனைக்கிறது.

சூரியோதயம் கழிந்தபின் எழுந்த அரசர், உடனடியாகத் தர்பாரைக் கூட்டினார். தான் வினோதப் புத்தகத்தை வாசித்ததையும், கனவு கண்டதையும் அவர்களிடம் பகிர்ந்தார். சபையோர்கள் முகத்தில்



படிப்பகம்

www.padippakam.com

சந்தேகம் ஊஞ்சலாடுவதைக் கண்ட யாத்ரீகன் தனக்குள் சிரித்துக் கொண்டான். அரசனோ தன் சந்தேகத்தைக் கேட்கத் தொடங்கினான்.

"யாத்ரீகனே ! எனக்கு நீ இப்புத்தகத்தை வெகுமதியாகத் தரவேண்டும் என விரும்புகிறேன். என்னிடமிருந்து என்ன வேண்டுமோ கேள். தருவேன். மேலும் மீதமுள்ள இரண்டு பக்கங்களை எப்போதுதான் வாசிக்க முடியும்? என்ன அர்த்தம் தான் அவை கொண்டிருக்கின்றன?"

"அரசே .... இந்தப் புத்தகத்தை சூரிய உதயத்திலும், அஸ்தமனத்திலும் மட்டுமே வாசிக்க முடியும். மேலும் எழுத்தே இல்லாமல் இருக்கும் இரண்டாம் பக்கத்தைக் காண்பதற்கு முன்பு, சூரியஸ்தமனத்தைக் காணவேண்டும். பிறகு, நான் தங்கின அறையைக் கண்டபிறகே, இரண்டாம் பக்கத்தைப் புரட்ட வேண்டும். மேலும் அரசே, என் புத்தகத்தை நீங்களே வைத்துக் கொள்ளலாம். எனக்கு நீங்கள் ஒரு வெகுமதி அளிக்கவேண்டும். தயவு செய்து என்னை யாத்ரீகனாகவே இருக்கவிடுவதே நான் கோரும் வெகுமதி. இத்தேசத்தை விட்டுச் செல்ல இப்போதே அனுமதிக்க வேண்டும். நான் சென்ற பிறகே, இரண்டு பக்கங்களின் அர்த்தத்தையும் உங்களால் கண்டடைய முடியும்....."

இதற்கு சம்மதித்த அரசன், யாத்ரீகனை வெகுமதி இல்லாமல் அனுப்பி வைத்தான். பிறகு சூரியஸ்மனத்தைக் கண்டு, யாத்ரீகனின் விநோதப் புத்தகத்துடன் சிறைச்சாலைக்குள் நுழைந்தான். மங்கலான விளக்கின் வெளிச்சத்தில், யாத்ரீகன் சிறைவைக்கப்பட்ட அறையினை அடைந்தார் அரசர். சுற்றி நோட்டமிட்ட அரசர், சுவர்களில் ஏதோ எழுதப்பட்டிருப்பதை அறிந்து வாசிக்கத் தொடங்கினார். அவர் முகத்தில் அதிர்ச்சியானது மேலும் மேலும் பரவியது. உடனடியாக, அந்தக் குறைவான வெளிச்சத்தில் புத்தகத்தின் இரண்டாம் பக்கத்தைப் பிரித்தவர் நடுக்கம் அடைந்தார். அதில் எழுத்துக்கள் இருந்தன. வாசிக்கத் தொடங்கியவர் கலவரம் அடைந்தார். சென்ற இரவில் எதைக் கனவில் கண்டாரோ, சுவர்களில் எதை வாசித்தாரோ, அவையே இரண்டாம் பக்கத்தில் இருப்பதை எண்ணி வியப்படைந்தார். மேலும் அவரை வியப்பில் ஆழ்த்தும்படி வினோதமொன்று அப்புத்தகத்தில் நிகழ்ந்தது. மூன்றாம் பக்கத்தில் தற்போது எழுத்துக்களே இல்லை.

மூன்றாம் பக்கத்தில் வெறுமையே குடிகொண்டிருப்பதையும், நாளை காலை சூரியோதயம் கண்டபின் படித்துவிட முடியும் என்றும், யாத்ரீகனை இழந்தது மாபெரும் வரத்தை இழந்ததாகும் என்றும் நினைத்துப் பொருமிய அரசன் தூங்கத் தொடங்கினான், கனவு எதுவும் இல்லாமலேயே.

அடுத்த நாள் சூரியோதயத்தின்பின், புத்தகத்தைப் புரட்டினான் அரசர். புத்தகத்தில் ஒற்றைத் தாளே இருப்பதையும், மூன்றாம் பக்கம் இல்லாததையும் அறிந்து திகைப்படைந்தார் அரசர். உடனடியாக, அந்த வினோதத்திலிருந்து தப்பிக்க, முதல் பக்கத்தை வாசிக்கத் தொடங்கினார்.

முன்னர் வாசித்ததும் அதில் இல்லை. வேறொன்று எழுதப்பட்டிருந்தது. அதை அவரால் கிரகித்துக் கொள்ளவே முடியவில்லை.

அரசன் வரப்போகும் சூரியஸ்தமனத்தினை வெறுக்கத் தொடங்கினான். ●



படிப்பகம்

www.padippakam.com

# 3

● தூரதேசத்தைச் சேர்ந்த எழுத்தாளரின் கற்பனை மிகுந்த நாவலின் இரு பிரதிகளை எனக்கும், மதனுக்குமாக ஜோர்ஜ் அனுப்பி வைத்தார். அந்த குருடான நாவலாசிரியர் மீதான வேட்கையால், அவருடைய நாவலை இரவும், பகலுமாக வாசித்துத் தீர்த்தோம். ஒரே வாரத்திற்குப் பிறகு நான் மதனைச் சந்திக்க, அவனோ நாவலில் பரபரப்பு தரும் தெருவை என்னிடம் சிலாகிக்கத் தொடங்கினான்.

மிகமிக ஈடுபாட்டுடன் அத்தெருவை வாசித்ததாகவும், யானையொன்று நடந்து போக, மாட மாளிகையில் இருந்த பெண்கள் தங்கள் முலைகளைக் கிள்ளி யானை மீது வீச, தன் தும்பிக்கையால் போட்டு உடைக்க, அதிலிருந்து எழுந்த காதலர்கள் தங்கள் வீடு நோக்கிப் போவதும், கிழவியொருத்தி தன் சருமம் உருகித் தரையில் வழியக் கதவில் சாய்ந்து, மரமாகிக் காத்திருப்பதும், சிறிய குழந்தைகள் யானை அருகே வருவதற்குமுன் பாறையைத் தூக்கிக் கொண்டு ஒதுங்குவதும், தெருவோரம் விளக்குக் கப்பங்களின் தலையில் கபாலம் எரிவதும், அத்தெருவில் நடப்பவரின் மனோநிலைக்கு ஏற்றபடி, தெருவானது பொன்னாகவும், வெள்ளியாகவும், வெண்கலமாகவும், வைரமாகவும், கல்லாகவும், கூந்தலாகவும் மாறிக் கொண்டு இருப்பதும், தெருவின் ஆரம்பத்தில் காலடி எடுத்து வைக்கும் இளைஞர்கள் தெருவைக் கடக்கும்போது வயோதிகர்களாகவும், வயோதிகர்கள் குழந்தைகளாக மாறுவதும் அத்தெருவில் நிகழ்வதாகக் கூறியவன், இன்னும் சொல்ல முடியாதவை ஞாபக அடுக்கில் சிக்கிக் கொண்டதாகவும், கூற முடியவில்லை என்றும் கூறினான்.

என்னால் அதை நம்ப முடியவில்லை. அவன் சொன்ன அதே தெருவை நான் வாசித்தும், ஏன் அது என் கண்ணில் படாமல் போனது என்பது இன்னும் எனக்குப் புரியவில்லை. என் புத்தகத்தை நண்பர் வாங்கிச் சென்றார் என்றும், உன் புத்தகத்தைக் கடனாகத் தரமுடியுமாவென்று அவனிடம் கேட்க, ஆட்சேபணை ஏதும் இல்லாமல் கொடுத்தான்.

மதனுடைய புத்தகத்தையும், என்னுடையதையும் திறந்து சரிபார்த்தேன். மதன் சொன்னவை யாவும் இரண்டிலும் இருந்தன. ஆனால், முதலின் என் புத்தகத்தில், அந்தத் தெருவில் என்ன வாசித்தேனோ, அது இல்லாது மதன் சொன்னதே இருப்பதைக் கண்டு வியந்தேன். தூர தேசத்தைச் சேர்ந்த அந்த குருடானவர், புத்தகத்தின் பேரிலும் மாயவித்தை செய்வாரோ என்று யோசனை செய்துகொண்டே, அன்று மாலையே, மதனிடம் அந்தப் புத்தகத்தைக் கொடுத்துவிட்டு, எதுவும் பேசாமல் என் அறைக்கு திரும்பினேன்.

என் மேஜைமேல் இருந்த என் பிரதியைத் திறந்து, அந்தத் தெருவை வாசிக்கத் தொடங்கியதும் அதிர்ச்சியடைந்தேன்.

மதன் புத்தகத்தில் நான் வாசித்தது எதுவும் இல்லாமல், நான் முதன்முதலில் வாசித்ததே அந்த தெருவில் இருந்தது. ●



படிப்பகம்

www.padippakam.com

# 4

● முன்னொரு காலத்தில் நாட்டை ஒரு கொடுங்கோலன் அரசாட்சி செய்து வந்தான். தினந்தோறும் அவனுக்கு வினோதமான வஸ்துவைக் காட்டாத மக்கள் கொல்லப்பட்டனர். இந்த காலத்தில், பக்கிரி ஒருவன் அரசன் முன் வந்தான்.

"அரசே ! வந்தனம். நானொரு வினோதப் புத்தகத்தைக் கொண்டுவந்து இருக்கிறேன். அவற்றின் வரிகளுக்கிடையே பல முழத்தில் இடைவெளி இருக்கும். நீங்கள் ஓர் வரி படித்துவிட்டபின் புத்தகத்தை மூடிவிட்டு, உடன் திறந்து பார்த்தால், என்ன யோசிக்கிறீர்களோ, அது அடுத்த வரியாக அமையும். மேலும் இதை வேறு நாட்டிற்குள் எடுத்துப் போனால், அந்நாட்டின் மொழியாகவும், வர்ணனையாகவும் மாறிவிடும். சோதித்துப் பாருங்கள்....... "என்று தந்தரமிக்கப் புத்தகத்தை அரசனிடம் கொடுத்தான். வாங்கிய அரசன், புத்தகத்தைத் திறந்து கண்ணில் சிக்கிய வரியைப் படித்தான்.

'மான்குட்டி நதியோரமாக ஓடிக்கொண்டிருக்கிறது' என்பதைப் படித்த அரசன், அதற்கு அடுத்து பெரிய இடைவெளி இருப்பதை எண்ணி மூடினார். மான்குட்டியைத் தான் அம்பால் வீழ்த்தினால் நன்றாக இருக்கும் என்று நினைத்தபடியே புத்தகத்தைத் திறந்து வாசித்தார். 'அதை அரசனின் அம்பு துளைக்கிறது' என்பதை வாசித்து புளகாங்கிதமடைந்த கொடுங்கோலன் பல்வேறு சோதனைகளைப் பல்வேறு பக்கங்களில் செய்து திருப்தி அடைத்தான். கடைசி சோதனையாக, அதை வேறு நாட்டிற்கு எடுத்துப் போய், சோதனை செய்ய விரும்பினான். தனக்கென்று அரச நண்பர்கள் யாரும் இல்லாததால், பக்கத்து நாட்டு எதிரி அரசனின் காட்டுக்குள், அன்று இரவு நுழைந்து புத்தகத்தைச் சோதிக்க முற்பட்டான்.

எதிரி நாட்டின் காட்டில் நுழைந்து, நிலா வெளிச்சத்தில், பக்கிரி தந்த புத்தகத்தைத் திறந்து வாசித்தான். அந்நிய பாஷையில் எழுதப்பட்டிருப்பதை நினைத்துப் பெருமிதம் அடைந்தவர், அப்பக்கத்தின் கடைசி வரியைப் படித்தான்.

'தாகமெடுத்தவன் குளத்தில் இறங்கி நீர் அருந்துகிறான்'

இதைப் படித்த கொடுங்கோலன் தன் முன்னிருந்த தடாகத்தில் இறங்கி, பாசிகளையும், தாமரை இலைகளையும் ஒதுக்கிவிட்டு, நீரை அள்ளி அள்ளிப் பருகினான். புத்தகம் கரைமேல் தனியாக இருந்தது. யானையொன்று தடாகத்தில் நீர் குடிப்பதாக நினைத்து, ராஜகுமாரன் ஒருவன், முனிபுங்கவ மகனை அம்பெய்திக் கொன்றதை தான் படித்ததாக நினைவு கூர்ந்தான். அந்தப் பக்கிரியைக் கொன்று அரிய இந்தப் புத்தகத்தைப் கைப்பற்ற வேண்டும் என்று யோசனை செய்தபடியே கரையேறினான். தன்னந்தனியாக இருந்த புத்தகத்தை மெல்லத் திறந்தான். அதே பக்கத்தை எடுத்தான்.

அந்த வரியை அவன் வாசிப்பதற்கு முன்பாகவே, அந்தப் புத்தகத்தில் இருந்து புறப்பட்ட அம்பொன்று அந்தக் கொடுங்கோலனின் மார்பைத் துளைத்தது. ●



படிப்பகம்

www.padippakam.com

## பால் சக்காரியாவின் சொற்பொழிவிலிருந்து ...

● சில நூற்றாண்டுகளுக்கு முன் கேரள கடலோர நகரங்களில் முதல்முதலாக பிரெஞ்சுகாரர்களும், டச்சுக்காரர்களும் அந்த நாட்டின் வளம் கருதி வந்து இறங்கினர். அதாவது வாசனைப் பொருட்களும் மிளகு, ஏலம், இலவங்கம், பட்டை போன்ற மசாலாப் பொருட்களும் அங்கு அதிகம் கிடைத்தன. அந்த நாட்டு மக்கள் அசைவ உணவை அதிகம் விரும்பி உண்பதால் அதை பதப்படுத்தி பாதுகாக்க அவர்களுக்கு கேரளத்தில் விளைந்த மசாலாப் பொருட்கள் பெரிதும் உதவின. அதன் ஊடே அதை ஏற்றுமதியும் செய்யத் தொடங்கினர். வாணிபம் பெருகியது.

அப்படி வந்த அவர்கள் முதல் முதலாக மேலைக்கல்வியை கேரள மக்களுக்கு போதிக்க ஆரம்பித்தார்கள். கல்வி கொடுக்க பிரெஞ்சுகாரர்களும், டச்சுகாரர்களும் முடிவெடுத்தவுடன் அவர்கள் தேர்ந்தெடுத்தவர்கள், பெண்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் மட்டுமே. இப்படி எளிமையாகவும், வெகு சீக்கிரமாகவும் மேலைக்கல்வி அந்த காலத்திலேயே எல்லோருக்கும் பொதுவாக இருந்ததால் என் தலைமுறையில் எல்லாம் காப்காவையும், போர்ஹேவையும், டால்ஸ்டாயின் அன்னா கரீனாவையும் உடனுக்குடன் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

தீண்டாமைக்கு எதிராக என்ன வார்த்தை பேசுவது என்று தெரியாமல் காந்திஜி தவித்துக் கொண்டிருந்தபோது, நாராயணகுரு ஈழவ சமுதாய மக்களின் மேன்மைக்காக போராடி வெற்றியும் கண்டார்.

ஒரு சமுதாயம் நவீனமாகும்போதுதான் எழுத்தும் நவீனமாகும். அதே போல் நம் நாட்டில் பின் நவீனத்துவ கதைகள் வருவதில்லை என கவலைப்படுபவர்கள் அதிகம். அது எப்படி வரும். ஒரு சமூகம் பின் நவீனத்துவம் ஆகாமல் எழுத்து மட்டும் எப்படி பின் நவீனத்துவ எழுத்து ஆக முடியும்.

ஒரு நீண்டகால பாரம்பரியம் கேரள மக்களிடம் இருந்ததால் தான் நம்மிடையே புகழ்பெற்ற நாவல்களும், சிறுகதைகளும், திரைப்படங்களும் வந்தன. வள்ளத்தோள், அடூர் கோபாலகிருஷ்ணன், தகழி, பஷீர் போன்றவர்களெல்லாம் எண்ணி நாம் பெருமிதம் அடைய முடிகிறது. ஆனால் அது ஒன்றும் அப்படியே நீடிக்கவில்லை. மதங்களும், மதவாதிகளும் எங்கும் பல பிரச்சனைகளை உருவாக்கி சீரழித்துக் கொண்டு தான் இருக்கின்றனர்.

கேரளாவில் மதவாதக் கொள்கை ஊடுருவ ஆரம்பித்து விட்டது. இதை எதிர்த்து எந்த எழுத்தாளனும் பேசுவதில்லை. விஜயனிலிருந்து பாலசந்திரன் சுள்ளிக்காடு வரை அமைதி காக்கின்றனர். இது குறித்து பேசினால் புனிதம் கெட்டுப் போய்விடும் என்று பயப்படுகிறார்கள்.

எனக்கு என் அப்பா குடும்ப நிர்பந்தத்தின் காரணமாக ஞானஸ்நானம் செய்து வைத்தார். ஆனால் இலக்கியம் போலத்தான் பைபிளைப் படிக்கக் கொடுத்தார். நான் ஒரு நாளும் கிருஸ்தவனாய் வாழ்ந்ததில்லை. வாழ ஆசைப்படவும் இல்லை. ஆனால் இப்போது நடக்கும் அரசியலில் ஏதாவது விமர்சனம் செய்யப் போனால் சக்கரியா கிறிஸ்தவன் தானே அதனால்தான் அப்படிச் சொல்கிறான் என்று என்னைத் தூக்கி மீண்டும் மதத்துக்குள்ளேயே எறிகின்றனர்.

அரசியல் மட்டுமல்லாமல் எதையுமே மேடைகளில் எழுத்தாளர்கள் பேசுவதில்லை. அப்படி பேசினால் தன்னுடைய படைப்பாற்றல் போய்விடும் என்றும், இனி தன்னை எதற்கும் பயன்படுத்த மாட்டார்கள் என்றும் ஒரு தவறான கருத்து அங்கு நிலவுவதால் எந்த எழுத்தாளர்களும் பேச முற்படுவதில்லை.

இப்படியான சில காரணங்களினாலும் கூட மலையாள இலக்கியம் மிகவும் தேங்கியே இருக்கிறது. எல்லாவற்றிற்கும் எடுத்துக் காட்டாய் மலையாள இலக்கியம் இருந்த நாட்கள் போய் இப்போது பேச வேண்டுமானால் எங்களுக்கு முந்தைய தலைமுறையினரையே கூப்பிட வேண்டி இருக்கிறது. தற்போதைய தலைமுறை மிகவும் தேங்கிய நிலையில்தான் உள்ளது.

இதன் காரணமாக எல்லாவற்றிற்கும் மலையாளிகள் பழமை, பழமை என பேச ஆரம்பித்து இருக்கிறார்கள். பழமையை போற்ற வேண்டும், புனரமைக்க வேண்டும் என்றும் பேசிக் கொள்வதில் காலம் கழிக்கின்றனர். பழமை என்பது செடியின் அடியில் வைக்கும் எருவாகத்தான் இருக்க வேண்டும். எருவை செடியின் மேலே வைக்க முடியுமா? செடியின் அடியில் வைத்து அதன் மூலம் செழிப்பாக வளரும் புதிய செடிகளையும், பூக்களையும் தான் நாம் போற்ற வேண்டும். அதுதான் தேங்கி நிற்கும் மலையாள இலக்கியத்தை மீட்டுக் கொண்டுவர முடியும். ●

தொகுப்பு : கே.வி.ஷைலஜா, முற்றம், திருவண்ணாமலை



படிப்பகம்

www.padippakam.com



## கோமுகி நதிக்கரைக் கூழாங்கல்

**இளமுருகு (பெருமாள் முருகன்)**

**வேறுவேறு**
**11 ஆ, காந்திநகர்,**
**ஆத்தூர்.**
**ரூ. 20/-**

கவிதைகள்



## மழை பற்றிய பகிர்தல்கள்

**சே.பிருந்தா**

**பூங்குயில் பதிப்பகம்,**
**வந்தவாசி.**
**ரூ. 25/-**

கவிதைகள்



## பூனையைப் போல அலையும் வெளிச்சம்

**குட்டி ரேவதி**

**தமிழினி**
**சென்னை.**
**ரூ. 15/-**

கவிதைகள்



## ஆரோ

***சுந்தர பாண்டியன்***

**காவ்யா**
**பெங்களூர் 38.**
**ரூ. 30/-**

நாவல்



## இன்னும் மிச்சமிருப்பவை

**செந்தூரம் ஜெகதீஷ்**

**சிந்து பதிப்பகம்**
**சென்னை - 14.**
**ரூ. 30/-**

கவிதைகள்

நூலகம் நூலகம் நூலகம் நூலகம் நூலகம் நூலகம் நூலகம்



படிப்பகம்

www.padippakam.com

விமர்சனம் / மதிப்புரை

# மாற்றிப் போடும் விளையாட்டு

**லதா ராமகிருஷ்ணன்**



**சாயும் காலம் - ஜீ. முருகன்**
**தாமரைச்செல்வி பதிப்பகம்**
**சென்னை**
**முதல் பதிப்பு - மே 2000**
**விலை ரூ. 45/-**

● எதார்த்தத்தை சலிப்பாகவும், அபத்தமானதாகவும் உணரும்போது அதை மாற்றிப் போட்டு விளையாடத் தோன்றுகிறது. கடவுள்களும், தத்துவங்களும் கைவிட்ட பின்பு சக மனிதனை ஆறுதல்படுத்தும் செயல்போலவும் இருக்கிறது.

என தனது 'சாயும் காலம்' சிறுகதைத் தொகுப்பில் குறிப்பிடுகிறார் ஜீ.முருகன். இந்தத் தொகுப்பிலுள்ள பதினேழு சிறுகதைகளைப் பற்றிய அவருடைய இந்த சிறுகுறிப்பு, தொகுப்பிற்கு அதன் ஒட்டுமொத்த அளவிலும், தனித்தனிக் கதைகளின் அளவிலும் எந்த அளவிற்குப் பொருந்துகிறது? அல்லது, இந்தத் தொகுப்பின் அள்வில், எதார்த்தத்தை மாற்றிப் போடுவதில், அவ்வகையில் சகமனிதனை ஆறுதல்படுத்துவதில் எவ்வளவு தூரம் கதாசிரியர் கலாபூர்வமாக வெற்றியடைந்திருக்கிறார்?

கதைகளில் ஆசிரியர் தன்னை முன்னிறுத்திக் கொள்ளாததும், ஆசிரியர் கூற்றுகளாக அறவுரைகளும், வியாக்கியானங்களும் துருத்திக்கொண்டு நிற்காமலிருப்பதும் பெரிய ஆறுதல். எழுத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பரிசோதனை முயற்சிகளில் ஒன்றிரண்டைத் தவிர மற்ற கதைகளில் ஒரு 'வலிந்து செய்யப்பட்ட தன்மை' அல்லது 'பாவனை' காணப்படவில்லை. உள்ளடக்கரீதியிலும் அவருடைய 'மாற்றிப் போடல்' விளையாட்டு, ஒன்றிரண்டு கதைகளைத் தவிர்த்து சுபாவமாகவே இருக்கிறது'. வரியிடை வரிகள், குறிப்புணர்த்தல்கள், சொல்லாமல் விடப்பட்டவைகள், அப்படி 'விடப்பட்டதாலேயே அதிகம் சொல்பவைகள், தலைமறைவு வரிகள், விஷயங்கள் என இத்தொகுப்பின் எல்லாக் கதைகளிலும் விரவிக் கிடக்கின்றன. அதனாலேயே பெரும்பாலும் கதைகள் இறுக்கம் அடர்ந்து இருக்கின்றன. பயணம், உருமாற்றம், ஆற்றோடு போனவன், போன்ற கதைகளை எத்தனை முறை வாசித்தாலும் முற்றான புரிதலுக்கு சாக்காதவையாகச் சில எஞ்சியிருப்பதாகவே தோன்றுகிறது. இது படைப்பாளியின் வெற்றி. Ambiguity என்ற விஷயம் இந்தத் தொகுப்பின் பல கதைகளில் திறம்பட இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

மொழி ரீதியாகவும் உள்ளடக்க ரீதியாகவும் இந்த மாற்றிப்போடல் விளையாட்டு சில கதைகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. சில கதைகளில் மேற்கொள்ளப்படவில்லை. அல்லது அப்படி மேற்கொள்ளப்பட்டிருப்பது சில கதைகளில் தெளிவாகத் தெளிவாகிறது. சிலதில் மங்கலாகத் தெளிவாகிறது.

மாயக்கிளிகள், தலைகீழாக ஒரு மனிதன், வாள், சிம்மாசனம், இளவரசி மற்றும் மரணம், வாய்ப்பு முதலியவை மொழி ரீதியாகவும், உள்ளடக்க ரீதியாகவும் தெளிவாகத் தெளிவாகும் கதைகளாகத் திகழ்கின்றன. இவற்றில் தலை கீழாக ஒரு மனிதனில் ஆசிரியரின் தனித்திறன் புலனாகிறது. மற்றவை சில மேலையப் படைப்பாளிகளின் எழுத்தாக்கங்களை நினைவுக்குக் கொண்டு வருவதாக வெளிப்படையாகவே தெரிகின்றன. குரங்குகளின் வருகை, வேட்டை முதலியவை மனிதனுக்கும், மற்ற ஜீவராசிகளுக்குமுள்ள விசித்திர அல்லது அவல உறவுத் தொடர்புகளைப் பேசுவதாகப் படுகிறது. 'புழு' பரிசோதனை நடையில் எழுதப்பட்டாலும் திருப்தியளிக்காத கதை. அதிகம் பேரால் கையாளப்பட்ட அரதப் பழசு. நவீன உடையும், உள்ளடக்கமும் கொண்ட கதையின் இறுதி வரிகள் 'அண்டைப் புழு, ஆகாசப் புழு' அண்டப் புளுகு, ஆகாசப் புளுகு' என்று சொற்றொடரை யதேச்சையாகவோ, பிரக்ஞைபூர்வமாகவோ,



படிப்பகம்

www.padippakam.com

நினைவுக்குக் கொண்டு வருகின்றன. 'நாய்' வெகு சாதாரண எழுத்து.

'கன்னி' கதை வாசித்த காலை ஒரு கசப்புணர்வைத் தோற்றுவித்தது. காரணம் இவ்வுலகிலான உறவுமுறைகளுக்கு மேலுலகில் பொருளில்லை என்ற கண்ணோட்டத்தை முன்வைத்து வேறு சில விஷயங்களை விவாதிக்கும் போக்கில் தந்தையைக் கொண்டே மகளைக் கன்னி கழிக்க வைத்தது 'வாசக Conditioned Mind க்கு ஏற்க முடியாமல் போனதுவே' என்று மேற்குறிப்பிட்ட கசப்புணர்வு பகுக்கப்படலாம் என்றாலும் என்னளவில் அது கதாசிரியரின் தோல்வியாகவே படுகிறது. அந்தக் கதையில் அவர் சொல்ல வரும் கருத்தை இன்னுமான அசாதாரண எழுத்தின் மூலம் எந்த வாசக மனதையும் ஏற்றுக் கொள்ளச் செய்திருக்க முடியும்.

சில கதைகள் சில குறிப்பிட்ட வட்டார வழக்குகள் அல்லது நடப்புகள், நடைமுறைகள் பரிச்சயப்பட்டவர்களால் கூடுதலாக உயத்துணர முடியுமோ என்று தோன்றியது.

பிரக்ஞாபூர்வமான நடைரீதியாக 'யதார்த்தத்தை' 'மாற்றிப்போடல்' செயல்பாடு நிகழ்த்தப்பட்டிருக்கும் கதைகளை விட சுபாவமாக அது அமைந்துள்ள கதைகளே அதிகம். கட்டுக்கோப்பாக இருப்பதாகப் படுகிறது. ஆற்றோடு போனவன், இரண்டாவது மரணம், பயணம், உருமாற்றம் முதலிய கதைகளை உதாரணம் கூறலாம். இவற்றிலுள்ள வரியிடை வரிகளும், வாசக யூகத்திற்கு விடப்பட்டிருக்கும் விஷயங்களும் நிறைய. கதைகள் உண்டாக்கும் அதிர்வுகள் ஆசிரியருக்கு அப்பாற்பட்டவையல்ல என்பதைக் கதைத் தலைப்புகள் உறுதி செய்கின்றன. அவையே கதையின் சாரமாகவும், சுருக்கமாகவும், குறிப்புணர்த்தங்களாகவும் பல கதைகளில் திகழ்கின்றன. பாரிச வாயுவில் முடக்கு வாதத்திற்காய் புறாவை வாங்கிக்கொண்டு போகிறவனின் பேருந்துப் பயணம் தினசரி நியமங்களில் எல்லோருமே ஒரு வகை முடக்குவாதத்தால் பீடிக்கப்பட்டிருப்பதைப் புலப்படுத்துகிறது. அவ்வண்ணமே 'சாயும் காலம்' தலைப்பும் வாழ்வு முடிவையும், நாளின் முடிவையும் ஒரு புள்ளியில் பொருத்திக் காட்டுகிறது. 'மாற்றிப் போடலை'யும் உணர்த்தி நிற்கிறது. (முழு புத்தகத்தின் தலைப்பு என்ற அளவில்)

பொதுவாக பெரும்பாலான கதைகளில் நேரிடையாக பொருள்களோடு மறைமுக அர்த்தங்களும் இரண்டறக் கலந்திருக்கின்றன. பிரகடனங்களோ, பிரயத்தனங்களோ இல்லாமல் அவை சாத்தியமாகியிருக்கின்றன.

உத்திரீதியாக, உள்ளடக்கரீதியாக என்றெல்லாம் பிரிக்காமலேயே, இந்தத் தொகுப்பில் வாசிக்கத்தக்க நல்ல கதைகளாகவே பல அமைந்திருக்கின்றன என்று 'இலக்கண மறியாதாருக்கும்' கட்டாயம் பிடிபடும். கதாசிரியருக்கும், அச்சுப் பிழைகளின்றி நேர்த்தியான அச்சாக்கத்திற்கும் வாழ்த்துக்கள் ●



போர்ஹே
கதைகள்
மொழிபெயர்ப்பும்
தொகுப்பும்
பிரம்மராஜன்
ஸ்நேகா
சென்னை - 14
விலை ரூ. 120/-

## தமிழில் போர்ஹே கதைகள்

பா.வெங்கடேசன்

● தமிழ் வாசிப்பின் மூலமாக மட்டுமே போர்ஹேயை அறிந்திருக்கும் வாசகர்களுக்கு இதுவரை சிறுபத்திரிக்கைகளில் மொழி பெயர்க்கப்பட்ட சிறுகதைகளும், அவர் மீதான ஒரு முழுப் புத்தகமும் கொடுத்திருக்கும் கொடுப்பினைகளுடன் கூடுதலாக அவருடைய தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளைக் கொண்ட முழுத்தொகுதி ஒன்றும் (நல்லவேளையாக சிறப்பிதழ் எதுவும் வெளிவருவதற்கு முன்) இப்போது வாசிக்கக் கிடைக்கிறது. ஆயினும் எண்பதுகளுக்குப் பிறகு போர்ஹே உள்ளிட்ட லத்தின் அமெரிக்க எழுத்தாளர்களை மொழிபெயர்த்த பலரிடமும் பொதுவாகக் காணப்படும் பதற்றம் - எந்த இலக்கியப் போக்கை அவை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன என்று மொழிபெயர்ப்பாளர் முன்வைக்க விரும்புகிறாரோ அந்தப் போக்கின் அம்சங்களை பிரதியின்



படிப்பகம்

www.padippakam.com

சொல்லுக்குச் சொல் பிரதிபலிக்க வேண்டுமென்கிற பதற்றம் - இந்தத் தொகுப்பில் இல்லாதிருப்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று. இந்த பதற்றமின்மை கதைத் தேர்வில் தைரியமாக வகைமையைச் சாதித்திருக்கிறது. ரகசிய அற்புதம், அலெஃப், மணல்புத்தகம் ஆகிய கதைகள் யதார்த்தமும் அற்புதமும் விளிம்பழிந்து உருவாக்கும் புனைவுலகை பிரதிநிதித்துவப்படுத்துபவை. மாறாக முற்றிலும் அற்புத உலகின் (பிரதியியல் உலகின்) தர்க்க விதிகளைக் கொண்டு புனையப்பட்டவை வட்டச்சிதிலங்கள், மரணத்தில் ஒரு இறையியல்வாதி, தள்ளிப்போடப்பட்ட மந்திரவாதி, நித்தியமானவர்கள் ஆகியவை. அல்முட்டாசிங் - ஒரு அணுகல் கட்டுரை வடிவிலான கதை. இம்மூன்று வகை மாதிரிகளும் தமிழ் இலக்கியச் சூழலின் போக்கை எண்பதுகளுக்குப் பிறகு பாதித்தவை. இவை அபூர்வமான எழுத்து வகைகளுக்கு நடுவே நாட்டுப்புறக் கதைகளின் வடிவத்திலும், பெருநகர் யதார்த்த கதை சொல்லல் மாதிரிகளிலும் பீதியூட்டும் கனவுச் சாயல்களுள்ள குற்றங்களை (சாகசங்களை?) அனுபவப்படுத்தும் போர்ஹேயின் தனித்துவமிக்க கதைகளை பிரம்மராஜன் தன்பங்காக வாசகனுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார். யதார்த்தக் கதைப்பரப்பினூடுகூட தமிழ்ப் படைப்பாளிகள் மேற்கொண்டிருக்கும் பயண எல்லைகளின் போதாமையை உணர்த்தும் விதமாக இக்கதைகள் தொகுப்பில் அனுபவப்படுகின்றன. (தீவிர தமிழ் இலக்கியப் பரப்பில் ஜி.நாகராஜனைத் தவிர வேறெங்கும் பழிவாங்கும் விபச்சாரிகளும், இருவரைக் காதலிக்கும் பத்தினியும், தலைமறைவு புரட்சிக்காரர்களும், கூலிக்கு கொலை செய்யும் அடியாட்களும் அலைந்து திரியும் விளிம்பு உலகைப் பார்த்திருக்கிறோமோ?). இவ்வகைக் கதைகளில் சில முதன்முதலாக தமிழ் வாசிப்புக்கு இத்தொகுதி மூலமாகக் கிடைக்கின்றன. மேலும் போர்ஹேயின் இன்னுமிரு பரிமாணங்களாக அவரது கவிதைகளும் (அறிமுகவுரைகளோடு) சில கட்டுரைகளும் தொகுப்பில் இடம் பெற்றிருக்கின்றன. பற்றாக்குறைக்கு போர்ஹே பற்றின மிக விரிவான அறிமுகம், கதையுருவாக்கம் மீதான போர்ஹேயின் குறிப்புகள் என்று தொகுப்பின் முழுமையிலும் அடர்த்தியிலும் தொகுப்பாளர் செலுத்தியிருக்கும் பிரத்யேக ஆர்வத்தை முதல் வாசிப்பிலேயே உணர முடிகிறது. போர்ஹே என்றாலே மந்திரம், அற்புதம், புத்தகங்கள், நூலகம், புதிர்வழி என்பதாக சில சொற்றொகுதிகளால் உருவாக்கப்பட்டிருக்கும் (இவைதான் இன்றைய இலக்கியப் போக்கை பிரதிநிதித்துவப்படுத்துமென்கிற நிஜமான நம்பிக்கையுடன்தான்) சாய்வான பிம்பத்தை இத்தொகுப்பு கலைத்துப் போடலாம். மொழிபெயர்ப்பைப் பொறுத்தவரை பிரம்மராஜனின் பதற்றமின்மை வாசிப்புத் தன்மை வேண்டி அதீத சொற்துல்லியத்தையும் இரண்டாம் பட்சமாக்கியிருக்கிறதென்று தோன்றுகிறது. தத்துவ விசாரப்படும் (அலெஃப், மரணமும் காம்பஸ் கருவியும், நித்யமானவர்கள், பேரவை) சொல்/வாக்கியச் சிக்கல்கள் கூட போர்ஹேயின் சிந்தனைப் பின்னல்களேயன்றி தமிழில் மலினப்பட்டு விடாத அளவு வரை இளக்கியே தரப்பட்டிருக்கின்றன என்று சொல்லலாம். (தமிழில் இவ்வளவு சிக்கலான சிந்தனைகள் இருக்கும் நாவலானால் நம்மால் 'உள்ளே நுழையவே முடியாது') எனினுமே மொழி பெயர்ப்பாளனுக்கான சிலுவையை பிரம்மராஜன் சுமக்க வேண்டி வரும் என்றுதான் தோன்றுகிறது.

வட்டச்சிதிலங்களின் கடைசி வாக்கியம் ஆங்கிலத்தில்

"......... **he understood that he too was a mere appearance, dreamt by another**"

இதில் **another** என்கிற பிரயோகம் கதைத்தளத்தில் உலவும் கனவு காண்பவர் / காணப்படுபவர் என்கிற இருவரை மட்டும் ஒரு சுழல் வட்டத்தில் இணைக்கிறதென்பது என் வாசிப்பு. இந்த வார்த்தையை நான் எனக்குள் தமிழ் படுத்திக் கொண்டது 'வேறொருவர்' என்பதாக.

ஆனால் தொகுப்பில் இந்த **'another'** என்பது வேறு எவரோ ஒருவர் என்பதாக மொழிபெயர்க்கப் பட்டிருப்பது நபரையன்றி முடிவற்ற தொடர் சங்கிலியாக பிரபஞ்ச அளவில் விரியும் கனவு காணல் என்னும் செயல்பாட்டை அர்த்தப்படுத்துவதாகப் படுகிறது. அதாவது கதை முடிவில் கதைக்கு வெளியே கனவு காண்பவரைக் கனவு காண்பவராக கனவு காணும் மூன்றாவது நபர் ஒருவர் புதிதாக புலப்படுவதாக.

அப்படியும் வாசிக்கலாம் போல. ●



படிப்பகம்

www.padippakam.com



கடற்கரைக் கால்கள்
பூமா ஈஸ்வரமூர்த்தி
கிடைக்குமிடம் :
திலீப்குமார்,
216/10,
ராமகிருஷ்ண மடம் சாலை,
மைலாப்பூர்,
சென்னை 4.
விலை ரூ. 40/-

# ஆதிப்பூவைத் தேடி ...

ராணி திலக்

● இத்தொகுப்பைப் படித்து (வாசித்து) முடித்தபின், மனதில் பறவைகளும், இலைகளும், மஞ்சள் ஒளியும் நிலவுகின்றன. வெளிப்பாட்டு முறை, மொழிப் பயன்பாடு, பாடுபொருள் புலமை, உத்தி ஆகியவற்றை நம்பிக்கையாகக் கொண்டு எழுதப்பட்டு, வெளிப்பட்டு வரும் தொகுதிகளுக்கிடையே இவையேதும் இல்லாமல் - வாசகப் பிரதிகள், எழுத்தாளன் பிரதிகள் என கவிதையை உருவாக்கும் நவீனயுக கவிஞர்களிடையே - வேறு வகையான, விலகிய கவிதைத் தொகுதியாகவே இது படுகிறது. வாழ்வின் மீதான தர்க்கங்களோடு, இயற்கை வழியாக அடைகிற பரவசத்தை வண்ணத்துப்பூச்சியுடனும், மழையுடனும் நாம் அடைய முடிகிறது.

சமீபத்தில், சிந்தாமணி கொட்லகொரே (கன்னடம்) கவிதையொன்றில், மலையில் வசிப்பவன், ஆற்றைத் தன் தோளில் வலையொன்றில் பிடித்துச் செல்வது எழுதப்பட்டிருந்தது. இதில் கவிஞனின் கற்பனாசக்தியையும், இயற்கையைக் கவிஞன் தன்னுள் அடக்கும் வகையையும் அறிகிறோம். அதையும் மீறி, கவிஞனின் கர்வம் தெளிவாகத் தெரிகிறது. ஆனால் பூமா ஈஸ்வரமூர்த்தியின் கவிதையில், 'வலையில் படாத/ படிமங்களும் குறியீடுகளும், ஆழத்தில்/உயிருடன்/அதனதன் உலகத்தில்' என்ற பார்வை கர்வத்தை ஒழிக்கும் தன்மையையும், இயற்கையிடம் கவிஞன் தோற்றுப் போகும் குணத்தையும் அறிய முடிகிறது. இதே தன்மை -ஊமை நிலை ஒரு யோக நிலை என்று திரிசடை எழுதியதுபோல் எழுதப்பட்ட வரிகள் (வரிகள் என்பது என்ன என்பதை யாசகர் அறியக்கூடியது) காலத்தின் மறைவினூடே கழட்டப்பட்டு, முடிவில் ஒரு தியான நிலை வாழ்வைக் கொண்டுவிடுவதை 'இருபது வரிகளில்' என்பதில் அறியலாம். காதலும், புல்லாங்குழலும், வண்ணத்துப்பூச்சியும் மீட்டுத் தரும் வாழ்வைத் தொலைப்பது சங்கடமானதெனினும், வீட்டின் கதவையும், வீதியின் கதவையும் தொடர்ந்து திறந்து, எதுவீடு என்கிற கேள்வியோடு, சதா எளிதில் கண்ணில்படும் பரம், பரம் பொருளாகக் கண்டடைவதை, காற்றிலும், இலைகளின் சாரல் சிரிப்பிலும், வெளியை உண்டாக்கும் வண்ணத்துப்பூச்சியிலும் சதா மனம் அலைகிறது. இப்போது வீடு என்பதென்ன என்பதை வாசகர்கள் புரிந்திருக்கக்கூடும். மேலும்,

ஆதிப்பூவைத் தேடிச் செல்லும் பயணத்தோடு எப்பொழுதும் மழையும், பட்டாம்பூச்சியும் தொடர்கிறது. முதல் வரியில் நுழைந்து கடைசி வரியில் வெளியேறும் வண்ணத்துப்பூச்சியினூடே, வரிகளின் இணைப்பை ரயிலாகவும், பூச்சியை மனிதனாகவும் கொள்ளும் மனோபாவத்தைத் தடுக்கிறது. வேறுவகையில், மனத்தின் ஊசலாட்டத்தைப் பிரதிபலிப்பாகவும்படுகிறது. சக பிரயாணி காட்டியதில் விதியின் ஒரு பாதியில்தான் / மழை பெய்கிறது என்ற வரியினை - உணர்வுகளைப் பெற்றபின், மிக எதேச்சையாக நான் வானத்தைப் பார்க்க, நிலா பாதியாக உடைந்திருக்க, அதில் வானம் பாதியாக உடைந்து நிற்பதான தோற்றத்தைப் பெற்றேன். இத்தகைய உணர்வு எனக்குத் தந்தது போன்று, வாசகர்களும் ஒரு கவிதையில் அடைகிறார்கள். எனில், அது ஒரு நல்ல கவிதையல்லாமல், வேறென்ன? இதே பாணியில், வேறொரு கவிதையில், சுழல், பனைமரம், ஆழம், நீர்ப்பாம்பு, படகு, துடுப்புகள், அனுகூலமில்லாத காற்று ஆகிய சூழலில் பேரிரைச்சல் நதியைக் கடக்கப் போவதை எண்ணிக் கடக்கத் தொடங்கியவன், முதலில் பேரிரைச்சலைக் கடக்கிறான். பிறகு நதியைக் கடக்கிறான். பயணம் முடிகிறது. சூழலிருந்து காற்று வரையான சூழலோடு, பேரிரைச்சல், பேரிரைச்சல் இல்லாத நதியைக் கடப்பவன் காலில் காலத்தை கடந்த உணர்வைப் பெறுகிறான். புலியின் பசிபோன்றோ, வேட்டைப் போன்றோ தோன்றும் இப்பயணம் கடக்கும் கரையில் நுரை ததும்பும்



படிப்பகம்

www.padippakam.com

கேள்விகளுக்கு / பதில் கூற எவராது அமர்ந்திருக்கக்கூடும் என்ற தேடுதல் நிகழ்கிறது. அதன் தேடுதல் தீவிரம், பதிலில் இல்லாமல், முழுமையானக் கேள்வியைச் சேகரித்ததிலே அமைகிறது. மற்றும், மங்கலான கனவைப் பிரதிபலிக்கும் கவிதைகளில், யானையும், தூங்கும் சிறுவனும், கலைத்துப் போடவும், ஒழுங்குபடுத்தவும் தொடர்கிறார்கள். கனவு வழியான கவிதைகளில், வண்ணப்பூச்சியின் மனதான மீனின் நீரின், நிலத்தில் அலைவது கனவுத் தனிமையோடு, ஒரு கவிதையாக மலர்வதைக் கண்டடைகிறோம். இதே மனோதிடத்தை வானத்தின் நீலநிறத்தில் சட்டை அணிவதன் வழியாகப் பறவையாவதை அறியமுடிகிறது. காலத்தைக் கடிகாரங்களின் மூலமாகச் சிதைத்தான் டாலி. இவரின் நீளமான கவிதையில், அவன், அவா், அவா்கள், அவன் ஊடே பறவைகள் அமர கவிதைகள் மரம் செய்யும் மனத்தோடு, தன்னைத் தேடுபவன், தன்னை சாந்தப்படுத்தாத காற்று, கடிகாரத்தை நடித்துப் போடுவதை அறிகிறான். இது ஒரு உணா்வு நிலை – எழுச்சியை உண்டுசெய்கிறது. அபரிமித எண்ணம், இன்னொரு கவிதையில், வாழ்வின் கலசப் பறவையின் எச்சமாக முடிகிறது. மேலும் 'ஒற்றைக்காலுடன் மேஜையில் காத்திருக்கும் கோப்பை' கவிதையில் பல்வேறு சந்தா்ப்பங்கள், பல்வேறு பரிமாணங்களாக வெளிப்படுகின்றன. தவிர, தேவதச்சனின் 'தீராத மலா்' என்ற கவிதையில், பெறப்படும் அனுபவம், இவரின் 'தீராத ரோஜாவில்' பெறமுடிகிறது. தேவதச்சனிடம் பெறப்படும் அனுபவம், இவருடையதில் குறைவே. அல்லது, இவருக்கு முன்பே, தேவதச்சன் எழுதிவிட்டதால், இது எனக்கு சாதாரணமாகவே படுகிறது. இவா் கவிதையில் வருகிற 'வெள்ளை .ரோஜா' ஒரு ரோஜா என்பதின் முகம் ரோஜாக்களின் நிறம் அமுக்கப்படுவதின் மூலம், பறிப்பவரின் மனத்திற்கேற்ப ரோஜா செடியில் அமைவது ஓவியமாகிறது. இந்த வரியால் மட்டுமே இந்த கவிதை, தேவதச்சனின் கவிதையிடம் இருந்து தப்பிக்கிறது. இதே பிரச்சினை, 'பறவைகளின் எச்சம்' கவிதையில் நிகழ்கிறது. வண்ணத்துப் பூச்சியை நான் கனவு காண்கிறேனா, அல்லது என்னை அது கனவு காண்கிறதா என்று ஜென் குரு நினைத்ததை – படித்ததை முதலாகக் கொண்டு எழுப்பப்பட்டிருப்பது ஏமாற்றமளிக்கிறது. மேற்கோளைக் கொண்ட கவிதையாகவே நிற்கிறது.

எல்லா தொகுப்புகளிலும் நிகழும் பலவீனம், இத்தொகுப்பிலும் நிகழ்கிறது. அதாவது, பல கவிதைகள், மிகச் சாதாரணமாகவே இருக்கின்றன. .எந்த உணா்வையும், தரிசனத்தையும் ஏற்படுத்தவில்லை. (வேறொரு வாசகனுக்கு மாறுபடலாம்) அவற்றைத் தவிா்த்திருக்கலாம். எனினும் சமீபத்தில், வாசகன் எனும் கரை மீது பல்வேறு கவிதைத் தொகுப்புகள் மளமளவென்று வந்து கரையத் தொடங்குகின்றன. அலையலையாக வந்து கொண்டிருக்கும் தொகுப்புகளில் இத்தொகுப்பானது, கால்களை நிச்சயம் குளிா்படுத்தும், நனையச் செய்யும், சில கவிதைகளால். கரைமீறி செல்பவன் வண்ணத்துப்பூச்சியை காட்டை உடன் கொண்டு போகமுடியும். ●

## மறுவாசிப்பில் மகாபாரதம்

சா.தேவதாஸ்




**உப பாண்டவம்**
**எஸ்.ராமகிருஷ்ணன்**
**'அட்சரம்'**
**130/11, மதுரா**
**கோட்ஸ் காலனி**
**விருதுநகர்**
**விலை ரூ. 110**

**"மாத்ரி எரிந்து கொண்டேயிருக்கிறாள். வனத்தின் நெருப்பு சரிந்து பரவிச் சென்று கொண்டேயிருக்கிறது. இரவில் அதனைப் பார்த்துக் கொண்டிருக்கும் நட்சத்திரங்கள் அன்றி வேறு யார் மாத்ரியைப் பற்றி நினைக்கக்கூடும்?"**

உப பாண்டவம், பக் 137

● வரலாறு, புராணம், நீதியியல் என்று எல்லாம் கலந்திருக்கும் இதிகாசமான மகாபாரதத்தை மறுவாசிப்பு செய்வது என்பது சவால் மிக்கதாகும். பெரும்பாலும் இத்தகைய மறுவாசிப்பு அரசியல் தளத்திலேயே நின்று விடக்கூடிய அபாயமும் கொண்டது. பண்பாட்டு வாசிப்பொன்றை நிகழ்த்தி நுட்பமான பிரதியொன்றை அளித்திருக்கிறார் எஸ்.ராமகிருஷ்ணன்.



படிப்பகம்

www.padippakam.com

மகாபாரதம் சொல்லாமல் விட்டவைகள், மௌனம் காட்டும் இடங்கள், விளக்கம் வேண்டும் சந்தர்ப்பங்கள், சேர்க்க வேண்டிய சொல்லாடல்கள், தலைகீழாய் இருப்பதை மாற்றிப் போட்டு இயல்பான வடிவில் காட்டுவது என்று புனைவாக்கும்போது பல அம்சங்களைக் கருத்தில் கொண்டிருக்கிறார்.

ஏற்கனவே, வைசம்பாயனரால் ஜெனமேஜெயனுக்கு எடுத்துரைக்கப்பட்ட பாரதத்தை கௌனக முனிவர் முதலான நைமிசாரண்ய முனிவர்களுக்கு சூத முனிவர் எடுத்துரைப்பதாக வடிவம் கொண்டிருக்கும்.

தங்கள் கண்முன் நிகழும் பாரத நினைவுகளை குருடர் ஒருவரும், செவிடர் ஒருவரும் பயணி ஒருவரும் விரிக்கும் பாங்கில் தன் பிரதியைக் கட்டமைத்திருக்கிறார் எஸ்ராமகிருஷ்ணன்.

வேதங்கள் மாறுபாடு கொண்டபோது அவற்றைப் பகுப்பதும், தொகுப்பதும் ஆகிய கடமையை நிறைவேற்றிய வியாசர் தொகுத்ததுதான் பாரதம், 'வியாசம்' என்றாலே கட்டமைத்து உருவாக்கப்படும் கட்டுரை என்றாகும்.

வியாசன் பிறந்ததும் செய்த உடனடி வேலை பாரதத்தை தொகுத்ததுதான். ஆனால் பாரதம் இனிமேல்தான் நிகழப்போகிறது. நிகழ்ந்த பிறகு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இரண்டும் ஒத்திருந்தன என்கிறது மகாபாரதப் பிரதி.

தந்தையின் இறப்புக்குக் காரணமான தட்சகன் என்னும் பாம்பினை மட்டுமல்லாது அதனோடு அதன் இனத்தையும் அழிக்க வேண்டுமென்று ஜெனமேஜெயன் சர்ப்பயாகம் செய்யும்போது பெரும்பாலான ஸர்ப்பங்கள் அழிந்து, தட்சகன், வாசுகி, ஆதிசேடன், அனந்தன் போன்றவையே எஞ்சியிருக்கையில், மன்னனைச் சமாதானப்படுத்தி, யாகத்தை நிறைவு செய்வதாகத் தொடங்கும் பாரதம், யுத்தம், அழிவு எல்லாம் நிகழ்ந்தபின் தருமர் விண்ணுலகம் ஏகியபின், ஜெனமேஜெயன் செய்யும் பூசை, புனஸ்காரங்களை ஏற்று வைசம்பாயனர் ஆஸ்ரமம் திரும்புவதாக நிறைவுறும்.

பயிலவ முனியிடம் வித்தை கற்றுக் கொண்ட உதங்கன், குருதட்சணையாக என்ன செலுத்த வேண்டும் என்று வேண்டும்போது, அரசியின் காதில் மிளிரும் நாகரத்தின கம்மலை கொண்டு வருமாறு கேட்கிறாள் குருபத்தினி, சிரமப்பட்டு அதனை அவன் பெற்று வரும் வழியில், தட்சகன் என்னும் பாம்பு அவனை நாகலோகத்திற்கு கொண்டு போய்விடும். அங்கிருந்து அவன் மீட்டுக் கொண்டு வருவான்.

ஆதிசேசனிடமிருந்து நாகரத்தினம் அரசியிடம் எப்படி வந்தது? அதனையே குருபத்தினியும் வேண்டுவதேன்? நாகர்களான ஆதிகுடிகளிடம் இருக்கும் செல்வம் ஒன்று ஆரிய இனத்து சத்திரியனிடம் வரவேண்டும் (அ) பிராமணனிடம் வரவேண்டும் என்றால்......

கண்கள் மட்டும் தெரிய புற்றுமூடிவிட்ட உடலை, வேடிக்கை செய்து பார்க்க எண்ணிய யயாதியின் மகள் சுகன்யை, குச்சியால் கண்களை குத்த ஆத்திரம் கொண்டு சபித்த முனிவன் சாபத்தை விலக்க, தன் மகள் சுகன்யை கன்னிகாதானம் செய்து கொடுத்துவிடுவான் மன்னன். தனக்கு பணிவிடை செய்ய சுகன்யையினை வைத்துக் கொள்வார் முனிவர். அவர்களுக்குப் பிறந்தவன் சனகன்.

வேடிக்கை விபரீதமாக, மன்னனையும், மந்திரியையும், தவிர்த்து மற்றவர் குருடாகும்படி சபிக்கப்பட, மன்னன் மகள் முனிவருக்கே அளிக்கப்படுகிறாள். பணிவிடைப்பெண் என்ற நிலையில் ஏற்கப்படுதல், பின் தாம்பத்தியத்தில் குழந்தை பிறப்பு நிகழ்தல் என்று போகிறது. இதில் எவ்வளவு விஷயங்கள் அடங்கியிருக்கின்றன, எவ்வளவு சொல்லப்பட வேண்டியுள்ளன.

வேடர் குலத்து ஏகலைவன் துரோணரை மானசீக குருவாக வரித்து வில்வித்தையில்



படிப்பகம்

www.padippakam.com

தேறும்போது, தன்னை விஞ்சிய வில்லாளி இருக்கக்கூடாது என்று அர்ச்சுனன் கருதி, குருதட்சணையாக பெருவிரலைத் துண்டித்து துரோணரிடம் காணிக்கையாக்குமாறு நிர்ப்பந்திக்கிறான். குரு-சிஷ்ய உறவின் உன்னதத்திற்கான உதாரணமாக இது வழக்கமாக வியாக்கியானப்படுத்தப்படும்.

இழிகுலத்தவன் தேர்ந்த வில்லாளி ஆவதா என்ற பிராமண குருவின் ஆதங்கமும், தன்னை மிஞ்சி வேடன் ஒருவன் வித்தகன் ஆகிவிடலாகாது என்னும் சத்திரிய விஜயனின் பீதியும் சேர்ந்து வில்வீரனின் பெருவிரலைத் துண்டித்து விடுகின்றன என்பது தானே விஷயம்! இனி எப்படி அவன் வில்லேந்துவான்?

**"இன்னொரு அம்பினை குறிதவறாது எய்வதற்குள், எண்ணற்ற ஏகலைவர்களின் பெருவிரல்கள் துண்டிக்கப்பட்டு பூமியில் விழவேண்டுமே"** (1)

தன் தந்தை துரோணர் வஞ்சகமான முறையில் கொல்லப்பட்டார் என்று ஆத்திரப்படும் அஸ்வத்தாமன், பாண்டவர் வாரிசுகளையெல்லாம் இரவில் துயிலும்போது கொன்றுவிடுவதுடன் இல்லாமல், அபிமன்யு மனைவி உத்தரையின் கருவில் இருக்கும் பரிட்சித்தையும் அம்பெய்தி மாய்த்து விடுகிறான். அவனது கோபம் ஆவேசமாகி வெறியாகி தணியாதிருந்து வருகிறது.

பிராமணனின் கோபாவேசம் தணியாது எரிய, வேடனான ஏகலைவனின் கோபாவேசம் என்ன செய்தது? அது சொல்லப்படவில்லை. வாரிசு இல்லாத சந்திரகுலத்துக்கு வாரிசு உண்டுபண்ணும் வகையில் வியாசர் தருமசந்தானத்திற்கு இசைகிறார். மெலிவும் கோரமும் கொண்ட அம்முனிவனை ஏறெடுத்தும் பார்க்காது அம்பிகா கூடியதால் அந்தகனாய் பிறக்கிறான் திருதராஷ்டிரன். உடல் விதிர்த்துவிடும் அம்பாலிகாவுக்கு நோயுற்றவனாக பாண்டு பிறக்கிறான். கணவன் அந்தகன் ஆனதால் மனைவியான தனக்கும் பார்வை வேண்டாம் என்று கண்களைக் கட்டிக் கொள்கிறாள் காந்தாரி. தீராத காமமும் இயலாமையும் கொண்ட பாண்டு, கலவியில் ஈடுபட்டால் மடிய நேரும் என்ற சாபத்தை மீறி, மாத்ரியுடன் கூட இறந்து போகிறான். கணவனுக்குப்பின் அவமரியாதையுடன் தான் வாழ்வது சரியில்லை என்று மாத்ரி சிதையில் இறங்கி எரியுண்டு போகிறாள். தன் வீரத்தில் வென்று அர்ச்சுனன் கொண்டு வரும் திரௌபதி பாண்டவர் ஐவராலும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றாள்.

இப்பெண்டிரின் வேட்கைகள் என்ன, வேதனைகள் என்ன, இவர்கள் உணர்ந்த அவலம் என்ன, பட்ட சோகம் என்ன இவையெல்லாம் சொல்லப்படவில்லை பாரதத்தில். ஒரே விதிவிலக்கு மட்டும் உண்டு. பாண்டவர்கள் வனவாசம் செய்யும் காலத்தில் ஒருவனத்தைச் சுற்றிப் பார்க்கையில் அபூர்வமாய் தெரியும் நெல்லிக்கனியொன்றை பறித்துத் தருமாறு திரௌபதி வேண்ட, அர்ச்சுனன் அம்பெய்தி வீழ்த்துகிறான். அப்போது ரிஷிகள் ஓடிவந்து 'பெரிய பாதகம் செய்து விட்டீர்கள், இங்கு தவமிற்றும் மித்திர ரிஷிக்கு 12 ஆண்டுக்கு ஒருமுறை இம்மரம் ஒரு கனியை வழங்கும், அதனை அவர் இறைவனுக்கு படைத்துப் பின் தன் குழாத்தினருடன் உண்பார். எனவே, இக்கனியை மீண்டும் மரத்தில் சேர்த்துவிடுங்கள்' என்கின்றனர். பாண்டவர்கள் தம் உள்ளக்கிடக்கையை அம்மரத்தின் கீழ் நின்று, வெளிப்படுத்தினால் பழம் மரத்தில் சேரும் என்று உபாயம் கூறுகிறான் கண்ணன். தருமர் தொடங்கி சகாதேவன் ஈறாக ஒவ்வொருவரும் வெளிப்படுத்த இரண்டிரண்டு முழமாக உயர்ந்து 10 முழம் உயர்ந்து நிற்கிறது கனி. இன்னும் இரண்டு முழம் தான் எஞ்சியிருக்கிறது. இப்போது திரௌபதி முறை, ஐவருக்கு மனைவியாகியும், **"இன்னமும் வேறொருவன் எனக்குப் புருடனாகும் படியாக விரும்புகின்ற என்னுடைய பெரியமனம்** ஆனாலும், அழகிய பூமியில் புருஷரிகளென்னும் போற்றிருக்கிமாகிற பெண்ணாகப் பிறந்த யாவரையும் பதிவிரதைகளென்று சொல்லலாம். **புருஷர்களுள்ளவரையிலும், பதிவிரதைகளென்று நம்புவதற்கு இடமுமுண்டோ?"** என்பாள். உடனே கனி மரத்தில் பொருந்திவிடும்.



படிப்பகம்

www.padippakam.com

தவமியற்றும் ரிஷிகள் காமமிகு காலத்தில் வெளிப்படும் விந்து, மீன் உண்டு, கர்ப்பம் வாய்ப்பதுண்டு, மான் உண்டு கர்ப்பம் திறப்பதுண்டு, நாணலில் பட்டு கிருபாசாரியும், சகோதரி கிருபையும் பிறப்பதுண்டு. பாண்டுவின் காமம் தீராதிருக்கிறது. யயாதி தன் உடல் இச்சை தீராது, மகனின் யௌவனத்தைப் பெற்றும் சுகிக்க முற்படுகிறான். பிரமச்சாரியான பீஷ்மர் தந்தைக்கு மணமுடிக்கும் வேலைகள் செய்கிறார்.

மகாபாரதத்தின் நெடுகிலும் விரவிக் கிடக்கும் ஓர் வலுவான இழை பாலியல் சார்ந்தது. பாலியல் வேட்கையின் சுகிப்பும், தீராமையும் ஒருபுறம், பாலியலின் பல்வேறு முகங்கள் மறுபுறம் எனக் காணக்கிடக்கின்றன.

வீரனான துரியோதனனே இரு உடலாளனாக இருப்பவன். அவன் உடலில் கீழ்ப்பாதி மலரென இருக்கும்.

அர்ச்சுனன் அஞ்ஞாத வாசத்தில் பேடியாக ரூபங்கொள்பவன். பெண்களின் மீதான மையலில் சலிப்புறாத அர்ச்சுனனே பிற பெண்டிரால் ஈர்க்கப்படும் வனப்புற்றவனாய் திகழ்பவன், நாககன்னி, உலூபி, பாண்டியன் மகள் சித்ராங்கதை, கிருஷ்ணனின் தங்கை சுபத்ரா என வரித்துக் கொள்பவன். விராட தேசத்தில் பிருகன்னளை என்னும் பேடி வடிவில் நடன மங்கையாக மாறவேண்டிய அர்ச்சுனன், தன்னைப் பெண்ணாக உணர்ந்து கொள்ள வேண்டிய தருணத்தில், இவர்களில் யாரைத் தேர்வு செய்திருப்பான் என்றொரு வினாவை முன்வைக்கிறான் உபபாண்டவப் பயணி. தண்ணீரில் தன் உருவத்தைக் காணும் பிருகன்னளை அது அர்ச்சுனனாக நீள்வதை கண்டுகொள்கிறாள்.

"ஆண்-பெண் என்ற பேதம் கலைந்த இவர்கள் இரு நாவு கொண்டவர்கள் போல் வேறு வேறு முனைகளில் ஒரே திரவத்தைப் பருகி கொண்டிருந்தார்கள்" (பக்கம் 97) என்பான் பயணி.

முனிவர் வடிவில் உள்ள சிவன் நிபந்தனைப்படி ஆடைகளின்றி அன்னம் படைக்கும் துரோணரின் மனைவி கிருபையின் அழகு தூண்ட, ஸ்கலிதமான முனிவரின் விந்து அன்னமிருக்கும் தட்டில் விழுந்து விடுகிறது. அது வீணாக்கப்படலாகாது. கிருபையே உண்டுவிட வேண்டும் என்று கூறப்பட, கிருபையோ அதனை குதிரைக்கு இட, குதிரையிடம் பிறப்பான் அஸ்வத்தாமன்.

பாரதத்தின் பழம்பொருந்து சருக்க கதை கேட்கும் ஜெனமேஜெயன் புருஷர்களில்லாவிட்டால் ஸ்திரிகள் உத்தமிகள் என்றும் புருஷர்கள் இருந்தால் மத்திமர்களென்பதற்கு வைசம்பாயனரிடம் விளக்கம் கேட்கிறான். "மகளிற்கு மனந்தாவும் என்பது பற்றி பாஞ்சாலி அப்படி உரைத்தாள். அதைக் கேட்டு தனது பத்தினிக்கு மிஞ்சிய பேர்களில்லை என்று இருந்த தர்மராஜனும் வெகுவாயோசித்து அந்த ரகசியம் அரிபரந்தாமன் அறியத்தக்கதேயன்றி நம்மால் அறியத்தக்கதல்ல என்று அஞ்சியிருந்தார்" என்பது வைசம்பாயனரின் விளக்கம்.

மகளிற்கு மனந்தாவும் என்று நீதியுரைக்கத் தொடங்கியவர் மேலும் அவ்விஷயத்தில் செல்ல தயங்கியவராய், அது நாமறியத்தக்கதல்ல, ரகசியமானது என்று புதிர் போட்டுவிடுவது சுவாரஸ்யமானது. **ஆணின் இருதயம் முற்றிலும் கோரசொரூபமானதில்லை என்பதற்கு சான்று பகரும் இடம் இது.**

பழம்பொருந்து சருக்க கதை, பாஞ்சாலை கதையாக வாசிக்க இடந்தருவது. வில் வித்தையில் வென்ற அர்ச்சுனனுக்கு கிடைத்த பாஞ்சாலியை ஐவரும் பகிர்ந்து கொள்கின்றனர். அபூர்வமான கனியை மீண்டும் மரத்தில் பொருத்தச் செய்ய, ஐவரும் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்த இரண்டிரண்டு முழம் வீதம் 10 முழம் உயருகிறது கனி. பாஞ்சாலி தன் ரகசியத்தை கூறவும் மரத்தில் பொருந்திக் கொள்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

மற்ற ஐவரும் சொல்வதில் ரகசியமேதும் இல்லை. பரந்தாமனைப் போற்றி நீதியின் பாலும் நெறியின்பாலும் தங்களுக்குள்ள உறுதிப்பாட்டையே தெரிவிக்கின்றனர். பாஞ்சாலி மட்டுமே கேட்பவர்கள் அதிர்ந்து போவதான வேட்கையை வெளிப்படுத்துகிறாள்.

பாஞ்சாலி குறிப்பிடும் இன்னொருவனைக் கர்ணன் என்ற பண்டிதர்கள் வியாக்கியானம் செய்வார்கள்.

கதை நிகழும் சூழலில் அவளை மானபங்கம் செய்யும் குழுவினரின் அங்கமாக இருப்பவன் தான் கர்ணன். ஆதலின் அது எப்படி பொருந்தும்?

பாண்டவரல்லாத இன்னொருவன்மேல், தன் உணர்வுகளுக்கு, தம் உரிமைகளுக்கு, தன் சுதந்திரத்திற்கு மதிப்பளித்து உளமார காதலிக்கக்கூடிய இன்னொருவன் மேலான ஆசையை அவள் வெளிப்படுத்துகிறாள் என்று ஏன் கொள்ளக்கூடாது?

**பழம் பொருந்திக் கொள்ள இந்த இரகசியமே முக்கியமானதாயிருக்கிறது, பாஞ்சாலியின் வேட்கைகளின் ஈடேற்றத்திற்கும் இந்த ரகசிய வெளிப்பாடு முக்கியமானதாயிருக்கிறது** ஐவரே அனைத்தையும் தீர்மானித்திடலாகாது. தீர்மானிக்கவும் கூடாது.

ஐவருக்கு மனைவியான திரௌபதியின் அந்தரங்க உணர்வுகள் என்னவாக இருந்திருக்கும் என்பதை சேதுவின் "பாண்டவபுரம்" புனைந்து காட்டுகிறது. அவளின் விருப்பத்தைக் கிஞ்சித்தும் கருதாமலேயே ஐவரும் தங்களுக்குள் பொறாமைபட்டுக் கொண்டு ஆயுதங்களைத் தீட்டும் அளவுக்குப் போய்விடுகின்றனர். இந்நிலையில் வெளியேறும் திரௌபதி காடு சென்று தவமியற்றத் தொடங்கிவிடுகிறாள். கடைசியில் அவளைச் சுற்றி கோயில் ஒன்று உருவாகிவிடுகிறது. அவள் அதற்குள் ஒரு தங்க விக்கிரமாகிவிடுகிறாள். பாண்டவபுரத்து கன்னிகளின், சுமங்கலிகளின் பாதுகாப்பாக ஆகிறாள்.

பலியானாவள் எப்படி பாதுகாப்பவளாக ஆக முடியும்? அதுதான் புதிர், விசித்திரம், அப்படி ஆக்கப்பட்டிருப்பதுதான், உருவானதுதான் மரபுகள்.

பாண்டவபுரத்து ஆதிக்கதையாக சேது கற்பிக்கும் கதையும் (2) இப்படியானதுதான். வெளிதேசத்திலிருந்து குடியேறிய கொல்லன் கொல்லத்திற்கு வாரிசு இல்லை. மனைவியிருக்க வேறு பெண்களுடன் தொடர்பு கொள்கிறான். இதனால் தானும் பிற ஆண்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வதான பிரமையை உண்டாக்குவதுடன் கர்ப்பமாயிருப்பதாகவும் கூறிவிடுகிறாள் மனைவி. உடனே ஊரில் உள்ள அழகான இளைஞனைப் பிடித்து அவன்தான் காரணம் என்று உறுதியாகத் தெரியாது போதும் குருடாக்கி கொன்று விடுகிறான் கொல்லன். உயிர்த்தியாகி ஆகிவிடும் இந்த இளைஞனே பாண்டவபுரத்தின் ஆதி மைனர், பாண்டவபுரத்து மைனர்கள் எந்த யுவதியையும் விட்டு வைப்பதில்லை.

மகாபாரதத்திற்கு மூலக்கதையாக இருந்தது 'ஜயா' என்னும் காவியம். பாரதக் கதையை முதலில் எடுத்துரைப்பவர்களாக இருந்தவர்கள் சூதர்கள். சூதர்கள் என்போர் பிராமணர், சத்திரியர் என்ற இருவர்ணத்திற்கும் அடுத்த நிலையினர். இவர்கள் சத்திரியர்களிடம் சாரதிகளாக, படை வீரர்களாக, பாணர்களாக இருந்திருக்கின்றனர். ஒரு காலகட்டத்தில் பாரதக்கதையினை எடுத்துரைப்பதும், பாதுகாப்பதும். பிருகு முனிவர் குலத்தவரிடம் வரும்போதுதான் பிராமணியம் சார்பான கதைகள் சேர்க்கப்பட்டன என்கிறார் ஐராவதி கார்வே. கார்வேயின் ஆய்வில் வெளிப்படும் மிகவும் ஆச்சரியகரமான விஷயம். விதுரனுக்கும் தருமனுக்கும் இடையேயான உறவு.

யமனின் அவதாரமான விதுரனையே, குந்தி முதன்முதலாக தனது மந்திரவாக்கு மூலம் குழந்தை உற்பவம் செய்து கொள்வதற்காக வேண்டினாள் என்பதை நுட்பமாக நிறுவியிருக்கிறார். திருதராஷ்டிரன், காந்தாரி, குந்தி, விதுரன் ஆகியோர் வானப்பிரஸ்த வாழ்க்கையில் இருக்கும் கட்டத்தில், விதுரனைக் காணது தேடுகிறான் தருமன். உண்ணாமல்,



படிப்பகம்

www.padippakam.com

உறங்காமல் உடையின்றி எலும்பும், தோலுமாய் திரிந்து கொண்டிருக்கும் விதுரனைப் பின் தொடர்ந்து தருமன் சென்று "உனது யுதிஷ்டரன் வந்திருக்கிறேன்" என்று கூறுகிறான். நிலை குத்திய பார்வையால் தருமனை நோக்கும் விதுரன் தன் யோக சக்தியால் ஒவ்வொரு அவயவமாக தருமனுடலில் ஊடுருவி விடுகிறான். தொல்பழங்காலத்தில் இறக்கும் தறுவாயில் இருக்கும் தந்தை, தன் அவயம், அறிவு, ஆற்றல், வளப்பம் அனைத்தையும் மகனுக்கு அளிக்கும் வகையில் நிகழ்வதான சடங்கு இது.

2

பாண்டுவின் மரணத்தை யுதிஷ்டரன் பார்வையில் சொல்லி விடுகிறார். ராமகிருஷ்ணன் கச்சிதமான அளவில்,

"........ மையலின் சுருளில் சிக்கிய தகப்பனின் சாவு முன் நிசப்தமாகிப் போகிறான் யுதிஷ்டரன். அவன் நிசப்தம் துயரமானதில்லையா?" (பக் 59)

கர்ப்பவதியாயிருக்கும் சகோதரன் மனைவி மம்தாவைக் கூடும் பிரகஸ்பதியை, கருவிலிருக்கும் சிசு எச்சரிக்கிறது. இதனை உபபாண்டவம் இப்படிப் பதிவு செய்கிறது.

"சிசு பிறந்தபோது அதன் உடலில் தீராத ரணங்கள் இருந்தன. அது தனது புலன்களை இழந்திருந்தது. மம்தா வன்மமான கூடுதலில் கொண்ட ஒழுக்கம் தான் சிசுவின் குறைபாடென்று துக்கம் பெருகிப் போனாள். பிறந்த குழந்தையிடமிருந்து பேச்சற்ற மூங்கையொலி ஒன்றை கேட்டவனாக பிரகஸ்பதி நிம்மதியற்று அலைந்து போனான். சிசு மோகத்தின் குருட்டு அஸ்திரத்தால் பீடிக்கப்பட்டதாக தனது நடுக்கத்தைப் பெருவெளியெங்கும் பரவிவிட்டபடியேயிருந்தது நெடுங்காலமாக" (பக் 60)

உபபாண்டவத்தில் மூன்று விஷயங்களைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். அஸ்தினாபுரம், இந்திரபிரஸ்தம், துவாரகை, பாஞ்சாலம் என்னும் நகரங்களைக் குறித்த சொல்லாடல் ஒன்று. சிகண்டியைப் பற்றின விவரிப்பு இன்னொன்று, பீஷ்மரிடம் பிரபஞ்ச சக்திகள் உரையாடுவது மற்றொன்று.

நகரங்கள் தம் சுபாவத்தையே மானுடர் வாயிலாக வெளிப்படுத்துகிறதோ என்று என்னும் பயணி, காணும் நகரங்களுக்குள் ஒளிந்திருக்கும் நகரங்களையும் கண்டு கொள்கிறான். துவாரகைக்கு பாலின் சுவையும் அஸ்தினாபுரத்திற்கு கைப்பும், இந்திரப் பிரஸ்தத்திற்கு துவர்ப்பும் பாஞ்சாலத்திற்கு கடுப்பும் இருப்பதை சுவைத்துப் பார்க்கிறான்.

"காலத்தின் மழை நகரத்தின் மீது எப்போதும் பெய்து கொண்டே இருக்கிறது. இடைவிடாத இந்த மழையால் கட்டிடங்களும், மனிதர்களும், விருட்சங்களும் கூட மாறுதல் கொள்கின்றன. அவை பரஸ்பரம் ஒன்றையொன்று வேறுபடுத்திக் கொள்கின்றன, வளர்கின்றன, வீழ்ச்சியுறுகின்றன என்றாலும் நகரின் மீது பெய்யும் இந்த அரூப மழை நிற்பதேயில்லை. இனி மிருதுவும் ரகஸ்யமும் கண்டும், கேட்டும் அறிந்தபடி அதன் ஈரத்திற்குள்ளாகவே உழல்கின்றார்கள் யாவரும். நகரினின்று துண்டிக்கப்பட்ட யாவும் நகரின் ஏதோ ஒரு அடுக்கில் சென்று மறைந்து விடுகின்றன. புதையுண்ட அசையும் உருவங்களும், உடல்களுமாக நகரம் தன் படிவ அடுக்குகளை நிரப்பிக் கொண்டே இருக்கிறது" (பக் 67)

இந்திரபிரஸ்தம் கேளிக்கை கூடமாயிருக்கிறது, துவாரகையோ இடம்பெயரும் நகராயிருக்கிறது. பாஞ்சாலம் சதாவெம்மை கொண்டுள்ளது. "புலப்படாத நகர"ங்களில் நகரங்களின் பரிமாணங்களையும் முகங்களையும் **கால்வினோ** பெருகவிடுவதுபோல், இந்நான்கு நகரங்களுக்கும் எண்ணற்ற முகங்களையும் சாயல்களையும் தந்து கொண்டேயிருக்கிறான் பயணி.

தன் காதலும், காமமும் தீராது சிகண்டியாகப் பிறக்கிறான் அம்பா. சிகண்டி ஆணா/ பெண்ணா? சிகண்டி பிறந்தவுடன் தாதியர் பெண் பிறந்திருப்பதாகக் கூற, ஆண் பிறந்திருப்பதாகச் சொல்லி தந்தையான மன்னன் துருபதன் கொண்டாடுகிறான். உண்மையில் அவன் இரு பிறப்பாளன் என்கிறான் பயணி. "சிகண்டி என்ற உருவம் அம்பாவின் ஞாபகத்தால்



படிப்பகம்

www.padippakam.com

நிரம்பி வழிகிறது. அவன் காத்துக் கொண்டேயிருக்கிறான். வில்லாளிகளில் தேர்ந்த சிகண்டி உடல் உள்ளே, எரிந்து கொண்டே இருந்தது. அவன் பீஷ்மரின் உயிரைத் தன் அம்பால் குடிக்கும்போது மட்டுமே குளிர்ச்சி கொள்ள இயலும் எனக் காத்திருந்தான். காதலின் தீராத இச்சையால் அம்பா அலைக்கழிக்கப்பட்டே இருந்த காட்சிகள் காற்றில் ததும்பி செல்கின்றன (பக்கம் 85)

ஆண்/பெண் பால் திரிபை விருட்சங்களுடன் ஒப்பிட்டு ஒரு சொல்லாடலும் நிகழ்கிறது.

"ஆண்/பெண் என்பது உயிரோட்டத்தின் திரிபு. விருட்சங்களில் அவை உள்கலந்து ஓடுவதால் அதில் ஆண், பெண்ணில்லை. உங்கள் உயிரோட்டத்தில் ஆணின் தாதுவை மட்டும் பீறிடவும், பெண் அம்சத்தினை ஒடுங்கச் செய்யவும் முடியவும்" (பக்கம் 89)

பாரதம் ஒத்தச் சிக்கலை வேறுவிதமாகப் பதிவு செய்யும். தனக்கு குழந்தை வேண்டும் என்று வரம் வேண்டும் துருபதனிடம் "உனக்குப் பிறக்கும் குழந்தை முதலில் பெண்ணாயிருக்கும், பின்னர் வீரனாகும்" என்பார் சிவன். **'சிகண்டி என்றாலே பெண்ணும் வீரனும்'** என்று பொருள்படும் (3)

சிகண்டி இடம் பெறும் 5வது அத்தியாய முகப்பாக, ரிஷ்யசிருங்கர் என்னும் பால்பேதம் அறியாத ரிஷி பற்றிய குறிப்பு பொருத்தமாக இடம் பெற்றுள்ளது 'உப பாண்டவத்தில்' பீஷ்மரை வீழ்த்தியாயிற்று. உத்தராயணம் வரை சரதல்பத்தில் காத்திருந்த பீஷ்மர், உத்தராயணம் வந்ததும் உயிர்துறக்கிறார். சிகண்டியின் நோக்கம் நிறைவேறிவிட்டது. இனி என்ன வேலை? இப்போது தன் ரூபத்தைக் கலைத்து விடத் தயாரானலும், தன்னில் ஒரு பாதியான அம்பாவால் தாங்கிக் கொள்ள இயலவில்லை.

பீஷ்மர் போய்விட்ட பிற்பாடு, அம்பாவுக்கு என்ன இருக்கிறது? பீஷ்மர் இறந்த துக்கத்தால் அம்பாவும் தகித்துக் கொண்டிருக்கிறாள். "நான் நேசத்தின் உக்கிரத்தால் கூடியிருந்தேன். பீஷ்மர் அற்ற உலகம் அதன் வெறுமையை என்னில் படரவிடுகிறது" என்கிறாள். முடிவற்ற சிற்றோடையாக திசையற்று வனத்தில் ஓடிக்கொண்டு இருக்கப் போவதாக கூறுகிறாள்.

பாரதத்தில் சரதல்பத்தில் காத்துக்கிடக்கும் பீஷ்மரிடம் தருமனே பெரிதும் உரையாடிக் கொண்டிருப்பான். 'உபபாண்டவ'த்தில் காற்றும், ஒளியும், இருளும், மழையும், நெருப்பும், அம்பாவுமே உரையாடுகின்றனர். பீஷ்மரை அனுபவமிக்க விவசாயியாகக் காணுகிறான் பயணி.

ஒளியின் சகோதரியான இருளின் தீராத பசிக்கு காரணம் கற்பிக்கிறார் – பீஷ்மர்.

"... உன் சகோதரியான ஒளியை ருசித்தபடி பின் தொடர்கிறாய். தனது சுவடுகளைக்கூட விட்டு வைக்காத உன் சகோதரி ஓடிக் கொண்டேயிருக்கும் வரை நீயும் பின் சென்றபடியே இருக்கிறாய். ஒளியை ருசித்த உன் மயக்கம் மீளும் போது உன் உடல் வெளிறத் துவங்கிவிடுகிறது. உன் சகோதரி வெளியேறி நடக்கத் துவங்கிவிடுகிறாள். (பக்கம் 248)

மழையினை வேம்பு சொரியும் பூக்களாகக் காணும் பீஷ்மர், இன்னும் சாந்தியுறாதவளான அம்பாவிடம், "உன் நேசம் என்னை மரணத்திற்குரியவனாக்கியதால் சந்தோஷமடைகிறேன் நான். அளவு மீறிய உனது பிரியத்தால் மரணமடைவது சாந்தி தருகிறது. அம்பா, காற்று மலர்களை கொய்வது வெறும் சுபாவம் அல்ல, அது நேசிப்பு. தனிமை மீறிய அலைக்கழிப்பு" என்கிறார். தனக்குத் தீராத பசி, அதற்கு இக்காண்டவ வனமே உணவு, அதனை நான் உண்ணும் வகையில் வனத்தைக் காக்கும் தட்சகன் மற்றும் இந்திரனிடமிருந்து காக்க வேண்டும் என்று ஒரு பிராமணன் வேண்டவும் அப்படியே செய்கின்றனர், அர்ச்சுனனும், கண்ணனும். பசியாய் பிராமண ரூபத்தில் வந்தது அக்னியென்றும் முன்பொரு சமயம் 12 ஆண்டு ஒழிவின்றி நடந்த வேள்வியில் நெய்யை அபரிமிதமாக புசிக்க அக்னியின் பிரகாசமும் ஒளியும் மங்கிப் போகவே, இந்தப்பசி உண்டாயிற்று என்று காரணத்தை எடுத்துரைப்பார் வைசம்பாயனர். பிராமணப் பசிக்கு எந்த இரையும் ஒரு பொருட்டல்ல, எதனையும் அழிக்கலாம்.



படிப்பகம்

www.padippakam.com

எரியுண்ணும் காண்டவ வனத்திலிருந்து தப்பி வந்த மயன்தான் சபாமண்டபம் என்னும் மாயமண்டபத்தை தனது பிரதியுபகாரமாக கட்டித் தருகிறான். மண்டபத்தை உருவாக்கும்போது, பாண்டவர் வீழ்ச்சிக்கான வீரத்தையும் மயன் ஊன்றி விடுகிறான் என்பதை பயணி அறிகிறான்.

"தன் பகைமையை உன்னத சிருஷ்டியில் வடிவமாக்கிவிட்டு புறப்பட்டு விட்டான். மாய மண்டபம் எனும் அழகின்பின்னே எரிந்து உருத்தெரியாது போன காண்டவ வனம் ஒளிந்து கொண்டிருக்கிறது. பறவை, மிருக, தாவர ஜீவராசிகளின் உயிர்த்துக்கம் போல தீர்க்க முடியாத கனவுத் துயர் பாண்டவ வம்சத்தின் மீதும் பற்றிக் கொண்டது. தனது சிருஷ்டியின் வழியே அவமதிப்பைச் சகித்துக் கொண்ட மயன் எரிந்து கிடந்த வனவெளியைத் தாண்டி பனிமூடிய மலைப்பகுதியின் வயிற்றினுள் நுழைகிறான். அவன் அறிந்து கொள்வதற்காகப் படைக்கப்பட்ட மர்மம்போல் தொலைதூரம் குகைகள் கிளை பிரிகின்றன" (பக்கம் 107)

## 3

பாண்டவர் - கௌரவர் கதைக்கு முன் மாதிரி வடிவமான ஒரு கதை பாரதத்தில் வருகின்றது. காசிப முனியின் 13 மனைவியரில் விநுதை, கத்துருவை என்னும் இருவர் புத்திரபாக்கியம் இல்லாது, புத்திர காமேஷ்டி யாகத்தில் கிடைத்த பிண்டத்தை உண்ண, விநுதை இரு முட்டைகளும், கத்துருவை 105 முட்டைகளும் பெற்றனர். 500 வருடங்களுக்குப் பின் 105 முட்டைகளும் பிளந்து ஆதிசேடன், வாசுகி, கார்க்கோடகன், அனந்தன் முதலான 104 புத்திரரும் சவர்க்காரை என்னும் புத்திரியும் உதித்தனர். ஆனால் தனது இரு முட்டைகளும் இன்னும் அப்படியே இருக்கக்கண்டு ஆத்திரம் கொள்ளும் விநுதை ஒரு முட்டையை உடைத்துவிட கால் தவிர மற்ற அவயங்கள் கூடியுள்ள புத்திரன் பிறக்கிறான். அவன் அருணன் என்னும் பெயர்க்கொண்டு சூரியனின் சாரதியானான். பொறுமையாய் காத்திருந்த அடுத்த முட்டையிலிருந்து கருடன் பிறப்பான்.

99 சகோதரரும் ஒரு சகோதரியுமாக கௌரவர்கள் பிறக்க ஐவராக பாண்டவர் பிறப்பார்கள். இவர்களில் முதலில் தருமன் பிறந்ததால் ஆத்திரமுற்று தன் வயிற்றை உலக்கையால் குத்திக்கொள்ளும் காந்தாரிக்கு நூற்றுவர் பிறப்பர்.

பிறப்பிலேயே இரு தாயாதிகளும், விரோதம் கொண்டு விடுகின்றனர். தேவர்களும், அசுரர்களும், பாற்கடலை கடைந்து அமுதம் எடுக்கின்றனர். ஆனால் ஏற்கனவே, வல்லமை கொண்டுள்ள அசுரருக்கு அமுதம் கிடைக்கலாகாது என்று இந்திரன் சூது செய்கிறான். அமுதம் பெறுவதற்கு மட்டும் அசுரரைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். பலன் கிடைக்கும்போது வஞ்சனையுடன் ஒதுக்கிவிட முயல்கின்றனர்.

பதினெட்டு நாள் யுத்தம் நடந்து குருவம்சமே நாசமாகிவிட்டது என்னும் அளவுக்கு பேரழிவு நிகழ்கிறது. பாண்டவர்கள் வானப்பிரஸ்தம் ஏகி இமயமலை நோக்கி கயிலையாத்திரை செல்கையில் ஒவ்வொருவராக வீழ்ந்துவிட, தருமன் மட்டும் விண்ணகம் புகுவான் நாயுடன். கிருஷ்ணன் ஜரனின் அம்புபட்டு உயிர்விட, யாதவர்கள் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டு மாண்டு போகிறார்கள்.

'தம் முன்னோரான பாண்டவர் - சுயோதனன் முதலியோர் அழிவுறாதபடி நல்வார்த்தை கூறி தடுத்திருக்கலாகாதா' என்று தன் அவைக்கு வந்துள்ள வியாசரிடம் வினவுவான் ஜெனமே ஜெயன். 'என்ன சொன்னாலும் பயனிருந்திருக்காது. அது வினைப்பயன் மாற்ற இயலாதது' என்கிறார் வியாசர். "சுயோதனன் முதலானோர் அப்படிக் கேளாது போயினும், திருஷ்டாந்தமாக, "இன்றைக்குப் பத்தாம்நாள் உனக்கொரு பிரும்மஹத்தி வருகிறது. அதிலிருந்து தப்பித்துக் கொள், சாமர்த்தியமிருந்தால்" என்று கூறிவிடுகிறார்.

"தப்பிவிட்டால், பாண்டவர் - சுயோதனாதியர் மடிந்த குற்றத்தை என் பேரில் வைக்கலாம், இல்லாவிடில் காலகதி என்று உணர்ந்து கொள்ளலாம்" என்று விளக்கிவிட்டுப் போய்விடுவார். அதுபோலவே அவன் எச்சரிக்கையாயிருந்தும் யாகம் இயற்றியும் கூட



படிப்பகம்

www.padippakam.com

பிரும்மஹத்தி வந்துவிடும். இந்த அடிப்படையில்தான், நிகழப்போகும் பாரதக்கதையை முன்கூட்டியே வியாசர் எழுதிவிட்டார் என்பது. சுழன்று வரும் காலகதியில் தொடங்கி, வளர்ந்து, முடிவுறுபவை, மீண்டும் தொடக்க நிலைக்கே வந்து விடுகின்றன. இறந்த காலத்தை சாபமாகச் சுட்டிக் காட்டுபவர்கள் எதிர்காலத்தை வரமாகக் கருதுகிறார்கள். சம்பவம் நினைவுகளாகப் பாரமேறி அழுத்துவது சாபம், எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் சேர்ந்த குதூகலம், வரம்.

பண்டிதர்களின் வியாக்கியானத்தில் பெருகும் பாரதக்கதைகளில் பாண்டவர்கள் நல்லவர்களாகவும், கௌரவர்கள் தீயவர்களாகியும் விடுகின்றனர். ஆனால் நாட்டார் மரபு கூத்துகளில் வாய்மொழி கதை வடிவங்களில் அப்படியில்லை. அவர்களை சோகத்தில் ஆழ்த்துவது துரியோதனன் வீழ்ச்சியே. தருமன், கிருஷ்ணன், பீமன் போன்ற பாத்திரங்கள் பிரதாபம் பேசுகையில் கோமாளியின் பரிகசிப்பில் அப்பிரதாபங்கள் தூள் தூளாகிப் போய்விடும்.

துரியோதனின் படுகளத்திற்காக உருவாக்கப்படும் துரியோதனன் மண் உருவில் கிருஷ்ணனின் சாந்தம் கூடியிருப்பதாக பயணி கண்டு கொள்வது இந்த மறுவாசிப்பால்தான் மகாபாரதத்தை உருவாக்கியதில் கதைகளின் பங்கு பாதியென்றால், அவற்றை எடுத்துரைக்கும் சொல்லாடல் இன்னொரு பாதியாகும். இரு குடும்பங்களுக்கிடையே பிறவியிலேயே விரோதம் வந்துவிடுவதாக பூர்வகதைகள் நிலவ, ஒரு குடும்பத்தை நல்லதாகவும், இன்னொன்றைத் தீயதாகவும் விளக்கிச் செல்கிறது சொல்லாடல். தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் போர் என்றால் தேவர்கள் வெல்லவேண்டும் என்று ஆசைப்படுவது சொல்லாடல்.

மன்னர்கள் தொடர்ந்து யாகங்கள் வேட்க வேண்டும். வேதியர்க்கு பசுக்களும், பொன்னும் கன்னிகாதானமும் தாராளமாக அள்ளி வழங்கவேண்டும் என்கிறது. வேதியருக்குச் சிறு அவமானமென்றால் இனத்தையே நிர்மூலமாக்க வேண்டும் என்று கிளம்புகிறார்கள் அஸ்வத்தாமனும், பரசுராமனும். படகில் செல்லும் பராசார முனி, படகோட்டியான மச்சகந்தி, பருவம் எய்தாத நிலையிலும் ஆறு, பகல்பொழுது, என்று தடைகள் இருப்பினும் பருவமெய்தவைத்து மச்சவாடையை மாற்றி இருள் கவியச் செய்து, ஆற்றுத்திட்டை உருவாக்கி கூடிவிட்டு ஏறெடுத்துப் பாராமல் போய்விடுவார். அதன்பிறகு மச்சகந்தி என்னவானாள், அவள் குழந்தை எப்படி வளர்ந்தது என்றெல்லாம் பராசரர் கவலைப்படமாட்டார்.

"-- ஆகையால் நீயும் இந்தப் பிராமணர்களை விதிப்படி பூஜிப்பாயாக. வழிநடையினால் இளைத்த சரீரமுள்ளவனும் வழி நடையினால் புழுதிபடிந்தவனுமாயிருப்பவன். 'அன்னதானம் செய்பவன் யார் ?' என்று கேட்கிறான். அவன் ஆசையுடன் வீட்டுக்கு வருகிறான். அவனை நீ முயற்சியுடன் பூஜிப்பாயாக. அவனே அதிதி. அவன் பிராமணன். இந்திரனுடன் சேர்ந்த எல்லாத் தேவர்களும், செல்லுகின்ற அந்த அதிதியைப் பின்தொடர்ந்து செல்கிறார்கள். அவன் நன்றாகப் பூஜிக்கப்பட்டால் தேவர்கள் பிரீதி அடைகிறார்கள்" என்று மார்கேண்டய முனிவர் தருமனுக்கு உபதேசிப்பார். இன்னோரிடத்தில் பிராமணர்களின் மகத்துவத்தை பாண்டவர்கள் அறிய விரும்புவதாகவும் இவர் எடுத்துரைப்பதாகவும் இருக்கும். பிராமணன் ஒருவன் ஒரு ரிஷியை விலங்கென்று கருதி அம்புவிட்டு வீழ்த்த, ரிஷியால் சூத்திரனாகப் பிறக்கும்படி சபிக்கப்படுகிறான். மீண்டும் சாபம் விலகும் தருணத்தில் பிராமணனாய் பிறப்பான் என்று மார்கண்டேய முனிவர் விதந்துரைப்பார். பிராமணத்துவம் பிறப்பினால் மட்டுமல்ல, வாக்கு, மனோ காரியங்களாலும் நிறைவேற்றப்பட வேண்டியது என்று அங்கங்கே சொல்லப்பட்டாலும், பிறப்பு பிராமணனாய் இருத்தல் வேண்டும் என்னும் முன் நிபந்தனை மகாபாரதத்தின் சொல்லாடலில் நிலைநாட்டப்பட்டிருக்கிறது.

அசுவமேதயாகம் முடிந்து வேதியருக்கு பொன்னும், பொருளும், பசுக்களும், கன்னிகாதானமும் அளவின்றி வழங்கி 'இதற்கு மேலான தான தருமங்கள் இருக்க முடியுமா?' என்று அனைவரும் வியக்கின்ற வேளையில், ஒரு கீரிப்பிள்ளை தருமன் அவைக்கு வந்து,



படிப்பகம்

www.padippakam.com

'இவை என்ன பிரமாதம், இவை வெறும் தூசு தான், சத்துப்பிரத்தன் என்னும் ரிஷி தன் மனைவி, மகன் மற்றும் மருமகளுடன் வாழ்ந்து வரும் காலத்தில், கடும் பஞ்சம் நேரும்போது ஒரு வேளை மட்டும் இருக்கும் சொற்பமான அரிசிமாவில் உணவு தயாரித்து உண்ணும் வேளையில், பசியால் வாடும் பிராமணனுக்கு தன் பங்கைக் கொடுத்து விடுகிறான். அப்படியும் பசி தீராதுபோக, அவன் மனைவி தன் பங்கை தந்துவிடுகிறாள். இப்படியே மகனும், மருமகளும், தந்து அவன் பசியாற்றுகின்றனர். பிராமண உருவில் வந்த ஆதிசேடன் அவர்கள் வேண்டியதெல்லாம் அருளுவான் இதுதான் உயர்ந்த தானம்' என்று பரிகசிக்கும். பரிகசிப்பது கீரிப்பிள்ளையா? / பிராமணப்பிள்ளையா ?

பாரதத்தை சொல்லத் தொடங்கும்போது பேழையில் வைக்கப்படும் கருப்புத்துணி, கதைமுடியும் தறுவாயில் வெண்ணிறத்துணியாகிவிடும் என்னும் நம்பிக்கை இருக்கிறது. பாண்டவர் கௌரவர் வரலாறு மட்டுமல்லாது, முனிவர்கள் உபதேசங்கள், பிரபஞ்ச உற்பத்தி, ஒடுக்கம் போன்றவையும் பாரதத்தில் அங்கங்கே இடம் பெற்றிருக்கும்.

பரசுராமரால் சூரிய குல மன்னர்கள் கொல்லப்படவும் அவர்தம் அரசியர் குல ஆசார்யர்களுடன் கூடி எட்டெட்டுப் புத்திரர்களையும் இரண்டிரண்டு புத்திரிகளையும் பெற்று வளர்த்தனர். காசிபர் தம் வசத்திலுள்ள பூமியை அப்பட்டத்திரசியர் புத்திரர்களுக்கு கொடுத்து ஆட்சிபுரிந்து வருமாறு செய்கிறார். ஒரு நாளில் பூமி பாரம் தாங்காது மும்மூர்த்திகளிடம் வேண்டவே, திருமாலும் அசுரரும் மானுட தேகமெடுத்து பூமிபாரத்தை நீக்கினர்.

பிரமனுடனில் அத்திரி, அரிசி, புலத்தியன், கீரன், கிருத்து, புலகன் என்னும் ஆறுபுத்திரரும் வலது பாதத்தில் தக்கனும் இடது பாதத்தில் தரணியும் உதித்தனர். அரிசியின் புத்திரன் காசிபர். காசிபரால் உலகம் விருத்தியாயிற்று. தக்கன், தரணியைக் கூடி ஆயிரம் புத்திரரைப் பெற்றான். அவர்கள் பிரம்மச்சரியம் பூண்டு, தவமியற்றி ஞானபதம் அடையவே, மீண்டும் தக்கன் தரணியைக் கூடி ஐம்பது பெண்டிரைப் பெற்றான். அவர்களில் பதின்மரைத் தருமன் என்கிற மறுவுக்கும், 27 பேரைச் சந்திரனுக்கும், 13 பேரை காசிபருக்கும், விவாகம் செய்து கொடுக்க இப்படி உலகம் விருத்தி பெற்றது. இவர்களிடமிருந்தே மன்னரும் ரிஷிகளும், மிருகங்களும், தாவர வர்க்கங்களும், பறவைகளும் உண்டாயின.

பிரகிருதியின் அம்சங்களாகப் போய் சேர்ந்து கொள்கிறார்கள். பீஷ்மராகப் பிறந்து பிரம்மச்சரியம் அனுஷ்டித்து பெருமை பொருந்தியவராயிருந்த பிரபாசனவசு மீண்டும் வசுபதமடைகிறார். சுக்கிரனின் அம்சமான துரோணர் சுக்கிரனைச் சார்ந்து விடுகிறார். யட்சனின் அம்சமான பாண்டு யட்சபதவி பெறுகிறார். சூரிய அம்சமான கர்ணன் சூரியனுடன் கலந்துவிடுகிறான். வாயு குமாரனான வீமன், வாயு பகவானைச்சார்கிறான். சிகண்டியோ காந்திருவாம்சங் கலந்து கனவிலமிழ்ந்தான் என்கிறது பாரதம்.

புராணங்களையும், இதிகாசங்களையும், வைத்து இன்றைக்கு எழுதுவோர் அவைகளை ஊதிப்பெருக்கி பூதாகரமாக்குவதுதான் பொதுவாக நிகழ்கிறது. ஒரு சிறு விமர்சனக்குறிப்பு கூட இல்லாமல் புனைவுகள் உருவாக்கியவர்கள் உண்டு. யயாதி வாழ்க்கையை நாவலாக்கிய **காண்டேகரும்** 'சாம்பனின் சாபமீட்சியை நாவலாக்கிய **கால்கூட்டும்** இப்படித்தான் மரபின் தொடர் சங்கிலியாக தம் புனைவுகளை உருவாக்கியிருக்கிறார்கள். இதிகாசக் கதைகள் ஒன்றிரண்டை வைத்து சிறுகதைகள் எழுதி இருக்கும் **மாஸ்தி வெங்கடேச அய்யங்காரிடமும்** மறுஎழுத்தாக்கம் இல்லை. **ஜெயமோகனும்** அபிமன்யு கதையை வைத்து 'பத்மவியூகம்' எழுதும்போதும் சரி, 'விஷ்ணுபுராணம்' என்று முற்றிலும் புனைவாக ஒன்றை எழுதும்போதும் மரபிலிருந்து ஓரிழை கூடப் பிசகாமல் கட்டமைக்கின்றனர். பாரதத்தில் வரும் ஒரு கதையை அடிப்படையாக கொண்டு 'நித்ய கன்னி'யை உருவாக்கிய **எம்.வி.வெங்கட்ராம்** மட்டுமே பெண்ணின் குரலை ஒலிக்கச் செய்யும் வகையில் மறு எழுத்தாக்கம் செய்துள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

இப்போது வந்திருக்கும் 'உப பாண்டவம்' மகாபாரதத்தை முழுவதுமாக கலைத்துப் போட்டு, வேறு ரூபம் கொண்டதாக, வேறு குரல் கொண்டதாக, வேறு திசைநோக்கியதாக உருவாக்கப்பட்டுள்ளது. மகாபாரதத்திலுள்ள வித்துக்களான கதைகளும் மாந்தர்களும், எடுத்துக் கொள்ளப்பட்டு அதன் சொல்லாடல் முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளது. மறுவாசிப்பில் தருமனைப் போலவே சுயோதனனும் உன்னதமானவனாயிருக்கிறான். கௌரவர்களுக்கு சகுனியின் பாத்திரம் எப்படியோ, அப்படியே பாண்டவருக்கு கிருஷ்ணனின் பாத்திரம் என்பது புரிபடுகின்றது. பாண்டவர் வீழ்ச்சி காண்டவ வனத்தின் களத்தில் தொடங்கிவிடுகிறது. வனத்தில் அழிவுற்ற தாவர இனங்களும், மிருகங்களும் வேடுவ குலமக்களும், வடித்த கண்ணீரில்தான் பாண்டவர் அழிவு வேர் கொண்டுள்ளது.

காமமும் வேட்கையும், தீராது உழலும் சந்திர குலமன்னர்களின் இருண்ட முகங்கள் பதிவாக்கப்பட்டுள்ளன. ஒலிக்காத பெண்களின் குரல்கள் ஒலிக்கின்றன. பால்பேத திரிபுகளின் நுட்பங்கள் சேகரமாயுள்ளன. மகாபாரதத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய அளவுக்கு தள்ளப்பட வேண்டியவையும் உள்ளன என்பது புலப்படுத்தப்பட்டுள்ளது.

பிராமணருக்கும், சத்திரியருக்குமிடையேயான போட்டிகளில் வைசிய சூத்திரர் புறக்கணிக்கப்பட்டதான அவலம் சொல்லாமல் சொல்லப்பட்டுள்ளது.

பாரதத்தில் தானும் ஒரு பாத்திரமாக இடம் பெறும் வியாசர்தான் பாரதக்கதையினைத் தொகுத்திருக்கிறார். சந்தான மரபு அற்றுப்போய் விடக்கூடாது என்பதற்காக சுக்லதானம் செய்வதுதான் வியாசரின் முக்கிய பங்கு மற்றபடி அவ்வப்போது வந்து பாண்டவருக்கு ஆறுதல் கூறுவதும், சமாதானம் செய்வதும், ஆலோசனை கூறுவதும் தவிர வேறு பங்கில்லை. பாத்திரம் என்பதைவிட பார்வையாளனாகவே இருக்கிறார். வியாசரை நாவலின் தொடக்கத்தில் படகோட்டியாக காட்டிவிடுவதன் மூலம் இந்த விஷயத்தை கோடிட்டுகாட்டி விடுகிறார் எஸ்.ராமகிருஷ்ணன். ●


**அடிப்படை நூல்கள் :**

1. ஸ்ரீ மகாபாரதம் / வனபர்வம் - இரண்டாம் பாகம் / இராமானுஜாச்சார்யர் பதிப்பு, கும்பகோணம், 1932.
2. ஸ்ரீ மகாபாரத வசனம் - நான்கு பாகங்கள் / த.சண்முக கவிராயர் / பி. இரத்தினநாயகர் அண்டு சன்ஸ், சென்னை.
3. **Yuganta /. Irawati karve / Disha Books, Hydrabad, 1991**

**இதர ஆதாரங்கள் :**

1. **The Tragic offering of the archer's thumb / Damodar Prabhu / The times of India, Bangalore 31.3.98**
2. பாண்டவபுரம் / சேது / தமிழில், குறிஞ்சிவேலன் / விழுதுகள்
3. **Myths of the Hindus and Buddaists / Ananda Coomarasamy & sister Nivedita / Reprint - Jaico Pub. House, Mumbai.**





கொங்கு வட்டாரச்
சொல்லகராதி
பெருமாள் முருகன்
தமிழோசை
பதிப்பகம்
கோவை
விலை ரூ. 60/-

# வேர்களைப் பேணும் அபூர்வ மனம்

**த.பார்த்திபன்**

● தமிழ்மொழி படைப்புலகு சார்ந்தும், புதியன கொணர்தல் ரீதியிலும், ஆக்கப்பூர்வமான செயல்களோடு வேர்களை தக்கவைத்துக் கொள்ளும் பாங்கிலும் அரசுக்கும், அதிகாரத்திற்கும், கல்வி மையத்திற்கும், பெரிய நிறுவன அமைப்புக்கும் வெளியே சிறப்பாக செயல்பட்டு வருகிறது. பிரகடனம் எதுவும் அற்று சரியான திசையில் நகர்கிறது.

இம்மொழி வளத்தைப் பேணுவதில், கட்டிக்காப்பதில் 'சிறுபத்திரிக்கை சார்' பங்களிப்பே மிகை பகுதி. இம்மொழி இவ்வியக்கத்தவர் ஊடாக தன்னை மறு பரிசீலனைக்கும் அப்பரிசீலனையின் தரவுகளிலிருந்து மேல்நோக்கிய பயன் ஒன்றையும்



படிப்பகம்

www.padippakam.com

அடையச் செய்து கொள்கிறது.

அகராதிகளுடனான நமது தொடர்பு பொருத்தமானது தானா? நமது தேவைகள் அனைத்தும் அகராதிகள் முழுமையாய் நிறைவு செய்கின்றனவா? இக்கேள்விகள் எல்லா மொழிகளிலும் எழுப்பப்படுகின்றன. இவற்றுக்கான பதில் எக்காலத்திலும் இல்லை. போதுமானதாயில்லை என்றே இருக்க முடியும்.

எனில் எந்த ஒரு அகராதியும் முழுமையானது அல்ல என்ற முடிவுக்கே வருகிறோம். கால நீட்சி, தேடுதல் நிறைந்த பிரக்ஞை இவற்றோடு இவை வளர்ந்து கொண்டும், புதுப்பித்துக் கொண்டும் இருப்பன. அதேபோல அகராதி ஒன்று தரும் அர்த்தம் / விளக்கம் அல்லது அது தரும் சுட்டி முழுமையானது அல்ல. தனி வார்த்தைக்கு அர்த்தப்படுத்தப்படும் பொருள் விளக்கம், சுட்டல் வேறுவேறு வார்த்தைகளின் கூட்டால் இணைந்து வெளிப்படுகிறது. வாசகனின் அவ்வேறுவேறு வார்த்தைகளுடனான தொடர்பு, பரிட்சயம், புரிதல், பயன்பாட்டின் தெளிவு இவற்றுடன் அவ்வேறுவேறு வார்த்தைகளின் இணைவில் உருவாகும் கருத்துருவம் அல்லது சுட்டுவதிலும், சுட்டப்பெறுவதிலும் மீதான அறிவு அனுபவம், ஒப்பீடு, உள்விளக்கம் என்பவற்றுடன் தொடர்புடையது. எனவே பெறுபவன் ஒருவனுக்கு முழுமை / நிறைவு சாத்தியமற்றதாகிறது. என்றாலும் அகராதி என்பது யாவருக்கும் அவசியமான ஒன்றாகிறது. மொழியின் செழுமை, பிற மொழிகளுடனான பரிமாற்றம், பயன்பாடு இவற்றை அறிந்து கொள்ளவும் இவை துணைபுரிகின்றன.

பார்வை நூல்கள் அல்லது தரவு நூல்கள் வெளிவந்த பிறகே அதன் முக்கியத்துவம் உணரப்படுகிறது. அதுவரை அவை இல்லாத வெற்றிடம் ஒன்று உணரப்படுவதில்லை. அவ்வகை தேவையினை நிவர்த்தி செய்ய விரும்பும் பிரக்ஞை பெறுபவரும், அதற்கான உழைப்பைச் செலுத்துபவரும் சிலரே. இவ்வகை முயற்சி கைகூடி இவ்வகை நூல்கள் வெளிவந்த பிறகே அதன் நிறை குறைகள் சுட்டிக்காட்டப்படுதல் நிகழ்கிறது. கூடவே பலவித கூடுதல் யோசனைகள் தரப்படுகின்றன. இங்கு நான் சுட்டிக்காட்டும் பெருமாள் முருகனின் கொங்கு வட்டாரச் சொல் அகராதியின் சிறப்பு, நிறை, குறை, போதாமை முதலியன மேற்சொன்ன செயலின் உண்மையைச் சார்ந்ததே.

1. பெருமாள் முருகன் குறுகிய நோக்கில் அணுகப்பட்ட, வரலாற்றுச் சாட்சிகளை புறந்தள்ளிய மிகப்பிற்காலத்திய அனுமான கொங்கு வட்டாரத்தின் எல்லைகளையே தன் களனாக கொண்டுள்ளார். உண்மையில் கொங்குநாட்டின் நிலப்பரப்பு மிகமிகப் பெரியது. சங்க காலத்தில் மூவேந்தர்கள் ஆண்ட நிலப்பரப்பை விட கொங்கு நிலப்பகுதி பெரிது. அன்றைய கொங்குநாடு இன்றைய கர்நாடக மாநிலத்தின் பெரும் பகுதியை உள்ளடக்கியது. அதாவது இன்றைய மைசூர் (எருமையூர்) ஹளேபீடு (துவரை ஊர்) இன்றைய துவாரசமுத்திரம், கபினி ஆற்றங்கரை ஊரான கிட்டூர் அன்றைய புன்னாடின் தலைநகர் முதலியவற்றை சிறப்பாகச் சொல்லலாம். இந்த கொங்கு நில எல்லை கி.பி. 9ம் நூற்றாண்டுக்கு முன்புவரை இருந்ததாக நிருபதுங்க அரசன் (கி.பி. 850) இயற்றிய கவிராஜ மார்க்கம் என்னும் கன்னட இலக்கண நூலை ஒரு ஆதாரமாக வைத்து மயிலை சீனி. வெங்கடசாமி தன்னுடைய "கொங்கு நாட்டு வரலாறு" நூலில் தெளிவாக விளக்குகிறார். (வெளியீடு என்.சி.பி.எச். சென்னை, இரண்டாம் பதிப்பு ஜனவரி 1978) அன்றும் சரி, சுதந்திரத்திற்குப் பிறகு மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்பட்ட பிறகும் சரி இன்றைய தருமபுரி மாவட்டம் கொங்கு நாட்டின் ஒரு அங்கம். இப்பகுதியின் சங்ககால வரலாற்று நாயகன் அதிகமான். நிரூபணம் எதுவும் தேவையற்ற வரலாறு இது. ஆனால் கோவைக்கிழார். இராமச்சந்திர செட்டியார் குறிப்பின் படி மிகப் பிற்கால அனுமான கொங்கு எல்லையை தேர்வு கொண்டது ஒருவகையில் துரதிஷ்டமே. எனில் இந்த அகராதி "பிற்கால அனுமான கொங்கு வட்டாரச் சொல்லகராதி" என்றிருப்பதே பொருத்தமானது.

2. சில சொற்களுக்கு ஒரு சொல்லில் சொல்லவேண்டியதை சிறமப்பட்டு நீண்ட வாக்கியங்களில் அயர்ச்சி தரும்படி பொருள் தருகிறார்.

ப. 25 <u>அதட்டி</u> (அதிர்ச்சி) 1. **மிரட்டி 2. கடுஞ்சொல் சொல்லி**

ப. 30 <u>ஆகாசக் கிழங்கு</u> : (தோண்டி எடுத்துக் கயிற்றில் கட்டித் தொங்கவிட்டால் துளிர் விட்டு வளரும் ஒரு வகை மூலிகைக் கிழங்கு) **அமுக்குரான் கிழங்கு**



படிப்பகம்

www.padippakam.com

ப. 39 எக்கு : (வயிற்றை உள்ளே ஒட்டிப் போகும்படி செய்) **குதிகாலால் உயர்ந்து நிற்றல். அந்நிலையில் பெரு முயற்சி செய்தல்.**

ப. 43 ஒட்டக் கூத்து : (ஒட்டரைத் தலைவராகக் கொண்ட ஒருவகைக் கூத்து) **1.ஒட்டர் இனத்தினரால் ஆடப்படும் ஒருவகைக் கூத்து. 2. ஒட்டக்கூத்தர் இயற்றிய ராமாயணத்தின் பகுதியான "உத்தரகாண்டம்" கதையை மையமாகக் கொண்டு ஆடப்படும் கூத்து.**

ப. 48 கக்கல் : (நாள்பட்ட எண்ணையிலிருந்து எழும் கெட்டவாசம்) **வாந்தி**

ப 48 கச்சாயம் : (அரிசி மாவும் வெல்லமும் கலந்து எண்ணையில் வேக வைக்கும் இனிப்புப் பண்டம்) **அதிரசம்** (கச்சாயம் என்பது கன்னடச்சொல்)

ப 56 கவுளி : (நூற்றி நான்கு எண்ணிக்கை கொண்ட வெற்றிலை அளவு) **பல்லி**

ப 78 கோளாறு : (ஒரு செயலை எளிமையாகச் செய்யும் வழி) **1. கிறுக்கு 2.அசம்பாவிதம் 3. சம்பந்தம் அற்று இடையில் புகுந்து காரியத்தை கெடுக்கும் புத்தி.**

ப 79 சங்கடை : (குழந்தைக்கு பால் வார்க்கும் சங்கு போன்ற பாத்திரம்) **பாலாடை**

ப 115 பாண்டியங்குழி : (பொருட்களைச் சேமித்து வைப்பதற்காகவோ, வேறு காரணத்திற்காகவோ பழங்காலத்தில் நிலத்தில் வெட்டப்படும் பலகைக்கல்லால் மூடப்பட்டிருக்கும் குழி) **1. பெருங்கற்கால ஈமக் குழி 2. மாண்டவர் குழி**

ப 132 முறுக்கம் : (உடல்தினவு, பலம்) **1. வீம்பாய் இருத்தல், 2. அடங்காமல் இருத்தல்.**

3. சில விடுபட்ட சொற்கள் : இவை கொங்குப் பிரதேச பிரத்யேக பயன்பாடு கொண்டவை என நான் கருதுகிறேன்.

| | | |
|---|---|---|
| 3.1 | அங்கிட்டு | - அங்கு, அந்தப்பக்கம் |
| 3.2 | இங்கிட்டு | - இங்கு, இந்தப்பக்கம் |
| 3.3 | ஓலவாய் | - உளறுவாய், ரகசியங்களைக் காப்பாற்றாதவன் |
| 3.4 | கண்டகம் | - ஒரு வகை முகத்தல் அளவை (கருப்பிக்கு கண்டகம் நகை போட்டால் செகப்பி) |
| 3.5 | கதிகெட்டவை | - நாதியற்றவை / போக்கற்றவை |
| | கதிகெட்டவள் | - நாதியற்றவள் / போக்கற்றவள் |
| | கதிகெட்டவன் | - நாதியற்றவன் / போக்கற்றவன் |
| 3.6 | சல்லீசு | - அளவில் அபரிமிதமாக இருத்தல், விலை குறைவாக இருத்தல் |
| 3.7 | சோமம் | - வேட்டி |
| 3.8 | நெரித்தல் | - பருப்பு வகைகளின் மேல்பொட்டை உடைத்தல், பொடியாக்கல் |
| 3.9 | பீச்சாங்கை | - இடக்கை |
| 3.10 | முக்குதல் | - திணறுதல் |
| 3.11 | முதலாளி | - கணவனைக் குறிக்கும் சொல் |
| 3.12 | டொக்கு | - பூஜ்யம் |

4. மொழியின் பொதுவழக்கில் உள்ள சொற்களின் மருவுப் பயன்பாடு அல்லது திரிபு உச்சரிப்பு சொற்களை வட்டாரச் சொல் என்று அடையாளப்படுத்தலாமா? அது ஏற்புடையதா?

உ-ம். 4.1 கவுரவம் (பொ.வ) - கெவுருத்து (வ.வ)

4.2 கிணறு (பொ.வ.) - கெணரு (வ.வ)

**பெருமாள் முருகன் சொற்களை இன்னும் சுண்டியிருக்கவேண்டும்.**

5. விவசாயம் சார்ந்த தொழிற்பெயர்கள் அதிக அளவில் இடம் பெற்றிருக்கும் இவ் வட்டார அகராதியில் பிற தொழிற்பெயர்கள் இடம் பெறவில்லை. இவ்வட்டாரத்தின் பிற்கால பிரதான தொழில்களான நெசவு, நூற்பு சார்ந்த சொற்கள் இடம் பெறாமை பெரிய குறையே.

6. வட்டார விளையாட்டுகள், மரம், செடி, கொடி வகைகள், சடங்குச் சொற்கள், சிறு தெய்வ, குலதெய்வ பெயர்கள் இடம் பெறாமல் செய்ததில் நியாயம் இருப்பதாகப் படவில்லை. அவை சாதி அடையாளம் சுட்டுபவை என புறக்கணிப்பது சரியா? அவை முதலில் மொழியின் பதிவுகள். நாம் தரவேண்டிய முதல் நிலையும் அதுதான்.



படிப்பகம்

www.padippakam.com

7. கவனப் பிசகின் விடுபடல் குறித்து :

ப 82 சன்னக்கோல் : காண்க சன்னக்கட்டை என்று இருக்கிறது. ஆனால் சன்னக்கட்டை எனும் சொல் இடம் பெறவேயில்லை.

8.1 அகராதியில் சிறப்பாக குறிப்பிட வேண்டியது படங்கள். சொற்களுக்கு படங்களுடனான அர்த்தம் தெளிவை எளிதாக்குகிறது. படங்கள் இல்லாது போயிருப்பின் யானையை குருடர்கள் வர்ணனை செய்த கருத்துருவம் போலவே பரிச்சயமற்றவர்களுக்கு இருந்திருக்கும்.

8.2 சிறுசிறு தொழிற்பெயர்கள் வியக்கத்தக்கவாறு இருக்கின்றன. கயிற்றுக் கட்டில் தொடர்பான சொற்கள் 26.

8 அகராதி வெளியீட்டில் தேவையான வரைவியலை இவர் பயன்படுத்திக் கொள்ளாதது பெருங்குறை. நாளைக்கு பெருமாள் முருகன் ஒரு தவறான முன்னுதாரணமாகிவிடும் ஆபத்து நேரும். வரைவியல் இன்னும் இந்த அகராதியை செம்மைபடுத்தியிருக்கும்.

9. வட்டார வழக்கு அகராதிகளில் : பழ மொழிகள் இடம் பெறுவது அவசியம் என்றே கருதுகிறேன். நமக்கு நிறைய பிரதேச வழக்குச் சொற்களின் பயன்பாடு வெளித்தெரியும். இவ்வகை அகராதியில் மேலும் நான் இடம்பெற வேண்டும் என நினைப்பவை பழமொழிகள், மரபுத்தொடர்கள், சொற்தொடர்கள். இவற்றில் பொதிந்துள்ள தொழிற்நுட்ப காரண காரிய சொற்கள் ஏராளம். ஏராளம்.

எனது சுட்டிக்காட்டுதலால் இடம் பெற்றுள்ள குறைகள், அகராதி தொடர்ந்து புதுப்பித்துக் கொண்டே இருப்பது என்ற உண்மையின் முன் குறைகள் அல்ல.

அகராதி ஒன்றை தொகுத்து பதிப்பிக்கும் பணியில் உற்சாகமூட்டி, களைப்பு அறியா உழைப்பு அளித்த பெருமாள் முருகனின் மனம் அபூர்வமானது. இப்பணியின் மூலம் தன் வேர்களைப் பேணும் சரியான நிகழ்வு ஒன்றை வெளிப்படுத்தியுள்ளார். பொருளாதாரம் சார்ந்தும், பிற உழைப்பு உதவிகள் சார்ந்தும் இலாப நோக்கோ, பிரதிபலன் நோக்கோ அற்ற தனி மனித உழைப்பை இவர் வெளிப்படுத்தியுள்ளார். ●



விடுவிப்பு
பெ.அய்யனார்
ஷீலு பதிப்பகம்
மேலூர்
விலை ரூ. 45/-

## வாசிப்பு அலையவிட்ட வாழ்க்கை

**தேவ்நேஷ்**

● அபிப்ரியா என்ற பெயரில் கடந்த 20 ஆண்டுகளாக தாம் எழுதிய கவிதைகளில் தேர்ந்தெடுத்த இருபத்தாறும், இலக்கிய விதிகளுடனான தொடர்புகளையும், அனுபவங்களையும் பற்றியொரு கட்டுரையும், புதிய பார்வையில் வெளியான சில நேர்காணல்களும் அடங்கிய கதம்பமானதொரு தொகுப்பு நூல் இது. சில கவிதைகளில் இவருக்குக் கவிதை மொழி சிறப்பாகக் கைவந்திருப்பது தெரிகிறது. ஆனால் மிகவும் குறிப்பிடத்தகுந்தது என்ற அளவில் ஓரிரு கவிதைகளே உள்ளன. தொடர்ந்த வாசிப்பு அலைய விட்டிருக்கும் வார்த்தைகள் சம்பவங்களையும், வாழ்வனுபவங்களையும் கோதிக்கோதி கவிதையாக்கிக் கொள்கின்றன என்கிற இவரது கவிதைப் பற்றிய நம்பிக்கையே பல கவிதைகள் கவித்துவத்தை எட்டாமல் மொழிப் பதிவுகளாகி பலவீனத்தில் நிற்கிறது. மேற்பரப்பில் தெரியும் தோற்றங்களை நம்பாமல் அவற்றின் உள்ளே உள்ள உண்மையைப் பார்க்கும் ஆற்றல் கொண்டவர் என இவரின் கவிதைகளை முன்வைத்து மதிப்புரைத்துள்ள தமிழவனின் கூற்று நேர்காணல்களுக்கே பெரிதும் பொருந்துகிறது. சாலமன் பாப்பையாவின் நேர்காணல் இந்நூலின் பொதுப்பண்பிலிருந்து எட்டாது விலகிக் கிடக்கிறது. 1988 இல் எழுதிய இலக்கிய அனுபவக்கட்டுரை - சுந்தர ராமசாமி அபிப்ராயப்படியே இன்னும் விரித்து நுணுக்கமாக எழுதப்பட்டிருக்கலாம். விவரணைகள் உள்ள அளவிற்கு மனநிலைகள் அதிலில்லை. ஆனால் இது போன்ற கட்டுரை எழுதக்கூடிய இலக்கிய ஈடுபாடு இன்று அருகியே உள்ளது. அதனாலேயே இக்கட்டுரைக்கு ஒரு முக்கியத்துவம் உள்ளதெனலாம். இத்தொகுப்பின் சிறப்பம்சம் இதிலுள்ள நேர்காணல்கள். அதிலும் நகுலன், அபி, பிரம்மராஜன் ஆகியோரின் நேர்காணல்கள் அரிதானவை. நூலுக்கும் மதிப்பைக் கூட்டுபவை. ●



படிப்பகம்

www.padippakam.com



# இரகசியப்பெயர்

ஆ. முருகன்

● அப்போது எனக்கு முன் இரண்டே இரண்டு வழிகள்தான் மிஞ்சியிருந்தன, கம்யூனிஸ்ட் ஆகி புரட்சியின் மூலம் மனிதகுலத்திற்கு சுபீட்சத்தை கொண்டு வருவது, முடியவில்லையென்றால் தற்கொலை செய்துகொள்வது. இதில் சமரசத்திற்கு இடமே இல்லை. இந்த பூமியின் மேல் அனாதரவாக விடப்பட்டிருக்கிற மனிதனுக்கு அறிவு ஒன்றுதான் துணை, அதுதான் அவனை காப்பாற்றப்போகிறது என்பதில் திடமான நம்பிக்கை எனக்கு.

சென்னை நகரில் கடற்கரைக்கு இட்டுச் செல்லும் ஒரு சாலையில் விடுதி ஒன்றில் அப்போது நான் தங்கியிருந்தேன். ஒரு நாள் அந்த மகிழ்ச்சியான மனிதன் என்னோடு பகிர்ந்து கொள்ள வந்து சேர்ந்தான். வடக்கு தமிழ்நாட்டில் ஒதுக்குப்புறமான ஒரு கிராமத்திலிருந்து வந்து, ஒரு வியாபாரியின் மூலமாக வாழை மண்டி ஒன்றில் வேலைக்குச் சேர்ந்திருந்தான். பேச்சும், உடைகளை அணியும் விதமும் நகர நாகரீகத்திலிருந்து அவனை பிரித்தே காட்டியது. அறையிலிருந்த என்னுடைய புத்தகங்கள், இசை ஆல்பங்கள், டேப்ரிக்கார்டர், மற்ற அலங்காரங்களெல்லாம் அவனை மலைக்கச் செய்தன என்றாலும் என்னுடன் சகஜமாகவே பழகத் தொடங்கினான்.

அவனுடைய தேர்வுகள் எல்லாம் எளிமையாக இருந்தன. எதைக்குறித்தும் அவனுக்கு வருத்தமோ, துக்கமோ தோன்றவில்லை. எப்போதும் அவன் மகிழ்ச்சியாகவே இருந்தான். அந்த பெரியநகரத்தை ஒரு குழந்தையைப் போல ஆர்வத்துடன் பார்த்தான். மாலையில் கடற்கரைக்கு போய் இரவு வெகுநேரம் கழித்துதான் திரும்புவான். விடிந்ததும் மீண்டும் போய்விடுவான். கடலில் எதையோ தேடியே இந்த நகரத்திற்கு வந்தவன் போல இருந்தது அவன் போக்கு. இதுவரை நான் பார்த்திராத, என் கற்பனைக்கப்பாற்பட்ட ஒரு தன்மை அவனிடம் வெளிப்பட்டது. நானும் கிராமத்திலிருந்து வந்தவன்தான் என்றாலும் இவனை இப்படி வடிவமைத்திருக்கும் ஒரு சூழலை என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. ஒரு புதிரைப்போல அதை தெரிந்து கொள்ளும் ஆர்வம் எனக்குள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போனது.

அவனுடைய கிராமத்தைப் பற்றியும், தாய்தந்தைப் பற்றியும், சகோதரர்கள் பற்றியும், ஊரில் நடக்கும் விசேஷங்கள் பற்றியும் அவ்வப்போது அவன் சொல்வதுண்டு என்றாலும் இதெல்லாம் மிக சாதாரணத் தகவல்களாகவே எனக்குத் தோன்றின. ஏதோ ஒன்றைப் பற்றி சொல்லாமல் நழுவுகிறான் என்பது மட்டும் புரிந்தது.

ஒருநாள் இரவு தன் மௌனத்தைக் கலைந்து, நம்பமுடியாத இந்த கதையை



படிப்பகம்

www.padippakam.com

எனக்குச் சொன்னான். நான் தொடர்ச்சியாக சொல்லும் இந்தக் கதை, ஒரு கனவை விவரிப்பது போல தெளிவற்றும் முன்பின்னாகவும் அவனால் எனக்குச் சொல்லப்பட்டதுதான்.

இந்த வினோதம் நடந்தபோது அவனுக்கு ஐந்தாறு வயதுதான் இருக்கும். இரண்டு மலைத்தொடருக்கு மத்தியில் நீண்டு செல்லும் ஒரு நிலப்பகுதியில் ஒரு நதிக்கரையில் அவனுடைய கிராமம் இருந்தது. முன்னொரு காலத்தில் வானவர்கள் இந்த பாதை வழியாகவே பூமியை கடந்து சென்றார்களாம். எப்போதும் காணாத பெரும் வறட்சி தோன்றி அந்நிலப்பகுதியை சருகாக்கிக் கொண்டிருந்த பல மாதங்களுக்குப் பின் ஒரு மதியப் பொழுதில் திடீரென்று வானத்தில் கருமேகங்கள் கூடி பூமியை இருளச் செய்தன. மிருகங்களையும், குழந்தைகளையும் மிரளச் செய்த இடி முழக்கத்திற்குபின் பெருமழை ஒன்று பெய்தது. காற்றின் பெரும் வீச்சில் தலை கலைத்து பேயாடின தென்னை மரங்கள். தொடர்ந்து பெய்த மழையின் தணிவு நேரங்களில் அவனுடைய தந்தை தென்னங் கீற்றுகளை கொண்டு வந்து கூரையை பலப் படுத்தினார். வாசலில் வந்து தெரித்து விழுந்த ஆலங்கட்டிகளை சகோதரர்கள் இருவரும் ஓடிச் சென்று பொறுக்கி எடுத்தனர். அவனுடைய அம்மா அடுப்பை மூட்டி வேர்க்கடலையை வறுத்துக் கொண்டு வந்து அவர்களுக்கு முன் கொட்டினாள். நதியின் நீரின் சத்தத்தை மாலையில் அவர்கள் கேட்டார்கள். முன்னிரவையும் தாண்டி பெய்த மழை எப்போது நின்றதென்று அவர்களுக்குத் தெரியவில்லை. அச்சத்துடன் போர்வைக்குள் முடங்கியபடி அவர்கள் உறங்கிப் போயிருந்தார்கள்.

மறுநாள் காலையில் வெளியே வந்த போது மழை நின்றிருந்தது. மலையிலிருந்து இரைச்சலுடன் ஓடைகள் இறங்கின. நதி பிரவாகமெடுத்திருந்தது. நதியில் அன்று தொடங்கிய நீரோட்டம் இன்றுவரை வற்றவேயில்லை என்று அவன் எனக்குச் சொன்னான். செந்நிறத்தில் ஓடிய நதியின் இரண்டு கரைகளிலும் மனிதர்கள் வந்து நின்று வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தங்களுடைய சக்திக்கும் அப்பாற்பட்ட ஒன்றை காண்பதுபோல் கண்டார்கள். மரங்களையும், கிளைகளையும் பெயர்த்துக் கொண்டு வந்தது வெள்ளம். மலைப் பாம்புகள் கரை ஒதுங்கின. மாடுகள் மிதந்து போயின. எங்கிருந்தோ வீடுகளை பெயர்த்துக் கொண்டு வந்திருந்தது நதி. உறி பிணைக்கப்பட்டிருந்த வீட்டுதூலம் ஒன்று மிதந்து கரை ஒதுங்கியதை அவன் அப்பா தூக்கி வந்தார். தென்னை மரங்களும், வாழை மரங்களும் குலைகளுடன் பெயர்ந்து வந்தன. இரண்டு மூன்று மனிதர்களையும் அடித்துக் கொண்டு போனதாகச் சொன்னார்கள்.

பிற்பகலில் மெல்ல வடியத் தொடங்கிய வெள்ளத்தை அதன் போக்கில் விட்டுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள் எல்லோரும். அப்போது கைவிடப்பட்ட ஒரு பள்ளிக்கூட கட்டிடத்தில் யாரோ ஒரு புதியவன் உறங்கிக் கொண்டிருப்பதாக சிறுவர்கள் செய்திகொண்டு வந்தனர். நனைந்த ஆடைகளை வெளியே செடிகளின்மேல் உளர்த்திவிட்டு இடுப்பில் கட்டிய சிறு முண்டுடன் அங்கே அவன் உறங்கிக் கொண்டிருப்பதை கண்டார்கள்.

அவன் எங்கிருந்து எப்போது வந்து சேர்ந்தான் என்பதைப்பற்றி ஒருவருக்கும் தெரியவில்லை என்றாலும் வெள்ளத்தில் நீந்திக் கரையேறி வந்தவன் என்பதான யூகமே எல்லோருக்கும் இருந்தது. இதை உறுதிப்படுத்துவதாக இருந்தன அவனுடைய பளிச்சிடும் தேகமும், குளிர்ந்த கண்களும். தங்களுக்கு அவன் ஒரு அபூர்வ விருந்தினன் என்பதை விரைவிலேயே உணர்ந்தார்கள். இளமையை மீறிய முதுர்ச்சியுடன் தென்பட்டான். அவன் பேசினான் என்றாலும் அது ஒருவருக்குமே விளங்கவில்லை. ஏதோ விலங்குகளின் மொழிபோல இருந்தது அது. சிறுவர்களின் தொந்தரவு தாங்க முடியாத பொழுது ஒரு பறவையைப் போல அவன் கிறீச்சிட்டான். மற்றபடி சிறுவர்களுக்கும்,



படிப்பகம்

www.padippakam.com

அவனை பார்க்க வந்த ஆண்களும், பெண்களும் அவனுடைய இன்முகத்தையே தரிசித்தனர். உணவு கொண்டு வந்து கொடுத்தனர். களங்கமற்ற குழந்தை -யினுடையது போன்ற அவன் கண்களைக் கண்டு தாயின் உபசரணையைப் பொழிந்தனர் பெண்கள். வறண்டு கிடந்த பூமிக்கு நீரைக் கொண்டுவந்தவன் என்பதால் அவனுடைய வருகை ஒரு அற்புத நிகழ்வாக உணரப்பட்டது.

விழித்தெழுந்ததும் நதியை நோக்கி நடப்பான். காலை சூரியனின் கிரணங்கள் பட்டுத் தெறிந்த அவன் தேகம், ஆற்றிலிருந்து கரையில் வந்து குதித்த மீனினுடையது போல் மின்னியதைக் கண்டனர். சிலர் அவனுடைய உடலில் மீனின் வாசனை வீசுவதாகக் கூடச் சொன்னார்கள்.

நதியில் நீரோட்டத்திற்கு எதிர் திசையில் நீந்திப் போய் அக்கரையை அடைந்து மேற்குதிசை காட்டிற்கு போவான். மாலையில் மீண்டும் நதியைக் கடந்து நீர் சொட்ட கரையேறுவான். வரும்போது பழங்களோ, கிழங்குகளோ, மலர்ச்செடிகளோ கொண்டு வருவான். சிறுவர்களுக்கு பகிர்ந்தளிப்பான். எல்லாப் பருவங்களுக்கும் உரிய பழங்களையும், காய்களையும் கொண்டு வந்ததுதான் அவர்களை வியக்க வைத்தது. நெல்லிக்காய்களும், களாக்காய்களும், சூரைப்பழங்களும், ஒரே பருவத்தில் கிடைத்தன. கார்த்திகை மாதத்தில் கிடைக்கக்கூடிய காட்டு வள்ளிக்கிழங்கு புரட்டாசியிலேயே அவனுக்குக் கிடைத்தது.

புற்களும் பூண்டுக்ளும் மண்டிக்கிடந்த பள்ளிக்கூடத் தோட்டத்தில் அவன் கொண்டு வந்து நட்டு வைத்த ஒரு மலர்ச்செடியில் பூத்த பூக்கள், நீரைப்போல வானத்தின் நிறத்தை பிரதிபலித்தன. காலை முதல் மாலை வரை அவைகளின் நிறம் மாறிக்கொண்டே இருந்தது.

ஒவ்வொருவரும் அவனை கனவில் கண்டனர், அவனோடு நதியில் நீந்துவது போலவும், காடுகளில் திரிவது போலவும், தன்னுடைய வீட்டுக்கு வந்திருக்கும் விருந்தினன் போலவும். இளம் பெண்களுக்கு கனவுகளில் அவர்களுடன் அவன் படுத்துறங்கினான். வீட்டுப் பெண்களோ பெரும் சீதனத்தை கொண்டு வந்திருக்கும் ஒரு சகோதரன் போலவும் அவனைக் கண்டார்கள். குடியானவர்களுக்கு வறண்ட பாறைக் கிணறுகளில் நீரூற்றைக் கண்டுபிடித்துக் கொடுத்தான்.

சிறுவர்கள் எல்லோருக்கும் அவன் நண்பனாக இருந்தான், டவுசர் ஜோபிகள் நிறையும் அளவுக்கு பழங்களை பரிசளித்தான். பறவைகளைக் கொண்டு வந்து அவைகளோடு பேசி மகிழ்வித்தான். பொன்வண்டுகளை பிடித்துக் கொடுத்தான். காடுகளுக்குக்கூட்டிச் சென்று ஓடைகளை காண்பித்தான். குரல் கொடுத்து மிருகங்களை வரவழைத்தான். நதியில் நீந்தப் பழக்கினான். மீன் குஞ்சுகளைப்போல அவனோடு வெகுதூரம் அவர்களும் நீந்திச் சென்றார்கள். பெற்றோர்கள் யாரும் அவனோடு சேர்வது பற்றியும் சுற்றித்திரிவது பற்றியும் கண்டிக்கவேயில்லை என்பதுதான் இன்னும் அவர்களை குதூகலப்படுத்தியது.

இப்படி கனவிலும், நிஜத்திலுமாக அவர்களோடு வாழ்ந்தான். அவனுடைய வருகையைப் பற்றி வேற்று மனிதர்களுடன் பகிர்ந்து கொள்ளாமல், ரகசியமாக தங்களுடனேயே அவனை வைத்துக் கொள்ள விரும்பினார்கள். இந்த அற்புதத்தை யாரும் பெயர்த்துக் கொண்டு போய்விடக்கூடாதே என்று கவலைப்பட்டார்கள். இந்த மகிழ்ச்சியையும், செழுமையையும், குதூகலத்தையும் எல்லா காலத்திற்குமாக கடத்திப் போக ஆசைப்பட்டார்கள்.

அவனுக்கு ஒரு பெயர் தேவைப்பட்டதை உணர்ந்து, அற்புதப்பெயர் ஒன்றால் அவனை விரும்பி அவர்கள் கூடிப் பேசினார்கள். அது தோல்வியிலேயே முடிந்தது. மனிதர்களுக்கோ, தெய்வங்களுக்கோ வழங்கும் எந்தப் பெயரும் அவனுக்கு பொருந்தவேயில்லை. அந்தப் பெயர்கள் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு தன்மைக்குள் அவனை சிறைபடுத்துவது



படிப்பகம்

www.padippakam.com

போலவே அவர்களுக்குத் தோன்றியது. நதிகள், மலர்கள், மரங்கள், பறவைகள், மீன்கள் ..... எதனுடைய பெயரும் அவனுக்கு பொருந்தவில்லை.

அவனுக்கு பெயரிடும் எண்ணமே வடிந்து போன சில நாட்களுக்குப்பின் ஒரு இரவு எல்லோருடைய கனவிலும் தோன்றி தன் ரகசியப் பெயரை அவன் சொன்னான்.

"அதுதான் அவனுக்கு மிகவும் பொருத்தமான பெயர் என்பதை நாங்கள் உணர்ந்தோம். மறுநாள் காலையில் விடிவதற்கு முன்பாகவே அந்த பெயரால் அவனை அழைக்க ஒவ்வொருவரும் அங்கே ஓடினோம். ஆனால் அவன் அங்கே இல்லை, போய்விட்டிருந்தான்.

"நதியில்தான் அவன் நீந்திச் சென்றிருக்கவேண்டும் என்று சொன்னார்கள். அவன் திரும்பி வரவேயில்லை. எங்களை மகிழ்ச்சியான மனிதர்களாக்கிய அந்தப் பெயரை ஒவ்வொருவரும் ரகசியமாகப் பாதுகாத்தோம். தெரிந்தவர்களுக்குள்கூட அதை சொல்லிக் கொள்வதில்லை நாங்கள். ஒரு மூலிகைச் செடியின் பெயர்போல பகிர்ந்து கொள்ளப்படாததாலேயே அதன் மகத்துவம் காப்பாற்றப்பட்டு வருவதாக நாங்கள் நம்புகிறோம்" என்றான் அந்த இளைஞன்.

"அந்த பெயர் தெரிந்துவிட்டால் உலகத்தில் உள்ள மனிதர்கள் யாவரும் மகிழ்ச்சியானவர்களாக மாறிவிடுவார்கள் இல்லையா?" என்று கேட்டேன் நான்.

"ஆமாம்" என்றான் அவன்.

"நீயும் சொல்லவில்லையென்றால் அந்தப் பெயரை நாங்கள் எப்படி தெரிந்து கொள்வது, யாரிடம் போய் கேட்பது?" என்றேன் உருக்கமான பாவத்துடன்.

"அந்த நதியைக் கேட்டால் சொல்லும்" என்று பதிலளித்தான் அவன். ●



ஓமணகுண்டா (தருமபுரி) பழங்கற்கால குகை ஓவியம்



படிப்பகம்

www.padippakam.com

# மாதவிகுட்டியுடன் ஒரு சம்பாஷணை

பி.பி.ரவீந்திரன்

தமிழில் ஷீபா


கமலாதாஸ்

**ரவி : சமீப காலமாக என்ன எழுதிக்கொண்டு இருக்கிறீர்கள்? அதில் உங்களுக்குச் சிறப்பாகத் தோன்றுவது ஏதேனும் ....**

கடந்த சில மாதங்களாகக் கவிதைகள் எழுதியிருக்கிறேன் என்றாலும், அவை அவ்வளவு சிறந்ததாகத் தோன்றவில்லை. அவை அவ்வளவு யதார்த்தமாகவோ, இயற்கையாகவோ இல்லை. ஒருவேளை திருவனந்தபுரத்தில் வசிப்பதால் இருக்கலாம். இங்கே, சமூகத்தில் பல தடைகள் உண்டு. மிருதுவான வஸ்திரத்தால் போர்த்தப்பட்ட ஒரு எகிப்து மம்மி தான் நானென்று சில சமயங்களில் தோன்றுகிறது. இந்த இடத்திலிருந்து நான் எழுதிய கவிதைகள், எனக்கே ரசிக்க முடியாத மாதிரி, பிரச்சினைகளையும், தடைகளையும் கொண்டவை. அதுபோன்ற கவிதைகளை வெளியிட மாட்டேன்.

**ரவி : எதையாவது பத்திரப்படுத்தி வைக்க, நீங்கள் விரும்புவதாகலாம் ...**

: சமீப காலத்தில் நான் புரிந்து கொண்ட விஷயம் இதுதான். வாழ்கிற காலத்தில் என்னால் எழுத முடியாது. எழுதுகிற காலங்களில் வாழ வேண்டும். வாழவேண்டும் இல்லையென்றால் எழுதவேண்டும். ஒரே சமயத்தில் இரண்டும் சாத்தியம் இல்லை. ஆங்கிலத்தில் கவிதைகளைப் படிப்பவர்கள் இங்கே யாருமில்லை.

**ரவி : நீங்கள் ஆரம்பகாலத்தில் கவிதைகள் எழுதியபோது, சூழல் ரொம்பவும் வித்தியாசமாக இருந்ததா?**

: ஆமாம். அந்த நாட்களில் நான் வசித்தது நகரங்களில்தான் அறிவு ஜீவிகளுடனும், திறமைசாலிகளுடனும் பழக நேர்ந்தது அப்பொழுது.

**ரவி : பிரசுரமான உங்களின் முதல் கவிதையின் பெயர் ஞாபகத்தில் இருக்கிறதா?**

: இல்லை. என் இளம் வயதிலிருந்தே அம்மாவை இமிடேட் செய்து எழுதத் தொடங்கினேன். அப்போதைய கவிதைகள் சில, ரொம்பப் பிடித்ததாகவும் இருந்திருக்கின்றன. 'காம்போசிஷன்' (Composition) அவற்றில் ஒன்றாகும். எல்லா இடத்திலேயும் நான் வாசிக்கிற கவிதைதான் அது. ஆரம்பக் காலக் கவிதைகளில் அதுவும் ஒன்று. மொத்தத்தில் பூர்ணத்துவமான கவிதை அது.

**ரவி : 'காம்போசிஷன்' மாதிரியான கவிதையில் இருந்து, சமீப கால கவிதைகளுக்கு வரும்போது ஏற்பட்ட மாற்றங்களை, நீங்கள் எப்படிக் கணக்கில் எடுத்துக் கொள்கிறீர்.**

: சமீப காலக் கவிதைகளைக் கட்டுப்படுத்துவது யுக்தியும், புத்தியும் தான். அதனால்தான் அவை அவ்வளவு மெச்சுகின்ற மாதிரி இல்லை. அந்தஸ்துள்ள ஸ்திரி எழுதிய கவிதைகள் அவை. கற்பனைகளின் சுதந்திரம் அவற்றில் இல்லை. கூண்டுக் கிளிகளின் பாடல்கள் அவை. கூண்டுக்குள் அடைக்கப்பட்ட கிளி பாடுவது, சுதந்திரமாகப் பறந்த காலங்களில் பாடியது போலில்லை.



படிப்பகம்

www.padippakam.com

ரவி : **'கடும் உழைப்பால் உயர்ந்து வந்தவள்' என்று உங்களை நீங்கள் அடிக்கடி குறிப்பிடுவதுண்டு. இது எழுத்தை பாதித்ததுண்டா?**

 : மற்றவர்களின் குறுக்கீடு இல்லாத காரணத்தால், என்னுடைய திறமைகள் விரிவடைந்தன. யாரும் சொல்லாமலே, விஷயங்களை என்னால் பார்க்கவும், அறியவும் முடிந்தது. நீங்கள் சொன்னபடி எனக்குச் சொல்லித்தர, டியூட்டர் யாருமே இல்லாமல் இருந்தது. டியூட்டர்கள் என்று வந்தவர்களெல்லாம் விட்டுப் போனார்கள். காரணம் கணக்கில் மட்டமாக இருந்தேன். கல்கத்தாவில் நல்ல டியூட்டர்கள் இருந்தார்கள். அவர்களை நியமிக்க என் அப்பாவுக்கு வசதியும் இருந்தது. ஆனால், அவர்களிடமிருந்து எந்த ஆதாயமும் எனக்குக் கிட்டவில்லை. ஏழு தடவைகூட கணக்கில், நூற்றுக்கு இருபதுக்கு மேல் கிடைக்கவில்லை. பிறகு நான் படிப்பை நிறுத்திவிட்டேன். அதாவது, என் அப்பாவுக்கு, என் படிப்பை நிறுத்தவேண்டும் என்று தோன்றவில்லை. கல்யாணம், குடும்பம் ஆவதற்கு இது ஒரு பெரிய அனுக்கிரகமாகிவிட்டது. ஏனெனில் கல்வியில், அன்றாட வாழ்க்கைக்கு ஒத்துவராத விஷயங்கள் தான் நிறைய. நம்முடைய கல்வி, பழங்குப்பைகளை நிரப்பி, மனதைக் குப்பைத் தொட்டி ஆக்குகிறது. அதையெல்லாம் தூக்கி எறிந்து, சுத்த மனிதனாவது ரொம்ப கஷ்டம். அதிலிருந்து நான் தப்பித்துவிட்டேன் என்று நினைக்கிறேன். படைப்பாளி ஆவதற்கு, எனக்கு அது உதவியாக இருந்தது.

ரவி : **கதையை வாசிக்க ஆளில்லை என்று சொன்னீர்கள். ஆனால் மிலன் குந்தரா, சாமுவேல் பெக்கெட், கூகி வா தியாங்கோ ஆகியோரைப் போல், ஒரு மொழியில் இருந்து, இன்னொரு மொழிக்கு, அநாயசமாகச் சஞ்சரிக்கும் சர்வதேச எழுத்தாளர்களில் நீங்களும் ஒருவர். ஆங்கில மொழியில் எழுதும்போது, உங்களுக்கு வருகின்ற இடர்பாடுகளைக் கொஞ்சம் விளக்குவீர்களா?**

 : லிமிட் ஆன வார்த்தைகள் மட்டுமே ஆங்கிலத்தில் தெரியும். அதனால், சாதாரணமாக எனக்குப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. என்னுடைய லிமிட்டான அறிவை வைத்துப் பார்க்கும்போது, ஏதோ ஒரு அளவு எழுதுகிறேன் என்று சொல்லலாம்.

ரவி : **இதன்படி, மலையாளத்திலும் உங்களுக்கு இந்த மாதிரி பிரச்சினைகள் இருக்கின்றன என்று சொல்கிறீர்களா?**

 : ஆமாம்.

ரவி : **புகழ்பெற்ற கவிதையொன்றில் (An Introduction) எழுதினீர்கள். நான் மூன்று மொழிகளைப் பேசுகிறேன். இரண்டு மொழிகளில் எழுதுகிறேன். ஒன்றில் மட்டும் கனவு காண்கிறேன். நீங்கள் கனவு காண்பது எந்த மொழியில்? மலையாளத்திலா?**

 : நான் கனவு காண்பது ஆங்கிலத்தில் என்பதுதான் சரி.

ரவி : **இந்த சுவாரசியமான விஷயத்துக்கு, ஆங்கிலத்தில் எழுதும்போது கமலாதாஸாகவும், மலையாளத்தில் எழுதும்போது மாதவிகுட்டியாகவும், வித்யாசமாகப் பெயரை உபயோகப்படுத்தத் தொடர்பு இருக்கிறது என்று தோன்றுகிறது. இரண்டு மொழியில் எழுதிவரும் ஐசக் தினேசன், பெர்னாண்டா, பெசோவா ஆகியோர், ஒவ்வொரு பாஷையிலும் உள்ள ஆளுமையை நிலைநாட்ட, இதே உத்தியைச் சுவீகரித்ததைக் காணலாம். இதைப்பற்றி உங்கள் அபிப்ராயம் ......**



படிப்பகம்

www.padippakam.com

: பழமைவாதிகளான என் குடும்பத்தினர், என்மேல் வெறுப்பு அடையாமல் இருக்க, நான் புனைப்பெயரைச் சூட்டிக் கொள்ளும் நிர்பந்தம் ஏற்பட்டுவிட்டது. என் குடும்பத்தில் நான் அந்நியளாக இருந்தேன். ஆண்கள் டாய்லெட்டில் புகைப்பிடிப்பது போல, அந்தரங்கமான கெட்டப் பழக்கத்தைப் போல, எழுத்தைப் பயிற்சி செய்தேன். நான் பாசம் காட்டுகிற பாட்டியைக் கஷ்டப்படுத்த எனக்குப் பிடிக்காது. நான்தான் மாதவிகுட்டி என்று அவருக்குச் சாகும்வரை தெரியாது என்றுதான் நினைக்கிறேன்.

ரவி : **உங்கள் கவிதைத் தொகுப்புகளினூடே கடந்துபோகும்போது, மனதில் தோன்றும் விஷயம் - ஐம்பதுகளின் கவிதைகள் அந்தரங்கமானதாகவும், பாடலாகவும் இருக்கின்றன. அறுபதுகளில் 'மெடாபிசிகல்' ஆகின்றன. இவற்றிற்கு உண்மையான காரணம் ஏதாவது உண்டா?**

: நான், அந்த காலத்தில், முகமூடி தரிக்க தீர்மானித்தேன். அதனால், மெடாபிஸிகல் என்று தோன்றுகிற கவிதைகளை எழுதினேன். ராதை, கிருஷ்ணன் காதலைப் பற்றி எழுதப் பலர் உபதேசித்தனர். அதனால், என் தனிப்பட்ட காதல்களைப் பற்றி (அப்படி ஏதாவது இருந்தால்) எழுதுவது. விமர்சனத்திலிருந்து தப்பிப்பதற்காகத்தான். கோழைத்தனத்திலிருந்து பாதுகாப்புக்கு வைத்த முதல் காலடிகள்தான் அவை. முகப்பரு வெடித்துப் பொங்கியது போல் இருந்தன, ஆரம்பகால கவிதைகள். அந்நாளில், யதார்த்தமும் விறுவிறுப்பும் ரொம்ப முக்கியமாகத் தோன்றிய வார்த்தைகளின்மேல் எனக்குக் கட்டுப்பாடொன்றும் இல்லாமல் இருந்தது.

ரவி : **முகமூடிகளைப் பற்றி சொல்லும்போது, 'என் கதை'யின் அத்தியாயங்களின் தொடக்கத்தில், கவிதைகளின் வரிகளைத் தேர்ந்தெடுத்து சேர்ப்பதைப் பார்க்கலாம். அவற்றின் தொடர்ச்சி என்று இது படுகிறதா?**

: 'என் கதை'யானது தெளிவான உத்தேசத்தை வைத்து எழுதியது - எனக்கு வேண்டிய ஒருவரின் உந்துதலினால்.

ரவி : **சில கவிதைகள், மலையாளத்தில் எழுதின கதைகளின் புனர் சிருஷ்டிகள்தான் என்று நினைக்கிறேன். உண்மையில் வேறானதா?**

: ஒரே விஷயத்தைக் கதையாக, கவிதையாக, கட்டுரையாக எழுதுகிறேன் என்ற புகார்கள் வந்ததுண்டு. நான் ஒரே ஆள் என்பதாலும், நான் எழுதுவது எனக்கு ஏற்பட்ட விஷயங்களைப் பற்றியது என்பதாலும், இந்த விஷயத்தில் நான் ஏதும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறேன். பலதரப்பட்ட திறமைகள் இருந்ததினால் இருக்கலாம். நான் என்னுடைய அனுபவத்தில் கவிதையைக் காண்கிறேன். பிறகு அதையே அடிப்படையாக வைத்து, நல்ல உரைநடையை எழுதவும் முடிகிறது. பல துறைகளில் விரிந்திருக்கிறேன். அவ்வளவுதான்.

ரவி : **யதார்த்தத்திற்கும், பேண்டஸிக்குமான தொடர்பைப் பற்றி, உங்கள் கவிதைகளை அடிப்படையாக வைத்துச் சிலதைக் கூறமுடியுமா? உதாரணத்திற்கு, 'ஆனைமலைக் கவிதைகள்' இதை எழுதிய சூழல் என்ன?**

: ஆனைமலையில் வைத்துதான் அதை எழுதினேன் என்று சொல்லமுடியாது. ஒரு டேப்ரிகார்டருடன் பேசிக்கொண்டு இருந்தேன். 1984இல் பார்லிமெண்டில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தபோது உண்டான மனநிலை பாதிப்பிலிருந்து மெதுவாகச் சீர்பட்டு வருகிற காலம் அது. ஒரு மாதம் பிரச்சாரத்திற்குப் பிறகான அந்தத் தோல்வி, வெயிலில் அலைந்தது, காலை ஐந்து மணிமுதல் நடுராத்திரி வரையான தொடர்ச்சியான சுற்றுப்பயணம், இதெல்லாம் எனது ஆரோக்கியத்தைப் பாதித்தது. நான் மனரீதியாகத் தளர்ந்தேன். உறவினரில் ஒருவர் இறந்ததான துக்கம்



படிப்பகம்

www.padippakam.com

அப்போது என் சகோதரி தன் சொந்தவீட்டுக்கு ஆனைமலைக்கு அழைத்துப் போனாள். தொடர்ச்சியாக பிரசாரம் செய்ததால். என் குரலே உடைந்துவிட்டது. தூக்கம் வரும்வரை டேப்ரிக்கார்டருடன் நேரிடையாகப் பேசிக்கொண்டிருக்கும்படி, என்னை என் சகோதரி உபதேசித்தாள். அப்படியாக நான் அந்த எந்திரத்துடன் நேரிடையாகப் பேசிக் கொண்டிருந்ததை, அவளுடைய காரியதரிசி குறிப்பெடுத்துக் கொண்டிருந்தாள். அவை வாழ்க்கையிலிருந்து அறுத்து எடுக்கப்பட்டவை. என் வேதனைகள் அனைத்தும் அவற்றில் உண்டு. செயற்கைத்தனமான பல தவறுகள் அவற்றில் இருக்கும். ஏனெனில் நடுராத்திரிக்குப் பிறகு டேப்ரிக்கார்டருடன் நேரிடையாகப் பேசிக் கொண்டு இருந்தேன்.

ரவி : **அவை எத்தனை கவிதைகள்**

: இருபத்தியேழு

ரவி : **'கொழும்பு கவிதைகள்' வாழ்க்கையை ஒரு கலையாக மாற்றுவதற்கு மற்றுமொரு உதாரணம்தான்.**

: விஷயங்கள் ரொம்ப மோசமாகிக் கொண்டிருந்த இரண்டு ஆண்டு 'கொழும்பு'வில் வசித்ததினால் அந்த கவிதைகள் எழுத வேண்டிய நிர்பந்தம். ஜனங்கள் கொல்லப்படுவதைப் பார்க்க வேண்டி வந்தபோது அந்த மாதிரி கவிதைகள் எழுத வேண்டியதாயிற்று. என்னைச் சுற்றிலும் நடக்கின்ற விஷயங்களைப் பற்றி எழுதவேண்டும் என்று எனக்குத் தோன்றியது அந்த நாளில்தான். நான் எழுதுவது வரலாறு. சாதாரண கவிஞன் மட்டுமல்ல, சுற்றிலும் நடக்கின்ற சம்பவங்களின் வரலாறை எழுதுபவனாகவும் இருக்கவேண்டும் ஓர் எழுத்தாளன். எனது பக்கத்து வீட்டுக்காரன் கொல்லப்பட்ட நிகழ்ச்சியைப் பார்த்த சாட்சியானேன் நான்.

ரவி : **நீங்கள் மலையாளத்திலும், ஆங்கிலத்திலும் எழுதின கதைகளுக்குள்ள தொடர்பென்ன? ஆங்கிலக்கதைகள் மலையாளத்தில் எழுதின கதைகளின் மொழிபெயர்ப்பா?**

: சில கதைகள் முதலில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டவை. 'பத்மாவதி என்ற வேசி' முதலில் ஆங்கிலத்தில் எழுதினேன். பிறகு மலையாத்தில் மொழிபெயர்த்தேன். என்னுடைய கதைகளை நானே மொழிபெயப்பதுதான் எனக்குப் பிடிக்கும். நான் ஒரு நல்ல மொழிபெயர்ப்பாளி.

ரவி : **மலையாளத்திலுள்ள உங்களுடைய கதைகளுக்கு திரும்பினால் அவற்றுக்கும் உங்களுடைய கவிதைகளுக்கும் உள்ள தொடர்பென்ன? உங்களுடைய கதைகள் இசைநயத்தோடும் கவிதை மயமானதென்றும் குறிப்பிடுகிறார்கள். உங்கள் கதைகளை நீங்களும் இப்படித்தான் விலையிருத்துவீர்களா?**

: ஒரு வேளை, சரிதான். ஏனென்றால் என்னுடைய படைப்புகள் என்னுடைய இரத்தத்திலிருந்து பிறக்கின்றன என்பதுதான். அவைகளின் நடையையோ என்னுடைய ஆளுமையையோ நான் நினைத்தால் மாற்ற முடியாது.

ரவி : **சிறுகதையோடு உங்களுக்குள்ள பிரத்யேக மமதையும் இதே காரணத்தால்தானா? 'மானஸி'க்குப் பிறகு நீங்கள் நாவல் எழுத முயற்சித்ததாகத் தோன்றவில்லை.**

: 'மானஸி' ஒரு நீளமான கதை மட்டும்தான்.

ரவி : **அது அவ்வளவாக வெற்றி பெறவில்லை என்பதுதானே சரி!**

: பொருளாதார ரீதியாக அது ஒரு தோல்வி என்று சொல்லலாம். என்னுடைய படைப்பின் உருவத்துடன் ஒத்துவராத உருவம்தான் நாவல். காசுக்கு அவசியம் ஏற்படும்போதுதான் நான் நீளமான கதைகள் எழுதுவது.



படிப்பகம்

www.padippakam.com

**ரவி இசைப் பாடல்களும், விசித்திரக் கற்பனைகளும் உள்ளடக்கிய சில கதைகளைத் தவிர்த்தால், உங்களின் அதிகமான கதைகளும், உண்மை சம்பவங்களின் மொழிப் பெயர்ப்புத் தானே. "பிரபாதம்", "குறுப்பு", வக்கீல் அம்மாவன்" போன்ற கதைகள் உங்களின் சொந்த அனுபவங்கள்தான் என்று தெரிகிறது. "பால்ய கால ஸ்மரணங்களில்" விஷய வர்ணனைகளிலிருந்து, அவைக்கு அவ்வளவு ஒன்றும் வித்தியாசமில்லை. "பால்ய கால ஸ்மரணங்களில்" ஒரு கதைத் தொகுப்புகளாகவும் பார்க்கலாம். இதை கொஞ்சம் விளக்குவீர்களா?**


: பால்ய கால ஸ்மரணங்கள் ஒரு பரிசோதனை அதன் ஒவ்வொரு பாகமும், ஒவ்வொரு கதைப்போல வித்தியாசமாக நிற்கும்போதும், உண்மை எனக்கு தெரிந்த வரைக்கும் சொல்ல வேண்டும் என்று கட்டாயம் இருந்தது. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால், கேட்ட வசனங்களைத்தான் அதில் உபயோகப்படுத்தினேன். அதில் கிராமியத்தில் கொஞ்சமாவது, நிலைநாட்டினேன் என்று எனக்குத் தோன்றுக்கிறது. எனக்கு நிறைய ஞாபக சக்தி இருக்கிறது. "நலாப்பட்" குடும்பத்தில் யாருக்கும் இதை பறை சாற்றலாம். இந்த விஷயத்தில் கொஞ்சம் தற்பெருமை கொள்ளலாம் என்று நினைக்கிறேன். அதை அனுபவிக்கும்போதும், அனாயசமாக அந்த அனுபவத்தினுடைய நிறம், சத்தம், வசனம் மொத்த சுவாபம் இவை அனைத்தும் ஞாபகத்தில் வைத்திருக்கிறேன்.

பம்பாயில் எனக்கு ரமணலால் பட்டேல் என்ற நண்பர் இருந்தார். அவர் புகழ்ப் பெற்ற ஒரு மனோத்தத்துவ நிபுணர். தான் பார்க்கின்ற கேஸ்களைப் பற்றி, ஆட்களின் பெயர் குறிப்பிடாமல் அவர் என்னிடம் சொல்வார். நோய் கொஞ்சம் குணமாகும்வரை ஆனால், அன்பும் ஆறுதலும் தேவையானவர்களை அவர் என்னிடம் அனுப்பி வைப்பார். நிறையபேர் பருவப் பெண்கள்தான். அவர்களிடம் அன்பாக பேசி, ஓவியம் வரைவதற்கோ, கவிதை எழுதுவதற்கோ, அவர்களைத் திருப்பி விட்டேன். இதில் என்னுடைய வெற்றியைப் பார்த்து, ரமணலால் ஒரு தடவை என்னிடம் கேட்டார். உங்களுக்கு வியக்கத் தக்க ஞாபக சக்தி இருக்கிறது. நீங்கள் உங்கள் கடந்த காலத்திற்குத் திரும்பி, சிறு வயது பருவத்தை ஞாபகப்படுத்த முயற்சி செய்யுங்கள். இப்போது மறதி மூடி கிடக்கின்ற விஷயங்களை, ஞாபகத்திற்கு கொண்டு வாருங்கள். அவைகளை திரும்ப கொண்டு வர உங்களால் முடியும். சுயமான சக்தியுள்ள பெண்மணியாக உங்களால் முடியும்" நான் செய்வதும் அதுதான். தியானம் மாதிரி அறைக்கதவைத் தாளிட்டு, இருட்டில் கட்டிலில் அமர்ந்து எனக்குள் ஆழமாக இறங்க வேண்டும். 1992ல் இருந்து 1991ற்க்கு அப்படியே கடந்த காலத்திற்கு, நான் முன்பு கேட்ட மறந்த பேச்சுக்கள் எனக்கு ஞாபகம் வந்தன. அப்படித்தான் நான் "பால்யகால ஸ்மரணங்கள்" எழுதினேன். அது முற்றிலும் மாறுபட்ட பரிசோதனையாக இருந்தது. வேறு ஏதாவது ஓர் மொழியில் இப்படி ஒன்று நடந்ததாக எனக்குத் தோன்றவில்லை ஒவ்வொன்றும், ஒற்றையாக நிற்கின்ற புனை ஓவியங்கள் தாம் அவை. ஆனால், இந்த ஓவியங்களுக்கிடையே, அன்னியோன்னிய பந்தமும், தொடர்ச்சியும் இருக்கிறது. சில வருடங்களுக்கு முன்பு "நீர்மதனம் பூத்தகாலம்" இவை அதற்குப் பிறகு எழுதினேன். இந்த மூன்றும் ஒரே புத்தகத்தின் பாகங்களாகத்தான் நான் உத்தேசித்தேன். வெற்றிப் பெற்ற ஓர் பரிசோதனையாக இருந்தது. வாசகர்களுக்கு பிடித்ததா என்று சொல்ல நேரமாகவில்லை. அதற்கு கொஞ்சம்கூட சமயம் தேவைப்படுகிறது. ஒரு பொருள், அது இலக்கியப் பொருளாக இருந்தாலும், உடனே செய்த சாப்பாட்டை போன்றது. சூடாறினால் மட்டுமே சாப்பிட முடியும். ஒருவேளை ஐம்பது ஆண்டுகள் முடிந்தால், எண்பதுகளில் உண்டான நல்ல ஒரு படைப்பாக அதை வரவேற்பார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

ரவி : **இந்த படைப்புகள் கதையைப் பற்றிய கதைகள் (Mettafictional) என்று தோன்றுவது உண்டா? இன்றைய சூழ்நிலையில் இதை காண்பது சிலநேரங்களில் உண்மை சம்பவங்களின் அடிப்படையில் வருவதால்தான் இதைக்கேட்டேன்.**

: பால்ய கால ஸ்மரணங்கள், "நீர்மதனம் பூத்தகாலம்" இவை இரண்டும் கற்பனைக் கதைகள் இல்லை. அவையெல்லாம் நடந்தவை. அதிலுள்ள கதாபாத்திரங்கள் சிலர் ரொம்ப வயசாகி விட்டாலும், இன்னும் உயிருடன் இருக்கிறார்கள். அவர்களிடம் நேரிடையாகப் பேசுவதுதான் சுலபம். அம்மா, இப்படி மற்ற உறவினர்களும்.

ரவி : **அது என்னமோ, இந்த புத்தகங்களில் உள்ள பாஷை, ரொம்ப அழகாய் இருக்கிறது. உங்களின் சொந்த கதைகளின் பாஷைகளைப் பற்றி உணர்வுப் பூர்வமாக சிந்தித்தது உண்டா? கதைகளின் பாஷையைப் பற்றி பொதுவாக?**

: நம்முடைய பாஷையில் சில மாற்றங்கள் அவசியம் என்று எனக்குத் தோன்றியது. சில வருடங்களுக்கு முன்னால் உள்ளவைப் போன்று, அதையே நிலைநாட்டக்கூடாது. ஆங்கிலத்தில் மட்டும் புதிது புதிதாக எத்தனை மாற்றங்கள் நிகழ்த்தி இருக்கிறார்கள் என்றுப் பாருங்கள்.

ரவி : **அத்தகைய மாற்றங்களை உண்டாக்குவது. திறமை உள்ள எழுத்தாளர்களின் கடமை**

: கண்டிப்பாக. அதைப்பற்றி சொல்ல வேண்டியது இதுதான். இலக்கணப் பண்டிதனாக இருந்தாலும், குட்டிகிருஷ்ணமாரார் என்றும் வாதிட்டது சரளமான பாஷைக்காகத்தான்.

ஆனால் பண்மன ராமச்சந்திர நாயர் இலக்கண சுத்தமாக இருக்க வேண்டும் என்று வாதிக்கிறார். பண்மனாவின் பாஷையில் எழுதினால், என்னுடைய கதைகளை யாரும் படிக்க மாட்டார்கள். போதுமான கல்வி அறிவு இல்லை என்றாலும் என்னால் கதைகளை எழுத முடிந்தது. எழுத்தின் நுட்பங்களை நான் எப்படி தெரிந்துக் கொண்டேன்? இலக்கண விதிமுறைகள் படிக்கவில்லை. சரளமாகவும், நன்றாகவும் மலையாளம் சாதாரணமாக நாங்கள் பேசுகின்ற பாஷைதான். என் அம்மாவுடைய மாமா பாவங்களில் உபயோகித்தது போல்தான் அதை அனாயசமாகப் படிக்கலாம். எழுதும்போது சுத்தமான சுற்றி வளைக்காதபடி பாஷையை உபயோகப் படுத்துவதற்கான தைரியம் நமக்கு வரவேண்டும். நம்முடைய சிந்தனைகளும் அப்போதுதான் சரியாக அமையும். தேவைக்கு அதிகமான வஸ்திரங்கள், உடுத்துகின்ற பெண்களை இல்லை ஏறக்குறைய நிர்வாணமான பெண்களை பார்ப்பதுதான் எனக்கு பிடிக்கும். நம்முடைய பரதநாட்டிய கலைஞர்களை பாருங்கள். அவசியத்திற்கும் அதிகமாக வஸ்திரங்களும், ஆபரணங்களும் தரித்து அவர்கள் ஜொலிக்கிறார்கள். இந்த அனாவசியமான அலங்காரம் சேர்த்தல் நம்முடைய இன்றைய எழுத்துக்களிலும் சாதாரணமாயிற்று. பரத நாட்டிய நங்கையின் ஆடம்பரம் அல்ல, பாலே நடனருடைய எளிமைதான் நமக்குத்தேவை. அந்த மாதிரி எளிமை நம் பாஷையில் கொண்டு வரவேண்டும். அனாவசிய பேச்சை குறைக்க வேண்டும். சாரம்சத்தை மட்டும் நிலை நாட்டி பாஷையை கூர்மைப்படுத்த வேண்டும். அதன் முனை வெளியில் வரட்டும். இப்படிப்பட்ட இலக்கியம் அமைய நமக்கு எதிர்காலத்தில் முடியவேண்டும். அதனால் நாவல் என்ற அமைப்பை பற்றி எனக்கு சந்தேகங்கள் உண்டு. நாவலினுடைய ஆட்சி முடிவடைந்துவிட்டது. பெரும்படைப்புகள் உருவாகின்ற காலம் முடிந்துவிட்டது.

ரவி : **அது முழுக்க சரி என்று தோன்றவில்லை. பின் நவீனத்துவ (Post-modornist) பாரம்பரியத்தின் பேச்சாளர் என்று சொல்லப்படுகின்ற மேலைநாட்டு எழுத்தாளர்கள் பெரும் படைப்புகளை எழுதுகிறார்கள்.**



படிப்பகம்

www.padippakam.com

 : இருக்கலாம். ஆனால், நாம் மேலை நாட்டினரை நகல் (imitate) பண்ண வேண்டிய அவசியமில்லை. இந்த தன்மை முற்றிலுமிருக்கிறது. சிலர் என்னிடம் கூறுவார்கள். நான் ஒரு பெரிய 'மாஸ்டர்பீஸ்' எழுத வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று. ஒரு 'மாக்னம்ஓபஸ்' மகத்தான கதைகளும் ஒன்றும் அவ்வளவு பெரியதாக இல்லை என்று தான் நினைக்கிறார்கள். ஒரு பெரிய புத்தகத்தை எழுதிவிட்டால் எனக்கு இன்னும் கொஞ்சம் அவார்டுகள் கிடைக்கலாம். ஆனால் அதில்லை என்னுடைய சுபாவம். நான் இதுவரை எழுதியதில் ரொம்ப திருப்தியாகயிருக்கிறேன். நான் எதிர்திசையில் நடக்கிறேன் என்று வேண்டுமென்றால் சொல்லலாம். ஆழமான முனைக்கு என்னுடைய மிகப்பெரிய ஆசை. மலையாளத்தினுடைய ஆன்மா உட்கொள்கின்ற, பொருள் பிரதிபலிப்பைக் காட்டுகின்ற ஒரு படைப்பை எழுதுவதற்குத்தான் என்னுடைய இயற்கையான திறமைகளை எல்லாம் அந்த திசைக்குத் திருப்ப நான் முயற்சிக்கிறேன்.

ரவி : **'நாவல்' என்ற அமைப்பிலுள்ள உங்களுடைய சந்தேகத்திற்கு இந்தியாவில் உள்ள எழுத்தாளர்களோடு, முக்கியமாக நாவல் எழுத்தாளர்களோடு உங்களுடைய எதிர்ப்புக்கும் தொடர்பு உண்டா?**

 : இந்திய எழுத்தாளர்கள் 'காமன்வெல்த்' அவார்டும் இன்னும் சிலதை வாங்குவதும், இந்தியாவில் நடக்கின்ற விஷயங்களை கொச்சைப்படுத்தி எழுதுவதினால்தான். நம்மை இகழ்ந்து காட்டுகிறவர்களுக்காக தான் இத்தகைய அவார்டுகள் கொடுக்கப்படுகின்றன என்று தோன்றுகிறது. உதாரணத்திற்கு, 'சல்மான் ருஷ்டி'. அவருடைய புத்தகம் தடை செய்யப்பட்டதைப் பற்றி பெரிய கோலாகலமே நடந்தது. அந்த புத்தகம் தடை செய்யப்பட வேண்டிய ஒன்றுதான் என்பது என்னுடைய ஆழமான நம்பிக்கை. இந்த விவாதத்தில் நான் எதிர்கட்சியில் இருந்தேன். 'கொமேனி'யின் கட்சியில் இல்லை. ஏனெனில் யாரும் கொல்லப்படுவது எனக்குப் பிடிக்காது. இந்தியாவிலும், வெளி நாட்டிலும் பேட்டிகளில் 'ருஷ்டி' விவாதத்தைப் பற்றி என்னுடைய அபிப்ராயம் என்னவென்று பலர் கேட்டார்கள். நான் முன்னுரிமை அளிப்பதில் சமாதானம் தான் முதலாவது பெரிது. இலக்கியம் இரண்டாவதுதான். உலகில் இதுவரை உண்டான படைப்புகளை எல்லாம் கொளுத்தினால் தான் இங்கே சமாதானத்தை நிலைநாட்ட முடியுமென்றால் அதில் எனக்கு எதிர்ப்பு கிடையாது. இலக்கியமும், கலையும் மனப்பூர்வமாக விரும்புவது பூமியில் சமாதானம் அடைந்து காண்பதற்காகத்தான்.

ரவி : **உங்களுடைய கதைகளும், கவிதைகளும், 'ஃபெமினிஸ்ட்' கருத்துகளுக்கு துணை போவது போல் தோன்றினாலும், உங்களின் பல அறிக்கைகளும் 'ஃபெமினிஸத்தை' விமர்சிப்பது போல் உள்ளது.**

 : மேற்கத்தியர்கள் பார்ப்பது போல், பெண் விமோசனத்தை நான் பார்ப்பதில்லை. மேற்கத்திய 'ஃபெமினிஸத்தில்' ஆண் மீதான விரோதமே இருக்கிறது. கணவரையும், மகன்களையும் நேசிக்கும் என்னால் ஆண்களை வெறுக்க முடியாது. ஆண்களின் அருகாமையில் நான் ரொம்பவும் மகிழ்ச்சி அடைந்துள்ளேன். நான் வெளிநாட்டில் சந்தித்த 'ஃபெமினிஸ்டுகள்' ரொம்ப பேர் 'லெஸ்பியன்'களாக இருக்கிறார்கள். நான் லெஸ்பியன் ஆக முடியுமா என்று பரிசோதித்துப் பார்த்தேன். ஆனால் தோல்வியைத் தான் அடைந்தேன். நான் சொல்வது நிஜம். எதையும் பரிசோதனை செய்து பார்ப்பதுதான் என் சுபாவம். தார்மீகமான அடித்தளமில்லை என்றால் நம்பிக்கை ஆனாலும். அரசியல் சட்டங்கள் ஆனாலும் மதமானாலும் சரி நாம் அவற்றை விட்டுவிட வேண்டும்.

ரவி : **மதமும்? மதத்தின் மீதும் உங்களுக்கு என்ன விரோதம்?**



படிப்பகம்

www.padippakam.com

 : நான் சொல்வது ஸ்தாபனத்தினால் நிறுவப்பட்ட மதத்தைப் பற்றி தான். மதங்களும், அரசியல் சட்டங்களும், கருத்துக்களும் அனாவசியமாகிவிட்டதாக எனக்குத் தோன்றுகிறது. உபயோகிக்க வேண்டிய கடைசி தேதி முடிந்த மருந்துகள் போன்றவை அவை. உபயோகிக்கும் ஒருவனுக்கு அது விஷமாகி விடுகிறது. உபயோகமற்ற மதப்படி நீங்கள் வாழ்வீர்களானால் அது உங்கள் ஆன்மாவையே அழித்து விடும். 'வழிபாடு' என்பது தனிப்பட்ட விஷயம் என்று நாம் அதை கட்டாயமாக அங்கீகரிக்கவேண்டும். மதம், அதாவது பொது மன்றங்களில் நடத்தப் படுகின்ற மதச் சடங்குகளை சட்டப்படி தடை செய்யவேண்டும். மனிதனால் நிறுவப்பட்ட மதங்களை மனிதனே தடை செய்யவேண்டும். மாற்றத்துக்காக அவைகளை சபையிலிருந்து வெளியேற்றுங்கள். அவை சமாதானம் செய்ய முடியாதபடி விஷமாகிவிட்டன. இன்று நாம் உலகெங்கும் பார்ப்பது போல் மதங்களுக்கு மறுஜென்மம் அளிக்கப்பட்டால் நாம் எல்லோரும் அளவுக்கு மீறிய வேதனையை அனுபவிக்க வேண்டியிருக்கும். அணுகுண்டு யுத்தங்களை விட மோசமான பேரழிவாக அது இருக்கும்.

ரவி : **இந்த அறிக்கையில் உள்ள அரசியல் எதிரொலி உங்களுக்குப் புரிகிறதா?**

 : எனக்கு அரசியல்வாதிகளிடம் பயமில்லை. அவர்கள் என்னை என்ன வேண்டுமானாலும் செய்யட்டும். ஆனால், நான் பேசுவது தனிப்பட்ட நபர்களைப் பற்றியல்ல. விதிமுறைகளைப் பற்றித்தான். மதிப்பு குறைந்துவிட்ட விதிமுறைகளை நிலைநிறுத்த முயற்சித்தால் அது உங்கள் ஆன்மாவையே சுரண்டித் தின்றுவிடும். உங்களின் சுயமான புனிதம் நஷ்டப்படும். புதிய அல்லது புதுப்பிக்கப்பட்ட ஒரு விஷயத்துக்கு மட்டுமே வாய்ப்பு இருக்கிறது. பழையதைப் புதுப்பித்து உபயோகம் செய்வதில் எனக்கு எதிர்ப்பில்லை. ஆனால், சரி செய்ய முடியாததை நாம் தூக்கி எறியவேண்டும். ஒரு நம்பிக்கை என்றாலும் விட்டுவிடவேண்டும். தார்மீகமான அடித்தளம் நஷ்டமானதால்தான், ரஷ்யர்களுக்கு எல்லாம் நஷ்டமானதுபோல் தோன்றுகிறது. நமது நாகரீகத்தைக் கொண்டு வர, கோர்பச்சேவ் லெனினிஸத்தை சத்தியம் செய்தார். ஆனால் அவருடைய நாகரீகம் லெனினிஸத்தையே அடியோடு அழிந்துவிடத்தான் செய்தது. காந்திஜியின் பெயரால் நாம் செய்வதும் இதைத்தான். அவருடைய கருத்துக்களைக் கைவிட்டுவிட்டு, அவரை புகழ்ந்துகொண்டு இருக்கிறோம். கார்ப்பசேவ் செய்தது முட்டாள்தனம் என்று நான் நினைக்கிறேன். அதிகாரத்திலிருந்து, புரட்சியைக் கட்டாயமாக்கிக் கொண்டு வரமுடியுமென்று அவர் நினைத்தார். ஆனால் புரட்சி அல்ல, கழுகுகள்தான் தலைமையிலிருந்து வருகின்றன. எதுவும் மண்ணில் இருந்து முளைத்துவர வேண்டும். ஆரோக்கியமானது எதுவும் மண்ணின் ஆழத்தில் வேரூன்றி இருக்கும்.

ரவி : **உங்களின் பார்வை அன்புப்பார்வை, அப்படியெனில், மறு பரிசோதனை செய்ய வருமே?**

 : இந்த ராஜ்ஜயத்தில், எல்லா துறைகளிலும், அபாயகரமான சூழல் நேரிடுகிற இந்த சந்தர்ப்பத்தில், நாடகம், கதை, நாவல்களை எழுதுவதைப் பற்றி நாம் சிந்திக்கக் கூடாது. அதைவிட சிறப்பானதொன்றை செய்ய வேண்டி இருக்கிறது. நீதிக்காகவும், விவேகத்திற்காகவும் நாம் போராட வேண்டி இருக்கிறது. காரணம், பொருளாதாரம், வங்கி, ஆட்சித் துறைகளில் அறிவுப்பூர்வமான அணுகுமுறை இல்லாமல் ஆகிவிட்டது. இதற்கு எதிராக, பொதுமக்கள் எதிர்க்கவில்லை என்றால், இதைவிட பெரிய பேரிழப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு.

**ஸ்த்ரீ, ஸ்வத்வம், ஸமூகம் : மாதவிகுட்டி படனங்கள் என்ற நூலிலிருந்து ஷீபா**



படிப்பகம்

www.padippakam.com

புது எழுத்தின் புதிய முகவரி
இனி
அனைத்து தொடர்புகளுக்கும்

# மனோன்மணி

20, ஜே.கே.சி.தெரு,
காவேரிப்பட்டணம் - 635 112.
தருமபுரி மாவட்டம்.
தொலைபேசி : 04343 52665.

---

புதிது புதிதாய் வளர்ந்து வரும் அறிவுத் துறைகளின் செய்திகளைத் திட்ப நுட்பத்துடன் புலப்படுத்தும் கலைச்சொல் வளம் தமிழில் பெருகி வருவதை விளக்கும் இராம.சுந்தரத்தின்

## பொருள் புதிது
## வளம் புதிது

விலை ரூ. 30/-
வசந்தம்
71, செல்லைய்யா நகர், பிள்ளையார்பட்டி
அஞ்சல், தஞ்சாவூர் 613 413.



படிப்பகம்

www.padippakam.com



## எச். மசூத் தாஜ்

# மஞ்சள் வண்ணம்

●

நிழலின் நிறம்
கறுப்பு எனச் சொல்ல
முடியாதென்றால்
வெளிச்சத்தின் வண்ணம்
மஞ்சளென்றும்
சொல்ல முடியாது

நிழலுக்கும் சூரியனுக்கும்
இடையில் நடக்கிறது
பூனை

தீயின் நாவிலும்
பூனையின் கண்களிலும்
இரவைக் கழிக்கிறது மஞ்சள்

குருட்டிருள் கருமைக்குள்ளும்
கிழித்துச் செல்லும் மஞ்சள்
நிழல்கள் ஒன்றிணைந்து
சூரியனை மூட இரவு

கறுப்பின் கனவோ மஞ்சள்
மஞ்சள் தூங்குவதே இல்லை

கருந்துளைக்குள்
சூரியக்கதிர்கள் வெடித்துச்சிதற
நீள்கின்றன நிழல்கள்
வீட்டிற்குள்ளும்

●

ஆங்கிலத்திலிருந்து தமிழில்
தீர்க்கவாசகன்



படிப்பகம்